வைத்திய பலதிரட்டு



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
மற்றும் ஆய்வு மையம்
தஞ்சாவூர்

T. 22848

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 565

வைத்திய பலத்திரட்டு

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்

முனைவர். ஜெ. ஜெயவாணிஸ்ரீ,

உதவிப்பேராசிரியர்,

அரசினர் கலைக்கல்லூரி, கும்பகோணம்,

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்,

மற்றும்

ஆய்வு மையம்,

தஞ்சாவூர்.

2015] [விலை: ரூ. 200-00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	வைத்திய பலதிரட்டு
பதிப்பாசிரியர்	:	முனைவர் ஜெ. ஜெயவாணிஸ்ரீ சிறப்புக்கேண்மை பதிப்பாசிரியர்,
வெளியிடுபவர்:		இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.
வெளியீட்டு எண்.	:	565
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதல் பதிப்பு
வெளியீட்டு நாள்	:	2015
தாள்	:	TNPL 18.6 கி. கி
நூல் அளவு	:	21 x 14 செ.மீ.
பக்கங்கள்	:	192
படிகள்	:	500
எழுத்து	:	12 புள்ளி
அச்சிட்டோர்	:	ஒளி அச்சுக்கோப்பு மற்றும் ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம்.
புத்தகக்கட்டு	:	லேமினேசன் அட்டை
பொருள்	:	மருத்துவம்
ISBN	:	978-93-85343-03-2
விலை	:	ரூ. **200/-**

வெளியீட்டாளர் முகவுரை

தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், மராத்தி என பன்மொழிச் சுவடிகள் நிறைந்த கருத்துக் கருவூலமாகவும், அறிவுத் திருக்கோயிலாகவும் சரசுவதி மகால் நூலகம் தஞ்சையில் அமைந்து பன்னெடுங்காலமாக செயல்பட்டு வருகிறது. மேலும் இந்நூலகத்திலுள்ள அரிய சுவடிகளை நூல்களாக சிறப்பான முறையில் பதிப்பித்து வெளியிட்டும் வருகின்றது. இவ்வரிசையில் வைத்திய பலதிரட்டு என்னும் இந்நூல் தற்போது முதல் பதிப்பாக வெளிவருகிறது.

தமிழர்களின் மருத்துவம் காலப்பழமை வாய்ந்தது. நமக்குத் தெரிந்த மூலிகைகளும், பச்சிலைகளும் இந்த வைத்திய பலத்திரட்டு என்னும் சுவடியில் இடம்பெற்றுள்ளன. இந்நூலில் வேர், பட்டை, தழை, கொட்டை, பூ, காய் போன்ற இயற்கை மருந்துகளாக அப்படியே உணவாகவும், சூரணம், உருண்டைகளாகவும் பயன்படுத்துமாறு கூறப்பட்டுள்ளன. உலகத்தில் முதன்முதலாக உணரப்பட்ட மருத்துவம் மூலிகையேயாகும். அன்றாடம் பயன்படும் கீரைகள், காய், கனிகளை உணவில் சம அளவில் எடுத்துக் கொண்டாலே நோய் நம்மை அண்டாது நீங்கிவிடும்.

வைத்திய பலத்திரட்டு (சுவடி எண். 1516) எனும் இந்நூலில் 450 மருத்துவக்குறிப்புகள் 265 ஏடுகளில் இடம் பெற்றுள்ளன. இந்நூலில் ஏட்டில் உள்ளவாறே நூற்பா அமைக்கப்பட்டு பொருளும் சொல்லப்பட்டுள்ளது. மருந்துகளின் அளவும், பயன்படுத்தும் முறையும் கூறப் பட்டுள்ளது. மூலிகைகளால் தைலம், சூரணம், பஸ்பம், குழம்பு, லேகியம், களிம்பு, கசாயம் என அழைக்கப்படும் மருந்து தயாரித்தல் நெறிகளும் சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ளன.

இன்றைய சூழ்நிலையில் நோய் உடனே தீரவேண்டும் என்று மருத்துவரை அணுகி எடுத்துக்கொள்ளும் மருந்துகளால் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இவ்வாறு ஏற்படாமல் தடுக்க பழந்தமிழரின் மருத்துவ மூலிகைகளை நாம் பயன்படுத்த வேண்டும். அதற்கு இந்நூல் பெரிதும் பயன்படும். இந்நூலை சிறப்பாகப் பதிப்பித்தளித்த சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் முனைவர் ஜெ. ஜெயவாணிஸ்ரீ அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

இந்நூல் வெளிவரத் தேவையான நிதியுதவி நல்கிய அரசுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூல் நன்கு வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் (பொ.) திரு. கி. கணேசன், பி.காம்., அவர்களுக்கும், நூலகர் முனைவர் எஸ். சுதர்ஷன், எம்.ஏ., பி.லிட்.,எம்.எல்.ஐ.எஸ்., பி.எச்.டி., அவர்களுக்கும் மற்றும் நூலகப் பணியாளர்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சித்த வைத்தியம் தொடர்பாக ஆய்வு செய்பவர்களுக்கும், தமிழ் ஆர்வலர்களுக்கும், பொதுமக்களுக்கும் இந்நூல் அரிய பொக்கிஷமாகும்.

டாக்டர் **என். சுப்பையன்,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்,
14-08-2015

பதிப்புரை

தமிழ்மொழியின் இலக்கிய இலக்கணப் பழமை போன்றே தமிழர்களின் மருத்துவமும் காலப் பழமை வாய்ந்தது. சிறப்பு மிக்கது. பயன்படுத்துவது எளிது. சிக்கனமானது. மாசு அற்றது. நமக்குத் தெரிந்த மூலிகைகளும், பச்சிலைகளும் இந்த வைத்திய பலத்திரட்டு என்னும் சுவடியில் இடம் பெற்றுள்ளன. இதில் இடம் பெற்றுள்ள மருந்துகள் இயற்கை மருந்துகளாகும். வேர், பட்டை, தழை, கொட்டை, பூ, காய் போன்றவை இயற்கை மருந்துகளாக அப்படியே உணவு மாதிரி எடுத்துக் கொள்ளவியலும், சிலவற்றை சூரணமாகவும், சிலவற்றை உருண்டைகளாகவும் மாற்றிப் பயன் படுத்துகின்றோம்.

உலகத்தில் முதன்முதலாக உணரப்பட்ட மருத்துவமும் மூலிகையேயாகும் என்பதற்கு மாற்றுக் கருத்து இல்லை. மனிதன் மாறிய சமூக நிலையால் தான் வேதியியல் மாற்ற மருந்துகளை எடுத்துக் கொள்கின்றோம். அன்றாடம் பயன்படும் கீரைகள், காய், கனிகளை உணவில் சமஅளவில் எடுத்துக் கொண்டாலே நோய் நம்மை அண்டாது நீங்கிவிடும்.

இன்றைய சூழ்நிலையில் நோய் உடனே தீரவேண்டும் என்று கருதி மருத்துவரை அணுகி எடுத்துக் கொள்ளும் மருந்துகளால் பல்வேறு தொடர் பிரச்சனைகள் ஏற்படுகின்றன. நவீனத்துவ போக்கில் மருந்துகளின் கலாட்சாரமும் பின்னிப்பிணைந்ததாகி விட்டது. இவற்றைக் களையவும் பழந்தமிழரின் மருத்துவ மூலிகைகளை மீட்டு எடுக்கவுமான முயற்சியில் இந்த நூல் பயன் படும் என்று நம்புகின்றேன்.

வைத்திய பலதிரட்டு (சுவடிஎண்.1516) எனும் இந்நூலில் 450 மருத்துவக் குறிப்புகள் 265 ஏடுகள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் அமைந்துள்ள சிறப்பு ஏட்டில் உள்ளவாறே நூற்பா அமைக்கப்பட்டுள்ளது. அதற்குரிய பொருள் சொல்லப்பட்டுள்ளது. மருந்துக்களின் அளவு மொழியப் பட்டுள்ளது. பயன்படுத்தும் விதம் சொல்லப்பட்டுள்ளது. அந்த மருந்துக்கு ஈடாக மற்றொரு மூலிகை இருக்குமானால் அதன் நெறியும் போக்கும் மொழியப்பட்டுள்ளன.

மூலிகைகளால் தைலம், சூரணம், பஸ்பம், குழம்பு, லேகியம், களிம்பு, கசாயம் என அழைக்கப்படும் மருந்து தயாரித்தல் நெறிகளும் சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ளன.

வைத்திய பலத்திரட்டுச் சுவடியிலுள்ள குறிப்புகள் ஒவ்வொரு இல்லத்திற்கும் ஏதாவது ஒருவகையில் எப்போதாவது பயன் நல்கும் என்ற நம்பிக்கையில் இதை வெளியிடுவதில் மகிழ்வு கொள்கிறேன்.

இச்சுவடிகளில் மெய்யெழுத்துகளுக்குப் புள்ளி இடம் பெறவில்லை. ஒற்றைக் கொம்பும் (ெ), இரட்டைக் கொம்பும் (ே) ஒன்றாக எழுதப்பட்டுள்ளன.

ா, ர இவற்றிற்கான வேறுபாடுகளை அறியமுடியவில்லை. க,ச; க, த; ப, ம; ய, ப போன்ற எழுத்துகள் ஒன்றுக்கொன்று மயங்கும் படியான நிலையிலேயே எழுதப் பெற்றுள்ளன.

மெய்யெழுத்துகளை அடுத்துவரும் சில உயிர்மெய் எழுத்துகளான க்க, த்த, ட்ட, ப்ப, ச்ச போன்றவை இணைந்து கூட்டெழுத்துகளாகவே எழுதப் பெற்றுள்ளன. இடத்திற்கேற்ப பொருளுணர்ந்தே இவற்றை அறிய வேண்டியதாகின்றது.

இந்நூல் முழுமையும் செய்யுள் நடையிலேயே அமைந்துள்ளது. இதிலுள்ள பாடல்கள் விருத்தப்பாவிலேயே அமைந்துள்ளன. அறுசீர் மற்றும் எண்சீர் விருத்தப்பா வகைகளே மிகுதியாக உள்ளன. வெண்பா, கலித்துறை போன்ற வேறு பா வடிவங்கள் இந்நூலில் இல்லை.

சுவடியிலுள்ள எழுத்துகளின் தன்மை, குறிகள் போன்றவற்றைக் கொண்டு நோக்குமிடத்து இவை சுமார் இருநூறு அல்லது இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனலாம். அதற்கும் முன்பாகவே இது வழக்கில் இருந்திருக்க வேண்டுமென அறியமுடிகிறது.

மூல ஏட்டிலிருந்து பல ஏடுகளும் வழி ஏடுகளாக எழுதப் பெற்று வந்துள்ளதால் ஏடுகள் ஒவ்வொன்றிலும் பிழைகள் மலிந்து

காணப்படுகின்றன. மேலும், ஏடு எழுதுவோரின் கவனக்குறைவு, விரைவு, பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு இவற்றிடையே வேறுபாடின்மை போன்ற காரணங்களாலும் இத்தகைய பிழைகள் தோன்றியுள்ளன.

பல சுவடிகளையும் ஆராய்ந்து, மூல நூலின் வடிவங்கள் இவையாகத்தாம் இருக்க வேண்டுமென்ற நிலையைப் பெற வேண்டி இருந்ததாலும், குறிப்பிட்ட சில சொற்களில் பின்வரும் மாற்றங்களை மட்டும் செய்து, அந்தந்த இடத்திற்கேற்றவாறு பொருள் மாறுபாடு இல்லாமல் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. சான்றாக,

த, ற வேறுபாடு

காத்து – காற்று
வெத்திலை – வெற்றிலை
தேத்தான் – தேற்றான்

ழ, ள வெறுபாடு

களஞ்சு – கழஞ்சு
நாளி – நாழி
இழநீர் – இளநீர்
களுநீர் – கழுநீர்

ர, ற வேறுபாடு

சற்மம் – சர்மம் போன்றவை அடங்கும்.

ந, ன வேறுபாடு

னாழி – நாழி
வென்னீர் – வெந்நீர்

இவ்வாறு எழுத்துகள் மாறுபாடு கொண்ட சொற்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. மேலும், பேச்சுவழக்கில் உள்ளதை அப்படியே ஏட்டில் எழுதியுள்ளதாலும் பல பிழைகள் மலிந்துள்ளன. இத்தகைய சொற்கள் பலவும் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

சுவடிகளில் மெய்யெழுத்து புள்ளி இல்லாமையும், இரட்டைக் கொம்பு மற்றும் ஒற்றைக் கொம்பு இவற்றிடையே

வேறுபாட்டின்மையும் பல தடுமாற்றங்களைத் தருகின்றன. இவற்றையும் திருத்தி தரப்பட்டுள்ளன. வடஎழுத்துகள் கலந்த சொற்கள் பல எழுதப்பட்டுள்ளன.

யோகி சா. அ. இராமரின் கருத்தின்படி சுவடியிலுள்ள நூற்பொதி செய்திகளையோ கருத்துகளையோ பதிப்பின்போது மாற்றுதல் கூடாது என்பதில் எவருக்கும் எவ்வித ஐயமுமில்லை என்பதற்கேற்ப இப்பிழைகளில் எழுத்துப்பிழை, இலக்கணப்பிழை மட்டும் களைந்து பதிப்பிக்கப்பட்டுள்ளது.

அப்போதைய ஆட்சித் தலைவராய் இருந்து இந்நூலினைப் பதிப்பிப்பதற்கு ஆணை வழங்கிய திரு. எம். எஸ். சண்முகம், இ.ஆ.ப., அவர்களுக்கும், இந்நூல் வெளிவருவதற்கு உதவிய நூலக நிர்வாக அலுவலராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்ற திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும் நன்றியை உரித்தாக்குகிறேன்.

நூல்கள் மறைந்து வரும் இக்காலக்கட்டத்தில் அதன் முக்கியத்துவத்தினை அறிந்து நூல்களை வெளிக்கொண்டுவந்து மக்களுக்குப் பயனடைய செய்யும் விதமாக வெளியிடும் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சரசுவதி மகால் நூலக இயக்குநர் டாக்டர் **என். சுப்பையன்,** இ.ஆ.ப., அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இந்நூல் வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் (பொ.) திரு. **கி. கணேசன்,** பி.காம்., மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்) அவர்களுக்கும், நூலகர் முனைவர் எஸ். சுதர்ஷன்,எம்.ஏ., பி.லிட்.,எம்.எல்.ஐ.எஸ்., பி.எச்.டி., அவர்களுக்கும், இந்நூலை நன்கு அச்சிட்டுத் தந்த நூலக ஒளி அச்சுக்கோப்பு பிரிவினருக்கும் மற்றும் நூலகப் பணியாளர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றியுடன்,

முனைவர் ஜெ. ஜெயவாணிஸ்ரீ,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி),
கும்பகோணம்.

அரும்பதவகராதி

அசனம் – உணவு
அடிகுளிர்ச்சிடல் – கால் சில்லிடல்
அண்டம் – கோழி முட்டை
அபானம் – கடித்த இடம்
அயக்குச்சாறு – அரைக்கால் படிச்சாறு காலேலவீசஞ்சேர்
அரம்பைக்கனி – வாழைப்பழம்
அலகை – சில்லரை தேவதை
ஆமலகம் – நெல்லிமுள்ளி
ஆமையின் பற்பம் – ஆமையோட்டின் பற்பம்
ஆரணம் – ஆயுள்வேதம்
ஆனனம் – முகம்
இசைத்துப் பண்ணே – உறவுக்கொள்ளுதல்
இந்திரியம் – ஆண்விந்து
இடிச்சு – இடித்து
இருகரந்தை – சிவகரந்தை,,விஷ்ணுகரந்தை
இருசுழஞ்சு – இரண்டரை விராகன் எடை
இருநிஷ்கம் – இரண்டரை விராகன் எடை
இறுங்கு – ஒரு விதச்சோளம்
இன்பூறல் – இன்புறா வேர், சாயவேர்
ஈருள்ளி – வெண்காயம்
உண்டை – உருண்டை
உதரம் – வயிறு
உத்தாமணி – வேலிப்பருத்தி
உமியநடம் – புடம் போடுதல்
உழுவாய் – ஒரு வகை அரிசி
உளைதல் – எச்சில் வருதல் (ஓமட்டல்)
உளைந்து – வலித்தல்
ஊத்தி – ஊற்றி
எச்சித்தோசம் – வாந்தி எடுத்தல்
எளல் – உஷ்ணம், வெப்பம்
ஐயபதார்த்தம் – கபவஸ்துகள்
ஒண்ணிச்சு – ஒன்றாக

ஓர்திங்கள்	– ஒருமாதம்
கணம்	– அரிசி, திப்பிலி, பாலரை உலர்ந்த ஒருவிதநோய்
கண்டங்காலி	– கண்டங்கத்திரி
கமடபற்பம்	– ஆமையோட்டின் பற்பம்
கரக்கம்	– சாறு
கருஞ்சீரி	– கருஞ்சீரகம்
களிரடிபின்னகம்	– யானையின் பின்கால் நகம்
காடி நீர்	– புளித்த நீர்
கார்த்த துளசி	– கருந்துளசி
காந்தி நொச்சி	– கரந்தை நொச்சி
காரா	– காராப்பசு
கிண்டி	– கடைந்து
கூடஇட்டு	– கூடவிட்டு
குக்குடத்தாவாரை	– கோழியாவாரை
கொட்டைநெய்	– சிற்றாமணக்கெண்ணெய்
கோபாளும்	– கொப்பளிக்கும்
கோளி	– கோழி
சரகம்	– மூலிகைச்சாறு
சாதியாடு	– வெள்ளாடு
சிகப்புத்தகர்	– செம்மறியாடு
சின்னி	– சிறுசின்னி
சீரி	– நற்சீரகம்
செங்குருதி	– தீட்டு
செம்பூ	– சிவந்தப்பூக்கள்
செல் ஒட்டாது	– உணவு உண்ணாது
தான்றி	– தான்றிக்காய்
திராட்சக்கனி	– கொடிமுந்தரிப்பழம்
திரிபலை	– கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய்
திற்பிலி	– திப்பிலி
துவாலை	– பூச்சி மருந்து
தூத்தி	– தூவி விடுதல்
தோயப்பகை	– சலவிரோதம்
நவநீதம்	– வெண்ணெய்
நிதம்பம்	– பெண்குறி

நிம்பநெய் – வேப்பெண்ணெய்
நீவி – அவுரி
நெட்டு – குச்சி
பகமலர் – கருப்பை
பச்சை – பச்சிலை
பணவெடை – காசின் அளவு
பல்குணம் – பலவிதச்செய்கை
பதினஞ்சு – பதினைந்து
பந்திரண்டும் – பன்னிரண்டும்
பரத்தி – பரப்பி
பிச்சி – இருவாட்சி
பிடகர் – வைத்தியர்
புகலில் – சொல்லுதல்
புசி – உண்ணுதல்
புறணி – சிறிய அளவு
புளு – புழு
பொண்ணாது – முடியாது
பொய்த்திடத்தினியாக் கெட்டி – இலேசாகக் கட்டுதல்
பொசி – சாப்பிடுதல்
பொரிநீர் – சாராயம்
பொறி – நெற்பொரி
மலைவு – மயக்கம்
மாசி – மாசிப்பத்திரி
மாயக்காய் – மாசிக்காய்
மாந்துதல் – குடித்தல்
மிசிரி – சாலாமிசிரி
மிடறு – தொண்டை
முத்தக்காசு – கோரைக்கிழங்கு
முத்தின முத்தெண்ணெய் – விளக்கெண்ணெய்
மெய்தி – எருமை நெய்
மேதித்தயிர் – எருமைத்தயிர்
மேனி – குப்பைமேனி
மோதுகடுக்காய் – கடுக்காய்த்தோல்
ரோணி – கடுகுரோகணி
வசம்பிருந்தை – வசம்புசுட்டகரி

வச்சிரவல்லி	–	பிரண்டை
வண்டுனாமலர்	–	சண்பகப்பூ
வயின்	–	வயிறு
வல்லிசம்	–	மிளகு
வளித்து	–	வழித்து
வழுக்கை	–	பிரமியவழுக்கை
வசைப்பத்திரம்	–	தாமரையிலை
வனசகந்தம்	–	தாமரைக்கிழங்கு
விளங்கம்	–	வாய்விளங்கம்
வெண்தகர்	–	வெள்ளாடு
வென்னீர்	–	வெந்நீர்
வேர்க்கொம்பு	–	சுக்கு
வைசூரியம்	–	அம்மை வார்த்தல்.

பொருளடக்கம்

	ப. எண்
1. பிடரி பனிச்சை, கட்டி, கண்டமாலை, துடைவாழை, கட்டிகள் கரைய	1
2. சிறுசிரங்குக் கட்டி கரைய	1
3. உச்சிப்பிளவை, பக்கப்பிளவை, பிடரிப் பனிச்சை	1
4. வயிற்றில் கட்டி கரைய	1
5. சுரங்கி (சுரம் நீங்க)	2
6. நாலாம் மாரல் சுரம் (வேறு)	2
7. நாலாம் மாரல் சுரத்துக்கு மருந்து – கசாயப் போக்கு	2
8. காய்ச்சல் நிற்க வேறு கசாயம்	3
9. அரக்கெண்ணெய்த் தயிலம்	3
10. குன்மம்	3
11. பிரண்டைக் கசாயம்	4
12. வயிற்றில் கட்டி கரைய	4
13. சொட்டை விழுதல், மேக ஊற்றுக்கு சுறா மருந்து	4
14. மேலுக்குத் தேய்க்க	4
15. உள் புண் ஆற மருந்து	5
16. மூல முளை எடுக்க, உள்ளுக்கு மருந்து	5
17. வாதசன்னிக்குச் சுடர்த்தயிலம்	6
18. பிணாத்தி தண்ணீர், தண்ணீர் என்று கேட்டால்	6
19. தொண்டை இரைச்சல், தேமல்	7
20. சன்னி, கபசன்னி, தோச சன்னி, மாந்த சன்னிக்குச் சுரசம்	7
21. வாத ராச்சதன் மாத்திரை	7
22. அழுகண்ணிப் புண்ணுக்குக் களிம்பு	7
23. விசக்கடி	8
24. சகலத்துக்கும் நெய் வகை	8
25. வாந்திப் பிராந்தி	8
26. மகோதிரம், உதிரக்கட்டி, விசபாண்டு	9

27. மஞ்சக் காமாலை	9
28. இரச வல்லாதி, குஷ்டம்	9
29. திமிர் வாங்க	9
30. வெங்குசம்	10
31. சிங்கமெழுகு, அரையாப்பு, யோனிப்புத்து, விப்புருதி, கன்னக்கிரந்தி	10
32. வெள்ளைப் பாசாணக்கட்டு	11
33. பாசாணக்கட்டு	11
34. புண்ணுக்குக்காரம்	12
35. வாலை ரசம் இறக்க	12
36. நீரிழிவு இரத்தப்பிரமியம், சீப்பிரமி வெள்ளைக்கு லேகியம்	13
37. செம்பு சுத்தி	13
38. செயநீர் பாசாணக்கட்டு	13
39. பெரும்பாடு	14
40. நீர்க்கட்டுக் குத்தலுக்குக் கசாயம்	14
41. விசத்துக்கு, சகலத்துக்கும் மருந்து	15
42. தாம்பூரபஸ்பம்	15
43. இருமலுக்கு லேகிய சூரணம்	15
44. காட்டு வேர் வகை லேகியம்	16
45. பூமி சர்க்கரைக் கிழங்குச் சூரணம்	16
46. வீக்கம், நீர்சுரப்பு, ஊதுகணை	17
47. இருமலுக்குச் சூரணம்	17
48. இருமலுக்குப் புகை	17
49. வல்லாதி	18
50. கந்தத் தைலம்	19
51. அய செந்தூரம்	19
52. இரச பஸ்பம்	20
53. குட்டத்துக்கு மருந்து	20
54. மேகம் 21	20
55. வெட்டை வெள்ளை	20

56. அகத்தியர் குழம்பு 22
57. தாளக பஸ்பம் 22
58. சி(லி)ங்க பஸ்பம் 22
59. கெந்தக பஸ்பம் 23
60. இரச பஸ்பம் 23
61. காந்தச் செந்தூரம் 23
62. குன்மத்துக்குச் செந்தூரம் 24
63. பித்தக்குன்மம் 24
64. வீர பஸ்பம் 24
65. அயச் செந்தூரம் 25
66. பாரிசவாயு, உள்மாந்தம் 25
67. இருமலுக்கு லேகியம் 25
68. பீனிசம், சீபீனிசம், சீராபீனிசம், இரத்தப்பீனிசம்,
சகலத்துக்கும் 25
69. பித்தவெட்டைக்கு – கைகால் வெடிப்புக்கு மருந்து 26
70. வெடிப்புக்குத் தடவ 27
71. வீக்கத்துக்குக் கசாயம் 27
72. நரித்தலை வாதம், முழங்கால் வாதம்,
குடைச்சலுக்கு, கீல்வாயுக்கு 27
73. மஞ்சட் காமாலை 28
74. பித்தநீர்க்கட்டி, கண்ணை நீலம் போல
நிறைக்கிறதும் அந்திமாலைக்கும் 28
75. இரத்தம் போல் மேத்தலை வாயுக்கு
76. தலைமுழுகத் தயிலம் 28
77. மேகக்கட்டி விப்புருதி 29
78. புண்ணுக்குக் காரயெண்ணெய் 29
79. அறுத்து பிளவுப்பட்டு (சத்திரமிட்டு) கரைக்கட்டி
இருந்தாலும் கண்ணுக்குள் இருந்தாலும்
அதன் மேல் போட மருந்து 29
80. முழங்கால் வீக்கத்துக்குப் பத்து 30
81. உள்ளுக்குக் கொடுக்க விவரம் 30

82. சித்தபிரமி ஜன்னிக்குக் கைகண்டது 31
83. உள்ளுக்குச் சுரசம் 31
84. மேகவூறல், கைகால் நகம் சொத்தை வெடிப்பு
கண்டது, மயிர் முளைக்காமல் சொட்டை
விழுவது தடுக்க 32
85. கைகால் வெடிப்பிலும் உடம்பிலும் துவளை 32
86. சத்திரப் புண்ணுக்கு மேல் போடக் களிம்பு 33
87. சூசசமாய் இருக்கும் களிம்பு 33
88. சொட்டைக்கு மருந்து 33
89. இருமல் இளைப்பு 34
90. பித்தச்சூட்டினால் கெறுகெறு என்று இழுப்பு, இருமல் 34
91. பெரும்பாடு இரத்த மேகம் 34
92. காது இரைச்சல், சீபாச்சலுக்கு, செவியடைப்பு,
செவிடுக்குத் தயிலம், காது சீக்கு, கரப்பானுக்கு மருந்து 35
93. பீனிசம் சீறா பீனிசம் 35
94. சயத்துக்குத் தாளக பஸ்பம் 36
95. தாமிர பஸ்பம் 36
96. கிராணிக்கு மருந்து 37
97. காமாலை 37
98. பூர மாத்திரைக் கட்டு 37
99. இலிங்க மாத்திரைக்கட்டு 37
100. தாளக மாத்திரைக் கட்டு 37
101. உள்மாந்தச் சன்னி 38
102. பின்பு சுடர்த் தயிலம் 38
103. பிள்ளைமாந்தம் பொருமைக்குக் கொடுக்க 38
104. பிறவாத சன்னி, பச்சை வாதம்,
நடுக்க சன்னிக்குத் தயிலம் 39
105. வலிப்பு 39
106. சன்னி சருவத்தி இலைப் புகைக்கு 39
107. ரத்தபீனிசம், சீபீனிசம், சிறுபீனிசம்,
ஒரு தலைவலிக்கு மருந்து 39

108. பித்தச் சிலேத்துமச் சுரம், தோசம், கண்ட பிரண்டம் 40
109. சேற்றும சுரம் 40
110. பித்த தோசத்தினால் உள்தோசம் கண்டு
சுவாசக் கண்டத்துக்கு இஞ்சிக்சுரசம் 41
111. வறட்சியினால் தளம் சாப்பிட்ட பின்
வயிறு உப்பிசமாதல் 41
112. வயிறு உப்பிசமாதல் 41
113. குமரக்கண்டன், குரைவலிப்பு, மாந்த வலிப்பு,
முசல் வலிப்பு, சகலவலிப்புக்கும் 42
114. அந்தர வாய்வு, அண்டவாய்வுக் கட்டி 42
115. எண்ணெய் 43
116. தவுத்தாயக் கூளப் பரதேசி முறை குன்மம் 43
117. மேக சூலைக்கு ரச பதங்க மெழுகு 43
118. மூலக்கடுப்புக்கு மூலமுளை ஆசனக் கடுப்பு 44
119. கீழ்வாய்வு, மேகசூலை வாய்வு, சூலைக்கட்டு,
பக்கச்சூலை, குருச்சனுக்கு 44
120. ஈஸ்ப்பரன் பேர், வயித்தியன் பேர்,
மாத்திரையின் பேர் 45
121. பித்தப் பைத்தியம், பினத்தலுக்கும்
பித்தவெட்டைக்கும் மருந்து 45
122.நசியம், பைத்தியத்துக்குத்தலையில்
தேய்க்கப் பச்சிலை 46
123. தலையில் புத்துப் புத்தாய் இருக்கும் புண்கள் 47
124. இராமபாணபில்லை குஷ்டம் சிலந்திக்குப் புகை, மை47
125. குட்டத்துக்கு மேல் போட மருந்து 48
126. குட்டம் 48
127. சித்திரவல்லாதி 48
128. மேகசூலைக்குப் பரங்கிப்பட்டை பித்த வெட்டை
திமிரு வாய்வு 49
129. ஆறுமுகச் செந்தூரம் 50
130. மேக ரணசூலை 51

131. இரச பஸ்பம் கிரந்தி 51

132. அந்திரவாய்வு, அண்டவாய்வு, விரைவாதத்துக்கு எண்ணெய் 51

133. அந்தர வாய்வு 52

134. நேத்திரவாய்வு, மேத்தலை வாய்வுக்கு எண்ணெய் 52

135. கண் படலம், கண் வலி, மேகத்தலை வாய்வுக்கு எண்ணெய் 53

136. கிரந்தி, புண், மேகம் 21 – க்கு எண்ணெய் 53

137. சுவாசகாசம், இரத்தகாசம், மந்தாரகம், பித்த இரத்தம் வருதல் 54

138. தாளகபத்தியால் பிழையானால் கசாயம் பாசாணம் முறிய 54

139. தாளகப் பொகையால் வீக்கம் 54

140. சுறாங்கிசம் கும்பகோணம் பரதேசி முறை 54

141. களிம்புப் புண்ணுக்கு 55

142. தூதுவளையில் சிந்தாமணியில் சயகாசம், பித்தகாசம், சிலேஷ்ட்டுமகாசம் லேகியம் 55

143. தாளக்கட்டு 56

144. சத்தி குன்மம், வலி குன்மத்துக்குத் தாம்பிர சுன்னம் 58

145. சயம் 58

146. கள்ளுக்குடியான் கெந்தக மெழுகு முறை 59

147. வயிற்று வலிக்கட்டி 60

148. ஆறாத புண்ணுக்குக்கட்ட 60

149. மூன்று முறை காய்ச்சலுக்கு 60

150. சயம் இருமலுக்கு ரெகுநாதன் முறை 61

151. வறண்ட விக்கல், இருமலுக்குக் கசாயம் 61

152. வெடியுப்புச் சுன்னம் 62

153. வீரமெழுகு 62

154. கருவங்க பஸ்பம் 62

155. சயத்துக்குக் கொடுக்க மருந்து 62

156. நஞ்சு முறிவு 63

157. எல்லா வகை நஞ்சுக்கும் 64
158. கால், கை எரிச்சல் காண்பவனுக்கு 64
159. தாதுபுஷ்டி உண்டாக 64
160. வீக்கத்துக்கு 65
161. துருசு சுன்னம் 65
162. தலைமண்டை இடிப்புக்கு 65
163. பேதிக்கு 65
164. மூணாம் மாறலுக்கு 66
165. வெறிநாய் கடிக்கு 66
166. பெரும் பாட்டுக்கு மருந்து 66
167. காது கேளாமல் சீ வடிவதற்கு 66
168. கை கால் குடைச்சலுக்கு 67
169. சூதக வாய்வுக்கு 67
170. சக்தி குன்மத்துக்கு 67
171. மகோதரம் வீக்கம் 67
172. சூலக்கட்டு 68
173. மந்தாரக் காசம் 68
174. எலிக்கடி 68
175. கள்ளிப்பூ கிரந்தி 68
176. பழுவரை நோய் 69
177. எரிகுன்மம் 69
178. அந்திர வாயு 69
179. விந்து ஒடைச்சல் 69
180. வண்டுக்கடி 69
181. சூதகவாய்வு 70
182. மந்தாரகாசம் 70
183. மிளகுத் தயிலம் 70
184. அண்ட வாய்வு 70
185. பளுவரை நோய் 71
186. கால்முகம் சுறவை கண்டால் 71
187. பிள்ளைகளுக்குப் பொருமல் 71

188. வண்டுக் கடி 71
189. வங்கபஸ்பம் 71
190. அண்டவாதம், விரைவாதம், கழல் வாதத்துக்கு 72
191. காது செவிடு 73
192. உள்நாக்கு வளர்ந்தால் 73
193. விக்கலுக்கு 73
194. வாந்தி விக்கலுக்கு 73
195. கெற்ப வாயுவுக்கு 73
196. தலைவலிக்கு 74
197. பெரும்பாட்டுக்கு மருந்து 74
198. தன்மந்திரி லிங்க மெழுகு 74
199. புழு வெட்டுக்கு 74
200. அமுராதி குளிகை 74
201. கிரந்திப் புண்ணுக்கு 75
202. கிரந்திக்கு 75
203. வங்க செந்தூரம் 75
204. வங்க பஸ்பம் 75
205. இரணத்துக்குப் புகை போட விவரம் 76
206. தாது புஷ்டிக்கு 76
207. அய செந்தூரம் 77
208. பாம்பு விசங்களுக்கு மருந்து 77
209. தேங்காய் மெழுகு 77
210. பஞ்சபூத செந்தூரம் 78
211. இருமல், க்ஷயம், காசத்துக்கு நெய் 79
212. அருணாசலம் முறை 79
213. இஞ்சி லேகியம் 79
214. தன்வந்திரி எண்ணெய் லேகியம் 80
215. சிந்தாதி எண்ணெய் முறை – கடைச்சரக்கு 81
216. காச்சகட்டி, கெண்டைப் பெரும் வயிறு 82
217. விச பேதிக்கு மெழுகு 82
218. இந்திரகிரி சஞ்சீவியாகிய கெந்தகத் தயிலம் 82

219. தீராத வெள்ளைக்கு மருந்து 83
220. குன்மம் 8 – க்கும் காடிக்கார சுன்னம் 83
221. வீர செந்தூரம் 84
222. வீர செந்தூரம் (வேறு) 84
223. தாம்பிர சுன்னம் 84
224. பாவாஜி கெந்தகசெய்முறை பாகம்
நெல்லிக்காய் கெந்தகச் சுன்னம் 84
225. மேகம் – 21, குஷ்டம் – 18 – க்கும் தீர எண்ணெய் 86
226. முகசன்னி, பக்கவாதம், பாரிசவாய்வு,
சூலைக்கு எண்ணெய் 87
227. தேங்காய் நெய் பேதி 87
228. குஷ்டம் – 18 க்குப் பாசாணமெழுகு, வெடிசூலை,
வெடிமேகம், சிட்டை வூறல், உடம்பு ஆதியந்தமும்
குத்தல், குடச்சலுக்கும், கை கால் முடக்குச்
சூலைக்கும், கணுச்சூலைக்கும், சூலை–18 க்கும் 87
229. நீரடைப்புக்கு மருந்து 88
230. ரேவல் சீனிச் சூரணம் 88
231. முப்பூ முடிக்கும் வகை 89
232. அய செந்தூரம் – தோவூர் அமீனா
அந்தோணி முத்து செயல்முறை 90
233. சூதச் செந்தூரம் 90
234. வங்கவெட்டை 90
235. அயச் செந்தூரம் 90
236. கபால இடி மண்டைக் குத்து,
ஒரு தலைவலி நோய் – பள்ளிப் பரதேசி முறை 91
237. கிரந்திக்கு எண்ணெய், இதுக்கு லேகியம் 91
238. இரசக் குளிகை, வெள்ளை மாத்திரை 92
239. நாகபஸ்பம் 93
240. அண்டமெழுகு 93
241. ரச பஸ்பம் 94
242. தேன் வளவி பஸ்பத்துக்கு அனுபானம் 94

243. பெரும்பாட்டுக்கு மருந்து 94
244. சிட்டை மேகத்துக்கு எண்ணெய் 94
245. மேகம் – 21, குஷ்டம் – 18 – க்கும் எண்ணெயும், பஸ்பமும் 95
246. சூதக்கட்டு 96
247. யீனாதிக் கர்த்தா பாசஷா சாயபு முறை உள்மூலம், பவுத்திரம், சீரெத்தம் தீர மருந்து எண்ணெய் 96
248. தாளகச் சுன்னம் அய செந்தூரம் 97
249. அய செந்தூரம் 97
250. அய பஸ்பம் 97
251. தாம்பிர பஸ்பம் 97
252. தாளகக்கட்டு 97
253. அதிகாரச் சூதகக் கழிச்சல் 98
254. குமட்டி மெழுகு 98
255. கெந்தக சுன்னம் 98
256. சோகை பாண்டுக்கு லேகியம் 99
257. வாலைவாய்வுக்கு லேகியம் 99
258. தலையில் வீக்கம், மயக்கத்துக்குக் குளியல் எண்ணெய் 100
259. ஒருதலை நோய்க்கு முழுக எண்ணெய் 100
260. மூலச்சூரணம் 100
261. மூல லேகியம் 101
262. வயித்தொழவு இரத்தம் சீழ் வடிதல் 101
263. மூல சுரசம் 101
264. அஷ்ட்டாங்க சஞ்சீவி சூரணம் நவமூலத்துக்கு 102
265. அயசெம்பு முறை 102
266. தேங்காய் எண்ணெய் மேகம் 21 103
267. இலிங்க செந்தூரம் 103
268. கெந்தக வடகம் 103
269. வங்க சுன்னம் 104
270. வங்க பஸ்பம் 104

271. மூலத்துக்கு மருந்து 105
272. கருவங்கவெட்டை 105
273. முள்ளி செகப்பும் மஞ்சளும் மிகுந்தலுக்கு நாகவெட்டை 105
274. லிங்கம் 106
275. வெள்வங்க நீர் வாங்க 106
276. துருசி பஸ்பம் 106
277. வெள்வங்க நீர் வாங்க 106
278. தாளக பஸ்பம் 106
279. தாளக சுன்னம் 107
280. கறியுப்பு செந்தூரம் 107
281. நீரடைப்பு வலம் அடைப்புக்கு லேகியம் 108
282. சிவனார் இரசாயனம் 108
283. மாரணம் 109
284. நாலாம் பொறைக் காய்ச்சலுக்கு மருந்து 109
285. சயித்திய சன்னித் தேமலுக்கு மருந்து 109
286. கெந்தக நெய் 110
287. மேகம் வெட்டை நீரிழிவு 110
288. மீராத வித்த சீரழிவுக்கு லேகியம் 111
289. மூன்றாம் முறை நேர் சுரத்துக்கு 111
290. இலிங்கக்கட்டு 111
291. கபவாத சுரத்துக்குச் சுரசம் 112
292. சயம் மேல் நோய் இடுப்புக்குத் தாளக பஸ்பம் 112
293. வீர செந்தூரம் 112
294. சகல வாய்வு, சூலை, கிரந்திப் புண்ணுக்கு வல்லாதி 113
295. தலைவலி, பிடறி இசுவு சர் வாங்க வலி, சன்னிக்கு மெழுகு 114
296. வீரமெழுகு 114
297. சன்னிக்குத் துவளை 114
298. நீரடைப்பு 114
299. வலக்கட்டு நீர்க்கட்டுக்கு 114

300. நீரடைப்பு வலம் அடைப்புக்கும் லேகியம் 115

301. வாந்தி 115

302. பொருமல் வலி உப்பிசம் 115

303. ஓடு விப்புருதி, பவுத்திரம் மூளை மூல இரத்தம், மூலம் 116

304. மூலம் 116

305. வயிற்றுளவு, வயிற்றுக் கடுப்பு, மூலச்சூட்டுக்குக் கசாயம் 116

306. மூலச்சூட்டுக்குக் கசாயம் 116

307. தொண்டைப் புத்துக்கு மருந்து 116

308. நீரிழிவு 117

309. மூலம் 6 க்கு 117

310. பவுத்திரத்துக்குக் களிம்பு 117

311. மூலச்சூடு 118

312. எலிக்கடி 118

313. சத்தியவுடையாள் பாகம் மேகப்புடிப்பு புண் 118

314. பேதி, மேகநாதி உருண்டை 118

315. அறுபத்து நான்கு சுரத்துக்குக் கசாயம் 119

316. அமுர்தாதி குளிகை 120

317. தலைப்பொடுகு, மயிர் உதிர்ந்து அரிப்பு கண்டால் 120

318. காய்ச்சல், அரோசியம், அதிசாரக் களிச்சல் 120

319. சகல ரோகத்துக்கும் சஞ்சீவி 120

320. பக்கவாதம், மேல் பூசும் தயிலம், நடுக்குவாதம், சன்னி 13 120

321. கிராணிக் கடுப்பு கழிச்சலுக்கு இரத்தக்கழிச்சல் 121

322. கடுப்புக் களிச்சல் 121

323. வெறிப் பிடித்தலுக்கு 121

324. இரும்பைக் கடிக்க 122

325. தங்கமூலிகை மந்திரம் 122

326. சீனக்காரம் சுன்னம் 122

327. தேள் கொட்டினதுக்கு மருந்து 123

328. இலிங்கம் பூரம் கட்டு	123
329. மூலத்துக்கு லேகியம், வேறு பாகம்	123
330. நாக பஸ்பம் சுன்னம்	124
331. வங்கம் பஸ்பம்	124
332. நாக பஸ்பம்	125
333. கணத்தெண்ணெய்	125
334. தாளகம் சுன்னம்	125
335. இலிங்க செந்தூரம்	126
336. இலிங்க பஸ்பம்	126
337. இரச சுன்னம்	126
338. கெந்தக சுன்னம்	127
339. தாளக சுன்னம்	127
340. மூலமுளைக்குப் போடுகின்ற கார விவரம்	127
341. மூலத்துக்கு மருந்து	128
342. தாளக சுன்னம்	128
343. மூலத்துக்கு	129
344. வெள்ளைக்கும் மேகம் 21 க்கும் வெள்வங்கபஸ்பம்	129
345. இரச சுன்னம்	130
346. இருமலுக்குக் கருவங்க பஸ்பம்	130
347. நீரிழிவுக்கு லேகியம்	130
348. நீரிழிவுக்கு	131
349. தாளக பஸ்பம்	132
350. இரச செந்தூரம்	132
351. இலிங்க செந்தூரம்	132
352. வீர செந்தூரம்	132
353. கலிக்க மாத்திரை	133
354. பித்த வாய்வு	133
355. பூர பஸ்பம்	133
356. பாசாணக்கட்டு	133
357. இருமல்	134
358. இருமலுக்கு லேகியம்	134

359. கண்டமாலைக்குப் புகை போட	134
360. மேல் போட மருந்து	134
361. இரச மெழுகு	135
362. அய செந்தூரம்	135
363. தாளக பஸ்பம் – அனுபானம்	135
364. பூர பஸ்பம்	135
365. பீத ரோகிணி மாத்திரை, இதுக்கு எண்ணெய்	136
366. தாளக பஸ்பம்	136
367. வீர பஸ்பம்	136
368. இலிங்க மெழுகு	137
369. வீர மெழுகு	137
370. இலிங்கக்கட்டு	137
371. கண் இமை	137
372. வெள்ளைக்கி சூரணம்	137
373. வாய் இரணத்துக்குக் கசாயம்	138
374. பல் நோய்	138
375. சன்னித் தயிலம்	138
376. பலகரணை பஸ்பம்	140
377. பவள பஸ்பம்	140
378. கடுக்காய் லேகியம்	140
379. இலிங்க மெழுகு	140
380. வீரமை குணம் 8	141
381. சீனப்பதங்கம்	141
382. வில்வாதி லேகியம்	141
383. இளப்பு, எலிக்கடி இவற்றுக்குக் காசத்துக்கும்	142
384. கருவங்க பஸ்பம்	142
385. இருமலுக்குச் சூரணம்	142
386. அண்டவாதம் விரைவாதத்துக்கு வேது	143
387. வாய்வுக்கு வீரமெழுகு	143
388. மஞ்சளுக்கு நாக வெட்டை	143
389. கருவங்க வெட்டை	143
390. இலிங்கக்கட்டு	144
391. தாளக பஸ்பம்	144

392. கருஞ்செம்பைத் தயிலம் 144
393. தூதுவேளை லேகியம் 145
394. இருமலுக்கு லேகியம் 145
395. வீர செந்தூரம் 145
396. வீர செந்தூர வட்டை 146
397. வீர பஸ்பம் 146
398. அந்திமாலை வெள்ளெழுத்து நேத்திர மறைவுக்கு எண்ணெய் முழுக்கு 146
399. ஓடு விப்புருதி கட்டிக்கு மருந்து 146
400. மடல் துத்தம் பஸ்பம் 147
401. வெள்வங்க நீர் வாங்க 147
402. நாலாம் முறை காய்ச்சலுக்கு மருந்து 148
403. சயித்திய சன்னித் தேமலுக்கு மருந்து 148
404. வீர செந்தூரம் 148
405. சகலவாய்வு, சூலை, கிரந்தி, புண்ணுக்கு வல்லாதி 149
406. தலைவலி, புடறி இசிவு 149
407. லிங்க மெழுகு 149
408. சன்னிக்குத் துவளை 149
409. நீரடைப்பு 150
410. வலக்கட்டு நீர்க்கட்டுக்கு மருந்து 150
411. முலைக்குத்துக்கு மருந்து 150
412. வாந்தி 151
413. பொருமல் வலி 151
414. ஓடுவிப் புழுதி பவுத்திரம் முளை மூலம் 151
415. மூலம் 152
416. குன்மம் உஷ்ணம் 152
417. இரத்தப் பிரமி, சீ பிரமி, இரத்த வெட்டை 152
418. காற பிளாஸ்த்திரி 153
419. ஆரபிளாஸ்த்திரி, புண்ணுக்கு மருந்து 153
420. அரையாப்புப் புண் புகைச்சலுக்கு 153
421. கொடுப்பைத் தயிலம் 153
422. செவிட்டுக் காதுக்குத் தயிலம் 154
423. அந்தர வாய்வுக்கு மருந்து 154

424. காண்டா அவிழ்தம்	154
425. கண் மாத்திரை	155
426. சன்னிச்சுரம்	155
427. தாளகக் கட்டு	155
428. தாம்புர பஸ்பம்	155
429. கௌரி பதங்கம் சகலரோகத்துக்கும்	155
430. உஷ்ணத்தினால் மலம் சிக்கலினால் வயிறுவலிக்கு மருந்து	156
431. தாளக பஸ்பம்	156
432. குமட்டிச் சூரணம்	156
433. பிள்ளைக் கழிச்சலுக்கு	157
434. அண்டவாதம், விரைவாதம், நரம்புத் தடிப்புக்கு, வீக்கம் வலிக்கு	157
435. வயித்துப்போக்கு, அசீரண வாய்வு	157
436. சூதகவாய்வு	157
437. சவ்சீவி எண்ணெய்	158
438. கௌரி பதங்கம் – சகலரோகத்துக்கும்	159
439. மேகம் – 21, குஷ்டம் – 18 – க்கும்	159
440. வெள்வங்கம் நீர் வாங்க	159
441. மடல் துத்த பஸ்பம்	159
442. காச்சக்கட்டி கெண்டை	160
443. சித்தப் பிரமி சன்னிக்கு மருந்து	160
444. மறுபடி சூடு ஆற முறிவு	161
445. உஷ்ணத்தினால் மலம் சிக்கினால் வயிறு வலிக்கு	161
446. பிறயிசுவுக்கு, பிரலாசன்னிக்குப் போட்டு கை கண்டது	162
447. பிறயிசுவுக்கு, பிரலாசன்னிக்குப் போட்டு கை கண்டது	162
448. உள்ளுக்குக் கொடுக்கும் விவரம்	162
449. மாரியம்மன் பேரில் பத்தும் பதி	163
450. மருந்து சாப்பிட வேண்டிய நாட்கள்	
மேல்நோக்கிய நாள்	164
கீழ்நோக்கிய நாள்	164

வைத்திய பலத்திரட்டு

(1516 – 265 ஏடு)

ஓம் குருவே – தெட்சிணாமூர்த்தி பாதமே துணை

1. பிடரி பனிச்சை, கட்டி, கண்டமாலை, துடைவாழை, கட்டிகள் கரைய

பிரண்டை, முற்றியவேர் பலம் ½ அரைத்து வேப்பெண்ணெய் விட்டு வதக்கிப் பிசைந்து ஐந்து கட்டுக் கட்டக் கரைந்து போகும். கை கண்டது.

2. சிறுசிரங்கு கட்டி கரைய

இலுப்பைப் பாலை கட்டியின் மேலே மூன்று நாளைக்குப் போட கட்டியானது கரைந்து உடைந்து போகும்.

3. உச்சிப்பிளவை, பக்கப்பிளவை, பிடரி பனிச்சை

தொட்டா சிணுங்கி இலையும்	வசம்பு
மிளகு	வெள்ளைப் பூண்டு
சித்திர மூலவேர்	மிளகு

எலுமிச்சைப் பழச்சாறு விட்டு அரைத்து 3 நாள் போட செத்து உணர்ந்து போகும்.

4. வயிற்றில் கட்டி கரைய

விளக்கெண்ணை	– 1 படி	இந்துப்பு	– 1
விராகன்			
பெருமருந்தின் படிசாறு	– ½ பலம்	பொட்டிலுப்பு	– 1 பலம்
கல்லுப்பு	– 1 பலம்	தேங்காய்ப் பால்	– ½படி
சங்கங் குப்பிச் சாறு	– ¼ படி	கருஞ்சீரகம்	– 1 பலம்
முடக்கொற்றான்சாறு	– ¾ பலம்	கடுக்காய்	– ½ பலம்
கொடிக்கள்ளிப்பால்	– ½ பலம்	பரங்கிப்பட்டை	–½ பலம்
வளையலுப்பு	– 1 பலம்		

இவையெல்லாம் ஒன்றாக தொந்தி எரிக்க (கமல எரிக்க – இலேசாக எரித்தல்) மிளகு பதத்தில் வடித்து கரண்டி வீதம் 7 நாள் கொடுக்கத் தீரும். பத்தியம் – லேசி.

5. சுரங்கி (சுரம் நீங்க)

சுக்கு	பெருங்காயம்
மிளகு	திப்பிலி

இவையெல்லாம் வகைக்கு 1 விராகன், நமச்சாரம் 4 விராகன், ஓட்டில் போட்டு உருகும்போது முன் மருந்துகளைப் பொடிச் செய்து போட்டு மெழுகு பதத்தில் எடுத்துக் கொண்டு வேளை ஒன்றுக்கு ஒரு விராகனிடை பனை வெல்லத்தில் கொடுக்க மூன்றுநாள் 7 பொழுதில் தீரும்.

பத்தியம் – உப்பு கருக வறுத்துப் புளியை நீக்கி, ரசமும் சாதமும் வெந்நீரில் சாப்பிட வேண்டும். 7 நாள் பசுவின் தயிர் மோர், வெள்ளாட்டு வத்தல் சேர்க்க வேண்டும். புளி சுட்டுக் கூட்டவும். ஒன்பதாம் நாள் தலைக்குத் தண்ணீர் விடத் தீரும்.

6. நாலாம் மாரல் சுரம் (வேறு)

நொச்சிச்சாறு சுரசம் செய்து அதில் சுக்கு 1 பலம், காயம் 1 பலம், பொடித்துப் போட்டு 3 நாள் கொடுக்கத் தீரும். குமட்டிக்காய், கடுக்காய் கசாயமிட்டுக் கொடுக்கவும்.

7. நாலாம் மாரல் சுரத்துக்கு மருந்து – கசாய போக்கு

பேய்க் கும்மட்டிச் சாறும், அதன் வேரின் சாறு – $1/_2$ படி

இந்துப்பு	– 2 விராகன்	சவுக்காரம் – 2 விராகன்
காயம்	– 2 விராகன்	பழம் புளி – $1/_8$ பலம்
வாளம்	– 3 விராகன்	

இவற்றையெல்லாம் அரைத்து தேத்தாங்கொட்டைப் பிரமாணம் (அளவு) உருண்டை செய்து உலர்த்தி ஒரு உருண்டை வெந்நீரில் சாப்பிட பேதியாகும்.

பத்தியம் – உப்பு, புளி சேர்த்து கொடுக்கவும். இப்படி மூன்று காலம் காலையில் கொடுக்கவும். பிறகு முன் கசாயம் கொடுத்து பத்தியம் கடினமாகக் கடைப்பிடிக்கவும்.

8. காய்ச்சல் நிற்க வேறு கசாயம்

சுக்கு	– 1 பலம்	சிறு தேக்கு – 1 பலம்
கண்டங்கத்திரி வேர்	– 2 பலம்	நிலைவேம்பு – 2 பலம்
செறுகாஞ்சொறி வேர்	– 2 பலம்	பற்பாடகம் – 2 பலம்
கோரைக் கிழங்கு	– 2 பலம்	சீந்தி – 2 பலம்

இதனையெல்லாம் இடித்து 4 படி தண்ணீரில் போட்டு எட்டொன்றாய் சுருக்கி வேளைக்குக் கால் படி கசாயம் சாப்பிட்டு புளித்தள்ளி ஏழுநாள் பத்தியம் இருக்கவும்.

9. அரக்கெண்ணெய் தயிலம்

கொம்பரக்கு – 2 சேர்
சித்தரத்தை
கடுக்காய்
பூண்டு
சுக்கு
திப்பிலி
வசம்பு
தான்றிக்காய்
விருவன் கிழங்கு இவையெல்லாம் வகைக்கு – 1/8 பலம்
நல்லெண்ணெய் – 1 படி

இந்த எண்ணெயில் மருந்தை எல்லாம் தூள் பண்ணிப்போட்டு கொம்பரக்குக் கிழாயம் வைத்து எண்ணெயில் இறுத்து சூரிய புடத்தில் 2 நாள் வைத்து மூன்றாம் நாள் எரித்து மூழ்கு பதத்தில் வடித்து ஒருநாள் விட்டு ஒருநாள் காய்ச்சல் விடும் வரை தேய்த்து முழுகவும்.

அரப்பு, இலுப்பங்கட்டி தேய்த்து வெந்நீர் விடவும். புளி தள்ளி உப்பு சேர்க்கவும்.

10. குன்மம்

பெருங்காயம்	– 1 விராகன்	பூண்டு – 1 விராகன்
வாளம்	– 3 விராகன்	கடுக்காய் – 2 விராகன்
இந்துப்பு	– 2 விராகன்	வெங்காரம் – 2 விராகன்
திப்பிலி	– 2 விராகன்	கார்போகஅரிசி–1 விராகன்
கருஞ்சீரகம்	– 1 விராகன்	தேங்காய்ப்பால் – 2 படி
வேலிப்பருத்திச் சாறு	– 1 படி	விளக்கெண்ணெய் –1 படி
திருகு கள்ளிப்பால்	– 5 படி	

இவற்றையெல்லாம் எண்ணெயில் விட்டு எரித்து மூழ்கு பதத்தில் வடித்து தொட்டு தயிலம் வலி நீக்க மட்டும் கொடுக்கவும். உப்பு, புளி சேர்க்கலாம்.

பத்தியம் - இச்சாபத்தியம். அஷ்ட குன்மம் தீரும். கைகண்டது. இதற்கு பிறகு பிரண்டை கசாயம் சேர்க்கவும்.

11. பிரண்டை கசாயம்

கணு நீங்கிய பிரண்டை ஒரு பிடி சட்டியில் போட்டு ஒரு கல்லுப்பும் போட்டு கருக வறுத்து 4 படி தண்ணீர் விட்டு எருமை மோர், குழம்பு கசாயம் வைத்து இரண்டையும் ஒன்றாக்கி எரித்து 1 படி கசாயம் கொடுக்கவும். இதன்படி மூன்று நாள் கொடுக்கவும். உப்பிசம், வீங்கிய பொருமல், வலி தீரும்.

12. வயிற்றில் கட்டி கரைய

சிறுகீரை 1 பிடி, கல்லுப்பு, இவற்றை வேக வைத்து கடைந்து மூன்று நாளைக்கு விளாங்காய் பிரமாணம் கொடுக்கவும். கட்டி கரைந்து விழும். இதன் படி மூன்று மண்டலம் கொடுக்கவும். பத்தியம் - இச்சா பத்தியம்

13. சொட்டை விழுதல், மேக ஊற்றுக்கும் சுறா மருந்து

நில ஆவாரைத் தூள் 4 படி பசுவின் பாலில் போட்டுக் காய்ச்சிப் பின் கடைந்து வெண்ணெய் எடுத்துக் கொண்டு அந்த மோரை மூன்று நாள் சாப்பிடவும்.

14. மேலுக்குத் தேய்க்க

தேங்காய் கண் திறந்து அதில் ஒரு பலம் வெள்ளைப் பாசனத்தைப் போட்டு வாய்மூடி சுட்டு அரைத்து 3, 4 நாளைக்கு தேய்த்து மூழ்கிக் குளிக்க சொட்டை சொட்டையாக இருப்பது உதிர்ந்து போகும்.

பத்தியம் - அரைப்புளி, அரை உப்பு, மோர், பால், வெள்ளாட்டு வத்தல் அனைத்தையும் சேர்த்து வைக்கவும்.

பவுத்திரத்தின் பேரில் மூலவாய்வு தொப்புளில் காலைவேளையில் கட்டிக் கொண்டு வரவேண்டும். இதனால் சலம் கட்டிக் கொண்டு நீர்க் குத்தல், மூலம் முளையும், வெள்ளையும் விழும்.

15. உள் புண் ஆற மருந்து

அவுரி வேர் – $^1/_8$ பலம்
சிறுகீரை வேர் – $^1/_8$ பலம்
மிளகு – $^1/_8$ பலம்
சீரகம் – $^1/_8$ பலம்
பசுவின் பால் – 1 படி
தண்ணீர் – 1 படி

இவற்றை இடித்து ஒன்றாக கலந்து எரித்து கால்படி கசாயமாக 5 நாள் பதினைந்து பொழுது குடிக்கவும். மறுபடியும்,

கரிபசலை 1 பிடி
சீரகம் – $^1/_2$ கால் பலம்
அதிமதுரம் – $^1/_2$ கால் பலம்
மாசிக்காய் – $^1/_2$ கால் பலம்

இவற்றை எல்லாம் பொடியாக்கிக் கீரையில் போட்டு வேக வைத்து கடைந்து ஒருநாளுக்கு மூன்று வேளையாக இரண்டு நாள் கொடுக்கவும். பசும்பாலில் சோறு கொடுக்கவும். கால் புளி, கால் உப்பு சேர்க்கவும். பசும்பால் தாராளமாகக் கொடுக்கலாம்.

16. மூல முளை எடுக்க

வெத்திலை என்கின்ற கரி சமைக்கின்ற பசலையை ஒரு பிடி கொண்டு வந்து பிச்சித் தூளாக்கி ஒரு பெரிய சட்டியை நெருப்புப் பறக்க காய வைத்து இறக்கி களவடை நடுவில் வைத்துப் பச்சிலைத் தூளைப் போட்டு கால் படி பசும்பாலைத் தெளித்து குந்தாணி மேலே உட்கார வைத்து புகையை வாயின் வழியாக ஆவியேற 2 நாழிகை உக்கார வைக்கவும். இப்படி மூன்று நாள் செய்தால் மூலமுளைச் செத்துப் போகும்.

17. உள்ளுக்கு மருந்து

சாதிலிங்கம், வாலையாவது, இரச பஸ்பமாவது பனை வெல்லத்தில் பணவிடை வைத்து மூன்று நாள் கொடுக்கவும். ஏழு நாளைக்குள் சருவாக உலர்ந்து போகும். கை கண்டது.

இளங்காரமாக வெள்ளாட்டு வத்தல், மிளகு, நீர், பதினைந்து நாட்கள் சேர்க்கவும்.

18. வாதசன்னிக்கு சுடர்த்தயிலம்

சித்தரத்தை – $^1/_4$ பலம்
பூண்டு – $^1/_4$ பலம்
காயம் – $^1/_4$ பலம்
மாவுலிங்கப்பட்டை– $^1/_8$ பலம்
நொச்சிப்பட்டை – $^1/_8$ பலம்
சித்திரமூல வேர் – $^1/_8$ பலம்
கண்ட திப்பிலி – $^1/_4$ பலம்
ஓமம் – $^1/_4$ பலம்
ஓகாகோ பட்டை – $^1/_8$ பலம்
சங்கம்பட்டை – $^1/_2$ பலம்
நல்லவேளை வேர் – $^1/_8$ பலம்

இவற்றினை அரைத்து சுரசம் செய்து கொஞ்சம் கொஞ்சமாக ஏழு நாளுக்கு கொடுக்கவும். உப்பு, புளி தவிர்க்கவும். எட்டாம் நாள் உப்பு வறுத்துக் கூட்டி தலைக்குத் தண்ணீர் விடவும். முன்னே கொடுத்த சுரசமும், தயிலமும் கொடுக்கவும். மிகவும் சூடேறி கண்ணீர் வரும். மயக்கம், தாகம் அதிகம் இருக்காது.

பிணாத்தி தண்ணீர், தண்ணீர் என்று கேட்டால்

சுக்கு – $^1/_4$ பலம்
அவுரிவேர் சமூலமும் – 1 பலம்
கண்டங்கத்திரி வேர் –$^1/_8$ பலம்
சித்தரத்தை – $^1/_4$ பலம்
நாயுருவி வேர் – $^1/_4$ பலம்
நெற்பொரி – $^1/_4$ படி

எல்லாம் தட்டி கசாயம் வைத்து மூன்று வேளைக்கு வேகம் தணியும் வரைக் கொடுக்கவும்.

பாரிச வாயுவினாலே உள் உளப்பு, உள் மாந்த சன்னி, சுவாசத் தேம்பல், பித்தசுர சன்னிக்கி சூடாக தயிலம், சுரசம் குடுத்த பிறகு கொடுக்கக் கூடிய தயிலம்

அக்கிராகாரம் – $^1/_4$ பலம்
பூண்டு – 10 பலம்
நல்லவேளை வேர் – $^1/_8$ பலம்
தாளிச பத்திரி – 1 பலம்
கோழி முட்டை – 10
வேப்பெண்ணை – $^1/_2$ படி

முட்டைத்தயிலமும், வேப்ப எண்ணெயும் ஒன்றாகக் கலந்து முன் மருந்தைப் பொடி செய்து ஒரு கரண்டி எண்ணெய்க்கு திருசுடி சூரணம் போட்டு கலக்கி மூன்று நாள் கொடுக்கவும்.

19. தொண்டை இரைச்சல், தேமல்

தாளகத்தை சதிர்க்கள்ளிப் பாலிலிட்டு அரைத்து, துணியில் தடவி சுங்கானில் வைத்துப் புகைபிடித்து விழுங்கத் தீரும்.

20. சன்னி, கபசன்னி, தோச சன்னி, மாந்த சன்னிக்கு சுரசம்

யோகவேர் – $1/_8$ பலம்	நல்லவேளைவேர் – $1/_8$ பலம்
சங்கம் வேர் – $1/_8$ பலம்	நொச்சி வேர் – 1 பலம்
மாவுலிங்கப் பட்டை– 1 பலம்	கண்ட திப்பிலி – 1 பலம்
சித்திரத்தை – $1/_8$ பலம்	ஓமம் – $1/_4$ பலம்
இஞ்சி – $1/_4$ பலம்	

இவற்றை அரைத்து சுரசம் செய்து வீசம் படி சுரசம் கொடுக்கவும்.

21. வாத ராச்சதன் மாத்திரை

லிங்கம், வீரம், பூரம் இவற்றை ஒரு இலுப்பு இழுத்துக் கொடுக்கவும். முன் அக்கிராத் தயிலம் கொடுக்கவும்.

22. அழுகண்ணி புண்ணுக்குக் களிம்பு

கொம்புதேன் மெழுகு 15 வராகன், துருசு 1 விராகன், துத்தம் 1 விராகன், முருதாரசிங்கு 1 விராகன், இரசம்-1 விராகன், பச்சை வெட்டு குங்கிலியம் 1 விராகன், இவை எல்லாவற்றையும் பொடிச் செய்து மெழுகை உருக்கி மருந்தைப் போட்டுக் கிண்டி உருக்கி வில்லையாய் தட்டி அழுகண்ணி புண்ணில் வைத்துக் கட்டவும். ஆரும்.

மெல்லிய சீலையில் பிடித்துப் பசுவின் வெண்ணெயில் உருக்கி வைத்து வெட்டுப்பட்ட புண்ணுக்கு ஆறாத புண்ணுக்கும் ப்ளாஸ்த்திரி போட எடுத்தெடுத்து உருக வைத்துப் போடத் தீரும்.

23. விசக்கடி

அழிஞ்சி இலை 1 பிடி, இஞ்சி 1 பிடி, பிரண்டை 1 பிடி, கோழியவரையிலை 1 பிடி, பெருமருந்துயிலை 1 பிடி இவற்றை ஒன்றாக சிறுநீர் விட்டு இடித்து வதக்கி மூணு கட்டு கட்ட வீக்கம் வாடிப் போகும்.

வேறு

விச மூங்கில்கிழங்கை செருநீர்ச் சாறு படியில் கலந்து 1 படி, இலுப்பைக்கட்டி 20 பலம், துவட்டி வதக்கி விரியன் கடியில் கட்டியிறக்கி பரப்பி ஒட்டால் கிழித்துவிடவும். வீக்கம் வாடும் வரை கட்டவும். சகலக்கட்டியும், சகல வீக்கமும் தீரும்.

24. சகலத்துக்கும் நெய் வகை

சித்திரமூலம்வேர் 1 பலம்	சீத்தாக்காய் வேர் 1 பலம்
சத்தி சாரணைவேர் $^3/_4$ பலம்	கண்டதிப்பிலி 1 பலம்
மிளகு 1 பலம்	பூண்டு 1 பலம்
ஓமம் $^3/_4$ பலம்	சித்திரத்தை $^1/_4$ பலம்
பரங்கிப்பட்டை $^1/_4$ பலம்	மாவலிங்கப்பட்டை 1 பலம்
வேளைவேர் $^3/_4$ பலம்	காயம் $^3/_4$ விராகன்
ரசக்கற்பூரம் 1 விராகன்	பசுவின் நெய் $^3/_4$ படி
சதிர்க்கள்ளிப்பால் $^3/_4$ படி	பூவரசன் பட்டை 1 பலம்
பிராமபட்டை $^3/_4$ விராகன்	

ஆகிய கடைச்சரக்கைப் பொடி செய்து பட்டைச்சாற்றினையும் விட்டு நெய் சேர்த்து எரித்து வடித்து வேளைக்கு வீசம் படியளவு 7 நாட்கள் கொடுத்து 15 – ஆம் நாள் உப்பு கூட்டி தலைக்குத் தண்ணீர் விடவும். இருமலுக்குக் காட்டுச் சீரகம் 1 பலம் கசாயம் வைத்து வீசம்படி கொடுக்கவும்.

25. வாந்தி பிராந்தி

கருவேப்பிலை	நல்லவெல்லம்
மிளகாய்	சுட்டபுளி

வருத்த உப்பு அரைத்து சப்பி முழுங்க வாந்தி நிற்கும்.

26. மகோதிரம், உதிரக்கட்டி, விசபாண்டு

தண்ணீரில் தேசி வத்தி ஊற வைத்து பிழிந்த சாறு கால் படி வாங்கி கிரந்தி நாயகம் இலை ஒரு கொத்து, பாவட்டம் இலை ஒரு கொத்தும், அந்த தண்ணீரிலிட்டு இடித்து கால் படிச்சாறு மூன்று நாள் கொடுத்து மறுபத்தியம் 3 நாள், 7 நாள், உப்பு, புளி வறுத்துக் கூட்டவும். விஷபாண்டு தீரும்.

27. மஞ்சக் காமாலை

'ஈ' யை இரண்டு பிடித்து வாழைப்பழத்துக்குள்ளே வைத்து மூன்று நாள் கொடுக்கவும். பத்தியம் புளி தவிர, பச்சைப்பயறு கஞ்சியும் வெந்நீரும் கொடுக்கவும்.

28. இரச வல்லாதி, குஷ்டம்

வீரம் 1 விராகன்	பூரம் 1 விராகன்
ரசம் 1 விராகன்	சேஸ் கொட்டை 8 விராகன்
இலிங்கம் 1 விராகன்	சுத்திப்பண்ணின சித்திர மூலவேர் 4 விராகன்

இவற்றை எல்லாம் அரைத்து வேளைக்கு 1 விராகன் எடை வீதம் தேனிலாவது, பனை வெல்லத்திலாவது கொடுக்க ஒரு மண்டலத்தில் 45 நாளில் எல்லாம் தீரும். ராமபாணப்புகை உடனே போடவும் தீரும். ராமபாண இலையால் 3 நாள் 11 தடவை புகைப்போடவும்.

பத்தியம் – 7 – ஆம் நாள் எருமை மோரும் ஈர வெங்காயமும் கூட்டிச் சாப்பிடவும். உப்பு, புளித் தவிர்க்கவும். எரிச்சல் கண்டால் தண்ணீரில் இருக்கவும். எட்டாம் நாள் உப்பு வறுத்துக் கூட்டி வெள்ளாட்டு வத்தல் சேர்க்கவும்.

29. திமிர் வாங்க

எருக்கம்பால் 5 பலம், கொப்பரை தேங்காய் 10 பலம் அரைத்துக் குழைத்து மேலே தடவி சாயங்காலம் வெந்நீரில்

குளிக்கவும். இப்படி மூன்று நாள் செய்ய சொறி உதிர்ந்து திமிர் போகும். எரிச்சல் அதிகமாக இருந்தால் கூத்தன் குதம்பையை இடித்து வேகவைத்துத் தலையில் தடவி விடவும்.

பத்தியம் – முறிந்த பிறகு பத்தாம் நாள் விளக்கெண்ணெய் தேய்த்து முழுகவும். இப்படி மூன்று மண்டலம் கொடுக்க தீரும். மேகவெடி கிரந்தி, சிறாய்வண்டு கடிக்கும் இந்தப் புகை போடத் தீரும்.

30. வெங்குசம்

சிவனார் வேம்பு 10 பலம்
அவிரியிலை 10 பலம்
கையாந்த கரை இலை 10 பலம்
மாவிலிங்கம் 10 பலம்
பூவரசுப்பட்டையிலை 10 பலம்
சேங்கொட்டை 50 பலம்
சித்திர மூலவேர் 10 பலம்

இவற்றை எல்லாம் குழித் தயிலமிறக்கிக் கொடுக்கவும். வேம்பும் சேர்க்கவும். இரசவல்லாதி சேர்க்கவும். பத்தியம் – லேசி

31. சிங்கமெழுகு, அரையாப்பு, யோனிப்புத்து, விப்புருதி, கன்னக்கிரந்தி

சூடம் 1 விராகன்
சாம்பிராணி 1 விராகன்
இலிங்கம் 1 விராகன்
பூரம் 3/4 விராகன்
வீரம் 1/4 விராகன்

இவை ஐந்தையும் சேர்த்து அரைக்க மெழுகாகும்.

பரங்கிப்பட்டை 1 பலம்
கண்டதிப்பிலி 1/8 பலம்
அரிசி திப்பிலி 1/4 வராகன்
பெருங்காயம் 1/4 வராகன்
மிளகு 1 வராகன்
பூண்டு 1 பலம்
ஓமம் 1 பலம்
சதகுப்பை 1/4 பலம்
வெள்ளறுகு வேர் 1 பலம்சட்டி
சாரணைக் கிழங்கு 2 பலம்
சித்திர மூலவேர் 1 பலம்
சீத்தாக்காய் வேர் 1 பலம்
திருகு கள்ளிச் சாறு 1 படி
சித்திரத்தை 1/8 பலம்
சுக்கு 1/8 பலம்

இவற்றை எல்லாம் அரைத்துத் திருகுகள்ளிச் சாற்றில் குழப்பி வேளைக்கு $^1/_8$ படி கொடுத்து அந்த இலிங்க மெழுகும் வேளைக்குப் பணவிடை கொட்டைப்பாக்குப் பனைவெல்லத்தில் வைத்து 15 நாள் அந்தி மாலையில் சாப்பிடவும். உப்பு, புகை ஆகாது.

தீரும் வியாதி

16 – ஆம் நாள் உப்பு வறுத்துக் கொடுக்கவும். இதன்படி 3 மண்டலம் சாப்பிட கீழ்வாதம், முழங்கால் வாய்வு, குடச்சல், பிடிப்பு, யோனிப்புத்து, இலிங்கபுத்து, தொடை வாளை, கண்ணக்கிரந்தி, கண்டமாலை, சந்து விப்புருதி இவையனைத்தும் தீரும்.

பத்தியம் – கெட்டியாய் பிடித்து வெள்ளாட்டு வத்தல், பசுவின் நெய், மிளகு, மிளகாய்ப்பொடி கடைசியில் சேர்க்கவும்.

32. வெள்ளைப் பாசாணக்கட்டு

வெள்ளைப்பாசாணம் 1 பலம் வாங்கி பச்சைக்கிழங்கு வெட்டி வந்து துவாரம் செய்து, அதுக்குள்ளே கட்டியை வைத்து கற்பூரம், பாறையுப்பு இரண்டையும் பொடிச் செய்து மேலே போட்டு அடைத்து சிலைமண் ஒன்று செய்து கெசபுடம் போட்டு கட்டவும்.

33. பாசாணக்கட்டு

வெள்ளைப்பாசணம் 1 பலம், ஈணாக்கிடாரி, எருமை சாணிப்பால் 1 படி, பாசாணத்தை சட்டியில் வைத்து மேற்படி பாலால் ஒரு சாமம் சுருக்குக் கொடுத்து பிராம்பட்டை குழித் தயிலமிறக்கி, அந்தத் தயிலத்தில் ஒரு சாமம் சுருக்கு கொடுத்து முதிர்ந்த வெள்ளாட்டுக்கிடா முளையை ஒரு சிறு கலயத்தில் போடவும்.

அதில் அச்சாணக்கட்டியை வைத்து மேலே மூளையால் மூடி சிலை செய்து அடுப்பில் வைத்து விளக்கு தீபமாய் 4 நாழிகை எரித்து சுத்திப்பண்ணின செம்பு 8 $^1/_8$ பாசானம் 1 கொடுக்கவும். இதில் தாய் வராகன் சேர்த்து உருக்கிப் பார்த்துக் கொள்ளவும். கைக்கண்டது.

34. புண்ணுக்குக்காரம்

சவ்வீரம் 1 விராகன் வெள்ளப்பாசாணம் 1 விராகன்
துருசு 1 விராகன் எருமை வெண்ணெயில்
அரைத்துப் போடவும்.

சீனிக்காரம் 1 விராகன் படிக்காரம் 1 விராகன்
வெங்காரம் 1 விராகன்
எல்லாவற்றையும் கூட்டி அரைத்துப் போடவும்.

35. வாலை ரசம் இறக்க

இலிங்கம் 1 பலம் பழச்சாற்றில் ஒரு சாமம் ஊறவைத்து எடுத்து வாழைப்பழுப்பு, கலியாண முருங்கைச் சாறு விட்டு பொடி செய்து மேல்சட்டியில் இந்தச் சாறு தடவிக் கொண்டு சித்திரமூலவேர் குகைச் செய்து பொடியை அதிலிட்டு மேலும் மூலிகை வேர் பொடியைப் போட்டு சட்டியில் மணல்கொட்டி அதில் குகையை வைத்துச் சாறு தடவின சட்டியைக் கவிழ்த்துச் சந்துவாய்ச் சிலை செய்து அடுப்பேத்தி முப்பது நாழிகை எரித்து எடுத்துத் திறந்து பார்க்க வாலை மேற்சட்டியில் படிந்திருக்கும்.

அதையெடுத்து பத்திரமாக வைத்துக் கொண்டு, வாலை ரசம் 1 விராகன், துய்யான் 2 விராகன் உருக்கிப் பார்த்துக் கொள்ளவும்.

கிரந்திக்கு பணவிடை 7 நாள் கொடுத்து உப்பு, புளி நீக்கவும். உள்புண்ணு ஆறும். ரத்தபிறமி, சீ பிறமி, வெள்ளை விழுவதற்கும் கை கண்டது.

சுக்கு $^1/_4$ பலம்	ஏலம் $^1/_4$ பலம்
கிராம்பு $^1/_4$ பலம்	அதிவிடையம் 10 பலம்
ஓமம் 1 பலம்	காசுக்கட்டி $^1/_8$ பலம்
களிப்பாக்கு $^1/_8$ பலம்	ஈர வெங்காயம் 2 பலம்
பரங்கிப்பட்டை $^1/_4$ பலம்	அவனி ரூ 2
சாதிக்காய் $^1/_4$ பலம்	காட்டாத்திப் பூ $^1/_4$ விராகன்
மாதளங்காய் 5 பலம்	சன்னலவங்கப்பட்டை $^1/_4$ பலம்
பச்சைகருவேப்பிலை 1 பலம்	தேன் $^1/_8$ படி

நல்லவெல்லம் 2 பலம்
ஆவாரம் வேர்ப்பட்டை 1 பலம்
புளியங்கொட்டைத் தோல் 1/4 பலம்

எல்லாவற்றையும் அரைத்து மாதளங்காய்க்குள்ளே வைத்து சாணியில் மூடி நெருப்பில் போட்டு சாணி வெந்த பதத்தில் அரைத்து அவினியும், நெய் தேனும் கலந்து, உருண்டை கொட்டைப் பாக்களவு 20 நாட்கள் சாப்பிட்டு இச்சாப்பத்தியம் பண்ணவும். வெள்ளைப் பிரமித் தீரும்.

36. நீரழிவு இரத்தப்பிரமியம், சீப்பிரமி வெள்ளைக்கு லேகியம்

ஏலம் 1/4 வராகன்
கிராம்பு 1/4 பலம்
அதிவிடையம் 1/8 பலம்
ஈர வெங்காயம் 5 பலம்
காசுக்கட்டி 1/4 பலம்
பசுவின் நெய் 1/8 பலம்
பொடுதலை 5 பலம்
சுக்கு சீரகம் வகைக்கு 1 பலம்
சாதிக்காய் 1/4 பலம்
ஓமம் 1/4 பலம்
கடுக்காய் 1/8 பலம்
வால்மிளகு 1/4 பலம்
ஆவாரம் பட்டை இலை 1/8 படி
சூடகைநீறு 1/4 பலம்

பனைவெல்லம் சேர்த்து லேகியம் செய்து கொட்டைப் பாக்களவு 20 நாள் சாப்பிடவும். நோய் தீரும். பசுவின் மோர், நெய் பால் ஆரை உப்பு சேர்க்கவும். 30 நாள் கழித்து பத்தியம் முரிக்கவும்.

37. செம்பு சுத்தி

கருப்புட்டி உருக துகட்டி போலே இருக்கும். இதை 10 விராகன், செம்பு 10 விராகன் இதனைச் சரிக்குசரி உருக்கி சாய்க்கவும். மாத்து துய்யான், கல்லுப்பும், பழங்புளியும் காசில் அப்பி கெசபுடம் மூன்று போட்டு எடுத்து ஊசி தகரை விரை பூவு விளாங்காய் மொத்தம் அரைத்து தடவி புடமிட்டு எடுத்து எருமை மோரில் 3 நாள் ஊற வைக்க சுத்தியாகும்.

38. செயநீர் பாசாணக்கட்டு

பேரண்டப்பொடி 1 1/2 படி, சுண்ணாம்பு கல்லு 1 படி, வெடியுப்பு 1/2 படி, இது மூன்றரையும் சேர்த்து இடித்து ஒரு

கலசத்தில் போட்டு 48 நாளைக்கு பெருந்துடை ஆழம் குழிவெட்டிப் புதைத்து எடுத்து 5 விராட்டியில் புடம் போட்டு எடுத்து கூடப்போட்டு பச்சைமடலில் எல்லாத் தூளையும் பரப்பிக் கீழே மணல் கொட்டி, தண்ணீர் குளிரத் தெளித்து அமுக்க வேண்டும்.

பின் அதன் மேல் இராப்பனியில் மடலை வைத்து அதன் மேல் பக்கத்தில் பாட்டில் சீசாவை வைத்தால் ஜெய நீராகும். அந்த நீரை கொல்லன் உலையில் மண்பெட்டியைப காயவைத்து அதன் மேல் 1 பலம், 2 பலம் வெள்ளை பாசாணத்தை வைத்து முன் ஜெய நீரால் ஒரு சாமம் சுருக்கு கொடுத்து எடுத்துக் கொள்ளவும்.

39. பெரும்பாடு

இலந்தைக் கொழுந்தைப் பறித்து எலுமிச்சங்காய் அளவு அரைத்து தீ படாத வரகரிசியை வாட்டி அரிசி கூட்டி அரைத்து புட்டாக வைத்து மூன்று நாள் ஆறு பொழுது கொடுக்க நிற்கும். இராத்திரி பூசை செய்யவும்.

வேறு

மாம்பட்டை தூக்கு 1	சீரகம் 1 பலம்
ஈர வெங்காயம் 1 பலம்	பசுவின் மோர்

விட்டு கசாயம் வைத்துக் கொடுக்கலாம். பத்தியம் – புளி, புகை ஆகாது.

40. நீர்க்கட்டு குத்தலுக்கு கசாயம்

நீர் சுண்டி வேர் 1 பலம், கால்படி ஓமம் பொறித்துக் கொண்டு பொடுதலை ஒரு பிடி வாட்டி கொள்ளவும். விடத்தோகை வேர் அரைத்து சாந்து கொட்டைப் பாக்களவு மான்கொம்பு இளைத்துக் கொட்டைப் பாக்களவு போட்டுக் கசாயமிட்டு $^1/_4$ படி தண்ணீர் இறக்சுவேண்டும். அந்தத் தண்ணீரில் ஒரு கரண்டி நெய்விட்டு மூன்று பொழுது கொடுக்கவும். இதற்கு தீரும் நோய் மூலபேதி, வயிறு வலி, நீர்க்கட்டு எல்லாம் தீரும்.

வேறு

ஆவாரைக் குமுளும், அரிசியும் விடத் தோரையிலை அரைத்த சாந்தை விளாங்காய் அளவு கசாயமிட்டு தேத்தாங்கொட்டை அளவு போட்டுக் கொடுக்க தனிச்சு வலிக்கின்ற நீர்க்குத்தல் நிற்கும். நஞ்சு முரிச்சான் குடுக்க இறங்கும். விரியன் கட்ட இறங்கும்.

41. விசத்துக்கு சகலத்துக்கு மருந்து

நட்டுவாக்காளி, செய்யானுக்கு மருக்காரை இலையை வாயில் மென்று காதில் ஊதவும். ஈர வெங்காயம் கொட்டு வாயில் தேய்க்கவும். மருக்காரைப் பழத்தை உடைத்து உரசித் தடவவும். பொடையுரான் சொன்னது முறை.

42. தாம்பூரபஸ்பம்

ஒரு துட்டை குப்பைமேனிச் சாற்றில் மூன்று முறை உருக்கி எடுத்து, இதன் மூன்றில் ஒரு பங்கு வெல்லவங்கம் கொடுத்து உருக்கியெடுத்து 4 சாமம் அரைத்துப்பொடி செய்து குகையில் போட்டு சித்தண்ட ஓடு 3 விராகனிடைக் கூடப்போட்டு மூடிமண் சீலை செய்து உலைவாயில் வைத்து கரிதணல் உண்டாக்கி ஒரு சாமம் வாய் பூத்தாய் ஊதி குகை அழிஞ்ச பதத்தில் ஆறவிட்டு எடுக்க பஸ்பமாகும்.

அந்த பஸ்பத்தில் $^1/_8$ பணவிடை தேனில் மசித்து மூன்று நாள் ஏழு பொழுது குன்மத்துக்குக் கொடுத்து வெள்ளாட்டு வத்தல் சேர்க்க நீங்கும்.

43. இருமலுக்கு லேகிய சூரணம்

மிளகு 1 பலம்	துத்தம் 1 பலம்
அரிசி திப்பிலி $^1/_2$ பலம்	தாளிசபத்திரி $^1/_2$ பலம்
கல்கண்டு 3 பலம்	

கடைச்சரக்கை வாட்டிச் சூரணம் செய்து, கல்கண்டு பொடிச் செய்துப் போட்டு விளக்கெண்ணை விட்டுப் பிரட்டி வைத்துக் கொண்டு கொட்டைப் பாக்களவு 2 வேளையும் சாப்பிடவும்.

44. காட்டு வேர் வகை லேகியம்

ஆடாதோடை வேர்ப்பட்டை 1 பலம், மிளகரணை வேர்ப்பட்டை 1 பலம், செறுகாஞ்சொறி வேர்ப்பட்டை 1 பலம், தூதுவேளை 1 பலம், இவற்றையெல்லாம் வாட்டிப் பொடிச் செய்து கடைச்செலவு தூள் பாதி, கல்கண்டு தூள்பாதி, தேன்விட்டு ஒருமுறை சாப்பிடவும். புளி ஆகாது.

45. பூமி சர்க்கரைக் கிழங்கு சூரணம்

பூமி சர்க்கரைக் கிழங்கு	சூரணம் 10 பலம்
மிளகு 1 பலம்	சீரகம் 1 பலம்
வால்மிளகு 1 பலம்	சீனி சர்க்கரை 4 பலம்
ரசத் தக்காளிப்பழம் 10	தேன் 10 படி

கடைச்செலவு பொடிச் செய்து எல்லாவற்றையும் கூட்டி, சேர்த்து வைத்து வேளைக்கு எலுமிச்சைப் பழக்காயளவு சாப்பிடவும். பத்தியம் – இச்சாப்பத்தியம்.

வெள்ளைப் பாசாணம் 5 விராகன், பீங்கான் கிண்ணத்தில் போட்டு வெள்ளெருக்கன் பால் கால் படி விட்டு சூரிய புடமாக 15 நாளைக்கு விட்டு பால் சுருங்கின பின்னால் பாலோடு பிரட்டியெடுத்து அதன் மேல் தலைமயிர் சுத்தி குருவி கலயத்தில் வெள்ளெருக்கு இலை சுட்டச் சாம்பல் கலையத்தில் பாதி போட்டு அதன் மேல் மயிர் சுத்தின பாசாணத்தை வைத்து மேலும் சில்லுப் போட்டு சிலைமண் செய்து சாண் புடம் போட்டு ஆற வைத்து எடுத்து, இரசம் 10 விராகன் எடைக்குக் கட்டின பாசாணம் 1 விராகன் கொடுத்து உருக்க இரச வெள்ளியாகும்.

பின் வெள்ளி 1 விராகன், சுத்த செம்பு அரை விராகன் இரண்டும் கலந்து உருக்கு முகத்தில் பாசாணம் ஒரு விராகன்

கிடைக்கும். வயசி – 9 கொடுக்கவும். திரிச்சி அனுப்ப மேற்படி கடுகை கொட்டைப்பாக்களவு அந்தி சந்தியில் கொடுக்கவும்.

46. வீக்கம், நீர்சுரப்பு, ஊதுகணை

இலிங்கம் 1 விராகன்
அன்னபேதி 1 விராகன்
காந்தம் 1 விராகன்
வெங்காரம் 1 விராகன்
சுக்கு 1 விராகன்
மிளகு 1 விராகன்
கண்ட திப்பிலி 1 விராகன்
பீதரோகிணி 1 விராகன்
சுத்தி செய்த வாளம் 8 விராகன்

உத்தாமணியும், கொடிக்கள்ளியும் பச்சையாக இடித்து, வெவ்வேறாக சாறுப் பிழிந்து, சரியிடையாகக் கலந்து, முன் சரக்கெல்லாம் கல் உரலிலிட்டு, இச்சாற்றை விட்டு நன்றாக அரைத்துக் குண்டுமணிப் பிரமாணம் உருண்டைச் செய்து கொள்ளவும்.

அனுபானம்: முற்றின பூவரசன் பட்டை, கையாந்தகரை, நீர்முள்ளி கசாயம் வைத்து மாத்திரையில் ஒன்று இழைத்து கொடுக்கவும். பத்தியம் – சுயம் – லேசி.

47. இருமலுக்குச் சூரணம்

ஏலம் 1 விராகன்
கிராம்பு 2 விராகன்
சிறுநாகப்பூ 3 விராகன்
மிளகு 4 விராகன்
சுக்கு 5 விராகன்

இடித்துப் பொடி செய்து சர்க்கரை 15 விராகன் சேர்த்துக் கலந்து வேளைக்கு 1 விராகன் வீதம் சாப்பிடவும். இருமல் தீரும். பத்தியம் – லேசி.

48. இருமலுக்குப் புகை

இலவம் இலை ஒரு பிடி, வன்னி இலை ஒரு பிடி எல்லாவற்றையும் நிழலில் உலர்த்தி இடித்து வஸ்த்திரகாயம் செய்து நெய்யில் போட்டு இரஸ்த்தாளிப் பழம் நான்கினையும்

புட்டுப் போட்டுக் கிளரி மூன்று நாளைக்குப் பனியில் வைத்து 4 – ஆம் ௗாள் எடுத்து வேளைக்கு ஒரு துண்டு பழம் சாப்பிடவும்.

பரங்கிப்பட்டை ஒரு பலம், சூரணம் செய்து அதனுடன் போட்டுச் சாப்பிடவும். மெல்லிய துணியில் 2 விரக்கடை நீளமாய்க் கிழித்து அரசன் பாலில் துவைத்துக் காய வைக்கவும், இவ்வாறு மூன்று முறை துவைத்துக் காய்ந்த சிலையை எடுத்துக் கொண்டு, வேறு 2 விரக்கடைச் சீலைக் கிழித்தெடுத்து எருக்கம் பாலில் மூன்றுமுறை துவைத்து காய வைத்து எடுத்துத் தாளகம் 2 விராகன் வாங்கி உத்தாமணிச்சாறு விட்டு அரைத்து முன் சீலை இரண்டிலும் வைத்துக் காய வைக்கவும்.

பீங்கானில் எருக்கம்பால் துணியைப் புகைபிடிக்கச் செய்து, மறுநாள் பீங்கானில் பிடித்த சாம்பலை பசுவின் நெய்யில் கலந்துச் சாப்பிடச் சொல்லவும். மறுமுறை அரசன் பால் வைத்தத் துணியைப் புகைபிடிக்கச் செய்து மறுநாள் அந்த சாம்பலை பசுவின் நெய்யில் கலந்துச் சாப்பிடச் சொல்லவும். இப்படியாக மூன்றுநாள் ஆறு வேளைக்கு சாப்பிடவும்.

பத்தியம் – புளி தள்ளி பால் சாதம், வெள்ளாட்டு வத்தல் சேர்க்கலாம்.

49. வல்லாதி

சேங்கொட்டை 11 பலம்	பரங்கிப்பட்டை 4 பலம்
நெல்லிக்காய் 10 பலம்	முள்ளிக்காய் 10 பலம்
சித்திரத்தை 7 பலம்	விதை நீக்கிய தான்றிக்காய் 7 பலம்
சடாமாஞ்சி 7 பலம்	சன்னலவங்கப்பட்டை 7 பலம்
கோரோசினை 1 பலம்	கடுகு ரோகிணி 1 பலம்
வெட்பாலரிசி 2 பலம்	கிராம்பு 4 பலம்
சாதிபத்திரி 1 பலம்	மிளகு 1 பலம்
ஏலம் 1 பலம்	ஓமம் 1 பலம்
திப்பிலி 1 பலம்	செவ்வியம் 1 பலம்
திப்பிலி மூலம் 1 பலம்	கார்போக அரிசி 1 பலம்
கொத்தமல்லி 1 பலம்	வாய்விடங்கம் 1 பலம்
கருஞ்சீரகம் 1 பலம்	குங்குமம் 1 பலம்

மல்லி 1 பலம்
ராயவுரி சர்க்கரை 10 பலம்
சித்திரை மூலம் 1 பலம்
நிலப்பனைக்கிழங்கு 1 பலம்
செருவாளுவை 1 பலம்
அமுக்குரா வேர் 1 பலம்
சிவனார் வேம்பு 1 பலம்

செங்கொட்டையை எருமைச்சாணியில் 10 முறை சுத்தி செய்து புளியம் இலையில் ஒரு சுத்தி செய்து கொண்டு பசுவின் நெய் படி 1, பசுவின் பால் 1 படி, பச்சைத் தண்ணீர் 1 படி, தேன் அரை படி, கடைச்சரக்கைக் கிண்டி பொடி செய்து வைத்துக் கொள்ளவும். வேளைக்கு கொட்டைப் பாக்களவு சாப்பிடவும். 45 நாளைக்கும் சூலை 18, வாதம் – 80, மேகம் 21 – ம் தீரும்.

பசும்மோர் நெய் சேர்க்கவும். உப்பு கூட்டவும்.

50. கந்த தைலம்

செங்கொட்டை $^1/_8$ சேர்
பரங்கிப்பட்டை $^1/_8$ சேர்
கெந்தகம் 1 பலம்

இவை மூன்றையும் கலவத்தில் போட்டு குழித்தயிலமிறக்கி முன் விளாம்பட்டைத் தயிலத்தில் சேர்த்துக் கொதிக்க வைத்து கேவுருகழியில் 2 குண்டுமணி எடை போட்டுக் கொடுக்கவும். பத்தியம் – இச்சாபத்தியம்.

51. அய செந்தூரம்

அயம் 10 பலம் வாங்கி வந்து நாகப்பட்டை அரை தூக்கு கொண்டு வந்து இடித்து சாறு 1 பலம் விட்டுக் காய்ச்சி நீர் சுண்ட விட்டு எடுத்து அரைத்து தூளாக்கி கடுக்காய் தான்றிக்காய், நெல்லிக்காய் தட்டி கசாயமிட்டு வைத்து, அதில் அந்த கசாயத்தை விட்டு அரைத்து பில்லைதட்டி காயவைத்து சில்லில் வைத்து சீலைமண் செய்து 7 புடம் போட செந்தூரமாகும்.

அந்த செந்தூரத்தை பணவிடை தேனில் உட் கொள்ள பாண்டு, விச பாண்டு, காமாலை, சோகை இவையனைத்தும் தீரும்.

பத்தியம் – புளி, புகை தள்ளி இச்சா பத்தியமிருக்கவும்.

52. இரச பஸ்பம்

இரசம் 10 பலம் வாங்கி கல்வத்தில் போட்டு காட்டாமணக்குச் சாறுவிட்டு அரைத்து 10 முறை தண்ணீர் விட்டுக் கழுவிப் போட்டு 11 முறை 2 சாமம் அரைத்து வைத்துக் கொண்டு பழைய செம்பு காசுத்துட்டு 6 உம் உருக்கிக் கீழ் சிமிழ் போல மேல் சிமிழ் செய்து வைத்துக் கொண்டு கருநாபி பலம் 5 கொண்டு வந்து பசுவின் கோமியத்தில் 7 நாள் ஊற வைத்து ஒருநாள் நிழலில் உலர்த்தி மறுநாள் எடுத்து ஒரு சிறு கலசத்தில் போட்டு, முள்ளங்கிச் சாறு $^1/_2$ படி விட்டு தீமூட்டி எரிக்கும்போது பெங்களூர் களிப்பாக்கு நிறம் வரும் பதத்தில் இறக்கி, செம்பு சிமிழிக்குள் அடங்கும்படி சிமிழ் செய்து வைத்து முன் இரசத்தில் பனைவோலை 4 படி சாறுப் பிழிந்து கைமாறாமல் 4 சாமம் அரைத்து வழித்துக் காசி சிமிலுக்குளிருக்கும் நாபி சிமிழில் வைத்து மூடி சந்தில்லாமல் பார்த்து 27 முழம் தந்தி சுத்தி அதன்மேல் 7 சீலைமண் செய்து முழங்கால் அளவு குழிவெட்டி கீழே கால் மணு விராட்டி அடுக்கி அதன் மேல் சிமிழை வைத்து மேலே கால் மண் விராட்டி அடுக்கி, கணபதிக்கும், அம்மனுக்கும் பூசை செய்து பெண் நிழல் காத்துப் படாமல் தீமூட்டி ஆர வைத்தெடுத்து வெள்ளைசீசாவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

53. குட்டத்துக்கு மருந்து

சுளுத்தான் பணவிடை நெய்யில் 20 நாள் உட்கொள்ளத் தீரும்.

54. மேகம் 21

தாழை விழுதுச் சாற்றில் 2 நேரம் 3 அல்லது 7 நாள் உட்கொள்ளத் தீரும்.

55. வெட்டை வெள்ளை

அஷ்ட்ட குன்மம், அரையாப்பு, விப்புருதி, உள்மூலம், கொடி மூலம், முளைமூலம், பீனிசம் சூலை 18 – க்கும், பசும் வெண்ணெயில் 7 அல்லது 3 நாள் இருநேரமும் உட்கொள்ளத் தீரும்.

சுரம் 64 – க்கு மேற்கண்டவற்றை தேனில் 2 நாள் இருநேரமும் கொடுக்கத் தீரும்.

சன்னி 13–க்கு இஞ்சிச் சாற்றில் 2 நாள் கொடுக்கத் தீரும்.

செங்குட்டத்துக்கு முலைப்பாலில் கொடுக்கத் தீரும்.

பிள்ளை பெற முடியாதவர்களுக்குச் சாலைக் கீரைச் சாற்றில் மத்தித்துக் கொடுக்கவும். ஒருநாள் முழுமையும் பிள்ளைப் பெற மாட்டாமல் சன்னிக் கண்டிருந்தால் வேப்பிலைச் சாற்றில் மூன்று நாள் கொடுக்கவும்.

சூதக வாயு வலிக்குக் கல்கண்டு தூளில் 5 நாள் கொடுக்கவும்.

பயித்தியத்திற்குப் பெருச்சாளி மூத்திரத்தில் 2 நாள் கொடுக்கவும்.

துடைவாளைக்குப் புங்கம்பட்டைச் சாற்றில் 7 நாளைக்குக் கொடுக்கவும்.

பெண்களின் மார்பு சிலந்திக்கு வெள்ளைக் குண்டுமணிச் சாற்றில் 5 நாள் கொடுக்கவும்.

கால்பிடிப்பு குடைச்சலுக்கு சிறுஅம்மான் பச்சரிசி சாற்றில் கொடுக்கவும்.

வயிறுவலி, குலைவலி, குலைஎரிவுக்கு உப்பு கசாயத்தில் கொடுக்கவும்.

இளைப்பு, இருமல், மந்தாரகாசம், கண்டமாலைக்குத் திரிகடுகு சூரணத்தில் தேன் கலந்துக் கொடுக்கவும்.

பத்தியம் – இத்தனை வியாதிகளும் துவரம் பருப்பு, நெய்சோறு, உப்பு வறுத்துக் கூட்டவும். வெள்ளாட்டு வத்தல் சேர்க்கவும். தலைக்குத் தண்ணீர் விடும் வரைக்கும் ஒன்றும் சேர்க்காமல் எலும்பிச்சை சாறுப் பிழிந்து இரண்டு முறை முழுகவும்.

56. அகத்தியர் குழம்பு

பெருங்காயம், கடுகு, இந்துப்பு, இரசம், வெங்காரம், மனோசிலை, அரிசி திப்பிலி, அரிதாரம், கருஞ்சீரகம், வாளம் வகை ஒன்றுக்கு 1 விராகன் வாளத்தை பாதி வறுத்து பாதி பச்சையாகவும் போட்டு இரண்டு சாமம் நன்றாக அரைத்துக் கொம்பு சிமிளில் வைத்துக் கொண்டு குன்றியிடை பனை வெல்லத்தில் வைத்துக் கொடுத்தால் பேதியாகும். பத்தியம் – இச்சாபத்தியம்.

57. தாளக பஸ்பம்

தாளக கட்டி 1 பலம் வாங்கி பேரண்டம் பொடி செய்து சுண்ணாம்பு தெளிவு விட்டு அரைத்து குகை செய்து, சில்லும் செய்து தாளகத்தை கேசரி நீரினால் 7 முறை சுத்தி செய்து மூடிக் குகைக்குள் வைத்து சில்லுமூடி 7 சீலைமண் செய்து காடைப்புடம் போட்டு எடுத்தால் துய்மையான பஸ்பமாகும். இந்த பஸ்பத்தில் பணவிடை நெய் பசுவின் வெண்ணெயில் கலந்து சாப்பிடத் தீரும்.

தீரும் வியாதி

இளைப்பு காசம், இருமல், சயம், எரிப்பு, எலிகடி, உள்மாந்தம் எல்லாம் தீரும்.

58. சி(லி)ங்க பஸ்பம்

ஒலந்தாலிங்கம் கட்டியாக ஒரு பலம் வாங்கி சிறுமுள்ளி வேர்ப்பட்டை அரைத்துக் குகையும் சில்லும் செய்து, இலிங்கக் கட்டியே அதற்குள் வைத்து சில்லுமூடி சீலைமண் 3 செய்து காடைப்புடம் போட்டு எடுக்க நீர்த்துப் போகும். தேனில் உட் கொள்ளத் தீரும்.

தீரும் வியாதி

சன்னி வாதம், கெற்பவாயு, பாரிச வாயு, சூலை, ஈழை, இறைப்பு, சுரம் அவையனைத்தும் தீரும். பத்தியம் – லேசி.

59. கெந்தக பஸ்பம்

கெந்தகம் 1 பலம் வாங்கி சிறுசின்னியிலை அரைத்து, அதற்குள்ளாகக் கெந்தகத்தை வைத்து அந்த பச்சிலையில் மூடி 3 சீலைமண் செய்து காடைப்புடமிடத் தீரும். நெல்லிடை தேன், நெய்யில் உட்கொள்ளத் தீரும்.

தீரும் வியாதி

வாதம், குஷ்ட்டம், கிரந்தி, சூலை, வயிற்று வலி, நீர்குத்தல், மகோதரம், சூதகவாயு, மேகம் 21 – ம் தீரும். பத்தியம் – லேசி.

60. இரச பஸ்பம்

இரசம் ஒரு பலம் வாங்கி சுத்தி செய்து சிவ கரந்தைச் சாற்றை விட்டு 3 நாள் அரைத்து வில்லை செய்து காயவைத்து ஓட்டில் வைத்து சீலைமண் செய்து காடைப் புடமிட நீர்க்கும். பணவிடை நெய்யில் பனைவெல்லத்தில் உட்கொள்ள தீரும்.

தீரும் வியாதி

சூலை பதினெட்டு, கிரந்தி குஷ்ட்டம், கண்டமாலை, விப்புருதி எல்லாம் தீரும்.

61. காந்த செந்தூரம்

ஊசிக்காந்தம் ஒரு பலம் வாங்கி சிறியாநங்கை கொண்டு வந்து அமுரிவிட்டு இடித்து சாறு வாங்கி 4 சாமம் அரைத்து வில்லை செய்து காயவைத்து ஓட்டில் வைத்து சிலைமண் செய்து கெசபுடமிட பஸ்மாகும்.

பணவிடை பஸ்பம் சுக்கு அரைத்து கழஞ்சிக்காய் வீதம் மாதுளங் காய்ச்சாறு விட்டு அரைக்கவும். அதற்குள் பஸ்பம் வைத்துக் கொடுக்கத் தீரும்.

தீரும் வியாதி

பாண்டு ரோகம், சலக்கழிச்சல், பிரமேகம், நீர்சிலுப்பு, காந்தல், சுரம் இவையனைத்தும் தீரும்.

62. குன்மத்துக்கு செந்தூரம்

தொட்டுலாந் தகடு 1 பலம், இரசம் 1 பலம், வீரம் 1 பலம், நவச்சாரம் 1 பலம் இந்த நான்கு சரக்கையும் கல்வத்தில் போட்டு அரைக்கப் பொடியாகும். இந்த பொடியை ஒரு ஓட்டில் வைத்து மூன்று கல் அடுப்புக் கட்டி விரல் பிரமாணம் திரிகொளுத்தி, இரும்பு சிலாகையால் கிண்டிவிட்டு சிவந்த பதத்தில் எடுத்து வைத்துக் கொண்டு குன்மம், அர்த்தமேகம் 21 – க்கும் சித்திர வல்லாதியில் பணவிடை வைத்துக் கொள்ளவும்.

63. பித்தகுன்மம்

முசுமுசுக்கைச் சாறு $^1/_2$ படி	பற்படாகச் சாறு $^1/_2$ படி
தேங்காய்ப்பால் $^1/_2$ படி	கசகசா சாறு $^1/_2$ படி
பசும்பால் $^1/_2$ படி	பசுந்தயிர் $^1/_2$ படி
பசுவின் நெய் $^1/_2$ படி	

அவற்றை ஒன்றாக சேர்த்து சுக்கு, மிளகு, சீரகம் இவை வகைக்கு 2 பலம், சீனி சர்க்கரை 8 பலம், சீனிக் கற்கண்டு 10 பலம், நாட்டுச் சர்க்கரை 4 பலம், கொத்தமல்லி 4 பலம் இவையெல்லாம் பொடி செய்து முன் சாற்றில் போட்டு அடுப்பில் வைத்து எரித்து லேகிய பதத்தில் எடுத்து வைத்து கொண்டு வேளை ஒன்றுக்கு கொட்டைப்பாக்கு வீதம் இரண்டு வேளையும் சாப்பிடத் தீரும்.

64. வீர பஸ்பம்

வீரம் ஒரு பலம் வாங்கி கொடி முந்திரி இலையும் மகிழம் இலையும் இரண்டும் அரைத்துக் குகை செய்து அதற்குள் வீரத்தை வைத்து இலையால் மூடி மூன்று சீலைமண் செய்து காடைபுடம் போட்டு எடுக்க பஸ்பமாகும். இந்த பஸ்பத்தில் பணவிடை கொள்ள சகல ரோகமும் தீரும்.

65. அயச் செந்தூரம்

இரும்பை குகையில் போட்டு உருக்கி, அதில் கெந்தகம் ஒரு பலம் போட்டு வறுக்கச் செந்தூரமாகும்.

இதில் பணவிடை தகுந்த அனுபாணங்களில் வைத்துக் கொடுக்க சகல வியாதியும் தீரும்.

66. பாரிசவாயு, உள்மாந்தம்

சுக்கு 1/2 பலம்	சித்திரத்தை 1/2 பலம்
மிளகு 1/2 பலம்	கொத்தமல்லி 1/2 பலம்
பிரண்டை ஒரு பிடி	புரசம் பட்டை ஒரு பிடி

எல்லாவற்றையும் நறுக்கிப் போட்டுக் கசாயம் வைத்து 5 வேளை கொடுக்கவும். அதில் தாளகக்கட்டு, கோரோசினை இழைத்துக் கொடுக்கவும். பரங்கிப்பட்டை ஒரு பலம் தட்டிப்போட்டு உட்கொள்ளவும். பத்தியம் – புளி தவிர இச்சா பத்தியம்.

67. இருமலுக்கு லேகியம்

வெள்ளைக் காக்கரட்டான் இலையை ஒரு விளாங்காய் மொத்தம் அரைத்து பசும்பால் ஒரு படி விட்டு அதில் பசும் நெய் அரை படி, ஏல அரிசி 2 பலம் வாட்டிப் பொடிச் செய்து பனவெல்லம் 2 பலம் போட்டுக் கலக்கி அடுப்பிலேத்தி சுண்ட எரித்து லேகிய பத்தில் இறக்கி வைத்துக் கொண்டு 2 வேளையும் வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டைப் பாக்களவு கொடுக்கத் தீரும்.

பத்தியம் – இச்சா பத்தியம்.

68. பீனிசம், சீபீனிசம், சீராபீனிசம், இரத்தபீனிசம், சகலத்துக்கும்

சுக்கு	மிளகு
பூண்டு	சதகுப்பை
கடுகு	கோஷ்ட்டம்

வலம்புரிக்காய் இந்துப்பு
பேரரத்தை தேவதாரம்
கஸ்தூரி மஞ்சள் கம்பி பிசின்
மஞ்சள் வாய்விளங்கம்
கடுகு ரோகிணி சடாமாஞ்சில்
சாம்பிராணி குங்குமப்பூ
கோரோசனை கிராம்பு
ஏலம் வால்மிளகு
தாளிசபத்திரி சிகப்பு வசம்பு
அரிசி திப்பிலி இவை வகைக்கு 5 பலம்
நல்லெண்ணெய் 2 படி வெட்டிவேர் 5 பலம்
அதிமதுரம் 1 பலம்

வெட்டிவேரை எட்டுபடி தண்ணீர் விட்டு கொதிக்க வைத்து ஒரு படி தண்ணீரில் அதுமதுரத்தை நறுக்கி அதைப்போட்டு எண்ணெய் விட்டு, அதில்

நொச்சிச்சாறு கரிசிலாங்கண்ணிச் சாறு
ஆதண்டைச்சாறு சங்கங்குப்பிச்சாறு
நெல்லிக்காய்ச் சாறு முள்ளிக்காய்ச் சாறு
வெற்றிலைச்சாறு இஞ்சிச்சாறு
கற்பூரவல்லிச்சாறு அருகன்வேர் சாறு
இவை வகைக்குச்சாறு $^1/_2$படி
மாதுளம் பூ 10 செங்கழு நீர்ப்பூ 10
கருநொச்சிச் சாறு $^1/_2$ படி பீனிசங்கிழங்கு 1 பலம்
கருஞ்செம்பைப் பூவும் பிஞ்சும் 2

நெல்லிக்காயை அரைத்துப் போட்டுக் கலக்கி அடுப்பில் வைத்து முருங்கைப்பூச் சாறு $^1/_4$ படி, விஷ்ணு கிரந்திப்பூ 1 பலம், துளசிச்சாறு $^1/_4$ படி, விழுதிச்சாறு $^1/_4$ படி, விட்டெரித்து மெழுகுப் பதத்தில் வடித்து மூன்று நாளைக்கு மட்டும் தேய்த்துத் தலைமுழுகத் தீரும்.

69. பித்தவெட்டைக்கு கைகால் வெடிப்புக்கு மருந்து

துளசிச்சாறு 2 படி, விழுதிச்சாறு 2 படி விட்டு எரித்து மெழுகு பதத்தில் மூன்று நாள் வட்டம் தேய்த்து தலைமுழுகத் தீரும்.

உளுந்து $^1/_4$ படி உமியைப் போக்கிவிட்டு சிவக்கரந்தைச் சாறு விட்டு ஊற வைத்துக் கடைந்துப் பசுவின் நெய்யில் வடைச் சுட்டுச் சாப்பிட தீரும்.

70. வெடிப்புக்குத் தடவ

சிப்பி சுண்ணாம்பு, விளக்கெண்ணெய், பசுவின் நெய்யும் நொச்சிச் சாரும் கலந்துக் குழைத்துப் பூசவும். வடைச் சுட்ட நெய்யை உள்ளுக்கும் சாப்பிடத் தீரும்.

71. வீக்கத்துக்குக் கசாயம்

சோற்றுக்கற்றாழைச் சருகு ஒரு பிடி, நிலஆவாரை ஒரு பிடி, பிரமி வழுக்கை ஒரு பிடி, களிப்பாக்கு 5, புழுங்கலரிசி ஒரு பலம் இடித்துக் கருக வறுத்துக் கசாயமிட்டு கால் படி கசாயத்தில் விளக்கெண்ணெய் $^1/_4$ பலம் கூட்டிக் கொடுக்கவும். இப்படி மூன்று வேளைக் கொடுக்க மஞ்சள் தண்ணீர் போல் பேதியாகும். வீக்கம் இறங்கும்.

பத்தியம் – பொரித்த ரசம் சாதம் கொடுக்கவும்.

72. நரித்தலை வாதம், முழங்கால் வாதம், குடைச்சலுக்கு கீல்வாயுக்கு

கண்டங்திப்பிலி $^1/_4$ பலம் அரிசி
திப்பிலி $^1/_4$ பலம் ஓமம் $^1/_4$ பலம்
பூண்டு $^1/_2$ பலம் காயம் $^1/_4$ பலம்
பரங்கிப்பட்டை $^1/_2$ பலம் பிரப்பங்கிழங்கு $^1/_4$ பலம்
சத்திசாரணைக் கிழங்கு ஒரு பலம்
சீத்தாக்காய் $^1/_2$ பலம் சித்திரமூல வேர் $^1/_4$ பலம்
நல்லவேளைவேர் 10 பலம்

எல்லாவற்றையும் திருகுகள்ளிச் சாறு $^1/_2$ பலம் விட்டு அரைத்துக் குழப்பி சுரசம் செய்து இறுத்து, அந்த சுரசத்தில் $^1/_2$ விராகன் பூரம் இழைத்து மூன்றுநாள் 6 வேளைக் கொடுத்து கடும் பத்தியம் போட்டு 7– ஆம் நாள் உப்பு வறுத்துச் சேர்க்கவும். 16 –

ஆம் நாள் தலைக்குத் தண்ணீர் விட்டு புளி சேர்க்கவும். பத்தியம் ரொம்ப கடினமாக இருக்கவும்.

73. மஞ்சட் காமாலை

வெள்ளாடு, பன்றி, முயல், உடும்பு இவற்றின் பச்சி (மார்பின்) ஈரலோடு அறுத்து அவிரியிலையை அரைத்து ஈரலுக்குத் தடவி அடுப்பில் போட்டு சுட்டுச் சாப்பிடவும்.

மேற்படி பசுவின் பாலிலே முன் பச்சிலைச் சாறு விட்டுக் கலக்கி உள்ளுக்குக் கொடுத்து தலைக்கும் தேய்த்து முழுக வேண்டும். காமாலைத் தீரும்.

74. பித்தநீர்க்கட்டி, கண்ணை நீலம் போல நிறைக்கிறதும் அந்திமாலைக்கும்

வண்ணான் அவுரியிலைச் சாந்தை எலுமிச்சங்காயளவு அரைத்துப் பசுவின் பாலில் போட்டு கால்படியில் எல்லாவற்றையும் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கவும்.

பத்தியம் – 8 பலம் மூன்று நாள் கொடுத்து உப்பில்லாப் பத்தியம் பிடிக்கச் சொல்லவும். மூன்று நாள் காட்டு மல்லிகை இலை கொண்டு வந்து வட்டியே கவிழ்த்து மேற்படி பச்சிலையை கசக்கிப் பிழிந்து மூன்றுநாள் கண்ணில் போட பித்தநீர், கண்தினவு, உறுத்தல், நீலநீர் பிரிந்து வெளிச்சமாகும்.

75. இரத்தம் போல் மேத்தலை வாயுக்கு

ஆவாரம் இலைச் சாறுவிட்டு இழைத்துப் போடவும். சதைவளத்தி, சிகப்பு ஆணியெல்லாம் தீரும்.

76. தலைமுழுகத் தயிலம்

நல்லெண்ணைய் 1 படி	சுக்கு 1 விராகன்
சித்திரத்தை 1 விராகன்	கடுக்காய் 2 விராகன்
தான்றிக்காய் 1 விராகன்	செம்பு 1 விராகன்

பூண்டு 1 விராகன் அரிசி திப்பிலி 2 விராகன்
அரக்கு 2 விராகன் விருகங்கிழங்கு 2 விராகன்

இவற்றை அரைத்து எண்ணெயில் போட்டுக் கலக்கி எரித்து மெழுகுப் பதத்தில் வடித்து ஒருநாள் விட்டு ஒருநாள் 10 நாட்களுக்கு முழுகவும்.

பத்தியம் – புளியில்லாமல் ரசம் சாப்பிடவும். பசுவின் மோர் சேர்க்கவும். பித்தநீர் கரைந்து நேத்திரம் (கண்) வெளிச்சமாகும்.

77. மேகக்கட்டி விப்புருதி

மிளகு, பூண்டு, வசம்பு மாவலிங்க இலை வகைக்கு 1 பலம், அவுள் 2 பலம் எல்லாவற்றையும் அரைத்து விளக்கெண்ணெய் ஒரு படி விட்டு எரித்து முருகின பதத்தில் இறக்கி எடுத்துக் கொண்டு மெல்லிய துணியில் பிடித்துக் கட்டி மேலாக 8 நாள், 10 நாள் காயாமல் போடவும். உடைந்து போகும்.

சத்திரமிட்ட (கத்தி வைத்து அறுத்த) புண்ணுக்குப் போட ஆறிப் போகும்.

78. புண்ணுக்கு காரயெண்ணெய்

சவ்வீரம் 1 விராகன், வெள்ளைப்பாசாணம் 1 விராகன், மயில் துருசி வாங்கி அரைத்து எருமை வெண்ணெயில் கலந்து கட்டி புண்ணுக்குப் போட முளையுடன் பிச்சிக் கொண்டு வரும்.

79. அருந்து பிளவுப்பட்டு (சத்திரமிட்டு) கரைக்கட்டி இருந்தாலும் கண்ணுக்குள் இருந்தாலும் அதன் மேல் போட மருந்து

கற்பூரத் தூள் போட்டு அதன் மேல் மஞ்சள் தூள்போட்டு அதில் பருத்திக்கொட்டைத் தூள் போட்டு அதன் மேல் துத்தி இலையாகிலும், கோபுரந்தாங்கி இலையாகிலும் அரைத்து வில்லையாகப் போட்டுக் கட்டவும். மூன்றுநாள் கழித்து களிம்பு போடவும்.

80. முழங்கால் வீக்கத்துக்குப் பத்து

சீத்தாக்காய் பட்டையை எருமை மோர் விட்டு அரைத்து கட்டி காயாமல் மோர் விடவும். இப்படி 3 நாள் கட்டவும். மிகவும் எரிச்சல் கண்டால் ஆவாரையிலையைத் தண்ணீர் விட்டு இடித்துக் கட்டக் குளிர்ந்துப் போகும். முழங்கால் பிடிப்பும் தீரும்.

முருங்கைப்பட்டை $^1/_2$ பலம்
சித்திர முலி வேர் 2 பலம்
யோகாவேர் 2 பலம்
சூரியகண்ணா 2 பலம்
சாம்பிராணி 1 பலம்
ஓமம் 1 பலம்
சதகுப்பை 1 பலம்
கருஞ்சீரகம் 1 பலம்
முசுறுமுட்டை 2 பலம்
பூண்டு 1 பலம்
கேழ்வரகு மாவு 2 பலம்
உத்தாமணிச்சாறு $^1/_4$ படி
நல்லவேளைச் சாறு $^1/_4$ படி
எருக்கம் பூ இலைச் சாறு $^1/_4$ படி
நொச்சிச்சாறு கால்படி
காட்டாமணக்குச் சாறு $^1/_4$ படி
சதிரக்கள்ளிச்சாறு $^1/_4$ படி
திருகு கள்ளிச்சாறு $^1/_4$ படி
தழுதாழைச் சாறு $^1/_4$ படி சேர்த்துக் கற்றாழைச் சாறு $^1/_2$ படி எல்லாம் கொதிக்க வைத்து மூன்று பத்துப் போடவும்.

81. உள்ளுக்குக் கொடுக்க விபரம்

பாவலிங்கம்
நொச்சி
முருங்கை
வெள்ளறுகு
சங்குவேர்
சித்திர மூலம்
யோகாவேர்
வேளை
எருக்கு
கண்டங் திப்பிலி
அரிசி திப்பிலி
சித்திரத்தை
பூண்டு
காயம்
கருஞ்சீரகம்
பரங்கிப்பட்டை
பிரப்பங்கிழங்கு
கடைச்சரக்கு வகைக்கு 2 பலம்

பச்சிலைச்சாறு வகைக்கு $^1/_2$ படி இவையெல்லாம் அரைத்துக் கலந்து சுரசம் பண்ணி அதில் வீரமெழுகு பணவிடை பூரம், இலிங்கம், வாதராசதன் இழைத்து ஏழு பொழுது கொடுக்கவும் சத்தி சாரணைக்கிழங்கும் கூட்டவும். கைகண்டது.

82. சித்தபிரமி ஜன்னிக்கு கைகண்டது

முருங்கை வேர் 5 பலம்	சித்திரமூலவேர் 5 பலம்
யோகா வேர் 2 பலம்	சுண்ணாம்பு 2 பலம்
சதகுப்பை 2 பலம்	ஓமம் 1 பலம்
கருஞ்சீரகம் 1 பலம்	கஸ்தூரி மஞ்சள் அரை பலம்
முசுரு முட்டை 2 பலம்	கேவுரு மாவு 2 பலம்
உத்தாமணி	எருக்கம் பூ
காட்டாமணக்கு	நொச்சி

சேர்த்துக் கற்றாழை வகைக்குச் சாறு $^1/_2$ படி எடுத்து சரக்கெல்லாம் அரைத்துக் கொழப்பிக் கொதிக்க வச்சிப் பத்துப் போடத் தீரும். மறுபடி சூடான

முசுறு முட்டை $^1/_4$பலம்	சதகுப்பை $^1/_4$ பலம்
ஓமம் $^1/_4$ பலம்	கருஞ்சீரகம் $^1/_4$ பலம்
சுக்கு $^1/_2$ பலம்	கடுக்காய் $^1/_2$ பலம்
கஸ்தூரிமஞ்சள் $^1/_2$பலம்	முருங்கைப்பட்டை $^1/_4$ பலம்
உத்தாமணி	வேளை
நொச்சி	ஆமணக்கு
கேழ்வரகு மாவு	எருக்கம்பூ இவைகள்சாறு$^1/_4$ படி,
கற்றாழைச்சாறு $^1/_2$ படி	கரிமுள்ளிச் சாறு 1 பலம்
கண்டங்கத்திரி இலைச்சாறு 1 பலம்	

எல்லாம் குழப்பி வைத்துப் போடவும்.

83. உள்ளுக்கு சுரசம்

மாவலிங்கு	முருங்கை
வேளை	சங்கு
நொச்சிவேர்	சித்திரமூலம்
யோகா	கண்டதிப்பிலி
அரிசி	திப்பிலி
சித்தரத்தை	

இவையெல்லாம் அரைத்து இரசம் செய்து பூரம், இலிங்கம், வாதராக்ஷதன், இழைத்துக் கொடுக்கவும். மறுபடி சூட்டுக்கு,

ஆரமுரிவு	வெற்றிலை 7
சங்கு இலை 10	கரிமுள்ளி இலை 10
செம்முள்ளி இலை 20	கண்டங்கத்திரி இலை

சட்டியில் போட்டு வதக்கி $^1/_2$ படி தண்ணீரில் பூரம் கோரோசினை இழைத்து 2 வேளை கொடுக்கவும். இதற்கு மேல் பொடி போட கருஞ்சீரகம், கண்டதிப்பிலி, அரிசிதிப்பிலி, சித்தரத்தை, கிராம்பு வகைக்கு $^1/_4$ படி, வறுத்துப் பொடி செய்து போட்டுக் கொடுக்கவும்.

84. மேகவூறல், கைகால் நகம் சொத்தை வெடிப்பு கண்டது, மயிர் முளைக்காமல் சொட்டை விழுவது தடுக்க

எட்டிக்கொட்டை தூக்கு 2	வெள்ளாட்டுப்புழுக்கை தூக்கு $^1/_2$ படி
கழுதை லத்தி $^1/_2$ தூக்கு	அழிஞ்சிப்பட்டை ஒரு தூக்கு
வேப்பம் பட்டை ஒரு தூக்கு	பூவரசுப்பட்டை 1 தூக்கு

மாவுலிங்கப் பட்டையும் இலையும் $^1/_2$ பலம் இவையெல்லாம் குழித் தயிலம் இறக்கி ஒரு படி,

விளக்கெண்ணெய் $^1/_2$ படி	சின்னிஇலை $^1/_2$ பலம்
வரசுயிலையும் புழுங்கலரிசி $^1/_4$ படி	

ஊற வைத்து அரைத்து உருண்டை 4 பலம, மிளகு அரை பலம், வசம்பு அரை பலம், பூண்டு அரை பலம், பரங்கிப்பட்டை அரை பலம், வாலுளுவை அரிசி அரை பலம், கருஞ்சீரகம், சித்திரமூலவேர் 2 பலம் எண்ணெயில் போட்டு பமிலிறகு சுட்டது 5 பலம் கூட்டி எரித்து மெழுகு பதத்தில் வடித்து, முன் தயிலமும் எண்ணெயும் கலந்து ஒரு கரண்டி விதம் 40 நாளைக்குச் சாப்பிடவும்.

பத்தியம் – உப்பு, புளி, கரப்பான் பண்டமாகாது. பொறி, மிளகு நீர் சாதமும் வெந்நீரில் உட்கொள்ளவும்.

85. கைகால் வெடிப்பிலும் உடம்பிலும் துவளை

எட்டித் தயிலம் இல்லாமல் எண்ணெயை மட்டும் பூசி மருக்காரை அரப்பு போட்டுக் குளிக்கவும். சரீர சொரசொரப்பு உதிர்ந்து சொட்டை மயிர் முளைக்கும்.

தீரும் வியாதி

மயிர் உதிர்தல், சொட்டை, பித்த வெட்டை, பொடுவு, புண்ணு விழுகுவது, கைகால் வெடிப்பு, மேல் சொரசொரப்பு, ஊறல் இவையனைத்தும் தீரும்.

பத்தியம் – $^1/_2$ மண்டலம் கடிசி, $^1/_2$ மண்டலம் இச்சாபத்தியம். உப்பு வறுத்துக் கொண்டு வெள்ளாட்டு வத்தல், பசுவின் பால், மோர் சேர்க்கவும்.

86. சத்திரப் புண்ணுக்கு மேல் போடக் களிம்பு

கடுக்காய், மயில் துருசு, வெள்ளை துத்தம், மாத்து வெள்ளை காசுகட்டி, களிப்பாக்கு, வகைக்கு இவை 1 பலம் 1 கடுக்காயைத் துணியில் சுட்டுப் போட்டு எருமை வெண்ணெயில் குழப்பி சீலையில் பிடித்து பத்து நாள் போடவும்.

87. சூசசமாய் இருக்கும் களிம்பு

பச்சைவெட்டு, குங்கிலியம் 1 பலம் பொடி செய்து கரண்டி நல்லெண்ணெயில் எரித்துப் பச்சைத் தண்ணீரில் ஊற்றி அதையெடுத்து கிண்ணத்தில் வைத்து தண்ணீர் விட்டு மத்திக்க வெண்ணெய் போலாகும். மெல்லிய துணியில் தடவி புண்ணுக்குப் போட விரைவில் ஆரும்.

88. சொட்டைக்கு மருந்து

சித்திரமூலவேர் 1 படி, கருஞ்சீரகம் 1 பலம், புழுங்கல் அரிசி $^1/_4$ படி வைத்து அரைத்து அடைத்தட்டி பசுவின் நெய்யில் பனையாரம் சுட்டு எட்டு நாட்கள் சாப்பிடவும். நெய்யும் சாப்பிடலாம்.

பூவரசு இலை 1 படி	புழுங்கல் அரிசி $^1/_4$ படி
பூண்டு $^1/_4$ விராகன்	வசம்பு $^1/_4$ வராகன்
மிளகு $^1/_4$ வராகன்	

இவற்றை அரைத்து முன்போல ஒரு படி விளக்கெண்ணெயில் எரித்துக் கொண்டு வேளைக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு மேலுக்கும் தடவவும்.

15 நாளைக்குள் சொறி, சொட்டை, வட்டம், புண், கால்கை நகம் சொத்தை, கரப்பான் தினவு எல்லாம் தீரும்.

பத்தியம் – இச்சாபத்தியம். அரை மண்டலம்.

89. இருமல் இளைப்பு

பசுவின் பால் 4 படி, வெள்ளைக் கரக்கரட்டான் இலைச் சாந்து 10 பலம், சித்தரத்தை 4 பலம், ஏலம் 5 பலம், பனைவெல்லம் 5 பலம், பசுவின் நெய் கால் பலம், இடித்து கலந்து 40 நாட்கள் சாப்பிடத் தீரும்.

90. பித்த சூட்டினால் கெறு கெறு என்று இழுப்பு, இருமல்

சிறுகாஞ்சொறிவேர் 1 பிடி, பசுவின் பால் 1 படி விட்டு வேக வைத்துக் கடைந்து வேளைக்கு அரை படி பால் சாப்பிடவும். 40 நாட்களில் இருமலும், கோழையும் நிற்கும். தாளக பஸ்பம் 6 வேளை சாப்பிடவும்.

பத்தியம் – இச்சாபத்தியம்.

91. பெரும்பாடு இரத்த மேகம்

முளுகத்து நெய் அரை படி, புழுங்கல் அரிசியை ஊற வைத்து கழுதும்பை இலையும், சீரகம் 2 பலம், பனைவெல்லம் 2 பலம், எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்து கொட்டைப் பாக்களவு 15 நாள் சாப்பிடவும்.

பத்தியம் – புளி புகைத் தவிர்க்க நிற்கும்.

பெரும்பாட்டுக்கு – இலந்த இலையும் வரகரிசி தவிடுடன் இடித்துப் புட்டு அவித்துக் கொடுக்கவும்.

92. காது இரைச்சல், சீபாச்சலுக்கு, செவியடைப்பு, செவிடுக்குத் தயிலம், காது சீக்கு, கரப்பானுக்கு மருந்து

சுக்கு	மிளகு
கருஞ்சீரகம்	பூண்டு
வசம்பு	கஸ்தூரி மஞ்சள்
கடல் நுரை	பெருங்காயம் வகைக்கு 1 பலம்
வேளைவேர் 2 பலம்	முருங்கைப்பட்டை 3 பலம்
நொச்சிச் சாறு $^1/_2$ படி	ஆதண்டைச் சாறு $^3/_4$ படி
முசுறு முட்டை 2 பலம்	நண்டு 2 பலம்,
கோழிமுட்டை 4	நாக்குப்பூச்சி 2 பலம்
வேப்பெண்ணெய் $^1/_2$ பலம்	நல்லெண்ணெய் $^1/_2$ பலம்

ஒன்றாக கலந்து எரித்துக் காதில் விட்டு அடைத்து ஒருநாள் விட்டு ஒருநாள் தேய்த்து குளிக்கத் தீரும்.

பத்தியம் – பொறித்த இரசமும், சாதமும் சாப்பிட காது கேட்கும்.

93. பீனிசம் சீறா பீனிசம்

நஞ்சு பாலை வேர் 3 பலம், வேப்பெண்ணையும் நல்லெண்ணையும் சரி சமமாக எடுத்து எரித்து குளிக்கத்தீரும்.

வேறு

ஆனை வணங்கிச் சாறு அரை படி, வேப்பெண்ணையைச் சேர்த்து எரித்து குளிக்கத் தீரும்.

வேறு

நாகதாளி என்கின்ற தூதுவளை, தேள் கொட்டினால் போன்று சருமம் எல்லாம் வலிக்கும் வாயுவுக்கு

ஊமத்தை இலைச்சாறு அரைபடி, கரிய சுண்ணாம்பு இரண்டும் குழைத்து உடல் முழுவதும் பூச உடனே வலி நிற்கும்.

94. சயத்துக்கு தாளக பஸ்பம்

தாளகம் 4 பலம் வாங்கி சுண்ணாம்பு நீரினால் கழுதை சிறுநீர் விட்டு 7 முறை சுத்தி செய்து கொண்டு வீரம் 1 விராகன் எடை எருக்கம் பால் விட்டு அரைத்து தாளகத்துக்குக் கவசமிட்டு சுண்ணாம்பு நீருக்குள் வைத்து ஒரு சாமம் எரிக்க பஸ்மமாகும்.

தேனிலாவது, தூதுவளைக் கசாயத்திலாவது 7 நாள் கொடுக்கத் தீரும்.

பத்தியம் – இச்சாபத்தியம்.

95. தாமிர பஸ்பம்

தாமிரத்துட்டை சதிரக்கள்ளி பால் பரத்துக்குள் 60 நாழிகை வைத்து எடுத்து அதில் கருவள்கம் சமமாகச் சேர்த்து உருக்கி சவ்வீரம், எருக்கம்பாலில் அரைத்து தடவி சீலைமண் செய்துப் புடம் போடவும்.

பின்பு ஆடாதொடா வேரும், வெண்நொச்சி வேரும் கவசமிட்டு கெசபுடம் போடவும்.

பின்பு பூரம் முலைப்பாலில் அரைத்து எருக்கம்பால் சேர்த்துக் கவசமிட்டு கெஜபுடம் போட்டு எடுக்க பஸ்பமாகும்.

வலி குன்மத்துக்கும் வாயு குன்மத்துக்கும் வெண்ணெயில் 20 நாள் சாப்பிடவும்.

தீரும் நோய்

சிம்மு வாதம், முட்டு வாதம், சயம், காசம், குஷ்டமெல்லாம் தீரும்.

பத்தியம் – இச்சாபத்தியம். பசும்பால், நெய், மோர், வெள்ளாட்டு வத்தல் சேர்க்கவும்.

96. கிராணிக்கு மருந்து

அதிவிடையம் 10 பலம், கடுக்காய்ப் பூ கால் பலம், கொத்தமல்லி கால் பலம், கிளுவைப்பட்டை இடித்த தூள் 1 படி கசாயமிட்டு இந்த கசாயத்தை விட்டு மருந்தையெல்லாம் அரைத்துக் கலந்து மூன்று நாளைக்குக் கொடுக்கவும்.

பத்தியம் – கெட்டி

97. காமாலை

கீழாநெல்லிவேர், நன்னாரி வேர் இரண்டும் அரைத்துக் கொட்டைப் பாக்களவு பசும்பாலில் கலந்து 3 நாள் கொடுக்க ஐந்தாம் நாள் பத்தியம் இருந்து ஆறாம் நாள் உப்பு வறுத்துச் சேர்க்கவும்.

98. பூர மாத்திரை கட்டு

பூரம் 1 பலம், வீரம் அரை பலம் இரண்டையும் சேர்த்துப் பசும்பாலில் 5 படி ஆழமான கரண்டி விட்டு மருந்தைப் பொடி செய்து சுருள் சுருளாகக் காய்ச்சிக் கிண்டி மெழுகு பதத்தில் சாணியைக் குழைத்து அதில் மருந்தை ஊற்றி சாணியால் மூடவும்.

எருமைச்சாணி மாத்திரையாகும். முலைப்பாலில் சுத்தி செய்து கொள்ளவும்.

99. இலிங்க மாத்திரைக்கட்டு

உலர்ந்த இலிங்கம் ஒரு பலம் வாங்கி ஓட்டில் வைத்து எலுமிச்சைச் சாறு ஒரு படி விட்டு ஒரு சாமம் சுருக்கிக் கொடுக்கவும். இதற்குக் கட்டுபடாவிட்டால் மறுபடியும் ஒரு சாமம் சுருக்கிக் கொடுக்கவும்.

100. தாளக மாத்திரைக் கட்டு

பொன் அரி தாரம் ஒரு பலம் வாங்கி ஆலம்பாலில் 5 நாள் ஊற வைத்து பாலைக் கையால் எடுத்து தட்டி கரிய சுண்ணாம்புத்

துணியின் மேல் தடவி தாளகக்கட்டியில் சுத்தி மூன்று சுற்று சுற்றி அதன் மேல் நூல் சுற்றி விளக்கில் துணியைக் கொளுத்தி 5 நாள் அரை நாழிகை வாட்டிப்பின் கெந்தகத்தில் போட்டு வாட்டவும். அதன் பின் கட்டவும்.

101. உள்மாந்த சன்னி

கண்டதிப்பிலி, அரிசி திப்பிலி, சித்திரத்தை, கிராம்பு, கருஞ்சீரகம் வகைக்கு முக்கால் பாகமாக வாங்கி வாட்டிப் பொடி செய்து வைத்து, அதில் வெற்றிலை 10, வேளையிலை 10, செம்முள்ளியிலை 20, கரிமுள்ளி இலை 20, கண்டங்கத்திரி இலை 15, சங்குக்காய் 10 எல்லாவற்றிலும் தண்ணீர் தெளித்து வதக்கி இறுத்து, அரைகால் படி தண்ணீரில் அதை 2 விராகம் எடை போட்டு 2 வேளைக் கொடுக்கவும்.

102. பின்பு சுடர்த் தயிலம்

சித்திரத்தைத் தண்ணீர் துட்டிடை 2 பொழுது கொடுத்து முலைப்பால் ஆட்டி முடித்து பூரம் கோரோசினையும் இழைத்துக் கொடுக்கவும். மூன்று வேளை குமரிச் சாற்றில் சதகுப்பை 1 பலம், ஓமம் 1 பலம், முசுறுமுட்டை 1 பலம் அரைத்து நெருப்பிலிட்டு இறக்கி மூன்று நாள் உடல் முழுவதும் பூசத் தீரும்.

பித்த சிலேத்துமத்தால் கைகால் துவளை விறுவிறுப்புக்குக் கொடுத்து முருங்கைவேர்ப்பட்டை 2 பலம், முசுறுமுட்டை 2 பலம், கரியசுண்ணாம்பு 2 பலம், குமரிச்சாறு அரைக்கால் படி இவற்றை அம்மியில் பாலிடையாக கருவ துவளை அரைத்து கொதிக்க வைத்து சருவாங்கம் துளையிட உதறு சன்னி, நொடி வாதம் எல்லாம் தீரும். விறுவிறுப்பு வாங்க மட்டும் போடவும். கேவுருமாவு சேர்க்கலாம்.

103. பிள்ளைமாந்தம் பொருமைக்குக் கொடுக்க

பூண்டு 2 பலம் வாங்கி தயிலம் இறக்கி, சுக்கு சித்திரத்தை $^1/_2$ பலம், வெற்றிலைச்சாறு, பிழிந்து துட்டிடைத் தயிலமும், துட்டிடைச் சாறும் சேர்த்து அரைத்துக் குழப்பிக் கொடுக்கவும். சன்னி தீரும்.

104. பிறவாத சன்னி, பச்சை வாதம், நடுக்க சன்னிக்குத் தயிலம்

வெள்ளைப்பூண்டு தயிலம் $^1/_2$ படி
பரங்கிப்பட்டை 2 பலம்
கசாயம் வைத்து $^1/_4$ படி
விளக்கெண்ணெய் $^1/_2$ படி
குமரிச்சாறு $^1/_4$ படி
பிரப்பங்கிழங்கு 2 பலம்
வெற்றிலை 15

எல்லாம் எரித்து ஒரு கரண்டி வீதம் ஏழு பொழுது கொடுக்கத் தீரும்.

105. வலிப்பு

இலுப்பை எண்ணெய் கால் படி, பின்னை எண்ணெய் கால் படி, முத்தெண்ணெய் கால்படி, பூண்டு சாறு 1 படி, சென்னாவரை வேர் தூக்கு 1, வெந்தய கசாயம் 2 படி எரித்து முன் மருந்துடன் கூட்டி எரித்து 3 நாள் சாப்பிட்டு துவளையிட்டு எல்லாம் ஒன்றாகச் சேர்த்துக் கொடுக்கவும்.

பத்தியம் – கடிசி.

106. சன்னி சருவத்தி இலை புகைக்கு

துருசி வெண்ணெயில் இழைத்து துணியில் பிடித்து 3 நாள் போடவும். சருவத்தி ஆறிப்போகும்.

107. ரத்தபீனிசம், சீபீனிசம், சிறுபீனிசம், ஒரு தலைவலிக்கு மருந்து

நல்லெண்ணெய் – 1 படி, நொச்சிச்சாறு, கோழியாவரைச் சாறு, உத்தாமணிச்சாறு, வகைக்கு 4 படி, வெற்றிலை – 7, வேளை வேர் 5 பலம், கொசுவேர் 5 பலம், முளகருணை 5 வேர், கருஞ்சீரகம் கால் பலம், கடுகு 5 பலம், பூண்டு 5 பலம், சாம்பிராணி அரை பலம், கோரைக்கிழங்கு 5 பலம், வவ்வால் புழுக்கை 5 பலம், குமுளம் பழச்சாறு அரைபடி, வெள்ளாட்டுப் புழுக்கைச் சாறு அரைபடி

எரித்து முழுகவும். புளி, புகையிலை தவிர்க்கவும். வெந்நீர் சாதம் சாப்பிட்டு வெந்நீர் விட சகல பீனிசமும் தீரும். ஒருநாள் விட்டு ஒருநாள் முழுகவும்.

108. பித்த சிலேத்துமச் சுரம், தோசம், கண்ட பிரண்டம்

ஆதண்டைச்சாறு, ஆணை வணங்கிச் சாறு, கருஞ் செம்பைச்சாறு, குறட்டைச்சாறு ஒரு பலம் சேர்க்கவும்.

109. சேற்றும சுரம்

சுக்கு	சித்தரத்தை	சிறுதேக்கு
அக்கிராகாரம்	கோஷ்ட்டம்	கருஞ்சீரகம்
கிராம்பு	கண்டதிப்பிலி	அரிசி திப்பிலி
சித்திர மூலவேர்	வெள்ளருக்கு வேர்	அவுரிவேர்
சித்தாமுட்டி வேர்	பொன்முசுட்டை வேர்	சங்கம் வேர்

காட்டுச்சீரகம் வகைக்கு 10 பலம்

வகைக்கு ஒரு விராகன், கசாயம் வைத்து 1 படி, வேப்பெண்ணை ஒரு விராகன் எரித்து நெல்லிக்காய் கெந்தகம் ஒரு பலம், பூண்டு தயிலம் எரித்து சுடர் வசம்பு வடக்கே 15 சுடர் எரிக்கவும்.

முசுறுமுட்டை, கோழி முட்டை தயிலம் வெவ்வாறாக இறக்கவும். நாக்குப்பூச்சி மண்தள்ளிப்பொடி செய்து சேர்க்கவும். இவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து துட்டிடைக் கொடுத்து 3 முறை துவளை போடவும்.

மறுநாள் கொடுக்க வேண்டியவை

பருத்திக் கொட்டைப்பால் கால் படி, கோஷ்டம், அக்கிரகாரம், அரிசி திப்பிலி, அதிமதுரம், கிராம்பு, உத்திராட்சம், அமுக்குறா வேர், விளாம்பழம், ஆடாதோடா வேர், விளப்பழம் இவற்றையெல்லாம் இழைத்து துட்டிடை கொடுக்கவும்.

இதற்கு கசாயம்

சுக்கு, சித்தரத்தை, பொன்முசுட்டை, அவுரிவேர், நன்னாரி வேர், ஆடாதோடை இலை இவற்றை வகைக்கு $^1/_2$ பலம் கசாயம் வைத்துக் கொடுக்க தாகம், வறட்சி, சன்னி இவைத் தீரும்.

110. பித்த தோசத்தினால் உள்தோசம் கண்டு சுவாசக் கண்டத்துக்கு இஞ்சிக்சுரசம்

இஞ்சி 3 பலம்
சித்திரத்தை 4 பலம்
சுக்கு $^1/_2$ பலம்
கோஷ்ட்டம் $^1/_4$ பலம்
தாளிச பத்திரி $^1/_4$ பலம்
கிராம்பு $^1/_4$ பலம்
அரத்தை $^1/_4$ பலம்

பொன் வறுவலாக வறுத்துப் பொடி செய்து, இஞ்சி அரத்தை சுரசம் செய்து $^1/_4$ படி சுரசத்தில் 2 விரல் கொண்டு மேல் பொடி போட்டு தாளக பஸ்பம் பணவிடை போட்டு தேன் காசிடை குத்தி 7 நாட்கள் கொடுக்கவும். பத்தியம் – உப்பு, புளி தவிர்க்கவும். சுவாச தோசம், நெஞ்சு சளி முறியும் வரை கொடுக்கவும். இதனால் பித்தக்கபம் தீரும்.

111. வறட்சியினால் தளம் சாப்பிட்ட பின் வயிறு உப்பிசமாதல்

ஒரு பலம் பொன்னரி தாரத்தை சுண்ணாம்பினால் சுத்தி செய்து அரசம்பட்டை 1 பலம் போட்டு மணத்தக்காளி இலை சாதத்தில் அரைத்து வில்லையாகக் காயப் போட்டு அரசஞ்சாம்பல் கீழ்மேல் நெல்க்கனம் போட்டு சீலைமண் செய்து கோழிப் புடமிட சகல சுவாச தோசத்துக்கும், இருமலுக்கும் கொடுக்கவும்.

112. வயிறு உப்பிசமாதல்

கண்டங்கத்திரி இடித்துக் கசாயம் வைத்து அரைப் படி தண்ணீரில் 'இராமபாணம்' ஒரு உருண்டை வைத்துக் கொடுக்க பேதியாகும். 30 நாட்களில் தீரும். கைகண்டது.

113. குமரகண்டன், குரைவலிப்பு, மாந்த வலிப்பு, முசல் வலிப்பு, மாந்தவலிப்பு சகலவலிப்புக்கும்

காகம்	முசல்	நரையான்,
குதிரை	கழுதை குளம்பு	மாட்டுக்குளம்பு
ஆமையோடு	வடக்கயிறு 15	நீர்த்தவளை
வலியான்	கறட்டோனான்	நாய் எலும்பு

பாம்பு சட்டை உடும்பு எல்லாவற்றையும் தீயிலிட்டு இறக்கி,

கொண்டைப்பட்டை தூக்கு 1
குடத்தயிலம் இறக்கியது $^1/_2$ படி
கருத்தயிலம் $^1/_2$ படி
விளக்கெண்ணெய் $^1/_2$ படி
இலுப்பை எண்ணெய் $^1/_2$ படி

சேர்த்து அரைத்து எரித்து ஒரு துட்டிடை மண்டலமாக உட்கொள்ளவும். தலை முழுகி வரவும்.

சிதம்பரச்சக்கரம் எழுதிக் கட்டவும். தயிலத்தில் தேன் சேர்த்துக் கூட்டி பிராமண போசனம் செய்யவும். புளி தவிர உப்பு சேர்க்கவும்.

114. அந்தர வாய்வு, அண்டவாய்வு கட்டி

மடல்காந்தம் 2 விராகன்	அரப்பொடி 2 விராகன்
இரசம் 1 விராகன்	வெங்காரம் 2 விராகன்
நல்லெண்ணெய் 1 படி	பசுவின் நெய் 1 படி
சித்திர மூல வேர் 1 பலம்	பூண்டு 1 பலம்
வீரம் 1 விராகன்	மிளகு 1 பலம்
கெந்தகம் 1 விராகன்	இலிங்கம் 1 விராகன்
பூரம் 1 விராகன்	

இவற்றை வெண்ணெயில் பொடித்துப் போட்டு எரித்து 3 நாள் கரண்டி வீதம் சாப்பிடவும்.

பத்தியம் – கெட்டி, அப்பால், காயம் 1 விராகன், கோழி முட்டை பதினான்காம் நாள் பசுவின் மோர் சேர்க்கவும்.

115. எண்ணெய்

பரங்கிப்பட்டை 5 பலம், பிறப்பங்கிழங்கு 4 விராகன், சத்தி சாராணை வேர்4 விராகன், சுக்கு 2 விராகன், சித்திர மூல வேர் 2 விராகன் இவற்றை தேன் விட்டு அரைத்து மேல்பத்துப் போடவும். கட்டிக்கரையும். நல்ல வெல்லமாகிலும், முட்டை வெள்ளைக் கருவும், பிறமி வழுக்கை, வாளம் 1 பலம் முன் எண்ணெயில் சேர்க்கவும்.

116. தவுத்தாய கூள பரதேசி முறை குன்மம்

பேரண்ட ஓடு அரைத்து வில்லைத் தட்டிக் காயவைத்து புடம் போட்டு எடுத்த பஸ்பம் 2 விராகன், உழைமண் பூ நீர் பஸ்பம் 1 விராகன் இரண்டு பஸ்பமும் தேனில் கலந்து கொடுக்கவும். அதில் கடல் உப்பு வறுத்து அரைத்துப் போட்ட உப்பு பஸ்பம் முன் பஸ்பத்துடன் கூட்டிக் கொடுக்கவும். ஏழு பொழுதில் குணமாகி வலி நிற்கும்.

பத்தியம் – உப்பு வறுத்துப் பசுவின் மோர் சேர்க்கவும்.

117. மேக சூலைக்கு ரச பதங்க மெழுகு

இரசம் 1 பலம் வாங்கி மஞ்சத்தூளில் ஒரு சாமம் தேய்க்க சுத்தியாகும். அந்த ரசத்தைத் தட்டான் குகையில் விட்டு சட்டியில் 2 படி உப்பு கொட்டி அதன் மேல் செங்கல் தூள் 1 படி கொட்டிப் பரப்பி அழுத்தி நடுவில் குகையைப் பொதிந்து மேல் சட்டியில் கல்யாண முருங்கைச் சாறு தடவி கவிழ்த்து மூடி சந்துவாக்கி சீலைமண் 3 செய்து, ஒரு சாதி விரகாய் மூன்று சாமம் எரித்து ஆற வைத்து எடுத்து மேல்சட்டியிலிருக்கின்ற இரச பதங்கத்தை சுரண்டி கலுவத்திலிட்டு கண்டங்கத்திரிப் பழச்சாறு விட்டரைக்க மெழுகாகும்.

அந்த மெழுகில் பணவிடை பனை வெல்லத்தில் கொடுக்கவும். பின்பு அரத்தையிலைச் சாறு $^3/_8$ படி அரைப்படி கொடுக்கவும். ஏழு பொழுது ஏழு நாள் பத்தியம் கெட்டி. எட்டாம் நாள் உப்பு வறுத்துக் கூட்டி 16 – ஆம் நாள்தலைக்குத் தண்ணீர் விட்டுப் புளி சேர்க்கவும்.

தீரும் நோய்

மேகசூலை, கைகால் கணுச் சூலை, விரிவிரிப்புக் குடைச்சல், மேகக் கிரந்தி, சூலைக்கட்டு இவைகள் குணமாகும்.

118. மூலக்கடுப்புக்கு மூலமுளை ஆசனக் கடுப்பு

கருணைக்கிழங்கை நெல் பானையில் அழுத்தி வேக வைத்து 5 பலம், மிளகு அரை பலம், சீரகம் அரை பலம், நல்ல சர்க்கரை 2 பலம் தூளாக்கிப் பிசைந்து தேங்காய் மொத்தமும் சாப்பிடவும்.

பத்தியம் – பசுவின் தயிரும் உப்பு வறுத்துக் கூட்டிக் கொள்ளவும். புளித்தயிர், மிளகு நீர் சேர்க்கவும். 15 நாட்களில் தீரும். 20 நாட்களில் மூலமுளைத் தீரும்.

119. கீழ்வாய்வு, மேகசூலை வாய்வு, சூலைக்கட்டு, பக்கசூலை, குருச்சனுக்கு

பரங்கிப்பட்டை	பிறப்பங்கிழங்கு
கண்டதிப்பிலி	அரிசி திப்பிலி
சித்தொகாயப்பட்டை	சித்திர மூலவேர்
பெருங்காயம்	

வகைக்கு காலரைக்கால் சத்திச் சாரணை $^1/_2$ பலம், ஓமம் $^3/_8$, சதகுப்பை $^3/_8$ இவைகளை $^1/_2$ படி திருகு கள்ளிப்பாலில் விட்டு அரைத்துக் குழப்பி அதில் இரசகற்பூரம் $^1/_2$ விராகன் இழைத்து ஏழுபொழுது கொடுக்கவும்.

பத்தியம் – கெட்டி ஏழாம்நாள் உப்பு வறுத்துச் சேர்க்கவும். 20 – ஆம் நாள் தண்ணீர் விடவும். இதற்கு தீரும் நோய் சூலை – 18, வாதம் – 80, திரவாய்வு, அண்டவாய்வு, கட்டி, புண்ணு இவைத்தீரும். கைகண்டது.

120. ஈஸ்ப்பரன் பேர், வயித்தியன் பேர், மாத்திரையின் பேர்

பிணியாகிக் கிடக்கிறவன் பேர்தானேது
பிடித்துரைக்கும் வயித்தியர்க்குப் பேர்தானேது
மணியான அமிழ்தத்தின் பேர்தானேது
மருந்துரைக்கும் கல்லுக்குப் பேர்தானேது
அணியான ஈரகத்தின் பேர்தானேது
அறிந்து நின்றுஅவ்வுரையை அறிந்துபார்த்து
பணிவிடை செய்வயித்தியரே இந்தநூலை
பகுந்திடுவீர் இன்னதென்று பகுந்தோம் நாமே

பிணியாகக் கிடக்கிறவன் பேர்தான் ராகு
பிடித்து உரைக்கும் வயித்தியன்பேர் நந்திஈசனுக்கும்
மணியான ஔஷதத்தின் பேர் அமுசுதமாகும்
மருந்துரைக்கும் கல்லின்பேர் மாயனாகும்
அணிவிரலும் சிறுவிரலும் சிவசக்தியாகும்
அறிந்துநின்று அவ்வுரையே அறிந்துபார்த்து
பணிவிடை செய்வயித்தியரே இந்தநூலை
பகுந்துடுவீர் இன்னதென்று பகுந்தோம் நாமே

சீரகம் – 10, பரங்கிப்பட்டை – 10, எலுமிச்சம் பழச்சாற்றில் ஊற வைத்து ஊறிய பின்பு காயவைத்து இடித்து வஸ்திர காயம் செய்து சீனி, சர்க்கரை நான்கில் ஒரு பங்கு கூட்டி, 40 – நாள் சாப்பிட கொடுக்கவும். பத்தியம் – இச்சாப் பத்தியம்

தீரும் நோய்

பித்த பாண்டு, பித்த பைத்தியம், எரிவு, குலை எரிவு, உணர்ந்த வெட்டையும் தீரும்.

121. பித்த பைத்தியம், பினத்தலுக்கும் பித்தவெட்டைக்கும் மருந்து

குடுவேம்பின் பட்டை– $^1/_2$ தூக்கு அதன் இலை – $^1/_2$ தூக்கு, நன்னாரி இலை வேர் – $^1/_4$ தூக்கு அவிரிவேர் – $^1/_4$ தூக்கு

இவற்றை இளவறுப்பில் வறுத்து, இத்துடன் வேம்பின் பட்டையும், இலையும் கருகச் சிவக்க வறுத்து, இடித்து 4 நாழி தண்ணீரில் கண்டங்கத்திரி வேர் 5 பலம் இவற்றையெல்லாம் ஒன்றாகப் போட்டுக் கசாயமிட்டு நாழித் தண்ணியாக வைத்துக் கொண்டு இதன்மேல் பொடி மிளகு சீரகம், கடுக்காய், சித்தரத்தை, சுக்கு, அதிமதுரம், பரங்கிப்பட்டை வகைக்கு 1 பலம் எடுத்து வறுத்து இடித்து வஸ்திரகாயம் செய்து இரு நேரத்துக்கும் கால் அரைக்கால் படி கசாயத்தில் மூவிரல் கொண்ட தூள் போட்டுக் கலக்கிக் கொடுக்கவும். இராமபாண உருண்டை ஒன்று உரைத்து கொடுக்கவும். 15 பொழுது சாப்பிட கொடுக்கவும். எட்டாம் நாள் உப்பு, புளி சேர்க்கவும். பைத்தியம், பித்து தீரும்.

122.நசியம், பைத்தியத்துக்குத்தலையில் தேய்க்கப் பச்சிலை

மிளகு பூண்டு, வசம்பு, சாறணை வேரும் முலைப்பாலில் அரைத்து 3 நாளைக்கு தேய்த்துக் குளிக்கவும் (நசியம் பண்ணவும்). சூடேறி உணர்ந்து பித்த உப்பிரியாகி பித்தத்தினால் முன்தூளும் கசாயமும் துட்டிடைப் பசுவின் நெய் சேர்த்துக் கொடுக்கவும். மாத்திரை இழைக்கக் கூடாது. நசியம் பண்ணவும் தீரும்.

செறுசெறாய் முடக்கொத்தான் பசுந்தக்காளி கரிசலாங்கண்ணி இவைகள் வகைக்கு ஒரு பலம்.

தேசிப்பபழம் – 10	தேங்காய் – 1
மிளகு 1 பலம்	சுக்கு 1 பலம்
மஞ்சள் 1 பலம்	

இவைகளை ஒன்றாக அரைத்து கலந்து உள்ளுக்குக் கொடுத்து தலையில் நன்றாக தேய்த்து தலைக்குத் தண்ணீர் விடவும். 10 நாட்களில் தீரும். பைத்தியத்துக்குத் தேய்த்து உள்ளுக்கும் கொடுக்கவும்.

இரட்டை பேய் மிரட்டி1 பலம்	பேய்ப்புடல் 1 பலம்
பெருங்கும்மட்டி இலை 4 பலம்	பேயத்தி இலை 1 பலம்
பேய்த் தும்பையிலை 1 பலம்	

தேசிப்பழச் சாற்றில் சரகத்தில் அரைத்துக் கலந்து தேய்க்கவும். 10 நாட்கள் தேய்த்து தண்ணீர் விடவும்.

123. தலையில் புத்து புத்தாய் இருக்கும் புண்கள்

வசம்பு $^1/_4$ பலம், வேப்பெண்ணெய் $^1/_2$ பலம், பூண்டு 1 பலம், சந்தனம் 2 பலம், இவற்றை ஒன்றாகக் கலந்து சூரிய புடம் வைத்துக் கொண்டு புத்து புத்தாய் இருக்கின்ற புண்ணுக்கு ஆறும் வரை போடவும். போட்டுபோட்டு அரப்புப்போட்டுத் தேய்த்துக் குளிக்க ஆறும். இது மேகச் சூட்டில் உண்டானது.

124. இராமபாணபில்லை குஷ்டம் சிலந்திக்கு புகை, மை

இரசம் கெந்தகம்
துருசி அரிதாரம்
சாதிலிங்கம் மரத்து வெள்ளை துத்தம்
எருக்கங்கரி சங்கங்குப்பிச்சாறு
வெள்ளைப் பாசாணம் கெவுரிப் பாசாணம்

இவை வகைக்கு 2 விராகன்,

எருக்கங்கரி 4 விராகன் கருஞ்சீரகம் 1 பலம்
கடுகு 1 பலம்

இவற்றை எல்லாம் பருத்தியிலைச் சாறிட்டு அரைத்து மூன்று துக்காணி துட்டு எடலம் பில்லை தட்டிக் காய வைத்துப் புளியம் பரணைக்குள் போட்டு எரியவிட்டு தணலுண்டாக்கி, வேதுபுடிப்பது போலே ஆளை உட்கார வைத்து மேலே மூடி ஒரு பில்லை ஒடித்துப் போட்டு புகைப்பிடிக்கவும்.

இப்படி நாளொன்றுக்கு மூன்று தடவை புகைப் பிடிக்கவும். பத்தியம் எருமை மோர்ச் சாதம், உப்பில்லாமல் ஈர வெங்காயம் கடித்துக் கொண்டு சாப்பிடவும். முன் மருந்தில் மருந்து எண்ணெய் இலையும் சேர்த்துக் கொண்டு உட்கொள்ளவும்.

125. குட்டத்துக்கு மேல் போட மருந்து

கொப்பரைத் தேங்காய்ப் பாலில் எருக்கம் பால்விட்டுக் குழைத்து மேலே தடவி, அரப்பிட்டு மூன்று நாள் வெந்நீரில் குளிக்கவும். சொரி உதிர்ந்து திமிரு வாங்க தீரும். கை கால் கண்டபடி வலித்தாலும் எரிச்சல் கண்டாலும் கூத்தன் குதம்பை இடித்து வேகவைத்து 10 நாட்களுக்குத் தலையில் தண்ணீர் விடவும். 10 நாட்களுக்குப் பிறகு விளக்கெண்ணெய் தேய்த்துத் தலை முழுகவும். இந்த புகையினால் குட்டம், மேக வண்டுகடி, கிரந்தி, சிறா வண்டுகடி இவை எல்லாம் தீரும். கைகண்டது.

126. குட்டம்

ஏழுநாள் பதினைந்து நாள் பொழுது புகை போடவும். பத்தியம் எருமை மோர் சோறும், உப்பில்லாமல் ஈர வெங்காயம் கடித்துக் கொண்டு சாப்பிடவும். எட்டாம் நாள் உப்பு சேர்க்கவும். ஒருநாள் விட்டு ஒருநாள் விளக்கெண்ணெய் தேய்த்து முழுகவும்.

வீரம், பூரம், இலிங்கம், முருங்கைப் பூச்சாற்றில் சுருக்கு கொடுக்க மெழுகாகும். அந்த மெழுகைப் பனைவெல்லத்தில் ஏழு பொழுது கொடுக்கவும். திமிரு வாங்கி குட்டம் தீரும்.

மேகப்புண்ணுக்கும், கள்ளிப்பூ கிரந்திக்கும் 5 நாள் புகைப் போடவும். எரிப்பு அதிகமானால் பச்சைத் தண்ணீரில் நான்கு நாழிகை உட்கார்ந்திருக்கவும்.

127. சித்திரவல்லாதி

குட்டம், கிரந்தி எல்லாவற்றிற்கும்

சித்திர மூலவேர்	சிவனார் வேம்பு வேர்
வெள்ளறுகு வேர்	சங்கம் வேர்
சங்கங்குப்பி வேர்	சிறுகுரிஞ்சா வேர்
பெருங்குரிஞ்சாவேர்	சீந்திவேல்
வெள்ளெருக்கின் பட்டை	பெருமருந்து வேர்
சின்னிவேர்	வில்வவேர்
அத்திவேர்	குமிளம் வேர்

குண்டுமணி வேர்	முளக்கருணைப்பட்டை
செங்கதாரிப்பட்டை	பூவரசுப் பட்டை
எட்டிப்பட்டை	விழுவிவேர்
கொண்ணைப்பட்டை	நிலயாவரைவேர்
அழிஞ்சிப்பட்டை	குவளம் பட்டை
கோழியாவரை வேர்	தவசி முருங்கைவேர்
செரியா நங்கை வேர்	பெரியா நங்கை வேர்
பூதகரப்பான் பட்டை	

இவற்றை மோரில் வேகவைத்தால் சுத்தியாகும். இவை வகைக்கு 2 பலம்

அமுக்குறா கிழங்கு	வாத கரப்பான்பட்டை
மாவுலிங்கப்பட்டை	ஊசி நாகமல்லிகை வேர்
வெப்பாலை அரிசி	காட்டுச்சீரகம்
கருஞ்சீரகம்	நெல்லிக்காய்
கெந்தகம் வகைக்கு ஒரு பலம்	துருசி 2 விராகன்
துத்தம் 2 விராகன்	சாதிலிங்கம் 3 விராகன்
பூரம் 2 விராகன்	மனோசிலை 2 விராகன்
இரசம் 3 விராகன்	பரங்கிப்பட்டை 8 பலம்
சேங்கொட்டை 8 பலம்	பனைவெல்லம் 12 பலம்

எள்ளு வறுத்து கால் படிகொப்பரைத் தேங்காய் 1

வெட்டு வகையைத் தூள் செய்து கடைச்சரக்கும் தூள் செய்து செங்கொட்டையை எருமைச் சாணிப்பாலிலும், புளியம் இலையிலும் சுத்திச் செய்து தேங்காயுடன் எல்லாம் ஒன்றாகச் சேர்த்து இடித்து லேகியமாக வைத்துக் கொண்டு கொட்டைப்பாக்குப் பிரமாணம் காலையிலும், மாலையிலும் 40 நாட்கள் உட்கொள்ள கொடுக்கவும்.

பத்தியம் – புளி, புகை தள்ளி இச்சா பத்தியம். போகம் ஆகாது.

128. மேகசூலைக்குப் பரங்கிப்பட்டை பித்த வெட்டை திமிரு வாய்வு

பரங்கிப்பட்டை 5 பலம் வாங்கி நன்றாகத் தூள் செய்து கலசத்தில் போட்டு சிறுதுவாரம் புகையேறும் படியாகத் துளைத்து

மறுகலயத்தில் சித்திர மூலவேர் கருணை கருணையாய் நறக்கிப்போட்டு, பரங்கி சாம்பிராணி 1 பலம் பொடித்துப் போட்டு பரங்கிப்பட்டை கலயத்தை மேலே வைத்து சந்து வாய்க்கு சீலைமண் செய்து அடுப்பில் தூக்கி வைத்து மூவிரல் திரிப்பாணம் ஒரு ஜாமம் எரித்து ஆற விட்டெடுத்து மருந்தை மூவிரல் அளவு அள்ளி வாயிலிட்டு ஒரு வாய் தண்ணீர் அருந்தவும்.

இப்படியாக இரு நாட்கள் உட்கொள்ளவும். பித்த சூட்டினாலே விரிவிரிப்புக் கொடுத்து திமிறாயிருப்பது, கால் திமிரு, வலிப்பு, கடுப்பு, துடிப்பது நிற்கும்.

பத்தியம் – பசுவின் மோர். உப்பு புளி அரைவாசிக் கொடுக்கவும். தீரும்.

129. ஆறுமுகச் செந்தூரம்

இரசம் 5 பலம்	காந்தம் 7 பலம்
செவ்வியம் 9 பலம்	கெந்தி 9 பலம்
வெங்காரம் 8 பலம்	மதியுப்பு 4 $^1/_2$ பொடி 12 பலம்

இவற்றை கற்றாழஞ்சாறு விட்டரைத்து வில்லை தட்டிக் காயவைத்து, தாழியில் வைத்து மூடி சந்து வாய்க்கு சீலைமண் செய்து, நான்கு நாள் எரித்து ஆறவிட்டெடுக்க மாதளம் பூ நிறமாயிருக்கும். செந்தூரம்.

இந்த செந்தூரத்தைத் திரிகடுகுச் சூரணத்தில் பணவிடை செந்தூரம் வைக்கவும்.

தீரும் வியாதி

விரைவாதம், அண்டவாதம், அஷ்ட்டமூலம், ஈராறு குன்மமும், சூலை – 18, மேகம், கிரந்தி, வாதம் – 80, பித்தவெட்டை, பாண்டு, சிலேட்டுமம் நோய் பவுத்திரமும், சுரம் 64 இவையெல்லாம் நீங்கும்.

பத்தியம் – ரோகத்துக்குத் தகுந்த பத்தியம் வைத்துக் கொள்ளவும்.

130. மேக ரணசூலை

இரசம், மஞ்சத்தூள், பூரம், சவ்வீரம் இவற்றை முலைப்பாலில் சுத்திச் செய்து வகைக்கு 1 விராகன், காரபுழுங்கலரிசியை வெற்றிலைச் சாற்றில் ஊற வைத்து அரிசியுடனே மருந்தும் சேர்த்து வெற்றிலைச் சாற்றில் அரைத்து மெழுகாகும். பணவிடை மெழுகு தேனிலாவது வெல்லத்திலாவது உட் கொள்ளவும். ஏழு பொழுது சாப்பிட பதினாலு பொழுது உப்பில்லாமல் பத்தியமிருந்து எட்டாம் நாள் உப்பு வறுத்துக் கூட்டிக் கொள்ளவும்.

விளக்கெண்ணெய் தேய்த்து முழுகவும். மேகக் கிரந்தி நீங்கும். பரங்கிப்பட்டை இரசாயணத்தில் சூலைத் தீரும்.

131. இரச பஸ்பம் கிரந்தி

இரசம் ஒரு பலம் வாங்கி மஞ்சத்தூளில் சுத்திச் செய்துக் கலுவத்தில் போட்டு விடத் தொரையிலை 1 விராகன் போட்டு அந்தயிலையை வாயில் அடக்கி, உமிழ்நீர் விட்டு அரைத்து மெழுகாகும். அந்த மெழுகை வில்லைத் தட்டி சில்லிலாவது பில்லையைச் சுத்தி அடைத்து வைத்து எட்டுக்கு கவசம் கட்டி மிதிபாகல் $^{1}/_{4}$ கவுசம் செங்கதாரி இலை ஒரு கவுசம் சிறுகீரை கவுசம் செய்து ஏழு சீலைமண் செய்து காடைப்புடம் போட பஸ்பமாகும். தகுந்த வியாதிகளுக்குக் கொடுக்கவும்.

132. அந்திரவாய்வு, அண்டவாய்வு, விரைவாதத்துக்கு எண்ணெய்

மிளகு	சுக்கு
பிறப்பங்கிழங்கு	மடல்காந்தம்
அரப்பொடி	வெங்காரம்
வெடியுப்பு	சித்திரமூலம் வகைக்கு 1 பலம்
காயம் $^{1}/_{2}$ பலம்	இரசம் கால்பலம்
கெந்தகம் கால்பலம்	பூரம் $^{1}/_{4}$ பலம்
இலிங்கம் கால்பலம்	சித்திர மூல வேர் 1 பலம்
சட்டிசாறணைவேர் 2 பலம்	நேர்வாளம் 1 பலம்
பிறமி வழுக்கை 1 பலம்	நல்லெண்ணெய் $^{1}/_{2}$ படி

பசுவின் நெய் $^1/_2$ படி
நொச்சிச்சாறு $^1/_4$ படி
குமட்டிக்காய் 2 பலம்
கோழிமுட்டை 4,
கழுஞ்சி இலைச் சாறு $^1/_4$ படி,
சதுர்க்கள்ளிப் பால் $^3/_8$ படி
எல்லாம் ஒன்றாகச் சேர்த்து எரித்து மூன்று நாள் கரண்டி வீதம் சாப்பிட கொடுக்கவும்.

பத்தியம் – மூன்று நாள் உப்பு, பசுவின் மோர் சேர்க்கவும். கெட்டிப் பத்தியம்.

வெள்ளை பூண்டு 10 பலம், முன் காயிலையில் வேகவைத்து மூன்று நாள் உட்கொள்ள வலியிசுப்பு நீங்கும். கட்டிக்கு மிளகாய் இலையை விளக்கெண்ணெய் விட்டு வதக்கி வொத்தடங் கொடுத்துக் கட்டிப் போடவும். வலியிசுவு விட்டுக்கட்ட கரையும்.

133. அந்தர வாய்வு

கழுதை விட்டைச் சாறு $^1/_4$ படி, முலைப்பால் காலரைக்கால் படி விட்டு மூன்றுநாள் சாப்பிட அடிவயிறு பொருமல் யிசுப்பு வலி, ஆந்தரவாய்வுக்கு ஒடிஒடி முட்டி நரம்பை வலிப்பதெல்லாம் நீங்கும்.

பத்தியம் – உப்பு கூட்டிப் புளி தவிர்க்கவும்.

கற்பூரசிலாசத்து 2 பலம் வாங்கி மணத்தக்காளிச் சாற்றில் ஒருநாள் முழுவதும் ஊறவைத்து சிறுகீரை சாற்றில் ஒருநாள் ஊறவைத்து நெருஞ்சிச் சாற்றில் ஒருநாள் ஊற வைத்து, கற்றாழைச் சாற்றில் ஒருறாள் ஊற வைத்து பசும்பாலில் ஒருநாள் ஊறவைத்து வைக்கவும்.

மறுபடி பசும்பால் விட்டரைத்து வில்லைத்தட்டி சில்லில் வைத்துக் கோழி புடம் வைக்க பஸ்பமாகும்.

134. நேத்திரவாய்வு, மேத்தலை வாய்வுக்கு எண்ணெய்

நெல்லியிலை வேகவைத்து தண்ணீர் இறுத்து கழும்பெடுத்துப் பத்துப்போடவும். நீங்கும்.

வேறு

வெங்காரம் பொரித்து ஆவாரம் பட்டை இழைத்துப் பத்துப்போடவும். ஆவாரம் இலையை வேகவைத்துத் தண்ணீர் இறுத்து கழும்பெடுத்துப் பத்துப்போடவும். தலைவலி, கண்குத்தல் நீங்கும்.

135. கண் படலம், கண் வலி, மேகத்தலை வாய்வுக்கு எண்ணெய்

நொச்சிச்சாறு $^5/_8$ படி
ஆதண்டைச் சாறு $^5/_8$ படி
ஈழத்தலரிப்பூச் சாறு $^5/_8$ படி
நந்தியாவட்டம் பூச்சாறு $^5/_8$ படி
கருஞ்செம்பைப் பூச்சாறு $^5/_8$ படி
பொன்னாங்கண்ணிச் சாறு $^5/_8$ படி
கையாந்தகரைச் சாறு $^5/_8$ படி
பசும்பால் $^5/_8$ படி
கருஞ்சீரகம் $^5/_8$ பலம்
வங்காள மஞ்சள் $^1/_2$ பலம்
மரமஞ்சள் $^1/_2$ பலம்
மஞ்சள் 1 பலம்
சடாமாஞ்சில் $^1/_2$ பலம்
மண்திஷ்ட்டி $^1/_2$ பலம்
பூலாங்கிழங்கு $^1/_2$ பலம்
வெட்டிவேர் $^1/_2$ பலம்
அமுக்கரா கிழங்கு ஒரு பலம்
நல்லெண்ணெய் $^1/_2$ படி
சாம்பிராணி 1 பலம்
வெள்ளைமிளகு 1 பலம்

இவற்றை ஒன்றாகப் பொடித்துப் போட்டு சாறும்விட்டு எரித்து முழுகத்தீரும்.

136. கிரந்தி, புண், மேகம் 21 – க்கு எண்ணெய்

பூவரசன் பட்டையிலை	சிரியா நங்கைவேர்
பெரியா நங்கைவேர்	சின்னி வேர்
பெருமருந்துவேர்	தவசி முருங்கை வேர்
கோழியவரையிலை	அழிஞ்சிவேர்
அழிஞ்சி இலை	சட்டிசாட்டணை
சங்கங்குப்பியிலை	குமிளம்வேரிலை
மாவலிங்குயிலை வேர்	சித்திரமூலியிலை வேர்
கிலுப்பைவேர்	செங்கந்தாரிப்பட்டை
குண்டுமல்லியிலைவேர்	யோகாயப்பட்டை வேளைவேர்
சதிர்க்கள்ளிப்பால் $^5/_8$ படி	விளக்கெண்ணெய் 1 படி
வெள்ளாட்டுப்புழுக்கை $^1/_2$ படி	கழுதைவிட்டைச்சாறு $^1/_2$ படி

முளக்கருணைப் பட்டை அழுக்குறாகிழங்கு, ஈரவெங்காயம்

இவைகளை வகைக்கு 1 பலம் வீதம் கூட்டி அரைத்து எண்ணெயில் கலந்து எரித்து வடித்து $^1/_2$ படி வீதம் ஏழு பொழுது கொடுக்கவும்.

பத்தியம் – கடிசி, எட்டாம் நாள் உப்பு வறுத்துச் சேர்க்கவும். பதினைந்தாம்நாள் தலைக்குத் தண்ணீர் விட்டுப் புளி சேர்த்து வெள்ளாட்டு வத்தல் பசுவின் மோர் சேர்க்கவும். சகல கிரந்தியும் தீரும். பசுவின் நெய்யிலும் எரிக்கலாம்.

137. சுவாசகாசம், இரத்தகாசம், மந்தாரகம், பித்த இரத்தம் வருதல்

இலந்தையிலைக் கொழுந்து 1 பலம், பொன்னரிதாரம் 1 விராகன், நேகாய் அரைத்துத் துணியில் அப்பிக் காயவிட்டுத் திரியாக்கி இரண்டு திரியும் ஒன்றாகச் சேர்த்துப் புகைக்குடித்து முழுகவும். ஏழு பொழுது குடித்து முழுங்க புகைச்சல், இழுப்பு, எல்லாம் நீங்கும். மூன்றாம் நாள் புளி உப்பு மோர் சேர்க்கவும்.

138. தாளகபத்தியால் பிழையானால் கசாயம் பாசாணம் முறிய

சிறுகீரைவேர் 1 பலம், கத்திரி வேர் 1 பலம், அவுரி வேர் 1 பலம், மிளகு 1 பலம், கடுக்காய் 5 பலம் இவைகளை கசாயமிட்டு மூன்று வேளை கொடுக்கவும். சகலபாசாணமும் முறியும்.

139. தாளக பொகையால் வீக்கம்

சுண்ணாம்பு தண்ணீர் ஒரு வேளை அரைகால் படி கொடுக்கவும். நீர் இறங்கும்.

140. சுறாங்கிசம் கும்பகோணம் பரதேசி முறை

கெவுரி பாசாணம் 1 விராகன், வெள்ளைப்பாசாணம் 1 விராகன் இரண்டுக்கும் சுண்ணாசீலை சுத்தி அஞ்சு எருவில் புடமிட்டு

பஸ்பம் 2 விராகன்	சுக்கு 2 விராகன்
திப்பிலி 2 விராகன்	மிளகு 2 விராகன்
இலிங்கம் 1 விராகன்	காவிக்கல்லு 1 விராகன்

இவையனைத்தையும் ஊமத்தம் சாற்றில் அரைத்து சிறுபயறு உருண்டை செய்து, நொச்சிச் சாற்றில், இஞ்சிச் சாற்றில், புளிச்சத்தண்ணீரில், மோரில் இதில் ஏதேனும் ஒன்றில் ஒரு உருண்டை மூன்றுநாட்கள் கொடுக்கவும்.

பத்தியம் – உப்பு வறுத்துக் கூட்டிப் புளி தவிர்க்கவும். ஏழாம் நாள் புளி சேர்க்கவும். தீரும் நோய் – சுரம் 64, மூணாமுறை, நான்காம் முறை சுரமும் தீரும்.

141. களிம்பு புண்ணுக்கு

கடுக்காய் 1 பலம், துத்து வெள்ளை 1 பலம், துருசு 1 பலம், துத்தம் 1 பலம், கடுக்காய் சீலைத்துணியில் சுட்டு எல்லாம் அரைத்து எருமை வெண்ணெயில் குழப்பி சீலையிலூட்டிப் போட ஏழு நாட்களுக்குள் புண் ஆறும்.

பசுவின் கோமயத்தில் 2 பாசாணம் சுத்தி செய்து கொள்ளவும்.

142. தூதுவளையில் சிந்தாமணியில் சயகாசம், பித்தகாசம், சிலேஷ்ட்டும காசம் லேகியம்

தூது வேளை வேர் 2 பலம்	தூதுவேளை பழம் 10 பலம்
இலை தூளு 2 பலம்	கண்டங்கத்திரி
முசுமுசுக்கை	முடக்கொத்தான்
ஆவாரம் பூ	இஞ்சி
அரிசி வகைக்கு 3 பலம்	இம்புறா இலை 2 பலம்
தாளியிலை 2 பலம்	சிறியாநங்கை வேர் 2 பலம்
சிறுகாஞ்சொறிவேர்5 பலம்	சாதிப்பத்திரி $^1/_4$ பலம்

வெள்ளைகாக்கரட்டான்இலை 5பலம் ஈர வெங்காயச்சாறு1 படி

மிளகு 1 பலம்	திப்பிலி 1 பலம்
அதிமதுரம் 1 பலம்	கோஷ்ட்டம் 1 பலம்
அக்கிராகாரம் 1 பலம்	கொத்தமல்லி 1 பலம்

தாளிசபத்திரி 1 பலம்
கிராம்பு 1 பலம்
சன்ன இலவங்கப்பட்டை $^1/_4$ பலம்
ஏலம் 2 பலம்
சாதிக்காய் $^1/_4$ பலம்

இவற்றை ஆவின் பால் விட்டு சித்தரத்தை அரைத்துப் போட்டு மிஞ்சின பால் விட்டு நெய் 1 படி விட்டு பனைவெல்லம் 5 பலம் போட்டு இலேகியம் செய்து கொட்டைப்பாக்களவு சாப்பிட்டு தாளகபஸ்பம், தாம்பிரபஸ்பம், பவளபஸ்பம், காரியபஸ்பம் மூன்றையும் கூட்டி தேனிலாவது, வெண்ணெயிலாவது பணவிடையளவு உட்கொள்ளவும்.

தீரும் வியாதி

இலேகியம் கரண்டி வீதம் மண்டலமாக சாப்பிட சயம், மேகவெட்டை, பீனிசகாசம், ஈளைகாசம் எல்லாம் தீரும்.

பத்தியம் – பசுவின் பாலில் உப்பு வறுத்துப் போட்டுப் புளி தவிர்த்துப் பத்துநாட்கள் சாப்பிட்டு அதற்குமேல் வெள்ளாட்டு வத்தல் அரைக்கால் புளி சேர்க்கவும். 40 நாட்கள் உட்கொள்ளவும். இதில் ஆறுமுகச் செந்தூரம் கூட்டிக் கொண்டால் மந்தாரகாசத்துக்கு சிங்கிபஸ்பம் தேன் வெண்ணெயில் சாப்பிடத் தீரும்.

அஸ்தியில் அனலே பாய்ந்து
அதிர்ந்ததோர் இரத்தம் வத்தி
முத்தியே பித்தம் தானும்
முகத்துடன் வெளுத்து நெஞ்சில்
மெத்தவே காசம் பத்தி
மிகுந்திடும் சலமும் கண்டு
ஏத்ததோர் இளப்புக் கண்டு
இருமலும் எடுக்கும் தானே.

143. தாளக்கட்டு

தாளகம் 1 பலம், கற்பூரம் 1 பலம், பாறையுப்பு 1 பலம், கற்பூரமும், பாறையுப்பும் பொடி செய்து, சட்டியில் கீழே பாதி போட்டு அமுக்கிச் சட்டிமூடி சந்து வாய்க்குச் சீலைமண் செய்து அடுப்பில்

வைத்து மூன்று விளக்குப் பிரமாணம் தீமுட்டி எரிக்கவும். சிவந்த பதத்தில் இறக்கி வைத்துக்கொண்டு சுரம், ஈளை, இருமலுக்கு எல்லாம் தேனில் இழைத்துக் கொடுக்கவும். பின்பு நெல்பொறிக் கொடுக்கத்தீரும்.

பத்தியம் – இச்சாபத்தியம்.

கீழ்கடல் உப்பு 1 படி வாங்கி 1 படி பச்சைத் தண்ணீரில் ஊற வைத்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்துக் காயவைத்துப் பத்து எருவில் போட செந்தூரமாகும். அந்த செந்தூரத்தை எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்து 1 பலம் சீனி சவுக்காரத்துக்கு நெல்கனம் தடவி சித்திரை மாதம் சத்திய வெய்யிலில் வாழையிலைப் போட்டு அதன் மேல் வைத்து வெயிலில் காயவைத்து மாலையில் உடைத்து எரித்து வைக்கவும். இதன்படி பதினைந்து நாள் வைக்க எண்ணெய் கக்கிப் போகும்.

எண்ணெய் கக்கின சவிக்காரம் 1 விராகன், பூரம் – 1 விராகன், வீரம் 1 விராகன் பழச்சாற்றில் அரைத்து வில்லைத் தட்டிக் காயவைத்து பத்து எருவில் புடமிட சவுக்கார குரு கிடைத்தது.

இந்த குரு பணவிடையை உமிநீரில் பழச்சாற்றில் தொட்டு 64 சீன சருக்குக்கும் தடவிக் காடைப்புடமிட நீர்த்துப்போகும். செம்பு சுத்திச் செய்து ஒரு துட்டுக்கு குரு விராகனிடை ஒன்று தடவி, சீலைமண் செய்து முளப்புடமிட நீர்த்துப் போகும். அந்த நீர்த்தைப் பழச்சாற்றில் அரைத்து துரிசிக்குக் கவசம் கட்டி பத்து எருவில் புடமிட சுன்னமாகும்.

தீரும் வியாதி

அந்த சுன்னத்தை செம்பு 2 விராகன், வெள்ளி 1 விராகன் சேர்த்து உருக்கி பத்துக்கு 1 விராகனிடை சுன்னம் கொடுத்து பிறகு பத்துக்கு 1 தங்கம் கொடுக்க மாத்து ஏழரை ஆகும். கண்கண்டது.

வெள்ளீயம் பத்துக்கு 1, சவுக்கார குரு கொடுத்து உருக்க வெள்ளியாகும். இந்த வெள்ளியில் பத்துக்கு 1 செம்பும், வெள்ளி 2 விராகன் கொடுக்க உருக்க மாத்துக் குறையாது. கைகண்டது.

144. சத்தி குன்மம், வலி குன்மத்துக்கு தாம்பிர சுன்னம்

ஒரு துட்டை குப்பைமேனிச் சாற்றில் உருக்கிச் சாய்த்து இதற்கு மூன்றில் ஒரு பங்கு வெள்வங்கம் கொடுத்து, சித்தண்ட ஓடு சேர்த்து அரைத்து குகையில் வைத்து சில்லுமூடி சீலைமண் செய்து கரித்தணல் உண்டாக்கி அதன்மேல் குகையை வைத்து வாயால் ஒரு சாமம் ஊதி குகை அழிஞ்ச பதத்தில் எடுத்து ஆறவிட்டு எடுத்துப் பார்க்க பஸ்பம் தும்பை மலர் போலிருக்கும்.

அதையெடுத்து சீசாவில் வைத்துக் கொண்டு அரைகால் பணவிடை தேனில் கொடுக்க மூன்று நாள் ஏழு பொழுது சாப்பிட வலி தீரும்.

உப்பு வறுத்து அரை உப்பு கூட்டவும். பதினைந்தாம் நாள் வெள்ளாட்டு வத்தல் பசுவின் மோர், பால் சேர்க்கவும்.

145. சயம்

தூதுவளை இலேகியத்தில் அல்லது கண்டங்கத்திரி, சிறு காஞ்சொறி வேரில் பணவிடை பஸ்பம், தாளக பஸ்பம் அரைகால் பணவிடை போட்டுக் கொடுக்க பதினைந்து நாளில் குணமாகும்.

பூநீர் விளைகிறது. சீரங்கத்துக்கும் தெற்கே காதவழியில் கள்ளிக் காட்டிரு காடு இருக்கிறது. அந்தக்காட்டில் மாசிமாதம் அமரபட்சத்தில் படுத்திருந்து இரச்சல் காணும். அப்போது போய் தொட்டு சூரியனைக் கண்டெடுத்து பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் சிறுநீரில் மூன்று காய்ச்சல் காய்ச்சியெடுத்துக் கொண்டு உழமண் பூநீர் உப்பு சுத்த ஜலத்தில் காய்ச்சியது 1 படி, வெடியுப்பு சுத்தமான நீரில் காய்ச்சியது 2 அரைகாலும் காய்ச்சி, உப்பு 1, விளக்கமாத்துச் சீவு 2, கல்லுப்பு சுத்த தண்ணீரில் காய்ச்சி 1, பாறையுப்பு சுத்த தண்ணீரில் காய்ச்சியது 1 எல்லாம் சமமாகக் கூட்டி சிறுபிள்ளை சிறுநீரில் பத்து தடவைக் காய்ச்சி, நல்லெண்ணெய் கால்படி விட்டுக் கலந்து காய்ச்ச சுத்தியாகும். காய்ச்சுவதற்கு எண்ணெய் கடச்சரத்துக்கு அதில் வீரம், கற்பூரம் ஒன்று பொடித்துப் போட்டு சிப்பியை திரு கூசிப்பல் தமரிட்டு மருந்தையெல்லாம் 6 சிப்பியில் திணித்து சட்டியிலிட்டு சீலைமண்

செய்து 15 நாட்கள் பூமியில் புதைத்து எடுக்கச் செயநீராக இருக்கும். அந்த செயநீரைப் பாட்டிலில் வைத்து அதற்குச் சரிசமமாக நமச்சாரம் கூட்டி வெள்ளைப் பாட்டிலில் வைத்து அகலச் சட்டியின் நடுவில் எருமை சாணம் வளையமாக சாண் உயரம் கட்டி சுத்தமான நீரைவிட்டு பீங்கானில் வைத்து மேல் சட்டி மூடி சீலைமண் செய்து துடை மட்டளவு குழியில் மண்விட்டு தண்ணீர் தெளித்து சட்டியை வைத்து குழி வாய்க்கு வேறு சட்டி மூடி மண்ணைத் தள்ளி மூடி 15 நாட்கள் கழித்து செயநீராயிருக்கும்.

மறுபடியும் நேர் வாளம் – 1, பூரம் – 1, புனுகு – 1, சவ்வாது – 1, விராகனிடை ஒன்று செயநீரில் கொட்டி காயவைத்து ஐந்து சுன்னம் குகையாகப் பட்டதுக்கு விவரம் –

நண்டு வோடு, மூச்சி ஒடு, சிப்பி ஒடு, குளப்படி, சுன்னக்கல், சின்ன வெள்ளைக்கல் இவற்றை அரைத்து ஐந்து குகைச் செய்து அதற்குள் வைத்து பத்து எருமுட்டையில் புடமிட்டு எடுத்து, இதன்படி ஐந்துப்புடமிட்டு வீரம், பூரம், சவ்வாது, புனுகு கூட்டிப்புடம் போட சவுக்காரம் குரு வாச்சுது.

துருசுக்கும், சீனசரக்கு 64 – மேற்படி உமிழ் நீரால் குழைப்பூசி வாட்டினால் நாகம் 6 சூடம், தாம்பூரமும் தீரும். சகல சரக்கும், நீரும் சிதம்பரத்துத்தும் பாச்சவும்.

146. கள்ளுக்குடியான் கெந்தக மெழுகு முறை

திங்கட்கிழமை செத்த எனாப்பசுக்கிடாரி பின்கால் கெண்டைச்சதையில் மேலே கிடக்கின்ற சதையை ஐந்து பலத்துக்கு எடுத்து நெல்லிக்காய், கெந்தகம் 1 பலம் இவை இரண்டையும் சிறு கலயத்தில் போட்டு மூடி சீலைமண் செய்து முழங்கால் மட்டும் குழியில் 45 நாட்களுக்கு புதைத்தெடுத்து விரலால் ஆட்டி வெய்யிலில் வைக்க மெழுகாகும். அந்த மெழுகில் விராகனெடை எடுத்து 10 விராகனெடை வெள்ளீயத்தில் கொடுத்து உருக்க வெள்ளியாகும். மாத்து 7 கண்டது.

147. வயிறு வலி கட்டி

பளம் புளி	நேர்வாளம்	குமட்டிக்காய்
கொடிக்கள்ளி	சதிர்க்கள்ளி	திருகுகள்ளி

இவை வகைக்கு சாறு 1/2 படி,

கண்டங்கத்திரி	கடுக்காய்	கல்லுப்பு,
பிரண்டை	சுக்கு	சிவதை வேர்
சவுக்காரம்	உளைமண்	சத்திசாரணை
பாறையுப்பு		

இவைகளையெல்லாம் சரியிடை வாங்கி, அரைத்து விளக்கெண்ணை 1/2 படியில் போட்டு எரித்து வடித்துக் கரண்டி வீதம் கொடுக்கவும்.

தீரும் வியாதி

வயிற்றில் கட்டி, அகுவைகவுச்சை, பெருவயிறு, மகோதரம் இவை தீரும். பத்தியம் – காலுப்பு, புளி கூட்டி இரசம் சாதம் கொடுக்கவும்.

148. ஆறாத புண்ணுக்குக்கட்ட

ஊழவாத்தி இலைபட்டை அரைத்து பில்லைத் தட்டிக் காயவைத்து மூன்று நாள் கட்ட ஆறும்.

149. மூன்று முறை காய்ச்சலுக்கு

தாளகம் 1 விராகன், இராமக்கட்டி வெள்ளைக்கல் 1 விராகன், கோழிமுட்டைத்தோல் 1 விராகன் வெள்ளைக்கரு விட்டரைத்து பில்லைத்தட்டி காயவைத்து சாண் புடமிட்டு எடுத்துப் பணவிடை பஸ்பம், இஞ்சி, சித்தரத்தைக் கசாயத்தில் மூன்றுநாள் கொடுக்கவும்.

பத்தியம் – இச்சாபத்தியம்

150. சயம் இருமலுக்கு ரெகுநாதன் முறை

ஆடாதொடை சிறுகாஞ்சொறி
இம்புறா கண்டங் கத்திரி
குதிரை வாலி தூதுவேளை
முசுமுசுக்கை

வகை ஒன்றுக்கு 5 பலமாக இடித்துக் கசாயம் வைத்து இறுத்து 5 பலமெடுத்து அதில்,

சுக்கு அரிசிதிப்பிலி வால்மிளகு,
கிராம்பு கோஷ்டம் அக்கிறாகாரம்
சன்ன லவங்கப்பட்டை பரங்கிப்பட்டை
பிறப்பங்கிழங்கு சித்தரத்தை ஏலம்
சாதிக்காய் சாதிபத்திரி மிளகு
தாளிசபத்திரி

வகைக்கு கால் பலம் வாட்டிப் பொடி செய்து கால்படி தேனில் பிரட்டி மூவிரல் கொண்டளவு சாப்பிட்டு பவளபஸ்பம், தாளகபஸ்பம், தேனில் சாப்பிட்டு கோரோசினை தனிப்பொடியாய் தேனில் உட்கொள்ளவும். பின்பு முன் கசாயத்தில் அரைகால்படி சாப்பிடவும். இந்தப் பிரகாரம் அரை மண்டலம் சாப்பிடத் தீரும்.

பத்தியம் – உப்பு வறுத்துக் கூட்டிப் பசும்பால், தயிர், வெள்ளாட்டு வத்தல், கத்திரிப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, துவரம் பருப்பு சேர்க்கவும்.

151. வறண்ட விக்கல், இருமலுக்குக் கசாயம்

சுக்கு 1 பலம், சீனி சர்க்கரை கால் பலம், சிறுகீரை வேர் 2 பலம் இவற்றை எல்லாம் நறுக்கி பசும்பாலில் போட்டு எரித்து வேளைக்கு அரைகால் படி சாப்பிடவும். இந்தப்படி 3 நாள் கொடுக்கவும்.

பத்தியம் – இச்சாபத்தியம்

152. வெடியுப்புச் சுன்னம்

வெடியுப்பு 1 பலம், வெள்ளாட்டு எலும்பு 9 பலம் இரண்டையும் பொடித்து எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து ஒரு முழப்புடம் போட ஆத்து நீராகும். அதைத் தேனில் பணவிடைக் கொடுக்க குன்மவலி, வயிறுவலி எல்லாம் தீரும்.

நாலாமுரை, மூணாமுரைக்கு மருந்து, சாதிலிங்கம், கெவுரி, கெந்தகம், மனோசிலை, அரிதாரம் வகைக்கு 1 விராகன், மெரிப்பாகைச் சாறு விட்டரைத்து மூன்று சாமம் மிளகளவு உருண்டை செய்து, நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு இஞ்சி சாற்றில், நொச்சி சாற்றில் எருமை மோரில் கொடுக்கவும்.

பத்தியம் – கெட்டி

153. வீரமெழுகு

ஆவாரங்கொழுந்தும், வீரமும் சேர்த்து அரைக்க மெழுகாகும்.

154. கருவங்க பஸ்பம்

கோவைக்கிழங்கில் துவாரம் செய்து அதற்குள் இலவங்கத்தை வைத்து துளசி சாறு விட்டு மேல் வாயைக் கிழங்கு சக்கையால் மூடி 2 சீலைமண் செய்து புளியம்புரணியும் வரட்டியும் கலந்து முழப்புடம் போட்டு எடுக்கப் பஸ்பமாகும். அந்த பஸ்பம் பணவிடை தேனில் சாப்பிட வெடி கண்ட மேக ஊறல் எல்லாம் தீரும்.

155. சயத்துக்கு கொடுக்க மருந்து

சுக்கு 1 பலம், கோழி முட்டை 4, வெள்ளைக் கரு எடுத்து அதில் சுக்கைப் பொடித்துப் போட்டுத் தேன் கலந்து கொடுக்கவும். விலாரிக்காய் ஒரு கொத்துப் பறித்து வந்து பசும் பாலில் 1 படி, பச்சத்தண்ணீர் ஒரு படி இரண்டும் கலந்து சுண்ட காய்ச்சி குழப்பிக் கொடுக்கவும்.

ஓம் ஆம் ஊம் அவ்வும் சவ்வும் அகத்தியர் சாபம் நசிநசி அவ்வும் நமசிவாயா.

சிறுமூலி, சிவமூலி, குறுமூலி சத்தி நிற்க சுவாஹா வைஸ்து வைக்க பிரயோகம் – மந்திரம் சக்தியாகும். மனமது சிவமாகும். அந்தமால் கடமதாகும். அய்யனும் தாரமாகும். இந்த மால் தேவரெல்லாம் இருமுலை பாலதாகும். சுந்தரி பூசை செய்ய சுக்கிர சாபம் நீங்கவே.

156. நஞ்சு முறிவு

தேத்தாம் பழம் துவைத்து இரண்டு விரக்கடை சீலையிலூட்டிக் காயவைத்துப் பச்சத் தண்ணீரில் கசக்கிக் கொடுக்க சகல நஞ்சும் முறியும். அத்தி விதையை அரைத்துக் காடியில் கொடுக்க 18 – வகை நஞ்சும் முறியும். வசம்பும், நாவகபட்டையும் பாலில் அரைத்துக் கொடுக்கத் தீரும்.

அகத்தியிலையை அரைத்துப் ப்ச்சத் தண்ணீரில் கொடுக்கத் தீரும்.

குப்பைமேனியிலையை அரைத்துக் காடியில் கொடுக்கத்தீரும்.

மைரோசனை அத்துக்காடியில் குடுக்கத் தீரும்.

எட்டிவிதைத் தின்றால் நாவப்பட்டையை இடித்து காடியில் கொடுக்கத் தீரும்.

ஊமத்தை விதைத் தின்றால் தாமரைக் கிழங்கை இடித்துக் காடியில் கொடுக்கத் தீரும்.

கள்ளிப்பால் குடித்தால் ஆவாரம் பூ அரும்பு அரைத்துக் காடியில் கொடுக்கத் தீரும்.

நாவி தின்ற பேர்க்கு மிளகு ஒரு பலம் அரைத்து இளஞ்சூட்டின் வெண்ணீரில் கொடுக்கத் தீரும்.

அலரி வேர் தின்றவர்க்கு கடுக்காய் காடியில் கொடுக்கத் தீரும்.

பச்சைநாவிக்கு ஆவாரம் விதை அரைத்துத் தண்ணீரில் கொடுக்கவும். எருக்கம்பாலுக்கு நாயுருவி வேரும் விதையும், பனை வெல்லமும் அரைத்துத் தண்ணீரில் கலக்கிக் கொடுக்கவும்.

கற்பூரம் தின்றவர்களுக்கு எலுமிச்சம் பழச்சாறு குடித்தபேருக்கும் கையாந்த கரை அரைத்துத் தண்ணீரில் கொடுக்கவும்.

157. எல்லா வகை நஞ்சுக்கும்

பொன்னாங்கண்ணி ஒரு பிடி அரைத்து குமளெங் கொழுந்து, இலந்தை கொழுந்து ஒரு பிடி ஓணாங்கொழுந்து ஒரு பிடி இளநீரில் வார்த்து அரைத்து உருண்டை செய்து, முள்ளிக் காயளவு தண்ணீரில் கொடுக்கத் தீரும்.

158. கால், கை எரிச்சல் காண்பவனுக்கு

கொத்தமல்லி அரைப்படியெடுத்து நன்றாக தீட்டிப் புடைத்துப் போட்டு அம்மியில் வைத்து அரைத்து தேங்காயத்தனை வெண்ணெய் போட்டு மத்திச்சு வைத்துக் கொண்டு நேரம் ஒன்றுக்கு கொட்டைப்பாக்களவு சாப்பிட்டு வரவும். பித்தசூடு கைகால் எரிச்சல் தீரும்.

பத்தியம் – இச்சாபத்தியம்.

159. தாதுபுஷ்டி உண்டாக

கோழிமுட்டை 6 வாங்கி வெள்ளைக்கருவைத் தள்ளி மஞ்சள் கருவை எடுத்துக் கொண்டு தயிலம் வாங்கி ஒரு கலசத்தில் விட்டு கிராம்பு 1 பலம், அவிள் 1 விராகன் இரண்டையும் தயிலத்தில் போட்டு சில்லுமூடி பூமியில் பத்து நாளைக்குப் புதைத்து எடுத்து அரைத்து உருண்டை செய்து 7 நாட்களுக்குச் சாப்பிடவும்.

வேறு

வெள்ளாட்டுக் கொழுப்பும், நாக்குப்பூச்சியும், பூமி சர்க்கரை கிழங்கும், நிலப்பனைக் கிழங்கும் வகைக்கு 1 பலம்,

இசுபக்கோல் விதை 1 பலம் எல்லாம் ஒன்றாகப் போட்டு அரைத்து வேளைக்குக் கொட்டைப் பாக்களவு சாப்பிடவும்.

160. வீக்கத்துக்கு

இளநீர் கசாயம் செய்து ஏலரிசி 1 பலம் அரைத்துக் கலக்கிக் கொடுக்கவும்.

161. துருசு சுன்னம்

ஆனை லத்தி, குதிரை லத்தி, கொடிமுள்ளி மூன்றும் ஒன்றாக இடித்து வைத்துக் கொண்டு, ஒரு கலசத்தில் சுட்ட சுண்ணாம்புக்கல் $^1/_2$ படி கலசம் போட்டு இரண்டும் சேர்த்து துருசி வைத்து மேலே கலசம் சுன்னக்கல் போட்டு சில்லுமூடி முளக்குளி வெட்டி அரைக்குளி லத்திக் கொட்டி கலசத்தை வைத்து மேலே அரைக்குழி லத்திக் கொட்டி அமுக்கி மேலே மண்ணு தள்ளி மூடி 48 நாட்களுக்கு வைத்து எடுத்து கொடுக்கவும்.

162. தலைமண்டை இடிப்புக்கு

பொடுதலை சாறு, பசுவின் பாலும் சமனாகக் கூட்டி மிளகு 2 பலம் அரைத்து நல்லெண்ணெயில் பதமாக வேகவைத்து முழுகத் தீரும்.

163. பேதிக்கு

விளுவயிலைக்கொண்டு வந்து வேகவைத்து $^5/_8$ படி தண்ணீயிறுத்து கடுகு ரோகிணி மூன்று பைசாவுக்கு வாங்கிப் பொடி செய்து போட்டு அதிலே விளக்கெண்ணெய் காலரைக்கால் படி போட்டு கலக்கிக் கொடுக்க பேதியாகும். பேதி ஆகாமல் போனால் மிளகு நீர் சாதம் சாப்பிடச் சொல்லவும்.

மேகநீர் கண்ணில் கொண்டு நேத்திரம் மறைந்தால் மருந்து

மிளகு 1 பலம், குப்பைமேனிச்சாறு காலரைக்கால் படி, மிளகுத்தூள் தலையிலே கொட்டி குப்பைமேனிச் சாறுவிட்டு

நன்றாக தேய்த்து அதன்மேல் எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்றாக தேய்த்து தண்ணீரில் முழுகவும். இப்படி மூன்று முழுக்கு முழுகச் சொல்லவும்.

பீநாறி மரத்துத் தழையை இடித்து சாறு அரைக்கால் படி எடுத்து அதில் கோழிமுட்டை வெள்ளைக்கரு விட்டுக் கலந்து கொடுத்து விட்டு கறியும் சோறுமாக வயிறு நிறைய சாப்பிடவும்.

164. மூணாம் மாறலுக்கு

முருங்கைப்பூ 7, வெற்றிலை பாக்கு அதனுடன் மென்று முழுங்கச் சொல்லவும்.

165. வெறிநாய் கடிக்கு

கருக்குருவிப்பட்டை அரைத்து பன்றிகுட்டி இரத்தம் விட்டுக் கலக்கிக் கொடுக்கவும்.வேறி இறங்கும், அப்பால் அவனை வீட்டில் அடைத்து வைத்துக் காலம்பற கோளத்தாங்கரைக்குக் கோண்டு பொய் எலுமிச்சம் பழச்சாறு விட்டு நல்லாத் தேய்த்து மூச்சு விடாமல் பானைத் தண்ணீர் சொரியவும். இப்படி மூன்று நாள் கொடுத்து மூன்று காலம் பற தேய்த்துத் தண்ணீர் சொரியவும், வெறி பயித்தியம் தீரும்.

பின்பு மேனிச்சாறு, தண்ணீர் சொறிந்த உடனே துட்டிடைச் சாறு கொடுக்கவும்.

166. பெரும் பாட்டுக்கு மருந்து

கறிப்பான் சாறு $^1/_2$ படி புதுச்சட்டியில் விட்டு அதிலே கடுக்காய், கிராம்பு, மிளகு, கசகசா சரியடைகசு வாங்கி தூள் செய்து போட்டு ஒரு துட்டு கஞ்சாதூள் செய்து பனைவெல்லம் கூடப் போட்டு லேகியமாக்கி புன்னைக் காயளவு கோடுக்கத் தீரும்.

167. காது கேளாமல் சீ வடிவதற்கு

கொட்டை முத்து வறுத்து ஊத்தின எண்ணெய் $^1/_2$ படி, வட்டக்கிலுகிலுப்பை, அருகங்கிழங்கு, கோரைக்கிழங்கு,

துளசிவேர், தும்பை வேர், கத்தாட்டிப்பட்டை, மிளகு பூண்டு, வலம்புரிக்காய், கடல்நுரை, கல்நார், கல்மதம் இவற்றை எல்லாம் சரியெடை வாங்கிப் பொடி செய்து போட்டு எரித்துக் காதில் குத்தக் காது கேட்கும். கை கண்டது.

168. கை கால் குடைச்சலுக்கு

பசுவின் கோமியம் 4 படி, திருகுகள்ளி, வாதமடக்கி, கருநொச்சி, கருஊமத்தை, வேலிப்பருத்தி, குப்பைமேனி, எருக்கு இலை இவற்றின் சாறு பிழிந்து அமுக்கறா இவைகள் சரியிடையாகச் சாறு பிழிந்து, தழுதாழைச் சாறும் சேர்க்கவும். இதில் கடுகு, பூண்டு சரியிடை நுணுக்கிப் போட்டு சங்கங்குப்பிச் சாறும் விட்டு எரித்து குழம்பு பதத்தில் வழித்து துவாலையிடத் தீரும்.

169. சூதக வாய்வுக்கு

எருக்கம்பூ – 7, நல்லவெல்லம், கிராம்பு அரைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். தீரும்.

170. சக்தி குன்மத்துக்கு

5 நார்த்தங்காய் கொண்டு வந்து அரிந்து அதில் ஓமம், பெருங்காயம் தூள் செய்துப் போட்டு அதில் வெள்ளாட்டுக் கோமியம் அரைப்படி விட்டு சீலைமண் செய்து வேக வைத்து எடுத்து நாள் ஒன்றுக்கு மூன்று வேளைச் சாப்பிடவும். 7 நாள் பத்தியம் இருக்கவும்.

171. மகோதரம் வீக்கம்

சர்திக்கள்ளிப்பட்டை, கொடிக்கள்ளிப்பட்டை, செங்கந்தாரிப் பட்டை இவற்றை வகைக்கு 1 பலம் கொண்டு வந்து இடித்து அரைப்படி விளக்கெண்ணெயில் போட்டு எரித்து வடித்து அதில் அரைக்கால் பணத்துக்குக் கடுகு, ரோகிணி வாங்கி வாட்டிப் பொடி செய்து போட்டு துட்டிடை கொடுக்கவும்.

பத்தியம் – இச்சாபத்தியம். தீரும். செயம்.

172. சூலக்கட்டு

வெள்ளறுகு கொண்டு வந்து அரைத்துப் பசும்பாலில் கொடுக்கத் தீரும். பத்தியம் – கடிசி.

173. மந்தார காசம்

உளுந்து தோலோடே அரைத்து விளக்கெண்ணெயில் வடை சுட்டு பனைவெல்லம் பாவாய் காய்ச்சி அந்தப் பாலில் தொவச்சி சாப்பிடச் சொல்லவும். கை கண்டது.

174. எலிக்கடி

கருவேலப்பட்டை, நாகப்பட்டை இரண்டும் சரியிடையாகக் காடி தண்ணீர் வார்த்து மை போல அரைத்து நல்லெண்ணெய் அரைப்படி வாங்கிப் போட்டுக் கலக்கி எரித்து வடித்து உள்ளுக்குத் துட்டிடைக் கொடுத்து 7 நாள் கடும் பத்தியம் இருக்கச் சொல்லவும்.

எருக்கலங் கொழுந்து புளி போட்டு வேகவைத்து கடைந்து கொடுக்கவும். இச்சாபத்தியம்.

மேத்தலை வாய்வுக்கு கண்ணுக்கு அரிப்பு கொடுத்தால்

கடுக்காய் தூள் செய்து மெல்லிய துணியில் முடிந்து மூலைப்பாலில் தோய்த்து கண்ணுக்கு ஒத்தடம் கொடுக்கவும்.

அந்திமாலையில் வெள்ளாட்டுப் பால் அரைப்படி அதில் ஈச்சங்கொட்டை இலைச் சாறுவிட்டுக் கலக்கிக் கொடுக்கவும்.

175. கள்ளிப்பூ கிரந்தி

கொடிக்கள்ளி வாட்டி வெங்காயம் கூடப் போட்டு இடித்து சாறு பிழிந்து கால்படி சாறு கொடுக்கவும். பத்தியம் – கடிசி.

176. பழுவரை நோய்

கொன்றைக் கொழுந்து, மிளகு, பூண்டு இம்மூன்றையும் சமமாக அரைத்துச் சாப்பிடச் சொல்லவும்.

இதுவேறு

விளக்கெண்ணெய் ஊற்றி பிரட்டி சாப்பிடவும்.

வேறு

விளக்கெண்ணெய் அரைப்படி, வேலி பருத்திச்சாறு அரைப்படி விட்டு எரித்துச் சாப்பிடவும்.

177. எரிகுன்மம்

நமரு வாளப்பழம், சுன்னம் இரண்டும் ரேகித்துச் சாப்பிடவும்.

178. அந்திர வாயு

கழற்சிபருப்பு, கோழிமுட்டை, வெள்ளைக்கருவும் இட்டு வறுத்துச் சாப்பிடவும்.

179. விந்து ஓடைச்சல்

ஜாதிக்காய் – 2, கிராம்பு 5 பலம், உஞ்சக் கொழுந்து 5 பலம் இவையெல்லாம் குப்பைமேனிச் சாறு விட்டு அரைத்து கழிஞ்சிக்காய் பிரமாணம் அந்தி சந்தி இரண்டு வேளையும் சாப்பிடவும். தாது புஷ்டி உண்டாகும்.

180. வண்டுகடி

வெள்ளறுகு, நில ஆவாரை, அமுக்கிறாக்கிழங்கு, ஆகாசக்கெருடன் கிழங்கு, அழிஞ்சில் வேர்ப்பட்டை, சித்தரத்தை, தேசாவரம், சுக்கு, சீரகம் இவற்றையெல்லாம் இடித்து சூரணம் வைத்துக் கொண்டு திருகடிப் பிரமாணம் சாப்பிட்டு வெந்நீர்க் குடிக்கவும். பத்தியம் – கடிசி.

181. சூதகவாய்வு

பூண்டு 1 பலம், உத்தாமணிச் சாறும் வேரும் பசுவின் பாலில் வேக வைத்துச் சாப்பிடவும். கைகண்டது.

182. மந்தாரகாசம்

கண்டங்கத்திரி, தூதுவளை, ஆடாதொடை இலையுடனே ஒன்றாக இடித்துத் தூளாக்கி வடிகட்டி, திரிகடுகு, அரத்தை இவை வகைக்குத் தூள் ஆழாக்கு கொம்புத் தேன் சட்டியிலிட்டு சரக்கெல்லாம் கொட்டிப் பசுவின் நெய் ஆழாக்கு விட்டு லேகியம் செய்து புதுக்கலசத்தில் வைத்துக் கொண்டு தான்றிக்காய் அளவு மண்டலம் சாப்பிட மந்தாரகாசம், சயகாசம் தீரும்.

183. மிளகு தயிலம்

நல்லெண்ணெய் அரைப்படி, பசுவின்பால் அரைப்படி, மிளகு 2 படி, புளியம் இலைச்சாறு கால் படி, மிளகை பசும்பாலில் விட்டரைத்து எல்லாம் கலக்கி எரித்து வடித்து மூன்று நாளைக்கு முழுகவும்.

எண்ணெய் எரிக்கும் முன்னே சூரியபுடம் மூன்றுநாள் வைத்துப் பின் எரிக்கவும்.

தீரும் நோய்

நேத்திரவாய்வு, பீனிசு, மண்டை தடிப்பு, தலைவலி தீரும். கைகண்டது.

184. அண்ட வாய்வு

புளியம் இலை, வேப்பம் இலை, களச்சி இலை, கழுதைலத்திச் சாறு, திருகுகள்ளி, தேங்காய் இவற்றை இடித்து ஒத்தடம் போடவும்.

185. பளுவரை நோய்

வேலிப்பருத்திச் சாறு அரைப்படி, விளக்கெண்ணெய் அரைப்படி, பெருங்காயம் 1 பலம், பத்தியம் – கடிசி எல்லாம் மூன்று நாட்கள் குடிக்கத் தீரும்.

186. கால்முகம் சுறவை கண்டால்

சுரைக்கொடி	கோவைத்தண்டு	நீர்முள்ளி
கண்டங்கத்திரி	சீந்தில் தண்டு	சங்குவேர்
நெருஞ்சிவேர்	சித்தாமுட்டிவேர்	நெல்லியீக்கு
கரிசிலாங்கண்ணிவேர்	அமுக்குறா வேர்	புளியம் ஈர்க்கு
நத்தைச்சாறணைவேர்	ஆலந்தழை	பூண்டு வேர்
காட்டு எலுமிச்சம்வேர்	நாரத்தை ஈர்க்கு	பூவரசு தழை
கீழாநெல்லி வேர்	பிண்ணாக்கு	

இதன் பூ, காய், இலை முழுவதும் (சமூலமாய்) கண்டதுண்டமாக நறுக்கிப் போட்டு மூன்று வெள்ளத் தண்ணீர் விட்டுக் கடுக்காய், கருஞ்சீரகம் போட்டு 6 வெள்ளம் தண்ணீரும் ஒன்றரை படியாகக் காய்ச்சி மூன்று நாள் ஆறு பொழுது கொடுக்கவும். பத்தியம் – கடிசி.

187. பிள்ளைகளுக்குப் பொருமல்

நொச்சிக் கொழுந்து சாறு பிழிந்து அந்த சாற்றில் கடுக்காய் தூள் போட்டுக் கலந்து கொடுக்கவும். பத்தியம் – கடிசி.

188. வண்டு கடி

தகரவிதையும், அழிஞ்சில் பட்டையும் மோரில் ஊறப்போட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்துப் பூசவும். கைகண்டது.

189. வங்கபஸ்பம்

காரீயம் 1 பலம் வரையோடு வைத்து அதிலே வங்கத்தை வைத்து வங்கம் உருகின பிறகு அலரிப் பருப்பு போட்டு அலரி

விறகு போட்டு எரிக்கவும். அலரிகுச்சியில் கிளற செந்தூரமாகும். பத்து நாழிகை எரிக்கவும். செந்தூரமாகும். அந்த செந்தூரத்தில் பணவிடையளவு இருநேரமும் தேன் நெய்யில் உட்கொள்ளவும்.

தீரும் நோய்

மேகம், பிரமேகம், நீரழிவு, கைகால் வலி, அக்கினி மந்தம், சகல குன்மம், வெட்டையும் தீரும். சுக்குடன் குப்பைமேனி, பெருங்காயம், முள்ளி, வசம்பு, உப்பு இவற்றை ஒன்றாக நறுக்கி மூக்கில் பிழிய விசம் ஜன்னி இவைத் தீரும்.

ஓம் காளி, காளாஸ்த்திரி, நீலி, நீலகண்டி, கெங்கைச் சாறை, துப்பாதுப்பி, ஆலா விருட்சத்தின் கீழ் ஐந்துதலை நாகம், ஆலா விருட்சத்தின் மேல் ஆகாச கெருடன், நிழல் அடிபட நாகத்தின் சிரசு பட சிவா – முக்காலும் ஆணை வச்சேன் சிவா –

காய்ச்சலுக்கு சிறுகுமட்டிவேர் கொண்டு வந்து, அதை அனலில் வாட்டி நறுக்கிச் சட்டியில் போட்டு ஒரு படி தண்ணீர் விட்டு சுண்ட எரித்து திப்பிலி, மிளகு, பூண்டு வறுத்து அரைத்துக் குழப்பி கொடுக்கவும்.

190. அண்டவாதம், விரைவாதம், கழல் வாதத்துக்கு

நெருஞ்சி வேர்	சங்கம் வேர்	
சித்திரமூலவேர்		
சாரணைவேர்	முருங்கைப்பட்டை வகைக்கு $^1/_2$ பலம்,	
திப்பிலி	திப்பிலிமூலம்	ஓமம்,
தெசாவரம்	கருஞ்சீரகம்	இந்துப்பு
வசம்பு		

வகைக்கு 2 வராகன் இவற்றை இடித்து சட்டியிலே போட்டு குறுணி தண்ணீர் விட்டு எரித்து ஒரு படி ஆக ஆக்கி மூன்று நாள் சாப்பிடவும்.

பத்தியம் – கடிசி

191. காது செவிடு

வசம்பு	பூண்டு	முருங்கை வேர்
எருக்கம் பழுப்பு	மருள் கிழங்கு	பெருங்காயம்
கடல்நுரை		

இவற்றையெல்லாம் சம நிரையாக கூட்டி அரைத்து வீசம்படி வேப்பெண்ணெய் விட்டு எரித்துக் காதில் குத்தி உச்சியில் தேய்க்கவும். கை கண்டது.

192. உள்நாக்கு வளர்ந்தால்

எள்ளு இலையும், பூண்டும் அரைத்து உச்சியில் தலையில் தேய்க்கவும்.

193. விக்கலுக்கு

குவளை பற்பாடகம், பொறி, தேன், கல்கண்டு கொடுக்கவும். திப்பிலி, ஏலஅரிசி, நெல்பொரி, தேனில் கொடுக்கவும்.

194. வாந்தி விக்கலுக்கு

நெல்பொறி, கொத்தமல்லி, வில்வப்பழம், நஞ்சு போக்கினது, சீரகம் இவையெல்லாம் சரியிடை ஒன்றாய்ச் சேர்த்து 2 படி தண்ணீர்விட்டு எரித்து கால் படி தண்ணீர் கொடுக்கவும்.

பக்ஷித்தோசம், பறவை தோசம், குளி தோசம், குளி முடி தூக்கின தோசம், சகல தோசத்துக்கும் முடியவும். கன்னி கழியாத பெண்பிள்ளை நூத்த நூலில் 27 இழையெடுத்து 33 முடிச்சு முடிஞ்சு இதுக்கு மந்திரம் சர்வதோசம், சர்வ வியாதி, நலத்தபாபகர, அரிகரி, கணபதியே நமோ வென கொடுத்து 33 தடவை சொல்லவும்.

195. கெற்ப வாயுவுக்கு

மூக்கரட்டை இலை வேகவைத்து தண்ணியிறுத்து போட்டு விளக்கெண்ணெயில் துவட்டி சாப்பிடவும்.

196. தலைவலிக்கு

வேப்பம் பிசினும் சாம்பிராணியும் அரைத்துப் பத்துப்போடத் தீரும்.

197. பெரும்பாட்டுக்கு மருந்து

கடுதாசி சுட்டு ஒரு விராகனெடைச் சாம்பலும், கல்கண்டு தூளும் லேகிச்சுக் கொடுக்கவும். மூன்று வேளைக்கு மூன்று விராகனெடை கொடுக்கவும். இச்சாபத்தியம்.

198. தன்மந்திரி லிங்க மெழுகு

சுத்தி பண்ணின வாளம் 8 விராகன், ஜாதிலிங்கம் 2 விராகன், வெங்காரம் 1 விராகன் இவையெல்லாம் கூட்டி ஒரு சாமம் அரைத்து பீங்கானில் வைத்துக் கொண்டு குண்டுமணி பிரமாணம் நல்ல வெல்லத்தில் கொடுக்கவும். நல்ல தண்ணீர் கொடுக்கவும். நிறுத்த வேணுமானால் வெந்நீரும் சோறும் கொடுக்கவும். நல்ல தண்ணீர் கொடுக்கவும். வாய்வு இறப்புக் கட்டிகள் தீரும்.

199. புழு வெட்டுக்கு

கறிப்பான் இலை	நொச்சிக் கொழுந்து
வேப்பங்கொழுத்து	மிளகு
காயம்	கோழிப்பித்து
கீரிப்பித்து	வாகைமரத்துப் பில்லுருவி

இவையெல்லாம் சுடுதி எண்ணெய் விட்டு மை போல அரைத்து குன்றியிடை வெற்றியிலையில் வைத்துக் கொடுக்கவும். உச்சியைக் கிழித்துத் தேய்த்து அனல் காட்ட விசம் இறங்கும். சகல விசத்துக்கும் மெழுகு.

200. அமுராதி குளிகை

கோரோசனை	செண்பகப்பூ	சாத்திரபேதி
அதிமதுரம்	திருகு சந்தனம்	ஏலம்

கோஷ்டம்	சாதிபச்சை	இஞ்சி
வெட்டிவேர்	விலாமிச்சு வேர்	

இவற்றை வகைக்கு 1 விராகன் வாங்கிக் கல்வத்திவிட்டு இஞ்சி சாறுவிட்டு ஒரு சாமம் அரைத்து கொத்தமல்லி பிரமாணம் உருண்டை செய்து உலத்தி வைத்துக் கொண்டு முலைப் பாலிலிடவும்.

201. கிரந்தி புண்ணுக்கு

கோழியவரைச் சாறு $^1/_2$ படி	ஈர வெங்காயம் $^1/_2$ படி
சீரகம் $^1/_2$ படி	கூரெள்ளு எண்ணெய் $^1/_2$ படி

இவற்றையெல்லாம் கொதிக்க வைத்துக் கொடுக்கவும். மூன்று காலையில் கொடுத்து பத்தியம் கடிசாப் போடவும்.

202. கிரந்திக்கு

வாகையிலைச்சாறு $^3/_8$ படி	ஈரவெங்காயம் சாற்படி $^3/_8$ படி
கூரெள்ளு $^3/_8$ படி	

கொதிக்க வைத்துக் கொடுக்கவும். காலையில் கொடுத்து பத்தியம் கடிசாப் போடவும்.

203. வங்க செந்தூரம்

வங்கம் 1 பலம், உருக்கிக் கொண்டு 2 பலம் மஞ்சள் தூள் செய்து போட்டு வறுத்து அப்பால் மருதெண்ணைச் சாறு விட்டரைத்து பில்லை செய்து காய வைத்து கெஜபுடம் போடவும். செந்தூரமாகும். ஈளை, இருமல், வெட்டைக்குக் கொடுக்கவும்.

பத்தியம் – இச்சாப் பத்தியம்

204. வங்க பஸ்பம்

வங்கத்தை நன்கு மெல்லியதாகத் தட்டி பொடியாய் பொடித்து ஆலம் விழுது கொழுந்தாகக் கொண்டு வந்து

வங்கத்தோடே போட்டு நன்றாக ஒரு சாமம் அரைத்து உருட்டி 7 சீலைமண் செய்து கெஜப்புடம் போட்டு எழுத்தாணியில் பொத்தல் செய்து பஸ்பத்தைக் கொட்டிக் கொள்ளவும். சகல வியாதிகளும் தீரும். இச்சாபத்தியம்.

தாளகம் சுத்தி பண்ணினது $^1/_2$ பலம், சீனாக்காரம் $^1/_2$ பலம் இரண்டையும் சித்தண்டு முட்டை கருவைப் போட்டுக் கலக்கி கொஞ்சம் வைத்துக் கொண்டு மிச்சத்தை ஊற்றி விட்டு அண்டத்துள் தாளகத்தைப் போட்டு மேலோடு மூடி சீலைமண் மூன்று செய்து 9 விரளியில் வைக்கவும். பஸ்பமாகும். சகல வியாதிக்கும் கொடுக்கலாம்.

தேத்தாங்கொட்டை நறுக்கி அரைத்து அதில் முன் மருந்தை அரைத்துக் குழப்பி மூன்று நாள் சாப்பிடவும்.

பத்தியம் – புளியில்லாமல் சாப்பிடவும்.

205. இரணத்துக்குப் புகை போட விபரம்

வங்கம் 1 பலம், ஓட்டில் போட்டு உருகும்போது ஒரு பலம் இரசம் விட்டு வெட்டையாக்கிக் கொண்டு ஓமம் இரண்டு பலம் போட்டு அரைத்துத் தூளாக்கிக் கொண்டு மேக இரணங்களுக்குப் புகைப்போட்டுக் கட்டவும்.

206. தாது புஷ்டிக்கு

ஆனைநெருஞ்சில் கொண்டு வந்து நீராகாரம் விட்டு அலசி பிழிஞ்சி கொண்டு அதில் சீரகம் நுணுக்கி சீனி சர்க்கரைக் கலந்து திரிகடிப் போட்டு கலக்கி சாப்பிடவும்.

பத்தியம் – நெய் சேர்த்துப் பொறிச்ச கொளம்பு போட்டு சாப்பிடவும்.

இதுவுமது

கடசந்தனம், தேத்தாங்கொட்டை, தென்னம்பாளை, கிழக்கே போகும் முருங்கைவேர் இவையெல்லாம் கூட்டி

வல்லாரை, வில்வம், வழுமியிலை இம்மூன்றும் இடித்து உலர்த்திக் காயவைத்து சுக்கு, சித்திரத்தை, மிளகு, சீரகம் இவற்றையும் இடித்து வஸ்திரகாயம் செய்து சீனிசர்க்கரைக் கலந்து திரிகடிப் பிரமாணம் சாப்பிடவும். இச்சாபத்தியம். சகல வியாதியும் தீரும்.

207. அய செந்தூரம்

அயம் 1 பலம், கெந்தகம் 1 பலம், சவ்வீரம் 1 பலம் இவை மூன்றையும் கல்வத்திலிட்டு எருக்கம் பால் விட்டு அரைத்து பில்லை தட்டிக் காயவைத்து 25 விராட்டியில் புடம் போட செந்தூரமாகும். வாய்வு சூலை சகலரோகத்துக்கும் கொடுக்கலாம்.

பத்தியம் – இச்சாபத்தியம்

208. பாம்பு விசங்களுக்கு மருந்து

காயம் 1 விராகன், மிளகு 21, வேம்புமுத்து 21 மூன்றையும் நன்றாக ஒரு சாமம் அரைத்து வெள்ளாட்டுப் பித்துப் பையில் போட்டுப் புகையடியில் காட்டி வைத்தால் மெழுகாகும். அந்த மெழுகில் குண்டுமணி எடை வெற்றிலையில் வைத்துக் கொடுக்கவும்.

வெற்றிலையில் சாறுப் பிழிந்து இழைத்துக் கலிக்கம் போடவும். அலகு கிட்டிப் போனால் வெற்றிலைச் சாற்றில் கலக்கி உள்ளுக்குப் போடவும். உச்சியில் தேய்த்து அனல் காட்டவும். அப்பால் கடிவாயைக் கிழித்து அதில் போடவும்.

பத்தியம் – கடிசி. பச்சை நெல்லு கஞ்சி உப்பில்லாமல் கொடுக்கவும். மூன்றாம் நாள் உப்பு சேர்க்கவும். சன்னி – 13 க்கும் கலிக்கம் போடவும்.

209. தேங்காய் மெழுகு

பூண்டு 4 விராகன்	கல்லுப்பு 2 விராகன்
வெடியுப்பு 2 விராகன்	இந்துப்பு 1 விராகன்
வளையலுப்பு 2 விராகன்	சவுட்டுப்பு 2 விராகன்
நமச்சாரம் 1 விராகன்	சத்திசாரம் 1 விராகன்

அன்னபேதி 1 விராகன்
மாங்கிசபேதி 1 விராகன்
பெருங்காயம் $^1/_2$ விராகன்
பொன்னரிதாரம் $^1/_2$ விராகன்
ஓமம் 2 விராகன்
கார் போக அரிசி 1 விராகன்
குரோசாணி
வாய் விளங்கம் 2 விராகன்
கண்டம் திப்பிலி 1 விராகன்
சுத்தி செய்தவாளம் 4 விராகன்
சாஸ்திரபேதி 1 விராகன்
வெண்காரம் 1 விராகன்
சாதிலிங்கம் $^1/_2$ விராகன்
திப்பிலி 1 விராகன்
கடுகு ரோகிணி 1 விராகன்
கருஞ்சீரகம் 1 விராகன்,
ஓமம் 1 விராகன்
சித்திரத்தை 1 விராகன்
சதகுப்பை 1 விராகன்
தேங்காய் 1

இந்த 16 சரக்கும் கலுவத்திலிட்டு அரைத்து மெழுகு பதமான பின்பு, சரக்கையெல்லாம் இடித்து, வடிகட்டி முன் முழகோடே சேர்த்து வாளமும் சேர்த்து அரைத்துத் தேங்காயின் கண் திறந்து ஊற்றிவிட்டு அதற்குள் மருந்தை எல்லாம் போட்டு முளை சீவி அடித்து ஒடு கருக புடம் போட்டு எடுத்துக் கலுவத்தில் போட்டு நன்றாக அரைத்து எடுத்துக் கொண்டு பாக்களவு கொடுக்கவும். மூன்று நாளைக்குக் கொடுக்கவும். பத்தியம் – லேசி.

210. பஞ்சபூத செந்தூரம்

இலிங்கம் 2 $^1/_2$ விராகன் பூரம் 1 $^1/_4$ விராகன், காடிக்காரம் $^1/_2$ விராகன், பொறித்தசீனா வெங்காரம் $^1{}_8$விராகன், பொறித்த சீனாக்காரம் $^5/_8$ விராகன் ,

மேற்படி இலிங்கத்தையும் பூரத்தையும் சூரிய புடம் நான்கு சாமம் வைத்து எடுத்து எல்லாவற்றையும் கலுவத்திலிட்டு நான்கு சாமம் அரைத்து சீசாவில் வைத்துக் கொண்டு சுரம் – 64 க்கும், சன்னி – 13 க்கும், தோசம் 10 க்கும் வாய்வுகளுக்கும் சொரசம், முருங்கைப்புட்டை, இஞ்சி மூன்றையும் அரைத்து கசாயம் வைத்து இறுத்து அதில் அரிசி இடை செந்தூரம் போட்டுக் கொடுக்கவும்.

சுரங்களுக்கு பழையது மோர், வாழைப்பழம், இளநீர், வெள்ளாட்டுக்கறி, நெய், பால் இவைகளைச் சேர்த்துக் கொள்ளவும்.

211. இருமல், க்ஷயம், காசத்துக்கு நெய்

பசும் நெய் சேர் 1 ¹/₄ படி
சிறுகாஞ் சொரி வேர் 1 பலம்
கண்டங்கத்திரி வேர் 1 பலம்
ஆடாதொடைவேர் 1 பலம்

இவை மூன்றையும் பெரிய படியால் ஒரு படி தண்ணீரில் போட்டு எரித்துக் கசாயமிட்டு வடித்துப் பசும்பால் ¹/₂ படி, தூதுவளைச் சாறு ¹/₂ படி, வேளைச்சாறு ¹/₂ படி இம்மூன்றையும் ஒன்றாக சேர்த்து நெய் ஒரு ¹/₄ படி விட்டு கண்டகத்திரிக்காய், ஜாதிபத்திரி, அரிசிதிப்பிலி, அதிமதுரம் இவற்றை வகைக்கு 1 விராகன் தூள் செய்து போட்டு எரிக்க நெய்யாக வரும்போது இறக்கிக் கொண்டு துக்காணியிடை அந்திசந்தி இரண்டு வேளையும் 15 நாட்கள் சாப்பிடவும்.

அடிமண்டியும் சுண்டக்காய்ப் பிரமாணம் சாப்பிடவும். மீன், கருவாடு வாயு பதார்த்தம் பழையது தள்ளவும்.

212. அருணாசலம் முறை

துருசு ஒரு பலம் வாங்கி பிரண்டையை நறுக்கி சுக்கு தூள் கீழ் மேல் வைத்து ஒட்டில் ஒடுமூடி சீலைமண் செய்து 5 விராட்டியில் வைக்கவும். சுன்னமாகும். துருசு சுன்னம் வெட்டை வெள்ளைக்கும் இது.

பத்தியம் – வாய்வு பதார்த்தம் தள்ளி உப்பு, புளி வறுத்து சேர்த்துக் கொள்ளவும். வியாதி வலுவறிந்து செய்யவும். எண்ணெய்க் கடுகை சுண்டக்காய்ப் பிரமாணம் கொடுக்கவும். 6 ஆம் நாள் எண்ணெய் ஸ்நானம். மேகத்துக்குக் கொடுத்தால் விளக்கெண்ணெய் தேய்த்து முழுகவும்.

213. இஞ்சி லேகியம்

இஞ்சி 10 பலம், மேல் தோல் போக்கிக் கல்வத்திலிட்டு பழச்சாறு வார்த்து நான்கு சாமம் அரைக்கவும். பின்பு

சீரகம்	மிளகு	அதிமதுரம்
திப்பிலி	மூலம்	கோஷ்டம்

வாலுளுவை	தாளிசபத்திரி	கடுகு
வால்மிளகு	ஜாதிக்காய்	கோரோசனை
சுக்கு	கொத்தமல்லி	கற்கடக சிங்கி
குரோசாணி	ஓமம்	கொடிவேலிவேர்

வகைக்கு ஒன்றாக ஒரு பலம், கையாந்த கரையிலை $1/_2$ பலம், பூவரசன் பட்டை சாறு விட்டு மை போல் அரைத்து முன் மருந்தோடு சேர்க்கவும்.

மேற்படி பிரண்டை 1 பலம், பசுமோர் $1/_2$ படி, பிரண்டை கால் படி மோரில் போட்டு இரவு முழுவதும் ஊறப்போட்டு விடிந்தவுடனே எடுத்துக் காய வைக்கவும். இதன்படி மோர் தீரும் வரை ஊற வைத்து காய வைக்கவும். பின் இதனை இடித்து வடிகட்டி பசுவின் நெய் சேர்த்து 1 படி, சீனி சர்க்கரை $1/_2$ சேர், நெய்யைச் சட்டியிலிட்டு இஞ்சி உருண்டையைப் போட்டு ஒரு பெறட்டி இரண்டாவது கை யாந்தகரையைப் போட்டு மூன்றாவது பிரண்டைத் தூளைப் போட்டு ஒரு பிரட்டு பிரட்டி மற்ற சரக்குகளை எல்லாம் போட்டு லேகியமாக எடுத்துக் கொண்டு காலைமாலை இரண்டு வேளையும் கொட்டைப் பாக்களவு சாப்பிடத் தீரும்.

தீரும் வியாதி

வாய் பித்தம், உஷ்ணகிரந்தி, பிரட்டல், சத்தி விக்கல், குன்மம், பித்தகுன்மம், சன்னி தோசம், எரிகுன்மம், அசூரணவாய்வு, உப்புசம், அரோசியம், இத்தியாதி எல்லாம் தீரும். இச்சாபத்தியம். கவுச்சி தள்ளவும். மூன்றுநாட்கள் சாப்பிடத் தீரும்.

214. தன்வந்திரி எண்ணெய் லேகியம்

கடுகு	ஏலம்	அதிமதுரம்
கோஷ்ட்டம்	சடாமாஞ்சி	குங்குமப்பூ
தாளிசபத்திரி	வால்மிளகு	கோரோசினை
சுக்கு	சித்திரமூலம்	கிராம்பு
பச்சை கற்பூரம்	கொத்தமல்லி	சாதிக்காய்

வகைக்கு ஒரு பலம் இவற்றை எல்லாம் இளம் வறுப்பாய் வறுத்து வத்திரகாயம் செய்து சித்தரமணக்கு எண்ணெய் $1/_2$ படி,

மணத்தக்காளிச் சாறு $^1/_2$ படி 1, சீனிசர்க்கரை 4 பலம் எண்ணெயும் சாறும் சட்டியிலிட்டு எரிக்கக் கடுகு பதமாகும் போது மேற்படி சரக்கை எல்லாம் கொட்டிக் கிளறி எண்ணெய் பதமாக வரும்போது எண்ணெயை இறுத்துக் கொண்டு பொட்டுக்கரண்டி வீதம் 5 அல்லது 7 நாள் உட்கொள்ளவும்.

தீரும் வியாதி

பளு உருக்கி, எலும்பு உருக்கி, படர்ந்த மேகம், வெள்ளை சீரெத்த மிறமி, மலச்சிக்கல், மலக்கட்டுப் பிற மேகம், புண், அரையாப்பு, சொறிசிரங்கு, அஷ்டசூலை, கண்ணெரிவு, கை கால் காந்தல், பலகீனம், புகைச்சல் இருமல் இவையெல்லாம் தீரும்.

பத்தியம் – வாயு பதார்த்தம் தள்ளி இச்சா பத்தியம்.

215. சிந்தாதி எண்ணெய் முறை

தேங்காய்ப்பால் சின்னப்படி பால் – 8 எண்ணெய்ச் சட்டியில் விட்டு எண்ணெய் எரித்து எடுத்துக் கொண்டு மேற்படி வேலிப்பருத்தி $^1/_2$ படி மேற்படி எண்ணெயுடன் கலந்து எரித்து எண்ணெய் கொதிச்சிடும் கடுகு திரளும் போது,

கடைச்சரக்கு

குங்குமப்பூ	– 1	கோரோசனை	– 1
பச்சைக்கற்பூரம்	– 1	கஸ்தூரி	
பெருங்காயம்		வெள்ளுள்ளி (பூண்டு)	
வாளம்		கூகைநீர்	

வகைக்கு 2 வீதம் தேங்காய்ப் பால்விட்டு அரைத்துக் கொதிக்கின்ற வெண்ணெயில் போட்டுக் கிளறிவிடவும். கொதி வரும்போது, கோரோசனை, கஸ்தூரி இரண்டையும் அரைத்து மேற்படியில் போட்டுக் கலந்துவிடவும். எண்ணெய் பதம் கைச் சுட்டால் கிளறி இறக்கவும். சுடாமலிருந்தால் கீழே இறக்கி வடிக்கட்டிக் கொள்ளவும். வேளை 1 – க்கு 5 விராகனெடை எண்ணெய் கொடுக்கவும். 3 – 5 – 7 நாளைக்கு உட்கொள்ளவும்.

தீரும் வியாதி

கவுசை, சிரசின் மேல் கொண்ட பைத்தியம், சூலை, ஆம்பல் கட்டி, மேகம் 21, வண்டுகடிகள், வாய்ப்புண், கண்ணெரிவு, மகிழ்த வாய்வு, கிரந்தி, அரையரிப்பு, பிரமியம் 8, பவுத்திரம் 9 இந்த வியாதியெல்லாம் தீரும்.

216. காச்சகட்டி, கெண்டை பெரும் வயிறு

சுக்கு $^5/_8$ விராகன்	கண்டதிப்பிலி $^5/_8$ விராகன்
பனவெல்லம் $^1/_2$ பலம்	பொட்டிலுப்பு $^1/_2$ பலம்
இந்துப்பு $^1/_2$ பலம்	வளையலுப்பு $^1/_2$ பலம்
கல்லுப்பு $^1/_2$ பலம்	பாறையுப்பு $^1/_2$ பலம்
குமட்டிக்காய்ச் சாறு 2	பொட்டிலுப்பு $^1/_2$ பலம்

சேர்த்து சட்டியிலிட்டு 5 உப்பையும் தூள் செய்து சாற்றில் போட்டு மேற்படி இரண்டு சரக்கையும் தூள் செய்து போட்டு வெல்லத்தையும் போட்டு அடுப்பிலேத்தி லேகியமாகச் செய்து கொண்டு சுண்டக்காய் பிரமாணம் சாப்பிடவும். வலி கண்டால் மருந்தை நிறுத்தவும். இரத்தம் கண்டால் ஆவரைப்பட்டை கசாயம் வைத்துக் கொடுக்கவும். பத்தியம் – இச்சாபத்தியம்.

217. விச பேதிக்கு மெழுகு

வீரம்	பூரம்	இலிங்கம்
வெங்காரம்	சுக்கு	மிளகு
அரிசி	திப்பிலி	பெருங்காயம்

வகைக்கு ஒரு விராகன் தேன் விட்டு அரைத்து மெழுகு போலெடுத்துக் குண்டுமணியிடை பிராந்தியிலாவது, பட்டைச் சாராயத்திலாவது கொடுக்கவும். வாய்வைச் சேர்ந்த ரோகமெல்லாம் போகும். மலத்தைக் கட்டும். நீரையுடைக்கும். கை கண்டது.

218. இந்திரகிரி சஞ்சீவியாகிய கெந்தகத் தயிலம்

கெந்தகம் 2 பலம், வீரம் 1 விராகன், வெடியுப்பு 2 பலம், பசுவின் நெய் இவற்றை கலுவத்திலிட்டு ஒரு சாமம் அரைத்து

வெள்ளைப் புட்டியில் போட்டு அடுப்புக்கறித் தணல் செய்து அந்த நெருப்பின் பேரிலே சாணக்கையில் மணல் பரப்பி, அதன் மேல் சீசாவை வைத்து தணலை விசிறியினாலே சாணக்கையில் சூடேறி புட்டியில் சூடேறி மருந்துப் பொங்கி அமர்ந்தவுடனே எடுத்து கல்வத்திலிட்டு அரைத்து எடுத்துக் கொண்டு சர்க்கரை கல்கண்டு கலந்து சாப்பிடவும். சொன்ன வியாதி தீரும்.

தாளக சுத்தி செய்து ஒரு விராகனெடை சேர்த்துக் கொள்ளவும். பத்தியம் – வலுவறிந்து செய்யவும். சூலை மேலிடத் தீரும்.

219. தீராத வெள்ளைக்கு மருந்து

நந்தியாவட்டம் பூ, எலுமிச்சங்காயளவு அரைத்துக் கடுக்காய் கொட்டை பருப்பு 1 பலம் சேர்த்து அரைத்து பாதியளவு பசும்பாலில் கலக்கி 3 நாட்கள் கொடுக்கவும். அதில் நீங்கா விட்டால் மறுபடியும் கொடுக்கவும். இப்படி மூன்று முறை கொடுக்கத் தீரும். தீராத 10 – க்கும் பத்திய வெள்ளையும் தீரும்.

பத்தியம் – ஒன்றும் தப்பாமல் சேர்க்கவும்.

220. குன்மம் 8 – க்கும் காடிக்கார சுன்னம்

வெள்ளிக் காடிக்காரம் 1 விராகன், ஐந்தாம காய்ச்சி வெடியுப்பு 1 விராகன், சின்னக்கலயத்தில் கோவையிலை திமிறத் திணித்து அதற்கு மேல் காடிகாரத்தை வைத்து அதன் மேல் அரைப்படியுப்பைக் கொட்டி அதன் மேல் பச்சிலையைத் திணித்து மேல் வாய்க்குச் சில்லுமூடி, சீலைமண் 5 செய்து 15 எருவில் புடம் போடவும். ஆற விட்டெடுக்கக் கடுங்காரச் சுன்னமாகும்.

அந்தச் சுன்னத்தை கால் விராகனெடை மஞ்சளை உறைத்து அதில் துடப்பக் குச்சியால் தொட்டு வைத்து வலுத்த வியாதிக்கு 3 நாளைக்குக் கொடுக்கவும். சன்னி 13 – க்கும் கொடுக்கவும். சகலவாய்வுக்கும் கொடுக்கவும்.

பத்தியம் – வலுவறிந்து செய்யவும். காலரைக் கால் வீதம் ஒரிடை வைத்த போதிலும் அஞ்சாங்காச்சி வெடியுப்பு 1 பலம் தான் வைக்கவேண்டும்.

221. வீர செந்தூரம்

வீரம் 1 வராகன் வாங்கி, பிற்றாகக் காய்ச்சிப் பால் சுருக்குக் கொடுத்து மேற்படி பால்விட்டு அரைத்து பில்லைச் செய்து காயவைத்து சில்லுமூடி சீலைமண் மூணு செய்து 2 விரளியில் புடம் போட செந்தூரமாகும். அந்த செந்தூரத்தில் $^1/_2$ அரிசியிடை தேன் சேர்த்து நெய்யில் கொடுக்கவும். சகல வாய்வு சகல சன்னி தோசமெல்லாம் தீரும்.

பத்தியம் – வலுவறிந்து செய்யவும்.

222. வீர செந்தூரம் (வேறு)

வீரம் 1 வராகன் வாங்கி, கற்பூர சிலாத்து வாங்கிக் கையார்க்குடைஞ்சு அதில் மனோசிலை தூள் செய்து அதில் பாதி போட்டு வீரத்தை வைத்து மேலே மூடி செய்யவும்.

223. தாம்பிர சுன்னம்

நாகராசல்லி 4 வாங்கி மாம்பட்டைச் சாற்றில் மூன்று நாட்களுக்கு ஊற வைத்து எடுத்து உருக்கி தகடு தட்டி சுண்ணாம்பு வெந்தக்கல் 4 பலம், பனிநீர் 1 படி விட்டு தெளிவாக இறுத்துக் கொண்டு மேற்படி விராலியிலை பெரிய படியால் ஒரு படி தழையில் கல்லுரலில் போட்டு தெளிந்த தண்ணீர் விட்டு இடித்துச் சாறுப்பிழிந்து மேற்படி பேரண்டம் 2 விராகன் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துத் தகடு தாம்பூரத்துக்குக் கவுசம் செய்து நன்றாக காய வைத்து மேற்படி வன்னிப்பட்டை 2 பலம், வெடியுப்பு 2 விராகனெடை, சீனாக்காரம் 2 விராகனெடை இவை மூன்றையும் முன் தெளிவு விட்டு அரைத்து முன் கவசத்தின் மேல் கவசம் செய்து நன்றாக காயவைக்கவும்.

பின் பொறித்த கோழிமுட்டை வெள்ளைக் கருவை விட்டு அரைத்து முன் கவசத்தின் மேல் கவசம் செய்து நன்றாக காய்ந்த பின்பு விலாரி காய்ந்தப்பட்டை 2 பலம், தூள் செய்து ஒட்டில் ஒரு பலம் தூள் பரப்பி அதன் மேல் கவசம் செய்த மருந்தை வைத்து அதன் மேல் பட்டையால் மூடி மேலோடு விறட்டியில் மூடி முன்

வடிகட்டிய சுண்ணாம்பை நன்றாக அரைத்துத் துணியில் தடவி ஏழு சீலைமண் செய்து 100 விறளியில் கெசபுடம் போடவும். ஆறவிட்டெடுத்துப் பார்க்க சுன்னமாகும்.

மேல் கவசம் செய்த சுன்னத்தை எரித்து விடாமல் வேறாக எடுத்து வைத்துக் கொண்டு தாம்பூர சுன்னத்தையும் வேறாக வைத்துக் கொண்டு மேற்படி மேல் கவசம் செய்து சுன்னத்தினிடைக்கு சுத்தமான பூ நீறு கொண்டு வந்து ஒன்றாக கலந்து ஒரு பீங்கானில் பரப்பி, பனியில் வைக்கச் செயநீராகும். அதை இறுத்து சீசாவில் வைத்துக் கொள்ளவும். மேற்படி தாம்பிர சுன்னம் 2 விராகன், சுத்தமான பூ நீறு 2 விராகன், இரசம் 2 விராகன் இம்மூன்றையும் செயநீறு விட்டரைத்து உருண்டை செய்து எருக்கன் பெரிய பழுப்பு ஒன்று உருண்டையின் பேரில் கவசம் செய்து மெல்லிய துணியில் முன் செயநீரில் தோய்த்து ஒரு கவசம் செய்து சற்றே காயவைத்து மேலோடு மூடி சீலைமண் செய்து காடைப்புடம் போட செந்தூரமாகும்.

அந்த செந்தூரத்தை எடுத்து பத்திரமாக வைத்துக் கொண்டு 10 விராகனெடை மீன் துத்து ஒரு குண்டுமணியிடை செந்தூரம் கொடுத்து உருக்க வயசி பத்தாகும். மேற்படி நெல்லிக்காய், கெந்தகம் $^1/_2$ படி, குகையிலிட்டு கரித்தணலின் மேல் வைத்து ஊதவும். சூடேறிய உடனே செயநீரில் சுருக்குக் கொடுக்கவும். கெந்தக செம்பு எருக்கன் பழுப்பு போலிருக்கும். அந்த செம்பை வெள்ளையின் பேரில் பத்துக்கு ஒன்று கொடுத்து உருக்க வயசி எட்டரையாகும்.

இந்த செந்தூரத்தை உள்ளுக்குச் சாப்பிட காயகல்பமாகும். நரை திரை மாறும். கடுகு பிறமாணம் சாப்பிடவும்.

224. பாவாஜி கெந்தகசெய்முறை பாகம்

நெல்லிக்காய் கெந்தகச் சுன்னம்

கெந்தகம் ஈயக்கரண்டியில் உருக்கி மணத்தக்காளிச் சாற்றில் ஏழு முறை உருக்கிக் காய்ச்சவும். அதையெடுத்துக் கொடிவேலி வேரும், இலையும், விளாங்காய் மொத்தம் அரைத்து

கெந்தகத்துக்குக் கவசம் செய்து அதன்மேல் மேனியிலை அரைத்து விரல் கணம் கவசம் செய்து சீலைமண் இரண்டு செய்து 10 விரட்டியில் புடம் போடவும். ஆறவிட்டு எடுக்க சுன்னமாகும். அந்த சுன்னத்தை எடுத்து அரிசியிடை நெய்யில் கொடுக்க மேகம் 21, குஷ்டம் 18 – ம் தீரும்.

பத்தியம் – இச்சாபத்தியம்.

225. மேகம் – 21, குஷ்டம் – 18 – க்கும் தீர எண்ணெய்

விலாரிவேர்ப்பட்டை 6	ஆவாரம் வேர்ப்பட்டை 2
சிவனார் வேம்பு சமூலம் 2	கையாந்தகரை 1

இவையெல்லாம் கலந்து தோண்டியில் போட்டு சில்லுமூடி சீலைமண் செய்து குளித்தயிலம் செய்து இறக்கவும். தையலத்தை சீசாவில் வைத்துக் கொண்டு வேளைக்கு 1 – க்கு 1 /8 விராகனெடை கேவுருகழியில் வைத்துக் கொடுக்கவும். இந்தப்படி இரண்டு வேளையும் 3 – 5 – 6 நாளைக்கு உட்கொள்ளவும்.

பத்தியம் – பாசிப்பயறு, கத்திரிப்பிஞ்சு, அவரைக்காய், வெண்டைக்காய், வெள்ளாட்டு வத்தல் சேர்க்கவும். இந்தப்படி இரண்டு வேளையும் 3, 5, 6 நாட்கள் கொடுக்கவும். மற்ற பதார்த்தங்களைத் தவிர்க்கவும். அதன்பின்பு 7 அல்லது 9 – ஆம் நாள் சர்வாங்கமும், தயிலமும் துவாலையிட்டு மறுநாள் காலையில் இலுப்பைக் கட்டிச் சுட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து தேய்த்துக் கொண்டு அதன்மேல் எருமைச்சாணியும் தேய்த்துப் பச்சைத் தண்ணீரில் குளிக்கச் சொல்லவும். இப்படி மூன்று முழுக்கு முழுகினால் சுத்தமாகும். பின்பு முத்தெண்ணெய் தேய்த்து சீய்க்காய் தேய்த்து வெந்நீரில் குளிக்கவும். இந்த தயிலம் வைக்கும்போது கலயத்தின் கீழே 4 துட்டு வைத்து தோண்டிக் கழுத்தில் மஞ்சள் கங்கணம் கட்டி தாம்பூலம் தட்சிணை வைத்து தேங்காயுடைத்து தீபதூபங் கொடுத்து தணல் போடவும்.

ஆறவிட்டுத் தயிலத்தை எடுத்துக் கொண்டு கலயத்தின் கீழே வைத்த பைசாவையும் நான்குப் பிச்சைக்காரருக்குக் கொடுத்து மூன்று ஆண்டிக்கு அன்னம் கொடுக்கவும்.

மூலிகைக்கு சித்தர் பெயர் சிவனார்வேம்பு, ஆவாரைக்கும் அகத்தியர் கையாந்தகரைக்குக் கயிலாசபதி விலாரிக்கு வீரமாமுனிவர் இவர்களைக் குறித்து தியானம் வைத்துத் தயிலம் வைக்கவும்.

பத்தியம் – இச்சாபத்தியம்.

226. முகசன்னி, பக்கவாதம், பாரிசவாய்வு, சூலைக்கு எண்ணெய்

எருக்கு சமூலமும் இடித்து சாறுப்பிழிந்துக் கொண்டு மயிலெறகு உருக்கி எண்ணெய் விட்டு மனோசீலையைப் பொடித்துப் போட்டு மேற்படி சாறுவிட்டு எரித்து மெழுகு பதத்தில் வடித்து கரண்டி வீதம் உள்ளுக்குக் கொடுத்து மேலுக்குத் துவளையிடவும் தீரும்.

பத்தியம் – கடிசி, லேசி

227. தேங்காய் நெய் பேதி

தேங்காய் எண்ணெய் ஒரு பலம், வாளம் ஒரு பலம், இந்துப்பு 5 விராகன், சவுக்காரம் 5 பலம், பெருங்காயம் 5 பலம், பூண்டு 5 பலம், சிற்றாமணக்கு ஒரு பலம் இவையெல்லாம் அரைத்து மெழுகுப் பதத்தில் இறக்கி காசிடை சாப்பிடவும். பேதி அதிகமானால் மோரும், சாதமும் சாப்பிடவும்.

228. குஷ்டம் – 18 க்கு பாசாணமெழுகு, வெடிசூலை, வெடிமேகம், சிட்டை ஊறல், உடம்பு ஆதியந்தமும் குத்தல், குடச்சலுக்கும், கை கால் முடக்குச் சூலைக்கும், கணுச்சூலைக்கும், சூலை – 18 க்கும்

பரங்கிப்பட்டை 5 விராகன் சன்னலவங்கப்பட்டை $2^1/_2$ விராகன்
கருஞ்சீரகம் 2 $^1/_2$ விராகன் கார்போக அரிசி 2 $^1/_2$ விராகன்
வேப்பயிலைஅரிசி $2^1/_2$விராகன் வெள்ளைப்பாசாணம் 1 விராகன்
கெந்தகம் 1 விராகன்

இவற்றையெல்லாம் கலுவத்திலிட்டு வெண்நொச்சிச் சாறுவிட்டு நல்லாமை போலரைத்து வழித்து வைத்துக் கொண்டு

7 நாட்கள் காலைமாலை இரண்டு வேளையும் சும்மா போட்டு முழுங்க வேண்டும்.

பத்தியம் – சுக்கு, வெள்ளவெங்காயம், பெருங்காயம், செம்பிலிக்கரி, நல்லெண்ணெய், அகத்திக்கீரை, பாகற்காய், கோழிக்கறி இவற்றை நாற்பது நாட்கள் தள்ளுபடி செய்யவும்.

சேர்க்கும் வகை – உப்பு, புளி, வெள்ளாட்டுக்கறி, கத்திரிப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, பசுவின் நெய் இவையெல்லாம் சாப்பிடவும். இச்சாபத்தியம்.

தலைக்குத் தண்ணீர் போடும் விபரம் – முத்தெண்ணெய் முத்தினது ஒன்று விட்டு ஒருநாள் தேய்த்து முழுகவும். சாப்பாடு பழையது சேர்த்து மோர், தயிர் சேர்த்துக் கொள்ளவும். மருந்து பிரமாணம் தேத்தங்கொட்டை அளவு கொடுக்கவும். அரப்பு, சீய்க்காய் தேய்த்துக் கொள்ளவும். வென்னீர் குளியல் செய்யவும்.

229. நீரடப்புக்கு மருந்து

வெடியுப்பு 4 விராகன், சீனாக்காரம் 4 விராகன் இவை இரண்டையும் நுணுங்கப்பொடி செய்து இளநீரில் $^1/_4$ விராகன் போட்டுக் கலக்கிக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் இருநேரமும் கொடுத்து இளநீர் சாப்பிடச் சொல்லவும்.

பத்தியம் – புளி, புகைத் தள்ளி இச்சாபத்தியம் இருக்கவும்.

230. ரேவல் சீனிச் சூரணம்

ரேவல் சீனி $^1/_2$ பலம்	சூரத்தாவரை 1 பலம்,
ஏலம் $^1/_4$ பலம்	வெடியுப்பு $^1/_4$ பலம்,
வெள்ளரி விதை $^1/_4$ பலம்	சீரகம் $^1/_4$ பலம்

எல்லாம் சூரணம் செய்து வஸ்திரகாயம் செய்து வேளை ஒன்றுக்கு 2 விராகன் கொடுக்கவும். பின்பு இளநீர் தண்ணீர் சாப்பிடச் சொல்லவும்.

இதற்குத் தீரும் நோய் – ரோகம், நீரடப்பு, கல்லடப்பு, சீமேகம், சவுலடப்பு, மாங்கிச அடப்பு தீரும்.

பத்தியம் – புளி, புகைத் தள்ளவும். ஏழு நாட்கள் கொடுக்கவும். ஏழாம் நாள் நல்லெண்ணெய் தேய்த்து குளிக்க சொல்லவும். கை கண்டது.

231. முப்பூ முடிக்கும் வகை

10 வயசி பிண்டக்கல்லு ஒரு படி கொண்டு வந்து சிறுநீர் வேண்டிய மட்டும் வாங்கிக் கல்லு மிதக்கவூத்தி கல்லுக்கு மேல் 4 விரற்கடை நீர் நிக்க ஊறவைத்து மூன்றாம் நாள் சுத்தமாக கழுவி ஊத்தி விட்டுக் காயவைத்து எடுத்துக் கொடி கள்ளியின் பாலில் 7 தடவைப் பிசிறிக் காயவைத்து மேற்படி வெள்ளைப் பாலில் ஒரு தடவைப் பிரட்டிக் காயவைத்து எடுத்து மறுபடி திருகு கள்ளிப்பாலில் ஒரு தடவைப் பிரட்டிக் காயவைத்து இரும்பு உரலில் போட்டு கடப்பாரையினாலே நன்றாக மாவாக இடித்துக் கொண்டு மேற்படி மெல்லிய ஓட்டில் கொட்டி பரப்பி மேலோடு மூடி சீலைமண் செய்து கொடியின் விறகு ஒரு பங்கு, வெள்ளை விறகு ஒரு பங்கு, விராட்டி ஒரு பங்கு சேர்த்து கீழே கெஜகுழி வெட்டிக் கீழே பாதி எருக்கொட்டி மேலே பாதி எருக்கொட்டி நடுவில் சில்லு வைத்துத் தீப்போட்டு ஆறவிட்டெடுத்து மேற்படி ஊசி நீர் வேண்டிய அளவு மட்டும் பிடித்துத் தெருவில் மண் 4 படிக்கு எட்டுபடி நீர்விட்டு பானைக்குச் சில்லிட்டு கீழே பானையை வைத்து செயநீராக்கி மேற்படி முன் நீரின் மாவு ஒரு படிக்கு 4 படி செயநீர் விட்டு ஒருநாள் ஊற வைத்துத் தெளிவு இறுத்துப் புட்டியில் பாக்கி செய்து வைத்துக் கொண்டு இரும்பு அண்டாவில் ஊத்தி ஒரு சாதி விறகால் எரித்து பதத்தில் கீழே இறக்கி பழச்சாறும் மோரும் ஊற்றி சூரியஒளியில் வைக்க ஊப்பாகும்.

இதன்படி 10 முறை செய்ய கடுங்காரம் உப்பாகும். அதையெடுத்து வைத்துக் கொண்டு எந்தப் பாதைக்குப் போனாலும் சித்தியாகும்.

மோரென்பது சீனாக்காரம். பழமென்பது சாரம், ஊசியென்பது பள்ளிக் கூடத்துப் பிள்ளைகள் சிறுநீர் என்று அறிந்து கொள்ளவும். முப்பூ முடிந்தது.

232. அய செந்தூரம் – தோவூர் அமீனா அந்தோணி முத்து செயல்முறை

இரும்பு $^1/_2$ பொடி 1 பலம், செகப்பு நாக்குப்பூச்சி 1 பலம் இரண்டையும் நன்றாக ஒரு முறை அரைத்து பில்லைத் தட்டிக் காயவைத்து ஓட்டில் வைத்து ஓடு மூடி சீலைமண் செய்து பத்து எருவில் புடம் போடவும். இதேபோல் 10 முறை புடம் போட்டு எடுக்க திவ்வியமான செந்தூரமாகும்.

அந்த செந்தூரத்தில் ஒரு வெள்ளி 10 எடை கொடுத்து உருக்க வயசி நாலரையாகும். பித்தவெட்டை பாண்டு சோகைக்கு எல்லாம் கொடுக்கலாம். பத்தியம் – லேசி.

233. சூத செந்தூரம்

சூதம் 1 பலம் வாங்கி மத்தங்காப்பில் சாறாகிலும் ஒட்டடைப்பில் சாறாகிலும் வடிடு நன்றாக அரைத்து பனை ஓலையில் பிழிந்து வைத்து நூல் கோண்டு நல்ல சுத்திச் சீலைமண் 3 செய்து, 3 பிராட்டியில் புடம் போட செந்தூரமாகும். வெட்டைப்புண், கிரந்தி கண்ட மாலைக்கு அரிசிடை கொடுக்கவும் தீரும்.

பத்தியம் – வலுவறிந்து செய்யவும்.

234. வங்கவெட்டை

நரிமிரட்டிப் பூண்டு விளாங்காய் மொத்தம் அரைத்து, வங்கத்துக்குக் கவசம் கொடுத்து, கேளபுடம் போட வெட்டையாகும். அப்பால் கெஜகுழி வேட்டி அதில் அம்மன் பத்தினி பழுத்தயிலை பாதி போட்டு அமுக்கி அதின் பேரில் வங்கவெட்டையை வைத்து அதின் பேரில் பழுப்பு இலைக் கொட்டி அமுக்கிப் புடம் போட பசுபமாகும், இந்தப் படிக்கு பத்தில் மேகம் – 21 – க்கும் அரிசிடை நெய்யில் குடுக்கத் தீரும்.

235. அயச் செந்தூரம்

அயம் 1 பலம், நமச்சாரம் $^1/_2$ பலம் இந்த இரண்டு சரக்கையும் நல்லா நேகா அரைத்து, பில்லை தட்டி ஒட்டில் வைத்து

மேலோடு மூடி சீலைமண் செய்து 10 எருவில் புடம் போட செந்தூரமாகும். அந்த செந்தூரத்தில் பணவிடை திரிகடுகு சூரணத்தில் கொடுக்கவும்.

தீரும் நோய்

பித்தவாட்சி, பித்த சூடு, பித்தவேட்டை, சோகை, பாண்டு, சூதகவாய்வு இவையெல்லாம் தீரும்.

236. கபால இடி மண்டை குத்து, ஒரு தலைவலி நோய் – பள்ளி பரதேசி முறை

சங்கங்குப்பிச் சாறு $^1/_4$ படி, நல்லெண்ணெய் $^1/_4$ படி, இஞ்சி $^1/_4$ படி நறுக்கிப் போட்டு எரித்து மெழுகு பதத்தில் வடித்து முழுகவும். நாசியடைப்புக்குக் குத்தவும்.

நல்லெண்ணெய் அரைபடி, ஆதண்டை வேர் கசாயம் அரைபடி விட்டு ரேகித்து கொடுக்கவும்.

வேறு

சுக்கு $^1/_2$ பலம்	பெருங்காயம் $^1/_2$ பலம்
பூண்டு $^1/_2$ பலம்	வாளம் 1 பலம்
திப்பிலி $^1/_2$ பலம்	கடுக்காய் $^1/_2$ பலம்
இந்துப்பு $^1/_2$ பலம்	கருஞ்சீரகம் $^1/_2$ பலம்
திருகுகள்ளிப்பால் $^1/_4$ படி	தேங்காய்ப்பால் $^1/_4$ படி
வேலிப்பருத்திச் சாறு $^1/_2$ படி	விளக்கெண்ணெய் 1 படி
பூநீறு $^1/_2$ பலம்	

இவற்றையெல்லாம் எரித்து மெழுகு பதத்தில் வடித்துக் கரண்டி வீதம் சகலவியாதிக்கும் கொடுக்கவும்.

237. கிரந்திக்கு எண்ணெய்

விளக்கெண்ணெய் 1 படி	வெங்காயச் சாறு 1 படி
கற்பூர வல்லிச்சாறு 1 படி	அரத்தை $^1/_4$ பலம்
இஞ்சி $^1/_2$ பலம்	

இவற்றையெல்லாம் தட்டிப் போட்டு எரித்து மெழுகு பதத்தில் வடித்து வேளைக்கு காலரை படி எண்ணெய் கொடுத்து 7 நாட்கள் கெட்டி பத்தியம் இருக்கவும். பதினைந்தாம் நாள் தலைக்குத் தண்ணீர் விடவும்.

இதுக்கு லேகியம்

பசுவின் நெய் கால்படி, ஓரிலைத் தாமரை இலை ஒரு படி, வில்வ இலை ஒரு படி, நண்டு ஓட்டை இடித்து சட்டியில் பாதி கொட்டி அமுக்கி நமச்சாரம் ஒரு பலம் வைத்து அதன்மேல் பாதி துளைக் கொட்டி அமுக்கி சட்டி மூடி சந்து வாய்க்கு சீலைமண் செய்து, முளைப்புடம் போடச் சுன்னமாகும்.

இந்தச் சுன்னத்தில் பணவிடை நெய் பனை வெல்லத்தில் வைத்துக் கொடுக்க அஷ்டகுன்மமும் தீரும்.

பத்தியம் – வலுவறிந்து செய்யவும்.

238. இரச குளிகை, வெள்ளை மாத்திரை

இரசம் 1 பலம் வாங்கி எருக்கன் பால் விட்டு 2 சாமம் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து கல்லுப்பு ஒரு படி வாங்கி கீழே பாதியுப்பு, சட்டியில் போட்டு அமுக்கி பில்லையை மேலே வைத்து, மேலே கால் படி உப்புக் கொட்டி மூடி அமுக்கி மேல் சட்டி மூடி சீலைமண் செய்து அடுப்பில் ஏற்றவும்.

ஒரு சாதி விறகால் மூன்று சாமம் எரித்து ஆறவிட்டு எடுத்து உப்பை இரண்டாகப் பகுத்து மேற்படி பில்லையையும் இரண்டாகப் பகுத்து ஒரு பாகத்தில் பெண்பிள்ளை சிறுநீர்விட்டு அரைத்துத்தேத்தாங்கொட்டைப் பிரமாணம் உருண்டை செய்து சீசாவில் போட்டு மேல் டாப்பில் எழுதி ஒட்டி மறுபாகம் பேர் பாதியும் ஆண்பிள்ளை சிறுநீர்விட்டரைத்து தேத்தாங்கொட்டைப் பிரமாணம் உருண்டை செய்து வேறொரு சீசாவில் போட்டு டாப்பில் எழுதி ஒட்டவும்.

பின்பு ஆண்பிள்ளைகளுக்கும், பெண்பிள்ளைகளுக்கும் வாத நோய் கண்டால் பெண்பிள்ளைகளுக்கு ஆண்பிள்ளை

நீர்விட்ட மருந்தும், ஆண்பிள்ளைகளுக்குப் பெண்பிள்ளை நீர்விட்ட மருந்தும் பழம் புளியில் வைத்துக் கொடுக்கவும்.

பத்தியம் – பாசிப்பயறு, கத்திரிப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, வெள்ளாட்டு வத்தல் சேர்க்கவும்.

239. நாகபஸ்பம்

செருகனநாகம் ஒரு பலம் வாங்கி ஓட்டை அடுப்பில் வைத்து நாகத்தைப் போட்டு உருகும்போது செப்பு நெருஞ்சில் வேரும் தளையுமாக கத்தையாய் கட்டிக் கொண்டு உருகும் நாகத்தைக் கடைந்தால் பஷ்பமாகும்.

நன்றாக துய்மையாகும் வரையில் கடைந்து இறக்கி ஆறவிட்டு பஸ்பத்தை எடுத்துக் கொண்டு இந்த பஸ்பத்தில் பணவிடை நெய்யில் உட்கொள்ளவும்.

தீரும் நோய்

மூலம், வெள்ளைவெட்டை, மதுமேகம், தந்திமேகம், நீரடைப்பு, நீர்க்கடுப்பு தீரும். பத்தியம் – இச்சாபத்தியம்.

240. அண்டமெழுகு

ஒரு அண்டத்தைப் பொத்து அதுக்குள் இரண்டு காசைப் போட்டு சிறுகீரைச் சாறு மூன்று, நான்கு துளி விட்டு மேலோடு மூடி புடம் போட்டு எடுத்து பின்பு அதன்மேல் பச்செலைக் கவுசம் செய்துப் புடம் போட்டு எடுத்து கலுவத்தில் போட்டு ஒரு விராகனெடை வீரத்தைப் போட்டு அரைத்துக் கடலைப் பிரமாணம் உருண்டை செய்து கொடுத்துப் பின்பு பசும்பால் கொடுக்கவும்.

பூரம், இரசம், கெந்தகம் இவை மூன்றையும் தூள் செய்து வைத்துக் கொண்டு பணவிடை நெய் தேனில் கொடுக்கவும். இச்சாபத்தியம்.

நீர்மேல் நெருப்பை அரைத்துத் தடவயெரிவு கண்டவுடனே கழுவிப் போடவும்.

241. ரச பஸ்பம்

ரசம் வேண்டியளவு வாங்கி கல்வத்தில் விட்டு நன்னாரி இலைச்சாறு விட்டு அரைக்க வெண்ணெயாகும். அந்த வெண்ணெயைத் துணியில் வைத்து பிழிந்து போட்டு மேற்படி பச்சிலையை அரைத்துக் கவுசம் செய்து மூன்று சீலைமண் செய்து ஒரு வரட்டியில் வைக்க சுன்னமாகும்.

அந்த சுன்னத்தில் பணவிடை நெய் தேனில் பனவெல்லத்தில் உட்கொள்ள மேகவெட்டை மேகநிணம் இவையெல்லாம் தீரும். பத்தியம் கடுகி லேகி

242. தேன் வளவி பஸ்பத்துக்கு அனுபானம்

விடத்துவரை வேர் கண்டதுண்டமாய் நறுக்கி, குழித் தயிலம் இறக்கி, அந்த தயிலத்தில் பணவிடை பஸ்பம் வைத்து கொடுக்கவும்.

பத்தியம் கடுகி லேகி

243. பெரும்பாட்டுக்கு மருந்து

நீர்ப்பூலா இலை 25 கொத்து, வரப்பூலா இலை 25 கொத்து இரண்டையும் சேர்த்து ஒன்றாக அரைத்து சாந்து விளாங்காய் மொத்தம் உருட்டி அதில் எருமைத்தயிரை போட்டுப் பிசைந்து சாப்பிடவும். இதன்படி 3 நாள் சாப்பிடவும்.

பத்தியம் – பழையது தள்ளுபடிச் செய்து இச்சா பத்தியமிருக்கவும்.

244. சிட்டை மேகத்துக்கு எண்ணெய்

விளக்கெண்ணெய் ஒரு படி, பரங்கிப்பட்டை 2 பலம், சேங்கொட்டை 50 மூக்குவெட்டி சாணிப்பாலில் சுத்தி செய்து

இரண்டு சரக்கையும் உரலில் போட்டு இடித்து எண்ணெயில் போட்டு எரித்து இறக்கும்போது ஒரு பலம் பூரத்தைத் தூள் செய்து எண்ணெயில் போட்டு எண்ணெயை இறுத்துக் கொண்டு கரண்டி வீதம் 5 நாள் சாப்பிடவும்.

வெட்டை, புண்ணுக்கிரந்தி, கருமேகம், வெண்மேகம், செம்மேகம் தீரும்.

பத்தியம் – புளி தள்ளி உப்பு வறுத்துக் கூட்டவும்.

245. மேகம் – 21, குஷ்டம் – 18 – க்கும் எண்ணெயும், பஸ்பமும்

நல்லெண்ணெய் 1 படி, பசும்பால் 1 படி, சித்திரமூலவேர் 1 பலம், வேரைப் பால்விட்டு நன்றாக அரைத்து எண்ணெயும், பாலையும் ஒன்றாக விட்டு வேரையும் போட்டுக் கலக்கி கடுகு பதத்தில் எண்ணெயை இறுத்துக் கொள்ளவும். பின்பு நெல்லிக்காய் கெந்தகம் ஒரு பலம் வாங்கி பசும்பால் அரைப்படி, பசும்நெய் அரைப்படி இரண்டையும் ஏழு பங்கு செய கெந்தகத்தை உருக்கிச் சாய்த்து எடுத்துக் கொண்டு நெய்விட்டு உருக்கிச் சாய்க்கவும். பின்பு மனத்தக்காளியிலை விளாங்காய் மொத்தம் அரைத்து உருட்டிக் கலைமான் கொம்பு 2 பலத்துக்கு மேற்படி பச்சிலையைக் கவுசமாக உருட்டி சீலைமண் 3 செய்து முப்பது விராட்டியில் புடம் போட்டு எடுத்துக் கொண்டு மணத்தக்காளி சாறுவிட்டு அரைத்து குகையும் சில்லும் அதற்குள் கெந்தகத்தை வைத்து மேற்படி பச்சிலை சாற்றாலே சந்துவாக்கிப் பூசி மொழுகி காயவைத்து அதன்மேல் மேற்படி பச்சிலை அரைத்து விரல் கணம் கவுசம் செய்து சீலைமண் 5 செய்து பத்து விரட்டியில் புடம் போட பஸ்பமாகும்.

அந்த பஸ்பத்தை ஒரு பணவிடை எடுத்து மேற்படி எண்ணெய் விட்டு மத்திச்சு சாப்பிட்டு பின் அரை நாழி கழித்து பொட்டு கரண்டி எண்ணெய் கொடுக்கவும். இதன்படி இரண்டு வேளையும் ஏழுநாள் சாப்பிடவும். ஒன்பதாம் நாள் அந்த எண்ணெயைத் தானே தேய்த்து சீய்க்காய், அரப்பு தேய்த்து முழுகவும்.

தீரும் நோய்

வாய்நாற்றம், வெண்மேகம், மேகசிட்டை, திமிர்மேகம், இரணம், வெடிமேகம் 21 – ம் தீரும்.

பத்தியம் – வாய்வு பதார்த்தம், மீன் கருவாடு தள்ளி மற்றவற்றை சேர்க்கலாம்.

246. சூதக்கட்டு

பச்சத் தண்ணீர் 1 விராகன், எலுமிச்சம் பழச்சாறு 1 விராகன் சூதத்தில் விட்டு அரைத்து அரைப்பில் 5 சாமம், வெய்யில் ஒரு சாமம் வைத்தெடுத்து வழித்து சித்தாமுட்டி இலை அரைத்துக் குகைச் செய்து மேற்படி சரக்கைப் போட்டு பிசைந்து வச்சி 5 சீலைமண் செய்து கோழிப்புடம் போட்டு எடுக்க சூதம் கட்டிப்போகும். கைகண்டது.

247. யீனாதி கர்த்தா பாசஷா சாயபு முறை

உள்மூலம், பவுத்திரம், சீரெத்தம் தீர மருந்து எண்ணெய்

குமட்டிக்காய் சாறு $^1/_2$ படி
பொன்னாங்காணி சாறு $^1/_2$ படி
கையாந்தகரை சாறு $^1/_2$ படி
இஞ்சி சாறு $^1/_2$ படி
வெங்காயச் சாறு $^1/_2$ படி
குமரி சாறு $^1/_2$ படி
சித்தாமணக்கெண்ணெய் 2 சேர்

சீரகம் 1 பலம், வெந்தயம் 1 பலம் இரண்டையும் பொடி செய்து எண்ணெயில் போட்டு முன் சாறு வகை மருந்தெல்லாம் எண்ணெயில் போட்டு எரித்து மிளகு பதத்தில் வடித்துப் போட்டுக் கரண்டி வீதம் இரண்டு வேளையும் 7 நாள் சாப்பிடவும்.

தீரும் நோய்

சூதகமான 2 நாள் கொடுக்கவும்.

பத்தியம் – புளி, புகையிலை தள்ளவும். பாகற்காய், கொள்ளு, இனிப்பு பதார்த்தம் வாய்வு பதார்த்தம் தள்ளவும், மூன்று மாசமாகாது.

248. தாளக சுன்னம் அய செந்தூரம்

தாளகம் சுண்ணாம்பு கல்லினாலே 7 முறை தடவி சுத்தி செய்து வெள்ளருக்கு அரைத்துக் கவுசம் கொடுத்து 5 விராட்டியில் புடம் போட சுன்னமாகும். கை கண்ட முறை.

249. அய செந்தூரம்

அயச் செம்பு அரைப்பொடி 1 பலம், காட்டாமணக்கு கீழண்டே போற வேர் 2 பலம், பஞ்சுப் போல தட்டிப் புது ஓட்டிலே வைத்து அதன்மேலே ஒரு பலம் வெள்ளைப் பாசாணம் வைத்து சித்தாமணக்குப் பாலால் ஒரு சாமம் சுருக்குக் கொடுத்து தீப அக்கினியாகக் கீழ்மேல் பிரட்டி கமலாக்கினியாக இரண்டு சாமம் எரிக்கவும். கைகண்டது.

250. அய பஸ்பம்

அயம் 1 பலம், புளியாரைச் சாற்றில் போட்டு 4 சாமம் இரவில் வைத்தெடுத்துக் குகையில் போட்டு ஊதவும். பழுக்கும் போது மூணத்தொன்னு (மூன்றில் ஒரு பங்கு) கெந்தகம் போட்டு உருக்கிச் சாய்க்கக் கைகண்டது.

251. தாம்பிர பஸ்பம்

கள்ளு ஆறு மாசத்தியக்காடியில் புளியம் இலை ஒரு கொத்து, புது செங்கல் ஒரு கொத்து இரண்டும் காடி விட்டு அரைத்துத் துட்டுக்குக் கவுசம் கட்டி புடத்தில் போடவும். இதன்படி மூன்று புடம் போட்டு எடுத்து நேர்வாளம் 2 பலம் ஒடு நஞ்சி போக்கி அரைத்துத் துட்டுக்குக் கவுசம் கொடுத்து கெஜபுடம் போடவும். பஸ்பமாகும். கை கண்ட பஸ்பம்.

252. தாளகக்கட்டு

தாளகத்துக்குத் தும்பையிலை அரைத்துக் கவுசம் கட்டி ஓட்டை வைத்து வறுத்துக் கொண்டுக் கவுசத்தைத் தள்ளிப் போட்டு தாளகத்தைப் பொடி செய்து சட்டியில் போட்டு மேற்படி

பச்சிலைச் சாறுவிட்டு மேல் சட்டி மூடி சந்து வாய்க்குப் பச்சிலை வைத்து அமுக்கி 4 நாழிகை எரித்து இறக்கி எடுத்துப் பார்க்கக் கருகி நிற்கும். கை கண்டது.

253. அதிகார சூதகக் கழிச்சல்

கஞ்சா 1 பலம், ஓமம் 1 பலம், சுக்கு 1 பலம், கிராம்பு 2 பலம், இவையனைத்தையும் பொன் வறுவலாக வறுத்து நெய் போட்டு அரைத்து சுண்டக்காய் வீதம் இரண்டு வேளையும் சாப்பிடவும்.

பத்தியம் – இச்சாபத்தியம்.

254. குமட்டி மெழுகு

போக்கு அதிகமாகப் போனால் ஆவாரம் பட்டையும், கடுக்காய் பூவும் கசாயமிட்டுக் கொடுக்கப் போக்கு நிற்கும்.

பத்தியம் – இச்சாபத்தியம். பசும்பாலும், எலுமிச்சம் பழமும் கலந்து கொடுக்கவும்.

255. கெந்தக சுன்னம்

கண்ணு பொக்கான் இடித்து புதுச்சட்டியில் கீழப்பாதி வைத்து நடுவில் கெந்தகத்தை வைத்து மேலும் பச்சிலையை வைத்து அமுக்கி ஒரு நாழிகை எரித்து எடுத்துக் கொண்டு மறுபடி சேர்த்துச் சாறெடுத்துக் கீழே நான்கு விரக்கடை வைத்து அதன்மேல் கெந்தகத்தை வைத்து அதன்மேல் சோத்துக்கற்றாழை வைத்து அமுக்கி ஒரு நாழிகை எரித்தெடுத்துக் கொண்டு வேண்டியபோது ஒரு சட்டியெடுத்து மேனியரைத்துக் குகை செய்து மேல் குகை செய்து ஒரு சீலைமண் செய்து 25 விராட்டியில் புடம் போட்டு எடுத்துக் கொண்டு மேகம் 21 – க்கும் நெய்யில் 7 நாட்கள் 9 நாளைக்குக் கொடுக்கவும்.

பத்தியம் – இச்சாபத்தியம். 10 நாட்கள் கழித்து எண்ணெய் தேய்த்து அரப்பிட்டு சீயக்காய்த் தேய்த்து முழுகவும். பழையது தள்ளவும்.

256. சோகை பாண்டுக்கு லேகியம்

சுக்கு	மிளகு	திப்பிலி,
வெந்தயம்	சீரகம்	மாசிக்காய்

மல்லி வகைக்கு 1 பலம்

சூரணித்துக் கொண்டு இளநீர் 3 பொத்து தண்ணீர் இறுத்து சீனி 2 பலத்தைப் போட்டுப் பாகு காய்ச்சி மிளகு பதத்தில் தூளைக் கொட்டி ஊற்றி எலுமிச்சம்பழச்சாறு கால்படி ஒற்றி லேகிய பதமாகும் போது அயம் 4 விராகனிடை எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்றாக அரைத்து கிளரி இறக்கி வேளைக்கு 1 சுண்டக்காய் வீதம் இரண்டு வேளையும் சாப்பிடவும்.

தீரும் நோய்

பித்த வெளுப்பு, சோகை, பாண்டு, கைகால் கண்ணெரிவு, மயக்கம், கிறுகிறுப்பு, அசீரணக்குறைவு, பசிமத்திமம் இவைத்தீரும்.

பத்தியம் – மீன், கருவாடு, வாய்வு பதார்த்தம் தள்ளவும்.

குளியல் – நல்லெண்ணெய் தேய்த்து சீயக்காய் அரப்பிட்டு முழுகவும். அயம் போடாவிட்டால் அயச்செந்தூரம் சேர்த்துக் கொள்ளவும்.

257. வாலைவாய்வுக்கு லேகியம்

கல்நார் 1 பலம் வாங்கி சுண்ணாம்புக் கவசமிட்டு மறுநாள் மேனி அரைத்துக் கவசம் கொடுத்து ஒரு சீலைமண் செய்து 5 வராட்டியில் வைத்து எடுக்கப் பஸ்பமாகும். அதையெடுத்து கொண்டு மேனி வெள்ளவெங்காயம் இவை இரண்டையும் நீர் விட்டு வேகவைத்து இறக்கி மிளகுத்துள் போட்டு கடைந்துக் கொண்டு மேற்படி பஸ்பத்தை ஒரு விராகனெடை போட்டு மத்திச்சு கொடுக்கவும். இதன்படி 8 நாட்களுக்கு 5 வேளை கொடுக்கவும்.

தீரும் நோய்

வாலைவாய்வு, அசீரணவாய்வு, சூதகவாய்வு, உஷ்ண வாய்வு, நெஞ்சு கறிப்பு, வயிறு உப்பிசம், கிறாணி இவைத்தீரும்.

பத்தியம் – இச்சாபத்தியம்.

258. தலையில் வீக்கம், மயக்கத்துக்கு குளியல் எண்ணெய்

முருங்கையிலைச் சாறு 1 படி, மிளகாய் 1, சித்திர மூலவேர் 1, மிளகு 1 பலம், உள்ளி 1 பலம், காயம் 1 பலம், சமுத்திறாப் பழம் 1 பலம், பலகரை 1 பலம் இவையெல்லாம் இடித்து நல்லெண்ணெய் 1 படி போட்டு மெழுகு பதத்தில் வடித்து தேய்த்து சீயக்காய் அரப்பில் தேய்த்து முழுகவும். ஒருநாள் விட்டு ஒருநாள் முழுகத் தீரும்.

அரும்பில் நொச்சிச் சாற்றில் சமுதிறாப்பழத்தை இழைத்து நாசியில் பிழியப் பறந்து போகும்.

வேறு

வெள்ளாட்டு மூத்திரத்தில் இழைத்துக் கண்ணில் போடத் தீரும்.

259. ஒருதலை நோய்க்கு முழுக எண்ணெய்

சாம்பிராணி, சுக்கு, மரமஞ்சள், கருஞ்சீரகம், கடுகு ரோகிணி, திப்பிலி மூலம், கஸ்தூரி மஞ்சள், சவுரிப்பழம், வாய்விளங்கம், ஒமம், மிளகரணை, சடாமாஞ்சில், சந்தனம், அக்கிரகாரம், கோஷ்ட்டம், சந்தனம், காட்டுச்சீரகம், நஞ்சனி, மரிச்சான் இவையெல்லாம் வகைக்கு ஒரு பலம் எடையாக வாங்கி தூள் செய்து நல்லெண்ணெயில் போட்டு எரித்து மெழுகுப் பதத்தில் வடித்து முழுகத் தீரும். இதன்படி மூன்று முறை முழுகவும். தீரும்.

260. மூலசூரணம்

சமுத்திறாப்பழம் அரை சேர், பசும்பால் 1 பாலில் கொட்டையைப் போட்டு சுண்டயெரித்துத் தண்ணீர் விட்டுக் கழுவிக் காய வைத்து இடித்து வடிகட்டிக் கொண்டு அனுபாணம் அப்பைக் கோவைக் கிழங்கு அரை பலம், நாயுருஞ்சி வேர் 2 இவை இரண்டையும் தட்டிப் போட்டுக் கசாயம் வைத்து மேற்படி தூளில் 2 விராகனெடை போட்டுக் கொடுக்கவும். இதன்படி 5 நாட்கள், 7 நாட்கள் இரண்டு வேளையும் கொடுக்கவும். நவமூலம் அத்துப்போகும். இச்சாபத்தியம்.

261. மூல லேகியம்

கறிக்கருணை, வெள்வங்கத்தை ஈசலெறகைப் போல் தட்டிப் பொடிப்பொடியாய் கத்திரித்து வெள்ளைத் துணியில் மிளகாய், மஞ்சள் இரண்டையும் சரிபாகமாகப் பொடி செய்து அப்பி அதன்மேல் தகட்டை வைத்து அதன்மேல் தூள் பரப்பித் திரிதிரிப்பது போல் சுருட்டிக் கட்டித் தீக் கொளுத்திப்போட்டு விடவும். சோளப் பொறிப் போல சுன்னமாயிருக்கும். அதையெடுத்து வெட்டை, வெள்ளை மூலக்கொதிப்பு இவைகளுக்குப் பணவிடை வெண்ணெயில் வைத்துக் கொடுக்கவும்.

பத்தியம் – லேசி

262. வயித்தொழவு இரத்தம் சீழ் வடிதல்

விடத்தொவாரையிலை, எலுமிச்சங்காயளவு எடுத்து அரைத்து நீராகாரத் தண்ணீரில் விளக்கெண்ணெய் அரைப்பலம் விட்டு மேற்படிச் சாந்தைப் போட்டு மத்திச்சுச் சாப்பிடச் சொல்லவும். இதன்படி மூன்று, ஐந்து நாட்கள் கொடுக்கவும். பத்தியம் – இச்சாபத்தியம்

263. மூல சுரசம்

அன்னபேதி 1 பலம், சாஷ்த்திரபேதி 1 பலம், வெள்ளைப் பாசாணம் 2 விராகன் மூன்றையும் கல்வத்திலிட்டு வெள்ளைச் சாரணைச் சாறு விட்டு அரைத்து வில்லைத் தட்டிக் காயவைத்து சில்லில் வைத்து சில்லுமூடி சீலைமண் செய்து பத்து எருவில் புடம் போடச் செந்தூரமாகும்.

அந்தச் செந்தூரத்தைக் கொட்டாங்கொச்சியில் போட்டுப் பச்சத் தண்ணீர் விட்டு குழைத்துத் தென்னங் குச்சியால் போடவும். 3, 5 நாட்கள் போடவும். முனை அழுகிக் கசிவுக் கண்டால் தவிர சோறு வைத்துக் கட்டவும். முனை அத்து விழுந்து போகும்.

வலிக்குத்தல் கண்டால் எருமை மாட்டுக் கொம்பு மேலே

இழைத்து 1 பலம் ஆமைவோடு 1 பலம்
கருங்குங்கிலியம் 1 பலம் கருவங்கம் $^1/_2$ பலம்
இரசம் 2 $^1/_2$ பலம், ஓமம் 1 பலம்

வங்கத்தை உருக்கி இரசத்தை ஊட்டி அரைத்துக் கொண்டு சரக்கெல்லாம் தூள் செய்து அனைத்தையும் ஒன்றாகக் கலந்து புளியம் பரணித்தணலில் போட்டுப் புகை காட்ட வலிகுத்தல் மேக ரணம் உடனே நிற்கும். கை பாகம் கண்டது.

264. அஷ்ட்டாங்க சஞ்சீவி சூரணம் நவமூலத்துக்கு

காட்டுக் கருணை $^1/_2$ சேர்
கறிக்கருணை $^1/_2$ சேர்
காறாக் கருணை $^1/_2$ சேர்
புளி நருணை $^1/_2$ சேர்
குளிப்பாக்கி $^1/_2$ சேர்
மொளகருணைவேர்ப்பட்டை $^1/_4$ சேர்
சுக்கு $^1/_8$ சேர்
கொடி வேலி வேர் $^3/_8$ சேர்
பிரண்டைக் கொடி காய்ந்தது $^1/_8$ சேர்

அவை ஒன்பதையும் ஒன்றாகச் சேர்த்து வெள்ளாட்டுப் பால் 2 சேர்த்துக் காய்ச்சி உறைக்குத்தித் தயிரெடுத்து அந்தத் தயிரில் சரக்கெல்லாம் போட்டுப் பிசிறி அடுப்பிலேத்தி சுண்ட எரித்துக் காயவைத்து இடித்து வடிகட்டி சீசாவில் வைத்துக் கொண்டு அனுப்பானம் நெய்யும் தேனும் சரிப்பாகமாக்கி அதில் மூவிரல் கொண்ட சூரணம் போட்டு மத்திச்சுக் கொடுக்கவும். இதன்படி இருவேளையும் 5, 7 நாட்கள் கொடுக்கவும்.

பத்தியம் – இச்சாபத்தியம். செருதாணி, கால், தலை சூப்பு, அத்திக்காய் குழம்பு, வாழைப்பூக் குழம்பு, பிஞ்சு வாழைக்காய் குழம்பு, புளிக்குப் பதிலாக எலுமிச்சப்பழம் சேர்க்கவும். விளக்கெண்ணெய், சீயக்காய் வெந்நீரில் குளிக்கவும்.

265. அயசெம்பு முறை

பூநீரில் பனிநீர் விட்டுக் கலக்கித் தெளிவாக இறுத்துக் கொண்டு வெங்காரம் ஒரு பலம் ஒட்டில் வைத்து சிறு தீயிட்டு மேற்படி நீரால் ஒரு சாமம் சுருக்குக் கொடுக்க வெங்காரம் உருகிக் கட்டும்.

ஒரு பலம் $^1/_2$ பொடிக்கு $^1/_2$ பலம் வெங்காரக் கட்டுப்போட்டுக் கொஞ்சம் ஒரு குண்டு மணியிடைக் குகையில் போட்டால் அயசெம்பாகும்.

266. தேங்காய் எண்ணெய் மேகம் 21

கெந்தகம் 2 விராகன்	மனோசிலை 2 விராகன்
இலிங்கம் 1 விராகன்	பூரம் $^1/_8$ விராகன்
சுத்தி செய்த வாளம் 1 பலம்	புங்கன் பால் 3 படி

மேற்படி சரக்கையெல்லாம் அரைத்து தேங்காய் எட்டு திருகி பால் பிளிந்து மேற்படி சரக்கையெல்லாம் பாலில் கரைத்து அடுப்பிலேத்தி மூன்று கொதிகொதிக்க வைத்து இறக்கி மூடி வைக்கவும். மறுநாள் வைத்து எரித்து இறக்கி ஆறவைத்து மூன்றுநாட்கள் அடுப்பேத்தி எரித்து எண்ணெயிறுத்து வைத்துக் கொண்டு 5, 6, 7 நாட்கள் வரையில் இருநேரமும் வேளை 1 முதல் 11 வேளை சொட்டு சொட்டாக 20 சொட்டுப் போட்டுக் கொடுக்கவும்.

தீரும் நோய்

மலட்டுவலி, கெற்பவாய்வுக்கு உடனே கொடுக்கவும். வீக்கம், சுரம், சூலை, மேகம் எல்லாம் தீரும்.

பத்தியம் – வெள்ளாட்டு வத்தல், கத்திரிப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, பாசிப்பயிறு பருப்பு, தேங்காய் துவையல் சேர்க்கலாம். புளி புகையிலை ஆகாது.

267. இலிங்க செந்தூரம்

இலிங்கத்தை ஈயசட்டியில் போட்டுப் பழச்சாற்றில் நான்கு சாமம் சுருக்குக் கொடுக்க செந்தூரமாகும்.

அந்த செந்தூரத்தை வெள்ளியை உருக்கி பத்தரைக்கு ஒன்று கொடுத்துப் பார்த்துக் கொள்ளவும்.

268. கெந்தக வடகம்

கெந்தகம் 2 பலம்	சம்புவரை	திரிகடுகு
வாய் விளங்கம்	சேங்கொட்டை	
இலவங்கபத்திரி		
சித்திரமூலம் வகைக்கு $^1/_2$ பலம்		பரங்கிப்பட்டை $^1/_2$ பலம்

இவையெல்லாம் இடித்துச் சூரணம் செய்து திரிக்கடிப் பிரமாணம் ரஷ்தாளி வாழைப்பழத்திலாவது, சீனியிலாவது காலரை மண்டலம் சாப்பிடவும்.

தீரும் வியாதி

குஷ்டம், குரை நோய், மேகம் 21, குன்மமும் தீரும்.

பத்தியம் – இச்சாபத்தியம்

269. வங்க சுன்னம்

வங்கம் 1 பலம், சித்தண்ட ஓடு 1 பலம், வங்கத்தை நன்றாக தகடு தட்டி அரைத்துப் பொடியாக்கிக் குகையில் கொட்டி வீரம் 1 விராகன் போட்டு மேல் சில்லுமூடி சீலைமண் 7 செய்து கொல்லன் பட்டறையில் குகை அமுக ஊதியெடுத்து ஆறவைத்துப் பார்க்க வங்கசுன்னமாயிருக்கும். இந்த சுன்னத்தில் பணவிடை நெய் வெண்ணெயில் வைத்துச் சாப்பிட மேகம் 21, வெட்டையும் தீரும்.

பத்தியம் – இச்சாபத்தியம்

270. வங்க பஸ்பம்

வங்கத்தை இலுப்பை நெய்விட்டு உருக்கி சாணிப்பாலில் 7 தடவை சாய்த்து எடுத்துப் புளியன் கட்டை ஒரு முழம் வெட்டி மூன்று குழி உளியாலே குடைந்து அந்த குழியில் பருப்புக் கீரை வேரை அரைத்துக் கீழாநெல்லி வேர் அரைத்து விழுவிய வேர் அரைத்து வைத்துக் கொண்டு கீழாநெல்லியும், பருப்புக்கீரையும் குளியில் தடவி வங்கத்தை மெல்லியதாகத் தட்டி பொடியாகத் திரிச்சி மூன்று குழியிலும் நிறையக் கொட்டி அதன்மேல் வெழுவிச் சாறுத் தடவி வில்லைத்தட்டி மூடி சீலைமண் 5 செய்து 32 விராட்டியில் புடம் போட பஸ்பமாகும்.

அந்தப் பஸ்பத்தில் பணவிடை வெண்ணெய் நெய்யில் வைத்து சாப்பிட மேகம் 21 வெட்டைக் காசம் இவையெல்லாம் தீரும். பத்தியம் – இச்சாபத்தியம். கை கண்டது.

271. மூலத்துக்கு மருந்து

காட்டுக் கருணைக்கிழங்கு ஒரு சேர் கொண்டு வந்து வேகவைத்து உரித்து வைத்துக் கொண்டு, சீரகம், சோம்பு, ஏலரிசி, வால்மிளகு, கசகசா

இந்த ஆறு சரக்கும் சரியிடையாய் வாங்கித் தூள் செய்து வைத்துக் கொண்டு பசுவின் நெய் அரைக்கால் படி சட்டியிலிட்டு எரிக்கக் கொதித்து வரும் போது சரக்குத் தூளைக் கொட்டிக் கிண்டி இறக்கப் பச்சைநிறமாக வரும்.

அப்போது கருணைக்கிழங்கை நன்றாகப் பிசைந்து போட்டு ஆப்பையாலேக் கடைந்து இறக்கி வைத்துக் கொண்டு வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டைப் பாக்களவு இரண்டு நேரமும் சாப்பிட அரை மண்டலத்தில் எல்லாம் தீரும்.

272. கருவங்கவெட்டை

வெள்ளைக் குண்டு மணியிலையும், முள்ளுக்கீரை இலையும் சமமாக சாறெடுத்து வைத்துக் கொண்டு வங்கத்தைப் பதினொரு தடவை மேற்படி சாற்றில் உருக்கிச் சாய்த்தெடுத்து மேற்படி பச்செலையை அரைத்துக் கவுசம் கொடுத்து கோளிப் புடம் போட்டு எடுக்கவும். இப்படி வெட்டைக் கணக்கு செய்து 9 முறை பார்த்துக் கொள்ளவும்.

273. முள்ளி செகப்பனால் மிகுந்தலை மாமனுக்கும் மஞ்சளுக்கு நாகவெட்டை

பெருங்கண் நாகம் ஒரு பலம் வாங்கி சாதாரண புளி உப்பு இவையரைத்து சிறு தேங்காய்ப் பிரமாணம் நாகத்துக்குக் கவுசம் செய்து முலப்புடம் போட்டெடுத்துக் கொண்டு பொன்னூமத்தன் இலையரைத்து முன் பிரமாணம் கவசம் செய்து 2 சீலைமண் செய்து முழப்புடம் போட்டு எடுக்க இரசித கம்பி போலிருக்கும். இதை வெள்ளியில் பத்துக்கு ஒன்று கொடுத்து உருக்க எட்டு காணும்.

274. லிங்கம்

லிங்கத்துக்குக் காட்டாமணக்குப் பாலால் 4 சாமம் சுருக்குக் கொடுத்து எடுத்துக் கொண்டு மூலிகையிலான கருவங்கம் வெட்டையும் இந்த லிங்கத்தையும் சமமாக சேர்த்து உருக்கி வைத்துக் கொண்டு இரசிதத்தில் பத்துக்கு ஒன்று கொடுத்து உருக்க 5 பார்த்துக் கொள்ளவும். புடத்துத் தங்கம் இறங்கும்.

275. வெள்வங்க நீர் வாங்க

வெள்ளை உகாயிலையை அரைத்து வெள்வங்கத்துக்கு கதிக்கக் கவுசமிட்டு சீலைமண் ஒன்று செய்து 40 விராட்டியில் புடமிட நீர் வாங்கி வெட்டையாகும்.

வங்கத்தை உருக்கிக் கொண்டு இந்த வெட்டையைக் கொடுத்து உருக்க வங்கநீர் வாங்கும். பார்த்துக் கொள்ளவும்.

276. துருசி பஸ்பம்

ஒரு பலம் துருசிக்கு விளாங்காய் மொத்தம் கவுதும்பை அரைத்துக் கவுசம் கொடுத்து சீலைமண் செய்து புடம் கெஜம் போடவும்.

277. வெள்வங்க நீர் வாங்க

வெள்ளைப்பூ ஓணாங்கொடி இலையரைத்துச் சட்டியில் வெள்வங்கத்தைப் போட்டுப் பச்சிலை சாந்து போட்டு கடைய வேண்டும். இப்படி 7 முறை வறுத்துக் கொட்ட வங்க நீர் வாங்கும்.

பின்பு பிறாய்ப்பழம் சாற்றை ஊற்றி உருக உருகி நிற்கும்.

278. தாளக பஸ்பம்

தாளகத்தை வாங்கி செப்பு நெருஞ்சில் அரைத்து கவசம் கொடுத்து மேற்படி மூன்று விராட்டியில் புடம் போட்டு எடுத்துப் புரசம்பட்டைச் சாம்பல் 1 படி, அதற்குள் தாளகத்தை வைத்து சிறு

கலசத்துக்குள் வைத்து சில்லு மூடி சீலைமண் செய்து புடம் போட பஸ்பமாயிருக்கும்.

அரக்கநிடத்தில் அனேக மாயம் பூண்ட
கொக்கோரடைந்த கோலவனாதி
ஓம் ராம் ரீம் க்ரும் கம் சம் படு சுவா நந்தி

279. தாளக சுன்னம்

தூள்போட்டு வாங்கி சலாசத்து கால்மூடி சீலைமண் செய்து மூன்று விராட்டியில் புடம் போட செந்தூரமாகும். அதில் அரிசியிடை கொடுக்க சகல ரோகமும் தீரும்.

தாளகம் 1 பலம், சுண்ணாம்புக் கல்லில் ஏழு முறை சுத்தி செய்து திருகக் கள்ளிப் பாலில் ஒருநாள் முழுவதும் ஊறவைத்து மறுநாள் பாலோடு சுரண்டி எடுத்து அதன் மேல் நாக்குப்பூச்சி எலுமிச்சங் காயளவு அரைத்துக் கவுசம் கொடுத்து நன்றாக காயவைத்து அதன் மேல் வன்னிவேர்ப்பட்டையும் அரைத்து முன் கவுசத்தின் மேல் கவுசம் செய்து நன்றாகக் காயவைத்து அதன் பின் விறாலியிலையும், வெடியுப்பும் 1 விராகனெடை வைத்து நறுக்கிப் பிழிந்துக் கவுசத்தின் மேல் தெளித்து இதன்படி மூன்று நாளைக்கு தெளித்து நன்றாக காயவைத்து 4 நாட்கள் சீலைமண் ஒன்று செய்து 10 விரளியில் புடம் போட்டெடுக்கக் கடுங்காறச் சுன்னமாகும்.

அந்தச் சுன்னத்தில் அரிசியிடை நெய்யில் கொள்ள காசம் 8 தீர்ந்துப் போகும். தீபதூபம் பூசை செய்து வைக்கவும்.

280. கறியுப்பு செந்தூரம்

கறியுப்பு வெண்மையாய் வேண்டுமளவு எடுத்து சட்டியிலே போட்டு ஆடு தீண்டா மூலிச் சாறு விட்டு ஒரு சாமம் சுருக்குக் கொடுத்து எடுத்துக் கொண்டு கல்வத்தில் போட்டு மேற்படி மூலிச்சாறு விட்டு அரைத்து மூன்று துக்காணி துட்டு உடலம் பில்லை செய்து காயவைத்து ஒட்டில் வைத்து ஓடு மூடி சீலைமண் செய்து 10 எருவில் புடம் வைத்தெடுத்து 1 விராகனெடை வியாதியறிந்து கொடுக்க சகலவியாதியும் தீரும்.

281. நீரடப்பு வலம் அடப்புக்கு லேகியம்

சீரகம், மிளகு, ஈரவெங்காயம், கற்றாழைச்சாறு, பனங்கருப்பட்டி இவையெல்லாம் லேகியம் செய்து கனியளவு இருவேளையும் சாப்பிடத் தீரும். நீர்க்கட்டு உடையும். கை கண்டது.

நல்லெண்ணெய் கால் படி, வெள்ளைக் குண்டுமணியிலை, துத்தியிலை வகைக்கு ஒரு கொத்து, ஒரு தலைப் பூண்டு காலரைக்கால், மிளகு காலரைக்கால் இவையெல்லாம் எண்ணெய் எரித்து மூன்று நாட்கள் கொடுத்து ஆறு நாள் கெட்டி பத்தியம் – கடிசி. வெந்நீரும் சோறும் கொடுக்கத் தீரும்.

282. சிவனார் இரசாயணம்

இரசம் 1 விராகன்	கெந்தகம் 1 விராகன்
கருனாவி 1 விராகன்	வெங்காரம் 1 விராகன்
சுக்கு 1 விராகன்	அரிசி திப்பிலி 1 விராகன்
மனோசிலை 1 விராகன்	அக்கராகாரம் 1 விராகன்
மிளகு 1 பலம்	

மிளகுத் தள்ளி மற்ற சரக்கையெல்லாம் இளவறுப்பாக வறுத்து சூரணித்துக் கொண்டு மிளகும் சூரணித்துக் கொண்டு தேனில் 1 விராகன் மத்திச்சுக் கொடுக்கவும்.

ஓம் நமோ பகவதே
ஓம் கிறாங் கிறிங் குறுங்
ஓம் சரவண பவ
சர்வ இந்திராணியும் மாறாய் மாறாய் சுவாகா
இதுக்கு எந்திரம்

கறுமானம் மண்டை ஓடு எடுத்து வந்துக் குளித்தயிலம் வாங்கி நாயுருஞ்சி வேருக்குக் காப்பு கட்டி நசிநசி என்று 108 உருச் சேவித்துப் பிடுங்கி முன் தயிலத்தில் சேர்த்து மாட்டுக் கொம்பு சிமிளில் வைத்துக் கொள்ளவும்.

283. மாரணம்

அத்திப்பலகையில் உடல் சக்கரம் 25, அரைச்சக்கரம் எழுதி மாரணத்தை உள்ளே எழுதி சவ்வும் கிலியும் ஜவ்வும் உள்ளே எழுதி சாத்தியன் பேரை தலைகீழே போட்டு

ஜங்காயம்	வசம்பு	காயம்
பூண்டு	கடுகு, வெந்தயம்	கருவுந்தி
மாங்கிசம்	அரவு நஞ்சு வகைக்கு 1 விராகன்	

வெள்ளறுகு வேர்ப்பட்டை 1 பலம்

மேற்படி செருநீர் கழுதை இரத்தம் விட்டரைத்து, உருவில் உச்சி கண்டம், மார்பு, தொப்புள் பொத்தி தாலிட்டு தலை வரைக்கும் பூசி மதுக்காரை முள்ளு கருவூன்ன விடமெல்லாம் குத்தி எருக்கம் பூமாலை சாத்தி கும்பகுடம் வச்சி சனிக்கிழமை தீ மூலை நோக்கி சிபம் லெக்ஷமுரு வேத்தி முப்பெலியும் கொடுத்து 45 முறை சேவிக்கவும்.

ஓமத்துக்கு திருகு கள்ளி சுரத்தை குச்சியால் கழுதை நெய்யில் கருங்காலி வன்னி முள்காய் காட்டாமணக்கு ஓமம் செய்துக் கணம் பண்ணவும். சாவான். சவ்வுங்கிலியும் ஐயும் என்று செபிக்கவும். 25 க்கு 10 அந்தமாறல் 25 க்கு 100 செபிக்கவும்.

284. நாலாம் பொறைக் காய்ச்சலுக்கு மருந்து

மிளகு 5 பலம், வெள்ளுள்ளி 5 பலம், நண்டு 1, மேல் தோல் போக்கி உத்தாமணியிலை 7 இதையெல்லாம் நேகாக அரைத்து உருட்டி குடுக்கவும். இதன்படி 5 நாள் இரண்டு வேளைக் கொடுக்கவும்.

பத்தியம் – குடித்த ஏழாம் நாள் தலைக்குத் தண்ணீர் விடவும்.

285. சயித்திய சன்னி தேமலுக்கு மருந்து

வெள்ளிண்டு, மாவலிங்கப்பட்டை, சங்கம் வேர்ப் பட்டை, குட்டி விளாயிலை சற்று வாட்டிக் கொண்டெல்லாம்

சரியெடையாய் எடுத்துக் கொண்டு சுக்கு சித்திரத்தை ஒவ்வொரு தூள் எடுத்து, பஞ்சு போலத் தட்டி எல்லாம் ஒன்றாகப் போட்டு இடித்து வெந்நீர் வைத்து கால்படி வெந்நீரில் போட்டு சிறிது நேரம் கொதித்த பிறகு துணி போட்டு வடிக்கட்டிக் கொண்டு வீரம் பூரம், இலிங்கம், இரச செந்தூரம் இழைத்து உள்ளுக்குக் கொடுத்து விடவும். மேலுக்குத் துவளை முருங்கப்பட்டை, பெருங்காயம் இவற்றை வாங்கி ஒன்றாக வெந்நீர் விட்டு சந்தணம் போல் அரைத்து உச்சியிலிருந்து உள்ளங்கால் பரியந்தம் துவளையிடத் தீரும். இப்படி மூன்று நாட்கள் ஆறு வேளைக் கொடுக்கவும்.

286. கெந்தக நெய்

கெந்தகம் 2 விராகன்	இரசம் 2 விராகன்
மனோசிலை 2 விராகன்	துத்தம் 1 விராகன்
துரிசி 1 விராகன்	வெங்காரம் 1 விராகன்
இலிங்கம் 1 விராகன்	

இவற்றையெல்லாம் வெற்றிலைச் சாறு விட்டரைத்துக் கொண்டு அப்பால் கோழி முட்டை 2, வெள்ளைக்கரு விட்டரைத்து மெல்லிய வெள்ளைத் துணியில் தடவிக் காயவிட்டு திரியாகத் திரித்துக் கருதில் கோர்த்து 2 சேர்த்து வேப்பெண்ணெய் விட்டு சுட்டெரித்து இறக்கி உள்ளுக்கு ஒரு பைசாயிடை போட்டு மேலுக்கும் துவளையிடவும்.

பத்தியம் – புளி, புகை தள்ளவும். பத்தியம் முறிந்து 11 – ஆம் நாள் தலைக்குத் தண்ணீர் விடவும். சாமை அரிசி புனல் பாகமாக கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும். கெந்தக நெய் பத்தியமாகும்.

தீரும் நோய்

மேகம் 21, சூலை 18 தீரும். கை கால் மொடக்கும் தீரும். 5, 7 நாட்கள் கொடுக்கவும்.

287. மேகம் வெட்டை நீரழிவு

நாகம்1 பலம் வாங்கி இலுப்பைப்பட்டைச் சாற்றில் மூன்று முறை உருக்கிச் சாய்த்து எடுத்துக் கொண்டு ஓட்டை அடுப்பில்

வைத்துக் காய்ந்த பின் நாகத்தைப் போட்டு செப்பு நெருஞ்சில் வேர் கத்தையாகக் கட்டி மேற்படி நாகத்தை வறுக்க பஸ்பமாகும். அந்த பஸ்பத்தைப் பணவிடை நெய் வெல்லத்தில் வைத்துச் சாப்பிட மேகம் 21ம், வெட்டை வெள்ளை நீரழிவு எல்லாம் தீரும்.

288. மீராத வித்த சீரழிவுக்கு லேகியம்

கண்டங்கத்திரி வேர் 10 பலம், சுக்கு, மிளகு, பூண்டு, ஓமம், சதகுப்பை, கொத்தமல்லி, வெந்தயம் வகைக்கு 1 பலம் வாங்கி எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து மை போல அரைத்து சறா சங்காயம் திருக்கை சங்காயம் வகை ஒன்றுக்கு 2 பலம் வாங்கி நன்றாக அரைத்து மரக்கால்தண்ணீரில் எல்லாவற்றையும் கலக்கி அடுப்பிலேத்தி எரித்து லேகிய பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு கொட்டைப் பாக்களவு இரண்டு வேளையும் சாப்பிடவும்.

தீரும் வியாதி

வயிற்றெரிச்சல், பேதி, அசீரணம் அவைகள் தீரும்.

பத்தியம் – சுறா சங்காயம் இரசம் வைத்துக் கொடுக்கவும்.

289. மூன்றாம் முறை நேர் சுரத்துக்கு

வெண்நொச்சிக் கொளுந்து ஒரு பிடி மிளகு வெள்ளுள்ளி சேர்த்து சந்தனம் போல் அரைத்து உருட்டிக் கொடுத்து விடவும். இந்தப்படி 5 வேளை ஆறு வேளை கொடுத்து விடவும்.

பத்தியம் – புளியில்லாத இரசம் சாப்பிடவும்.

290. இலிங்கக்கட்டு

இலிங்கம் 1 பலம் கட்டியாக வாங்கி ஆழக்கரண்டியில் போட்டு உத்தாமணிச் சாறும் விளக்கெண்ணெயும் விட்டு சரி பாகமாகக் கலந்து ஒரு சாமம் சுருக்குக் கொடுத்து எடுத்து வைத்துக் கொண்டு சன்னி சுரங்களுக்கு இளைக்கவும்.

291. கபவாத சுரத்துக்கு சுரசம்

சுக்கு	சித்தரத்தை	கண்டு திப்பிலி
இஞ்சி	பூண்டு	இவை வகைக்கு ஒன்றும்,
கோஷ்ட்டம் 3	அக்கிராகாரம்	அதிமதுரம்
மயிலிறகு	தேன்	

வகைக்கு ஒன்றாக எடுத்து பொன் வறுப்பாக வறுத்து புதுப்பூண்டு, நெல்பொறி, பூனாகம், சித்திரத்தை இவையெல்லாம் சேர்த்துக் கசாயம் செய்து கொடுக்கவும்.

292. சயம் மேல் நோய் இடுப்புக்கு தாளக பஸ்பம்

சிறுகட்டுக் கொடிச் சாறு விட்டு தாளகத்தை வேண்டிய மட்டும் எடுத்து அரைத்து சிறு கடுக்காய் வீதம் உருட்டிக் காயவைத்து மேற்படி பச்சிலை அரைத்துக் கவுசம் கொடுத்து ஆறு விராட்டியில் வைத்தெடுக்க பஸ்பமாகும். அந்தப் பஸ்பத்தில் பணவிடை சித்திரத்தைக் கசாயத்தில் போட்டுக் கொடுக்கத் தீரும்.

பத்தியம் – இச்சாபத்தியம்.

மேற்படி தாளகம் வேண்டியளவு வாங்கி நீர் மேல் நெருப்புச் சாறு விட்டு நன்றாக அரைத்து சிறு கடுக்காய் போல உருட்டிக் காயவைத்து பச்சிலை அரைத்துக் கவசம் கொடுத்து பத்து விராட்டியில் புடம் போட பஸ்பமாகும். அந்த பஸ்பத்தில் பணவிடை சிறுகாஞ்சொறி வேர் பசும்பாலில் வேகவைத்துக் கடைந்து வடிகட்டிப் போட்டுக் கொடுக்கவும். தீரும்.

293. வீர செந்தூரம்

இலிங்கம் 1 விராகன், இரச செந்தூரம் 1 விராகன், வீரம் அரை விராகன் இவை மூன்று சரக்கும் மரு தென்னையிலை அரைத்துக் கவுசம் கொடுத்து சீலைமண் 2 செய்து மூலிகைக் கருகப் புடம் போட்டு எடுத்துக் கொண்டு அரிசியிடை செந்தூரம் சுக்கு நெய் தேனில் வைத்துக் கொடுக்க சுரம் 64, சன்னி 13, வாய்வு 80 தீரும்.

அனுபானம் – தேன், பனைவெல்லம், சுக்குக் கசாயப் போக்கிலும் கொடுக்கத் தீரும்.

பத்தியம் – இச்சாபத்தியம்.

294. சகல வாய்வு, சூலை, கிரந்தி புண்ணுக்கு வல்லாதி

சேங்கொட்டை 50, மூக்கு நறுக்கி எருமை சாணிப்பாலில் இரவு, பகல் முப்பது நாழிகையும் ஊற வைத்து மறுநாள் கழுவி காய வைத்தெத்து இடித்து இரசம் 2 விராகன், பூரம் 2 விராகன், பனைவெல்லம் கால் விராகன் இவையெல்லாம் ஒன்றாக போட்டு இடித்து பின்பு கல்வத்தில் போட்டு மை போல் அரைத்து வேளை ஒன்றுக்கு சுண்டக்காய் வீதம் காலைமாலை இரண்டு வேளையும் 9 நாட்கள் சாப்பிடவும்.

பத்தியம் -- பழையது எருமை மோர் விட்டு சாப்பிடவும். மொச்சைத் தட்டைப்பயிறு, செம்பிலிக்கறி, வாழைக்காய், பரங்கிக்காய், பூசணிக்காய், பாகற்காய் முதலிய பதார்த்தங்களைச் சாப்பிடவும். 11 – ஆம் நாள் தலைக்குத் தண்ணீர் விடவும்.

மூத்தின முத்தெண்ணெய் தேய்த்து அரப்பிட்டு முழுகவும். உப்பு, புளி எல்லாம் சேர்க்கவும். அரைத்தானவுடனே எருமை நெய் போட்டுப் பிரட்டிக் கொள்ளவும். குமட்டிக்காய், மிளகு கொடுக்கவும். இரத்தம் கண்டால் நிறுத்தவும்.

கசாயம் – ஆவாரம்பட்டையும், கடுக்காய்ப் பூவும் கசாயமிட்டுக் கொடுக்கவும். பசும்பால் பழச்சாற்றில் கொடுக்கவும்.

தீரும் நோய்

பக்கவாய்வு, பாரிச வாய்வு, சூலை, திமிறுவாய்வு, கடுப்பு கட்டி, கிரந்தி, புண், சொரி மேகம் எல்லாம் தீரும். கருமேகம், வெண்மேகம் எல்லாம் தீரும்.

295. தலைவலி, பிடறி இசுவு சர் வாங்க வலி, சன்னிக்கு மெழுகு

தழுதாழை, எருக்கிலை, நொச்சியிலை, வேப்பம் இலை, மலைவேம்பு இலை, கருவேப்பிலை, சிவனார் வேம்பு இலை இவற்றை வேப்பெண்ணெய் விட்டு வதக்கி ஒத்திட்டுக் கொடுக்கவும் தீரும்.

296. வீரமெழுகு

இலிங்கம் 2 விராகன், சூடம் 1 விராகன், பொறித்த வெங்காரம் 1 விராகன் இவை மூன்றையும் முலைப்பால் விட்டு ஒரு சாமம் எரிக்கவும். முருங்கைப் பூச் சாறுவிட்டு ஒரு சாமம் எரிக்கவும். தேன்விட்டு ஒரு சாமம் அரைத்து சிமிளில் வைத்துக் கொண்டு சன்னி விசத்துக்குப் பணவிடை கொடுத்தால் தீரும்.

297. சன்னிக்குத் துவளை

முருங்கைப்பட்டைச் சாறு வாங்கிப் பழைய கடுகு 1 பலம் வாங்கி அரைத்துக் கை கால் நகமெல்லாம் துவளையிட்டு தேய்த்து ஒரு வருடத்து சேவல் கோழி நெஞ்சைப் பிளந்து கடுகு அரைத்து தலையில் தடவி வைத்துக் கட்டவும்.

புறாக்குஞ்சு நெஞ்சைப் பிளந்து தலையில் வைத்துக் கட்டவும்.

298. நீரடைப்பு

சிறுபூளை வேர்ப்பட்டை, நெருஞ்சில் வேர்ப்பட்டை, பனைவேர்ப்பட்டை இவையெல்லாம் இளநீர் விட்டரைத்து இளநீரில் கலக்கிக் கொடுக்க நீர் இறங்கும்.

299. வலக்கட்டு நீர்க்கட்டுக்கு

சீரகத்தை நுணுக்கி அண்டம் வெள்ளக்கருவு விட்டுக் கலந்து வயிற்று மேல் முள்ளெம்பு வரையில் பூச நீர் இறங்கும்.

சித்தாமணக்கு எண்ணெய் அரைப்படி, காணிச்சாறு அரைப்படி இரண்டும் கலந்து ஒரு படியில் ஊற்றி சட்டியில் தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்துக் கொதிக்கவிட்டு எடுத்துக் கொடுக்கவும்.

வலமும் நீரும் இறங்கும் கெற்ப பெண்களுக்கும் கொடுக்கலாம்.

300. நீரடைப்பு வலம் அடப்புக்கும் லேகியம்

அவுரிச்சாறு 1 படி, வெள்ளைப்பூண்டு 2 பலம், வசம்பு 1 பலம், காயம் 1 பலம், திருகுக்கள்ளிப்பால் கால் படி இவற்றை எரித்து உள்ளுக்குப் போட்டு மேலேயும் தடவவும். இப்படி மூன்று நாள் போடவும். பத்தியம் – கடிசி.

தீரும் நோய்

விப்புருதி, தலைக்கட்டு, குலைக்குத்து, வீக்கம், அரையாப்பு, பவுத்திர வீக்கம், கட்டு வீக்கம், பிளவை சகலமும் தீரும். கை கண்டது.

301. வாந்தி

சீரகத்தைப் பசுவின் நெய்விட்டு அரைத்துத் துணியில் தடவி துணி சுருக்கிட்டு கொழுத்தி புகை பிடிக்க நிற்கும். ஒரு படி அரிசி பொரிச்சு சுக்குத் தட்டிப் போட்டு முத்தக்காசு பத்து நறுக்கிப் போட்டு நிமவேரு, விளாங்காய் மொத்தம் அரைத்துப் போட்டு கசாயம் வைத்துக் கொடுக்கவும் தீரும்.

302. பொருமல் வலி உப்பிசம்

வேப்பம் அரிசி கால் படி கருக்கிச் சாம்பலாக்கி அதில் மிளகு 2 விராகன், சீரகம் 2 விராகன் கூடப் போட்டுக் கருக்கிக் கசாயமிட்டுக் கொடுக்கத் தீரும்.

வேறு

வேலிப்பருத்திவேர் நெருப்பிலே சுட்டு வெந்நீர் விட்டு நறுக்கிப் பிழிந்து கொடுக்கத் தீரும்.

கோழிக்காரத்தை கொட்டிக் கருக்கி கொட்டிவிட்டு சிறுநாமதுரத்தியிலை மூன்று அருப்பு அறுத்துப் போட்டு கறுக்கச் சிவக்க வறுத்து ஓமம் 1 விராகன் வெள்ளுள்ளி, வசம்பு தட்டிப் போட்டு எரித்து 3 நாட்கள் கொடுக்கத் தீரும். கை கண்டது.

303. ஓடு விப்புருதி, பவுத்திரம் மூளை மூல இரத்தம், மூலம்

இரஸ்தாளிப்பழம் கொண்டு வந்து அதைப்பிளந்து பிறாம் பால் விட்டு மூடி உள்ளுக்குக் கொடுக்கவும். இப்படி மூன்றுநாள் கொடுத்து புண் மேலேயும் போடவும்.

பத்தியம் – கருங்குருவை அரிசி பொங்கி வெள்ளாட்டுப்பால் போட்டுக் கொடுக்கவும். உப்பு, புளி தள்ளவும். பத்தியம் – கடிசி

304. மூலம்

கருணைக்கிழங்கும், பேய் முசுட்டை வேரும் பசுவின் நெய்யில் பணியாரம் சுட்டுக் கொடுக்கத் தீரும்.

305. வயிற்றுளவு, வயிற்றுக் கடுப்பு, மூலசூட்டுக்குக் கசாயம்

வசம்பை பில்லை பில்லையாக நறுக்கி நன்றாகக் கழுவிப் போட்டு பசுவின் நெய்யில் போட்டு வேகவைத்து கறிவேப்பிள்ளையும் போட்டு வேகவைத்து கடைந்து லேகியமாக காலைமாலை இரண்டு வேளையும் கொடுக்கத் தீரும்.

306. மூலசூட்டுக்குக் கசாயம்

மலைதாங்கி வேர் 2 பலம் வறுத்துக் கொண்டு மிளகு அரைப்பலம், சுக்கு அரைப்பலம் தட்டிப்போட்டு எட்டொன்றாக நறுக்கிக் கொடுக்கத் தீரும்.

307. தொண்டைப் புத்துக்கு மருந்து

துருசு $^1/_4$ வராகன்	தேத்தாம் பழத்தோல் $^1/_4$ வராகன்
மிளகு 1 வராகன்	அரத்தை 1 வராகன்

இவையெல்லாம் தூள் செய்து இரண்டு பணவிடை காலைமாலை தேனிலிட்டு கலந்து கொடுக்கத் தீரும்.

கழற்சிப்பட்டை முத்தின காயாகக் கொண்டு வந்து இரண்டு துட்டிடை வைத்து 7 மிளகு, பூண்டு ஒரு பல்லு கூட வைத்து வெந்நீர் விட்டு அரைத்து மூன்று காலம் கொடுக்கத் தீரும். பத்தியம் – கடிசி.

308. நீரழிவு

இராத்திரிக்கு ஒரு சேர் மொச்சைக் கொட்டை ஊற வைத்துக் காலையில் வேகவைத்து உப்புப் போடாமல் வேகவைத்துக் கொடுக்கவும். கொஞ்ச கொஞ்சமாக இறங்கும் நீர் ரொம்பவும் இறங்க தீரும்.

309. மூலம் 6 க்கு

ஆறு மாதத்து எள்ளு 5 விராகன் இளம் வறுப்பாக வறுத்து சூரணம் செய்து பசுவின் நெய்விட்டுப் பிசைந்து கொட்டைப்பாக்களவு காலைமாலை இருவேளையும் சாப்பிடவும். புளி, கரப்பான் பண்டங்களை தள்ளவும்.

310. பவுத்திரத்துக்குக் களிம்பு

இரசம், கெந்தகம், வெள்ளைப் பாசாணம் வகைக்கு 2 வராகன் சதிரக்கள்ளிப் பால் விட்டு மூன்று சாமம் அரைக்கவும். மறுபடி பூங்கம் பால்விட்டு மூன்று சாமம் அரைக்கவும். பித்தளை சிமிளில் வைத்துக் கொண்டுத் துணியில் போட்டுப் புண் மேலே போடத் தீரும். நீலி வேரும், மாம்பட்டையும், நல்லெண்ணெயும் கொதிக்க வைத்து ஒத்திடமிடத் தீரும். எரிச்சல் கண்டால் தயிர் சோறு கட்டவும். தீரும்.

கடு துரத்தி　　இராம துரத்தி　　மாவலிங்கயிலை
வெள்ளை வெங்காயம்　　தெசாவரம்　　வெள்ளுறம்

இதுவெல்லாம் அரைத்து உருண்டை செய்து கொடுக்கவும். இச்சாபத்தியம்.

311. மூலசூடு

இலுப்பை இலைச்சாறு $^1/_4$ படி, நல்லெண்ணெய் $^1/_4$ படி இரண்டும் கலந்து கொதிக்க வைத்து மூன்று காலமும் கொடுத்து ஆறு நாட்கள் கடும் பத்தியம் இருக்கவும். இப்படிச் சேர்த்துக் கொடுக்கத் தீரும். கை கண்டது.

சிவனார் சவம்பு வேர்ப்பட்டைத் தூள் 1, கோழிமுட்டை மஞ்சள் கருவும் போட்டுக் கடைந்து க் கொடுக்கவும். இப்படி மூன்று பொழுது கொடுத்துக் கடும் பத்தியமிருக்கவும். மூன்றாம் நாள் உப்பு வறுத்துக் கூட்டவும்.

312. எலிக்கடி

புழுங்கலரிசி கால்படி, மேனிச்சாறு விட்டு வேகவைத்து மூன்று நாட்கள் சாப்பிடத் தீரும்.

தீரும் வியாதி

இளப்பு எலி, தூங்கெலி, வீங்கெலி எல்லாம் தீரும். கடும் பத்தியமிருந்து ஐந்தாம் நாள் முறிக்கவும்.

313. சத்தியவுடையார் பாகம் மேகப்புடிப்பு புண்

இரச கற்பூரம் 1 வராகன், குரோசாணி ஓமம் 2 வராகன், ஓமத்தை வறுத்துக் கொண்டு எல்லாம் சேர்த்து அரைத்து சுண்டக்காயளவு 14 உருண்டை செய்து 7 நாட்கள் சாப்பிடவும்.

பத்தியம் – உப்பு, புளி, புகையிலை, பழையது பச்சத் தண்ணீர் தள்ளிப்போடவும்.

314. பேதி, மேகநாதி உருண்டை

இலிங்கம், திப்பிலி, கடுகு, ரோகணி வகை ஒன்றுக்கு ஒன்று வீதமும், வாளம் 2 வராகன் இவையெல்லாம் தேசிப்பழச் சாறுவிட்டு ஒரு சாமம் அரைத்து பாவட்டங்காயளவு உருண்டை

செய்துக் காயவைத்து நுணுக்கி வாழைப்பழம், சர்க்கரை, வெல்லம் இவைகளில் கொடுக்க பேதியாகும்.

315. அறுபத்து நான்கு சுரத்துக்குக் கசாயம்

சுக்கு, மிளகு, திப்பிலி, மேல்ப்புடல், கொத்தமல்லி வகைக்கு 2 வராகன், வேப்பம் ஈக்கு, நெல்லி ஈக்கு, எலுமிச்சம் ஈக்கு, சித்தாமுட்டி சமூலம், ஆடாதொடை, நொச்சி இவையெல்லாம் வகைக்கு 2 வராகன் ஒன்றாக இடித்துப் போட்டு 5 படி தண்ணீர் விட்டு சுண்டயெரித்து 5 பொழுது கொடுக்க சுரமெல்லாம் தீர்ந்து போகும். கை கண்டது.

இதுவுமது

கிராம்பு	அக்கராகாரம்	கோஷ்ட்டம்
சித்தரத்தை	செவ்வியம்	திப்பிலி
சுக்கு	திப்பிலி மூலம் வகை ஒன்றுக்கு 1 வராகன்,	

பற்பாடகம், கொடிவேலி, பொடுதலை இந்த மூன்றையும் சமமாகச் சேர்த்து இடித்துப் போட்டு சுண்டக் காய்ச்சி மூன்றுநாட்கள் ஆறுவேளை கொடுக்கத் தீரும்.

பத்தியம் – புளி, புகையிலை தள்ளவும். கோரோசினை சீந்தில் தண்டு கடுக்காய், சிவதை வேர், களிப்பாக்கு, ஊசி காந்தம், சுக்கு, கடுகு ரோகிணி, தானஞ்சருகு, வழுதளை, துளசி இவற்றை சமமாகச் சேர்த்து கசாயம் செய்துக் கொடுக்க 4, 5 முறை பேதியாகும். சுரம் தீரும்.

காட்டுத்துளசி, தர்ப்பைப் புல், மஞ்சள் பொடி, கழுதை விட்டை, காக்காய் இறகு புகைப் போட சுரம் நிற்கும்.

கொடிவேலி, கீழாநெல்லி, மின்னக்கொடி, கருஞ்சீரகம், காத்தொட்டிச் சரகு, வசம்பு, தேத்தாங்காய், வெள்ளாட்டுப் புழுக்கை, வசம்பு, கடுக்காய், விளக்கெண்ணெய்த் தூபங்காட்ட தோசம் தீரும்.

316. அமுர்தாதி குளிகை

கொத்தமல்லி, நன்னாரி வேர், முட்காவேளை, கோரைக் கிழங்கு வறுத்துக் கசாயமிட்டு கொடுக்கச் சுரம் தீரும்.

சுக்கு, திப்பிலி, தேசாவரம், அரத்தை, கலைமான் கொம்பு, இனாசியார் கொட்டை, வெள்ளிப் பொன் இவையெல்லாம் இளைத்து நாக்கில் தடவவும். முலைப்பால் முரிச்சிக் கொடுக்கவும்.

317. தலைப்பொடுகு, மயிர் உதிர்ந்து அரிப்பு கண்டால்

அழிஞ்சில் வேர்ப்பட்டை, பூண்டு, வசம்பு சேர்த்து அரைத்து குண்டுமணிப் பிரமாணம் உருட்டி உளுந்து அரி தவிட்டில் பிரட்டி சாப்பிடவும். பச்சைமீன், கருவாடு, வாய்வு பண்டம், கரப்பான் பண்டம் தள்ளவும்.

318. காய்ச்சல், அரோசியம், அதிசாரக் களிச்சல்

மாதளங்கொழுந்து, வில்வக்கொழுந்து, விழுவிக் கொழுந்து, நாவல் கொழுந்து, விளாங்கொழுந்து, வில்வவேர் பட்டை போக்கி சீனி கூட்டவும். வாழைப்பூ அரும்பு தள்ளி இதழ் சேர்க்கவும். முத்தக்காசி யாவையும் ஒரு பிடி வீதம் சேர்த்து பதக்குத் தண்ணீர் விட்டெரித்து ஒன்றுக்கு எட்டு படி கொடுக்கத் தீரும்.

319. சகல ரோகத்துக்கும் சஞ்சீவி

பூரம் அரை வராகன், கெந்தி கால் வராகன், இலிங்கம் அரைக்கால் வராகன் இம்மூன்றையும் கல்வத்திலிட்டு ஒரு சாமம் அரைத்து வைத்துக் கொண்டு அரை அரிசியிடை தேன் நெய்யில் கொடுக்கவும். பத்தியம் – நெய் சோறு உப்பில்லாமல் கொடுக்கவும். சகல ரோகமும் தீரும்.

320. பக்கவாதம், மேல் பூசும் தயிலம், நடுக்குவாதம், சன்னி 13

வாலுளுவை அரிசி 2 வராகன், கருஞ்சீரகம், பச்சை கற்பூரம் அரை வராகன் இரண்டையும் சீசாவில் கொட்டி

விளக்குமாத்துக் குச்சியால் காரக்கு அடைத்து சீசாவுக்கு ஏழு சீலைமண் செய்து மூன்று அடுப்புக் கூட்டி ஒரு கரி சட்டியை நடுவில் பொத்து, சீசாவை சட்டியில் தலைகீழாக கவிழ்த்து சீசாவைக் கோலி விராட்டி அடுக்கி அடுப்பில் வைத்து தீமூட்டி அடுப்பின் நடுவில் கோப்பையை வைத்தால் தயிலம் இறங்கும்.

அந்தத் தயிலத்தை சகல வீக்கம், திமிர்வாதம், நடுக்கு வாதத்துக்கும் தேய்க்க இறங்கும்.

321. கிராணிக் கடுப்பு கழிச்சலுக்கு இரத்தகழிச்சல்

விளாம்பிலை, வில்வயிலை, பருத்தியிலை, மாதளங்காய், வாழைப்பூ, புளியாரை இவையெல்லாம் சுருள அவித்து உணர்த்தி சூரணம் செய்துக் கொண்டு காலைமாலை சாப்பிடத் தீரும். கை கண்டது.

322. கடுப்பு களிச்சல்

கரண்டியில் நல்லெண்ணெயை ஊற்றி வெல்லம் சேர்த்து காய்ச்சி பதமான சூடு வந்தவுடன் மிளகுத்தூள் செய்துப் போட்டுக் கிண்டிப் பதத்திலெடுத்துப் பாக்களவு எருமைத் தயிரில் குழப்பிக் கொடுக்க மூன்று நாளில் தீரும். கை கண்டது. காலைமாலை சாப்பிடவும்.

உளுதும்பை இலைக் கனியளவு அரைத்து பன்றி நெய்யில் அடைதட்டி சுட்டு காலைமாலை இருவேளையும் நெய்யும் அடையும் ஆறு வேளை சாப்பிடத் தீரும்.

மாங்கொட்டைப் பருப்பும், புழுங்கலரிசி மாவும் களி கிண்டி சாப்பிடவும் தீரும். பத்தியமிருக்கவும்.

323. வெறிப் பிடித்தலுக்கு

அரிதாரம் 1 வராகன்	மெலிவு சீலை 1 வராகன்
நாவி 1 வராகன்	கருஞ்சீரகம் 1 வராகன்
சீரகம் 1 வராகன்	செண்பகப் பூ 1 வராகன்
அதிவிடையம் 1 வராகன்	திப்பிலி 1 வராகன்

கிராம்பு 1 வராகன் சாதிலிங்கம் 1 வராகன்
நேர்வாளம் 10 வராகன்

இவற்றையெல்லாம் இளநீர் விட்டு அரைத்து இளநீர்க் காயில் போட்டு சட்டியில் தண்ணீர் ஊற்றி அதில் காயை வைத்து மேல் சட்டி மூடி வேகவைத்து எடுத்தரைத்து துவரைப் பிரமாணம் உருண்டை செய்துக் காயவைத்து கடுக்காய் தண்ணீரில் இழைத்துக் கொடுக்க பேதியாகும். பின்பு பாலும் சோறும் கொடுக்கவும். கை கண்டது.

324. இரும்பைக் கடிக்க

அதிரக்கள்ளிப்பட்டை 1 பலம், கிளுவைப்பட்டை 1 பலம், தூள் செய்து இரண்டு காசிடை சாப்பிட இரும்பையும் கடிக்கலாம்.

325. தங்கமூலிகை மந்திரம்

நாயினும் கேடே நரியினும் கேடே
வாக்கினில் தும்பை வந்திடச் சிவா
நசிமசி தும்பைசெடி டே டே லேய்
மஞ்சநூல் காப்பு கட்டி
100 திரம் சீலைமண் செய்து தீபதூபம்
கொடுத்து மூலிகைப் பிடுங்கித்
தங்கத்துக்குக் கெவசம் செய்து 5
எருவில் புடம்போடச் சுன்னமாகும்.

மேற்படி இரசம் 1 வராகன் குகையில் விட்டு நத்தச் சூரி மூலியை கிட்டே போக சூரி சூரி நத்தைச் சூரி எத்தைச் சொன்னேன். அத்தைக் கேட்க சிவாய 108 முறை சொல்லி செய்து தலையைப் பிடிங்கிக் கொண்டு வந்து சாறுபிழிந்து இரசத்தோடே பிழிந்து விட்டு தங்கசுன்னம். ஓம் கிரி சிவாயா என்று சொல்லிப் பேர்க் கூடு தணலில் வைக்கவும்.

326. சீனக்காரம் சுன்னம்

கொயினா 1 வராகன் வீரம் 2 வராகன் தாளகம் 1 பலம்
பவளம் 1 பலம் இலிங்கம் $^1/_2$ பலம் சூடம் 3

சாம்பிராணி $\frac{1}{4}$ பலம் எலுமிச்சம் பழச்சாறு 2 பலம்
மிளகு 1 $\frac{1}{2}$ பலம் சீரகம் 2 வராகன் அரிசி
திப்பிலி $\frac{1}{2}$ வராகன் தாளிசபத்திரி 1 வராகன்
கல்கண்டு 1$\frac{1}{2}$ வராகன் சாதிக்காய் 1 பலம் ஆடாதொடை
சாதிபத்திரி 1 பலம் அதிமதுரம் $\frac{1}{4}$ பலம் கண்டங்கத்திரி
சிறுகாஞ்சொறி இவை மூன்றும் கசாயம் $\frac{1}{4}$ பங்கு
பசும்பால் $\frac{1}{4}$ பங்கு தூதுவளைச் சாறு $\frac{1}{4}$பங்கு
வேளைச்சாறு $\frac{1}{4}$ பங்கு நெய் 1 $\frac{1}{4}$ பங்கு கிராம்பு $\frac{1}{2}$ பலம்

முட்டை வெள்ளைக் கருவை எடுத்து அதற்குச் சரியிடை எருக்கன் பால்விட்டு வெய்யிலில் வைக்கச் செயநீராகும். அந்த செயநீரில் ஒரு பலம் வாங்கி அதில் சீனாக்காரத்தை அரைத்து முட்டை ஓட்டில் போட்டு முட்டை ஓட்டால் பசைக் கொண்டு ஒட்டி 5 சீலைமண் வலுக்கச் செய்து கோழிப்புடத்தில் எடுக்கச் சுன்னமாகும்.

327. தேள் கொட்டினதுக்கு மருந்து

பன்றிக் கொழுப்பு 1 பலம், வெள்ளைப்பாசாணம் 1 பலம் இரண்டையும் போட்டு எரித்து சீசாவில் வைத்துக் கொண்டு தேள் கொட்டின உடனே தொட்டுப் போடவும். உடனே நிற்கும்.

பாசாணத்தை நுணுக்கிப் பச்சைத் தண்ணீரில் தொட்டுப் போடவும்.

328. இலிங்கம் பூரம் கட்டு

இலிங்கம் 2 வராகன், பூரம் 2 வராகன் மெல்லிய வெள்ளைத் துணியில் சுருட்டி முந்திரி எண்ணெயில் தோய்த்து கொழுத்தி விடவும். எரிந்து அடங்கிய உடனேயெடுத்து வைத்துக் கொண்டு சுரங்களுக்கு சுரசப் போக்கில் ஒவ்வொரு இழுப்பு இழுத்துக் கொடுக்கத் தீரும்.

329. மூலத்துக்கு லேகியம்

காட்டுக்கருணை 1 விராகன், பிரண்டை 1 விராகன், புளிநருணை 1 விராகன் இவையெல்லாம் வெள்ளாட்டுப் பால் விட்டு அரைத்து ஆறுவேளைக் கொடுக்கத் தீரும். இச்சாபத்தியம்.

வேறே பாகம்

நாயுருவி வேரும் இலையும் 1 விராகன் ஆட்டின் மோர் விட்டு ஆறு வேளைக் கொடுக்கத் தீரும். இச்சாபத்தியம்

நருளை 1 பலம் நன்றாக அரைத்து இதுக்குச் சரியிடை வெண்ணெய் போட்டு மத்திச்சு ஆறுவேளை கொடுக்கத்தீரும், இச்சாபத்தியம். அளவு – கொட்டைப்பாக்குப் பிரமாணம் மூலமுளைக் கருகிப் போகும். இரத்தம் கண்டால் நிறுத்தி விடவும்.

330. நாக பஸ்பம் சுன்னம்

செருகண்நாகம் ஒரு பலம் வாங்கி இலுப்பை நெய்யில் ஏழு தடவை உருக்கி சாய்த்து எடுத்து கும்பகோடரி அரைத்து அதில் கிளிஞ்சி தூள் நாளே வைத்து அதன்மேல் நாகத்தை வைத்து மேலும் கிளிஞ்சு தூள் போட்டு மூடி மூன்று சீலைமண் செய்து கெஜபுடம் போட்டு எடுத்து வைத்துக் கொண்டு நெய் வெண்ணெயில் பணவிடை வைத்துச் சாப்பிட வெட்டை சூடு, மூலசூடு தீரும். இச்சாபத்தியம்.

331. வங்கம் பஸ்பம்

வங்கம் 1 சேர் ஓமம் மாகாணி 1 மஞ்சள் மாகாணி, சேங்கொட்டை மாகாணி 1 கொடிக்கள்ளிப் பட்டை

இந்த 4 வேர்களில் எட்டு இடித்து கோணித் தட்டில் பரப்பி, வங்கத்தை ஏழு தடவை உருக்கிச் சாய்த்து விட்டு விடவும்.

தட்டி விரல் இடலம், கத்திரித்து கோணியில் தூள் மேல் பரப்பித் தூள் போட்டு சுருட்டிக் கட்டி சீலைமண் செய்துக் கெசகுழி வெட்டி காட்டு விராட்டியால் புடம் போட்டு எடுத்துக் கொண்டு மேகம் குஷ்ட்டம் இவற்றிற்குக் கொடுக்கத் தீரும்.

நெய் – அனுப்பானம்.

332. நாக பஸ்பம்

சிறுகண்நாகம் 1 பலம் வாங்கி இலுப்பை நெய்யில் ஏழு தடவை உருக்கி சாய்த்து எடுத்து, கும்ம கோடரி அரைத்து அதில் கிளிஞ்சி தூள் உள்ளே வைத்து அதின் மேல் நாகத்தை வைத்து மூடி 3 சீலைமண் செய்து கெஜபுடம் போட்டு எடுத்து வைத்துக் கொண்டு நெய் வெண்ணெயில் பணவிடை வைத்துச் சாப்பிட வெட்டைச் சூடு, வெள்ளை மூலசூடு இவையெல்லாம் தீரும்.

333. கணத்தெண்ணெய்

ஊத்தின எண்ணெய் 1 படி	வெங்காயச்சாறு 1 படி
சோற்றுக் கற்றாழைச்சாறு 1படி	பருத்தியிலைச் சாறு $^1/_4$ படி
எட்டிக்காய்ச் சாறு 1 படி	சீரகம்
வெந்தயம்	செம்பு உருட்டு வகைக்கு 2 பலம்

இளம் வறுப்பாய் வறுத்து தூள் செய்து வாளம் 2 விராகன் ஒன்றாக கொதித்து ஏழு பதத்தில் வடித்துப் போட்டுக் கரண்டி வீதம் கொடுக்கவும். பத்தியம் -- புளி தள்ளவும்.

நாயுருஞ்சி வேரும், சுக்கும் தட்டிப் போட்டு மாலையில் கொடுக்கவும்.

334. தாளகம் சுன்னம்

தாளகம் 4 பலம் வாங்கி எருமை ஈனாக்கிடாரி நீரில் 15 நாட்கள் ஊற வைத்து எடுத்து மான்செவிக் கள்ளிப் பால் 5 நாட்கள் புடித்து காயவைத்து எடுத்து எலுமிச்சம் பழம் இரண்டாக அறுக்கவும்.

தாளகம் தெரியாமல் பரப்பி அதன்மேல் கட்டியே வைத்து அதன் மேல் எலுமிச்சம் பழத்தை அறுத்து மேலும் பரப்பி அதன் மேல் சுண்ணாம்பு சீலை மூன்று சுத்தி அதன் மேல் வெப்பாளம் பட்டை பத்தாண்டு பட்டையை இடித்து மேல் கவுசம் செய்து அதன்மேல் மூன்று சுண்ணாம்பு சீலை செய்து புதுச்சட்டியில்

வைத்து மேல்ச் சட்டி மூடிச் சந்து வாய்க்குச் சீலை செய்து அடுப்பேத்தி ஒரு சாதி விறகால் குகைச் செய்து 3 சாமம் எரித்து ஆறபோட்டு எடுக்க நிறம் போகாத சுன்னம் தாம்பூரத்தை 1 கொடுக்கவும். வெள்ளியின் பேரில் கொடுத்தாலும் ஒன்றுதான்.

335. இலிங்க செந்தூரம்

இலிங்கம் 1 பலம், கருமாதிக் கலயம் 1 வேப்பிலைக் கலயத்தில் அரைவாசித் திணித்து நடுவே இலிங்கத்தை வைத்து மேலும் இலையை நன்றாக திணித்து மேல் சில்லிட்டு சீலைமண் அரைத்து 4 செய்து ஏழு விறாட்டியில் புடம் போடவும். ஆறவிட்டு எடுத்துக் கொண்டு நன்றாக அரைத்து சீசாவில் வைத்துக் கொண்டு வேளை ஒன்றுக்கு அரிசியிடை தேனில் காலைமாலை இருவேளையும் கொடுக்கவும். இந்தப்படி 5, 7, 9 நாட்கள் கொடுக்கவும்.

தீரும் வியாதி

வாய்வு 18, மேகவாய்வு, சர்வாங்கவலி, பித்தகுன்மம், பக்கவாதம், பாரிசவாய்வு, சுரம், சன்னி இவைகளுக்கு இஞ்சிச் சாறு, வேப்பம்பட்டைச் சாற்றிலும் கொடுக்கத் தீரும். மீன், கருவாடு வாய்வு பதார்த்தம் தள்ளி புளி உப்பு வெள்ளாட்டு மாமிசம் சேர்க்கவும்.

336. இலிங்க பஸ்பம்

இலிங்கம் ஒரு பலம் வாங்கி காட்டாமணக்கு பாலில் ஐந்து நாட்கள் ஊறவைத்து ஐந்தாம் நாள் பாலோடு மேற்படி பச்சிலையை அரைத்துக் கவுசம் கொடுத்து ஒரு சீலைமண் செய்து காடைப் புடம் போட பஸ்பமாகும்.

337. இரச சுன்னம்

பணங்கிழங்கு இடித்து சாறுப்பிழிந்து ஒரு பலம் இரசத்தை அரைத்து வில்லை தட்டி காயவைத்து அதன் கொழுந்து இலையில் வைத்து ஒரு படி தயிர் போட்டுக் கட்டி சீலைமண்

மூன்று செய்து கவுதாரி புடம் போட்டு எடுத்துக் கொண்டு அனுபானத்தில் கொடுக்கவும்.

338. கெந்தக சுன்னம்

கண்ணுபோக்கான் கொண்டு வந்து ஏழனி மொத்தம் இடித்த சாந்தெடுத்து சட்டியில் கீழே பாதி சந்து வைத்து நடுவே ஒரு பலம் கெந்தகத்தை வைத்து மேலேயும் பச்சிலையை வைத்து அமுக்கி ஒரு சாதி விறகால் கொண்டு ஒரு நாழிகை எரித்தெடுத்து அப்பால் சோத்து கற்றாழைச் சோறு ஏழனி மொத்தம் எடுத்து சட்டியில் கீழே பாதி வைத்து மேலே கெந்தகத்தை வைத்து மேலேயும் சோறு வைத்து இரண்டு நாழிகை ஒரு சாதி விறகால் எரித்து எடுத்துக் கொள்ளவும்.

கறட்டு கெந்தகம் 1 பலம் சுத்திச் செய்து குன்மகுடோரி அரைத்து விளாங்காய் மொத்தம் கவசம் செய்து 25 விராட்டியில் வைத்தெடுத்து மேனிச் சாறு விட்டு அரைத்து சுத்தியான கெந்தகத்துக்குக் கவுசம் கொடுத்து சீலைமண் செய்து 25 விராட்டியில் எரித்து எடுத்துக் கொள்ளவும்.

339. தாளக சுன்னம்

தாளகம் அரை சேர் வாங்கி எருமை ஈணாக்கிடாரி கோமியத்தில் 15 நாட்கள் ஊற வைத்தெடுத்து மான் செவி கள்ளிப்பாலில் ஐந்து நாளைக்கு அடித்தும் ஊறவைத்தும் எடுத்து எலுமிச்சம் பழத்தை இரண்டாக அறுத்து பரப்பி அதன்மேல் தாளகக் கட்டியை வைத்து மேலேயும் எலுமிச்சம் பழம் பிழிந்து சந்து தெரியாமல் தடவி மூன்று சுண்ணாம்பு சீலை சுத்தி அதன்மேல் நூறாண்டு வேப்பம்பட்டை இடித்து தேங்காய் மொத்தம் கவுசம் கொடுத்து ஐந்து சுண்ணாம்பு சீலை சுத்தி காயவைக்கவும்.

340. மூலமுளைக்குப் போடுகின்ற கார விபரம்

சீனாக்காரம், வெள்ளைப்பாசாணம், சவுக்காரம், கோதுமை அரிசி வகைக்கு ஒன்றுக்கு 2 வராகன் முலைப்பால் விட்டுத் திரியாக்கி உருட்டி வைத்துக் கொண்டு முலைப்பால்

விட்டரைத்து முளையைச் சுத்திப் போட்டு மேலே மெல்லிய துணிக் கிழித்துப் போடவும். இதன்படி 2, 4 நாட்களுக்குப் போடவும்.

ஐந்தாம் நாள் தயிர் சாதம் கட்டவும். இதன்படி மூன்றுநாட்கள் கட்ட அமுகி விழுந்து போகத் தீரும். பின்பு முருங்கையிலையும் ஈர வெங்காயமும் நறுக்கிப் போட்டு விளக்கெண்ணெய் விட்டு வதக்கிக் கட்டவும்.

பின்பு மிளகு தூள் செய்து இடித்துக் கஞ்சி தண்ணீரில் போட்டுக் கலக்கித் தேய்த்து முழுகவும். பின்பு விளக்கெண்ணெய், நல்லெண்ணெய், நெய் மூன்றும் தேய்த்து முழுகவும். இச்சாபத்தியம்.

காட்டுக்கருணை, கறிக்கருணை, காறாக்கருணை, புளிநரணை, நத்தைக்கறி இவையெல்லாம் வகைக்கு ஒரு பலம் காயவைத்து இடித்துக் கொண்டு வஸ்திரகாயம் செய்து சர்க்கரை 1 பலம், பசும்பால் கால் படி, நெய் கால்படி அடுப்பிலேத்தி முன் சூரணத்தைத் தூவிக் கிண்டி லேகியம் செய்தெடுத்துக் கொண்டு பாக்களவு 5 வேளைக் கொடுக்கவும். இச்சாபத்தியம்.

341. மூலத்துக்கு மருந்து

பூரம் 1 வராகன், அன்னபேதி 1 பலம், பூநீர் கால் பலம் இவை மூன்றையும் சேர்த்துக் கற்றாழைச் சாறு விட்டு 5 நாழிகை அரைத்துப் பாதியெடுத்துக் கொண்டு பாதியை வில்லை தட்டிக் காயவைத்து சில்லில் வைத்து சில்லுமூடி சீலைமண் செய்து 5 விராட்டியில் புடம் போட்டு எடுத்து கொண்டு தேன் நெய்யில் அரைகால் விராகனெடை கொடுக்கவும். பாதி மருந்தை மூலமுளையில் போடவும்.

பத்தியம் – இச்சாபத்தியம்.

342. தாளக சுன்னம்

ஒரு பலம் தாளகத்தை ஒரு படி சுண்ணாம்புக்குள் வைத்து பசுவின் கோமியத்தில் ஒன்பது சுத்தி செய்து எடுத்துக் கொண்டு, சங்கஞ்சாம் அரைக்கால் படி, கரியுப்பு $^1/_4$ படி சாற்றில் போட்டு ரேகித்து சுண்டி உப்பு வெடிக் கண்டால் மேல் சாணைக்

கையால் மூடி வெடித்து நீத்த பிறகு சாணக்கையைத் திறந்து வெங்காரம் 4 பைசாவுக்கு வாங்கி உப்பில் போட்டு நான்கு கிளறு கிளறி புகை கண்டால் சாணக்கைய்யில் மூடி புகை அடங்கும் மட்டும் எரித்து கல்வத்தில் கொட்டி ஒரு சொட்டுப் பச்சைத் தண்ணிர் விட்டு அரைத்துப் பழைய சீலையில் தடவி முன் தாளகத்துக்கு ஏழு தந்து சுத்திக் கொண்டு புடம் போட நீத்துப் போகும்.

343. மூலத்துக்கு

அரிதாரம்	கருங்குங்குலியம்	பாசாணம்
காந்தம்	சித்திரமூலம்	சேங்கொட்டை
கருஞ்சீரகம்	மஞ்சள்	துருசி

வகை ஒன்றுக்கு களஞ்சி 1, ஊமத்தஞ்சாறு விட்டரைத்து ஒன்பது வில்லைச் செய்து காயவைத்து புளியம்புராணி கொண்டு வந்து தணலுண்டாக்கிக் கலயத்தில் போட்டு வில்லை ஒன்று அதன் மேல் வைத்து உரலில் கலயத்தை வைத்து அதன்மேல் ரோகஸ்தனை உட்கார வைத்துப் புகை பிடிக்கவும்.

புகைப் பிடிக்கும் முன்னே மோரும் சோறும் கொடுத்துப் புகை பிடிக்கவும். இந்தப்படி 3 நாள் ஆறுவேளை பிடிக்கவும்.

344. வெள்ளைக்கும் மேகம் 21 க்கும் வெள்வங்கபஸ்பம்

வெள்ளை வங்கம் 1 பலம், கையாநகரைச் சாற்றில் மூன்று தடவை உருக்கிச் சாய்த்து மெல்லியதாகத் தட்டிப் பொடியாகத் திரித்து முளக்குளி வெட்டி அரைக்குளி விராட்டி அடுக்கி அதன்மேல் இலந்தயிலை மூன்று மரக்கால் கொட்டிப் பரப்பி அதன்மேல் வங்கத்தை வைத்து, அதன்மேல் மூன்று மரக்கால் இலந்தயிலை பரப்பி அதன்மேல் அரைக்குழி விராட்டி அடுக்கி தீப்போட்டு ஆறவிட்டெடுக்க பஸ்பமாய் இருக்கும். அந்த பஸ்பத்தை சுன்னப்படுத்தும் விவரம்

நமச்சாரம் $^1/_2$ பலம், வெடியுப்பு $^1/_2$ பலம், துத்தம் $^1/_4$ பலம் இவை மூன்றையும் காட்டாமணக்குப் பால் விட்டு அரைத்து குகையும் சில்லும் செய்து குகைக்குள்ளே பஸ்பத்தைக் கொட்டி

சில்லு மூடி மெழுகி தட்டான் குகை குள்ளாக வைத்து சில்லு மூடி மூன்று சீலைமண் செய்து 20 விராட்டியில் புடம் போட்டெடுத்து தட்டான் குகையை உடைத்துப் போட்டு சுன்னத்தை எடுத்துக் கொண்டு மேகத்தைச் சேர்ந்த வியாதிக்கெல்லாம் அரிசியிடை தேன், நெய், வெண்ணெய் கொடுக்கவும். பத்தியம் – வலுவறிந்து செய்யவும். கசாயப் போக்கிலும் கொடுக்கவும்.

345. இரச சுன்னம்

இரசம் 1 வராகன்	வெடியுப்பு $^1/_4$ வராகன்
துத்தம் $^1/_4$ வராகன்	நமச்சாரம் $^1/_4$ வராகன்

இவற்றை காட்டாமணக்குப் பால் விட்டரைத்து இரசம் மடியமட்டும் அரைத்து மிளகு பிரமாணம் உருண்டை செய்து காயவைத்து தட்டான் குகைக் குள்ளாக வைத்து சில்லுமூடி சீலைமண் மூன்று செய்து 10 விராட்டியில் புடம் போட சுன்னமாகும்.

இந்தச் சுன்னத்தை தேன், நெய், வெண்ணெயில் அரிசியிடை வைத்துக் கொடுக்கவும். இச்சாபத்தியம். தீரும்.

346. இருமலுக்குக் கருவங்க பஸ்பம்

கருவங்கம் 1 பலம், தாளகம் 1 பலம், சித்தண்ட ஓடு கால் வங்கத்தை மெல்லியதாக தகடு தட்டி கல்வத்தில் போட்டு அரைத்து சாவல்கோழி இரத்தம் விட்டு 2 சாமம் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து சில்லில் வைத்து சில்லுமூடி சீலைமண் மூன்று செய்து முலப்புடம் போட சுன்னமாகும்.

இந்தச் சுன்னத்தை வெட்டை, மேகஇரணம், மேகம், சுரம், இருமல், நீரழிவு, காசம் இவைகளுக்குதேன், நெய், வெண்ணெயில் அரிசியிடை வைத்துக் கொடுக்கவும். பத்தியம் – லேசி. தீரும்.

347. நீரழிவுக்கு லேகியம்

பச்சை மஞ்சள் சாறு 1 $^1/_4$ படி, சீனாக் கல்கண்டு 25 பலம் மேற்படி சாற்றில் கரைத்து பாகு காய்ச்சி அதில் போட்டு மருந்து

நெல்லிவிதை	நீர்முள்ளி விதை
கொத்தமல்லி விதை	மரமஞ்சள்
வெங்காரம்	அதிமதுரம்
கோஷ்ட்டம்	இலவங்கம்
ஏலம்	சதகுப்பை
வேலிப்பருத்தி வேர்	கொடிவேலிவேர்
கோரைக்கிழங்கு	தானிக்காய்
சீரகம்	கருஞ்சீரகம்

இவை வகை ஒன்றுக்கு பலம் 2 சூரணம் செய்து முன் பாலில் தூவி லேகியமாகக் கடைந்து எடுத்து ஒரு கலயத்தில் போட்டு மேல் சில்லு மூடி சீலைமண் செய்து நெல்லுப் பானையில் கழுத்தளவு புதைத்து ஒருவாரம் சென்றபின் எடுத்து வேளை ஒன்றுக்கு கொட்டைப் பாக்களவு இருநேரமும் 20 நாட்களுக்குக் கொடுக்கவும்.

பத்தியம் – பழையது நீக்கி மீன், கருவாடு, வாய்வு பதார்த்தம் தள்ளவும்.

தீரும் வியாதி

நீரழிவு, நீர்ப்பாண்டு, பித்தமயக்கம், நீர் சுரப்பு, பித்த கிறுகிறுப்பு தீரும்.

குளியல் – விளக்கெண்ணெய் தேய்த்து வெந்நீர் விடவும். சின்னசாமி முறை கை கண்டது.

348. நீரழிவுக்கு

புங்கம் பூவு 8 பலம், கட்டுக்கொடி 8 பலம், அரசன் பட்டை 4 பலம், விளாம்பிசின் 1 பலம், செருநாகப்பூ 2 பலம்

இந்தச் சரக்கை சூரணம் செய்து இதற்கு சரியிடை சீனி சர்க்கரை சேர்த்து இருநேரமும் நீருகடி பிரமாணம் 7 நாட்கள் சாப்பிடத் தீரும். பத்தியம் – லேசி. மாணிக்கம் முறை கை கண்டது.

349. தாளக பஸ்பம்

தாளகம் ஒரு பலம் வாங்கி குளப்படி சுண்ணாம்புக் கல்லால் 9 சுத்தி செய்து கல்யாண பூசணிக்காய்க்கு நசுங்குமளவு அடித்து அதற்குள் வெள்ளிண்டு இடித்துச் சாறுப்பிழிந்து விட்டு மறுபடி வெள்ளிண்டு இடித்துக் கவுசம் கட்டி காய்க்குள் வைத்து மூடி சீலைமண் மூன்று செய்து கெஜபுடம் போட்டு எடுக்கவும்.

350. இரச செந்தூரம்

இரசத்தை எடுத்து ஒட்டடை வில்லைச் சாறு பிழிந்து அரைத்து வில்லைத் தட்டிக் காயவைத்துப் பனைவோலையில் வைத்து மூன்று சீலைமண் செய்து கவுதாரி புடம் போடவும். செந்தூரமாகும். அனுபானத்தில் கொடுக்கவும்.

351. இலிங்க செந்தூரம்

நரிக்கொன்றை வடக்கே போகின்ற வேரைப் பறித்து அதற்கு தேங்காய் உடைத்து தீபம் தூபங்காட்டி வெட்டி வைத்து பட்டையைத் தட்டியெடுத்து ஒரு தேங்காய்க்குள்ளே இலிங்கத்தைப் போட்டு முளையடித்து ஐந்து விராட்டியில் புடம் போட தேங்காய் வெடித்தவுடனே இலிங்கத்தை எடுத்துக் கொண்டு முன்பட்டையை சில்லில் கீழ் மேல் வைத்து பத்தெருவில் புடம் போடவும். செந்திச்சிப் போகும் எடுத்துக் கொள்ளவும்.

352. வீர செந்தூரம்

வீரத்துக்கு நன்னாரி வேர் தளையெல்லாம் அரைத்துக் கவுசம் கொடுத்துக் கவுதாரிப் புடம் போட செந்தூரமாகும். அனுபானங்களில் கொடுக்கவும்.

மேற்படி வீரத்துக்கு மனோசிலையை கீழ்மேல் வைத்து சீலைமண் செய்து கோழிக் புடம் போட்டு எடுக்க செந்தூரமாகும்.

353. கலிக்க மாத்திரை

பெருங்காயம், திப்பிலி, மிளகு, வெள்ளுள்ளி, கிராம்பு வகைக்கு 1/4 பலம் சரியிடையாக வாங்கி வெற்றிலைச் சாறு, மேனிச் சாறு, வெள்ளைச் சாரணைச் சாறு விட்டரைத்துக் காய வைத்து எடுத்துக் கொண்டு வெற்றிலைச் சாற்றில் இழைத்துக் கண்ணிலிடவும்.

சன்னி தயிலத்தில் எல்லாம் தீரும். தும்பைச் சாற்றில் இடவும்.

354. பித்த வாய்வு

சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், பெருங்காயம் சரியெடை எடுத்து வறுத்து எலுமிச்சம் பழத்தை அறுத்து தூளைப் போட்டு அமுக்கிப் பனியில் வைத்துக் காலையில் சாப்பிடவும்.

அந்திக்கு இஞ்சி அரைத்து தனியே சாப்பிடவும். வாகையிலைச் சாற்றில் ஒருநாள் இரவுபகல் ஊற வைக்கவும்.

355. பூர பஸ்பம்

சிறுதேள் கொடுக்கி சாறு பிழிந்து பூரத்தை அரைத்து மேற்படி வில்லை தட்டிக் காயவைத்து மேற்படி பச்சிலையை அரைத்துக் கவசம் விளாங்காய் மொத்தம் கொடுத்து சீலைமண் மூன்று செய்து 40 விராட்டியில் வைக்க பஸ்பமாகும். எடுத்துக் கொண்டு சகல ரோகத்துக்கும் கொடுக்கவும்.

பூரத்தை ஏழு முட்டையில் போட்டு சீலைமண் செய்து கோழிப்புடம் போட்டு எடுத்து மேற்படி தேள் கொடுக்கு இலையரைத்து கவுசம் கொடுத்து சீலைமண் செய்து கோழிப் புடம் போடவும். மூன்று விராட்டியில் வைக்கவும்.

356. பாசாணக்கட்டு

ஒரு பலம் பாசாணம் வாங்கி சட்டியில் ஒரு விராகனிடை கெண்டை குஞ்சைப் பரப்பி ? அதின் மேல் பாசாணத்தைப்

போட்டு அமுக்கி நான்கு நாழி எரித்து கொள்ளவும். இந்தபடி 3 தடவை எரித்துக் கொண்டு எடுக்க பஸ்பமாகும்,

357. இருமல்

ஆடாதொடை	கோஷ்டம்	திப்பிலி,
வசம்பு	நெல்லிமுள்ளி	கடுக்காய்
வழுதளைவேர்	முடக்கொத்தான்	சிறுநாகப்பூ,
வல்லாரை	மிளகு	சுக்கு

வகைக்கு பலம் கால் அவையெல்லாம் சூரணம் செய்து வெருகடி தூள் பசும் நெய் பசும் வெண்ணெயில் வைத்துச் சாப்பிடவும். தீரும் வியாதி.

பத்தியம் – இச்சாபத்தியம்.

358. இருமலுக்கு லேகியம்

இஞ்சி, சீரகம், மிளகு இவைகளைச் சூரணித்து தேன், நெய் போட்டு லேகியமாய் அரைத்து ஏழு நாட்கள் சாப்பிடத் தீரும்.

359. கண்டமாலைக்கு புகை போட

வெடியுப்பைத் தூள் செய்து செம்பஞ்சிக் குள்ளாக வைத்து சுங்கானில் வைத்துப் புகைப் போகாமல் சுங்கானுக்கு சில்லு மூடி புகைகுடித்து முழுங்கச் சொல்லவும்.

இப்படி மூன்று நாள் கொடுக்கவும். பத்தியம் – கவுச்சி தள்ளவும். தலைக்குத் தண்ணீர் ஊற்றும்போது நல்லெண்ணெய் தேய்த்து குளிக்கவும்.

360. மேல் போட மருந்து

அவுத்திக்கீரைச் சாறு பிழிந்து பஞ்சியில் போடவும். அதில் காயாவிட்டால் இரசத்தை வெண்ணெய் போட்டு அரைத்து வழித்து வைத்துக் கொண்டு கஞ்சியில் பிடித்துப் போடவும். காய்ந்து போகும்.

361. இரச மெழுகு

இரசத்துக்கு விளக்கெண்ணெய் விட்டரைத்துச் சிமிழில் வைத்துக் கொண்டு குண்டுமணியிடை சுக்கில் வைத்துக் கொடுக்கவும். இந்தப்படி மூன்றுநாள் ஆறு வேளை சாப்பிடவும். புளி, புகையிலை தள்ளவும்.

362. அய செந்தூரம்

அயம் ஒரு பலம் வாங்கி எலுமிச்சம் பழச்சாறு விட்டு ஊற வைத்துக் கழுவிப் போட்டு நாவல்பட்டை சாறு பிழிந்து அதில் போட்டு ஊறவைத்து சில்லில் வைத்து சில்லுமூடி சீலைமண் செய்து ஐம்பது விராட்டியில் புடம் போடச் செந்தூரமாகும்.

363. தாளக பஸ்பம் – அனுபானம்

நெய் 6 பலம் ஊத்தின எண்ணெய் 6 பலம்
பத்தாய் கல்கண்டு 4

இது மூன்றையும் மத்தித்து ஒரு கரண்டி நெய்யில் பவளபஸ்பம் ஒரு அரிசியிடை கல்நார் பஸ்பம் ஒரு அரிசியிடை போட்டு மத்திச்சி கொடுக்கவும். பத்தியம் – லேசி.

364. பூர பஸ்பம்

பூரம் 1 வராகன், சரக்கொன்றை அரைத்து பழத்தளவு கவுசம் செய்து 2 சீலைமண் செய்து ஒன்றரை விராட்டியில் புடம் போடவும்.

பூரம் 1 $^1/_2$ பலம், பால், நண்டு – 9 எல்லாம் ஒன்றாக அரைத்து வில்லை செய்து காயவைத்து சில்லில் வைத்து சில்லு மூடி சீலைமண் செய்து மணவரையில் வைத்து மேலே விறாட்டி அடுக்கி புடம் போடவும். பஸ்பம் ஆகும். தேன் நெய்யில் அரிசியிடை கொடுக்கவும்.

365. பீத ரோகிணி மாத்திரை

சங்கு	சுக்கு	மிளகு
திப்பிலி	அரிதாரம்	அதிமதுரம்
புங்கம் வித்து பீதரோகணி	துத்தம்	மனோசிலை

வகைக்கு நந்தியா வட்டம் சாறு விட்டு தேன் விட்டு ஒரு சாமம் அரைத்து பயிறு போல உருட்டி நிழலுலர்த்தி முலப்பாலில் போடவும்.

தென்னம்பட்டைச் சாற்றில் இழைத்துப் போடவும். பூவு, சதை வெந்து இருத்தல் இவையெல்லாம் கரையும்.

இதுக்கு எண்ணெய்

உழக்கு வெள்ளக் குண்டு மணிச்சாறு $^1/_2$ படி, நல்லெண்ணெய் விட்டு பதமாக எரித்து ஒருநாள் விட்டு ஒருநாள் முழுகவும். பித்தநீர் கரைந்து வெளிச்சமாகும். பத்தியம் – புளி தள்ளி இரசம் சாதம் சாப்பிடவும். மறுநாள் எல்லாம் சேர்க்கவும்.

366. தாளக பஸ்பம்

பேய்ப் பீக்கன் சாற்றிலே ஒருநாள் ஊறவைத்து மறுநாள் பொன் முசிட்டை அரைத்து விளாங்காய் மொத்தம் கவுசம் கொடுத்தது. ஏழுசீலைமண் செய்து பத்து விராட்டியில் புடம் போட பஸ்டமாகும்.

367. வீர பஸ்பம்

வீரம் 5 வராகன், குமரிவேர் அரைத்துக் கவுசம் கட்டி கொடுத்து ஏழு சீலை மண் செய்து 4 விராட்டியில் புடம் போட்டு பஸ்பமாகும். இந்தப்படி கீழாநெல்லியிலும் அப்பைக் கோவைக் கிழங்கிலும் வைக்கலாம்.

368. இலிங்க மெழுகு

கோழிமுட்டைத் தயிலம் இறக்கி அரைப்பலம் இலிங்கத்துக்கு சுருக்கு கொடுக்க மெழுகாகும்.

369. வீர மெழுகு

வீரம் 2 $^1/_2$ வராகன்	பூரம் 1 $^1/_2$ வராகன்
இரசம் ஒரு வராகன்	கசகசா இருபாகம்
தேள் கொடுக்கிவேர் 1 வராகன்	சன்ன இலவங்கப்பட்டை1

இவையெல்லாம் எலுமிச்சை பழச்சாறு விட்டரைத்துக் கொண்டு குன்றியிடை கொடுக்கவும். பெரியதம்பி பிள்ளை முறை கைபாகம்.

கொடிகள்ளி வேர், சன்னலவங்கப்பட்டை கொஞ்சம் போட்டுக் கொள்ளவும்.

370. இலிங்கக்கட்டு

கீழே மூன்று செங்கொட்டை வைத்து அதன்மேல் லிங்கத்தை வைத்து மேலே மூன்று செங்கொட்டை வைத்து எரிக்கவும். இந்தப்படி 5 முறை வைத்தெரிக்கவும். இலிங்கம் உருகிக் கட்டும். சகல வியாதிக்கும் கொடுக்கலாம்.

371. கண் இமை

வெள்ளைக் குண்டுமணி விதை அரைப்படி தோலைப்போக்கி பிதரோகிணி அரைப்பலம் இரண்டையும் பசும்பால் 2 படியில் போட்டு எரித்துப் பிறை குத்தி வைத்துக் காலையில் கடைந்து வெண்ணெய் எடுத்து வைத்துக் கொண்டு கண்ணில் மூன்று நாள் போட வெளிச்சமாகும். மோரை ஊத்தி விடவும். கை கண்ட முறை.

372. வெள்ளைக்கி சூரணம்

அகில்கட்டை	சந்தனம்	ஏலம்
இலவங்கப்பட்டை	கிராம்பு	சோம்பு
அதிமதுரம்	அருகன் வேர்	சித்தாமுட்டி

கார் போக அரிசி	வேப்பிலை	சோம்பு
தேத்தாங்கொட்டை		

வகைக்கு $^1/_2$ பலம் உலர்த்தி இடித்து சூரணம் செய்து சரியிடை கல்கண்டு சேர்த்து திரிகடி காலைமாலை பசும்வெண்ணெயில் மத்திச்சு சாப்பிட தீராத வெள்ளை நீரெறிவு உடனே தீரும். வறுத்த உப்பு, புளி சேர்த்துச் சாப்பிடவும்.

373. வாய் இரணத்துக்குக் கசாயம்

வேலம் இலை, செம்பருத்தி, வில்வம், துத்தி, பூண்டு, கீழாநெல்லி, வெந்தயம்

இவை ஓர் நிறையாக இடித்து ஒரு படி தண்ணீர் விட்டெரித்துப் பாதியாக்கி மூன்று நாள் ஆறுவேளை சாப்பிட வாய் இரணம் தீரும்.

374. பல் நோய்

கண்டங்கத்திரி, சமூலமும் சட்டியில் போட்டுக் கருக்கி சாம்பலாக்கிப் பல் தேய்க்கப் பல்வலி நீங்கும்.

375. சன்னித் தயிலம்

நல்லெண்ணெய் $^1/_2$ படி	மலைவேம்பு விதை 2 ஆழாக்கு
சவுரி பழம் 1	கஸ்தூரி மஞ்சள் 2 பலம்
கருஞ்சீரகம் 2 பலம்	பளிங்கு சாம்பிராணி $^1/_4$ பலம்

ஆறும் ஒன்றாக தூள் செய்து போட்டு அடுப்பேத்தி தீயில் கமகம வென்று வந்த உடனே இறக்கி ஆறவைத்து இடித்துத் தூள் செய்து வைத்துக் கொண்டு மூன்று விரல் கொண்ட தூள் இருவேளையும் 3, 5, 7 நாட்கள் சாப்பிடவும்.

தீரும் நோய்

ரோகம், மேகம் 21, மேகரணம், சூலை 18, கிரந்தி, புண், கண்டமாலை, கன்னப்புத்து, யோனிப் புத்து, கண்டத்துக்கு மேல்பட்ட ரோகமெல்லாம் தீரும்.

பத்தியம் – வாழைக்காய், பறங்கிப்பட்டை, நல்லெண்ணெய், கடுகு, மஞ்சள், பாகற்காய், அவத்திக்கீரை, சுறாக் கருவாடு, திருக்கைக் கருவாடு தள்ளவும். உப்பு, புளி எல்லாம் சேர்க்கவும். தலைக்கு விளக்கெண்ணெய் தேய்த்துக் குளிக்கவும்.

376. பலகரணை பஸ்பம்

ஒரு பலம் பல கரையை ஆடாதொடைச் சாற்றில் 5 நாட்கள் ஊற வைத்து எடுத்து மேற்படி பச்செலை அரைத்துக் கவுசம் கொடுத்து சீலைமண் செய்து 10 விராட்டியில் புடம் போட பஸ்பமாகும்.

அந்த பஸ்பத்தில் அரிசி, தேன், நெய்யில் கொடுக்க இருமல் ஈளை தீரும்.

377. பவள பஸ்பம்

பவளம், வெள்ளாட்டுப் பிச்சியில் 4 நாட்கள் ஊற வைத்து 30 விராட்டியில் புடம் போடவும்.

அனுப்பானம் – தூதுவளைச் சாரும் முலைப்பாலும், சரிபாகம் சேர்த்துக் கொடுக்கவும். மேற்படி குளிக்க நல்லெண்ணெய் மாவுலிங்கப்பட்டை, மிளகு, வெள்ளைப்பூண்டு எண்ணெய் எரித்து முழுகவும்.

378. கடுக்காய் லேகியம்

கடுக்காய்த் தோல் 10 பலம் சிவதை வேர் 2 பலம்
நிலையாரை இலை 2 இவைகளைச் சூரணம் செய்து

கரிசாலை 2 பலம் வல்லாரை 2 பலம்
புளியாரை 2 பலம் நிலயாவரை 2 பலம்
இவைகளை இடித்து சூரணம் செய்து

கடுகு ரோகிணி	கிராம்பு
திப்பிலி	சிறுநாகப்பூ
வாலுழுவை	சிங்கி
கருஞ்சீரகம்	மிளகு
கொத்தமல்லி	தாளிசபத்திரி வகைக்கு 1/4 பலம்

தூக்கி இடித்து மிளகு சூரணத்தில் சேர்த்து நெய், தேன், சர்க்கரைப் போட்டு லேகியமாக கலந்து காலைமாலை கொட்டைப் பாக்களவு உட்கொள்ளத் தீரும்.

தீரும் நோய்

சலக்கட்டு, மலக்கட்டு, கோழக்கட்டு, உஷ்ணவாய்வு, மேககிரந்தி 213, கால் கை எரிவு, குலையெரிவு, பிரட்டல், மூலசூடு, கிரந்தி, இளப்பு, இருமல், புகைச்சல் தீரும். வறட்சி சோகைத் தீரும்.

379. இலிங்க மெழுகு

இலிங்கம் 1 பலம், கெந்தகம் 1 பலம் இரண்டும் ஈர வெங்காயச்சாறு ஒரு படியெடுத்து 4 சாமம் சுருக்குக் கொடுத்து கல்வத்தில் போட்டு அரைத்து வைத்துக் கொண்டு குண்டிடை பனை வெல்லத்தில் வைத்துச் சாப்பிடச் சொல்லவும்.

குக்கில் 2 பலம், கருஞ்சீரகம் 2 பலம், கருங்குங்கிலியம் 2 பலம் இவையனைத்தையும் புது குண்டு சட்டியில் மேனிச் சாறு அரைக்கால் படியிலிட்டு பறங்கிப்பட்டையைக் கொட்டைப் பாக்களவு நறுக்கிப் போட்டுப் பிசிறிக் காயவைத்துப் பீச்சங்குச்சாறு அரைக்கால் படி விட்டுப் பிசிறிக் காயவைத்து பசும்பால் அரைக்கால் படி விட்டுப் பிசிறிக் காயவைத்து பசுவின் நெய் 2 பலம் விட்டு பிசிறிக் காயவைத்து மேற்படி முன்சரக்கில் இரசமும் இலிங்கமும் தவிர சரக்கெல்லாம் தனித்தனியே தூள் செய்து முன் குண்டு சட்டியில் ஒன்றின் மேல் ஒன்று தூவி அதில் குழிச் செய்து போட்டு இரசத்தை விடவும்.

சட்டி வாய்க்கு வலை வேடு கட்டிப் பறங்கிப்பட்டையைக் கொட்டிப் பரப்பி மேல் சட்டி மூடி சந்து வாய்க்கு சீலைமண் செய்து அடுப்பில் வைத்து அரை சாமம் எரிக்கவும். வாசனை வரும்.

380. வீரமை குணம் 8

வீரம் 1 வராகன், செங்கொட்டை பால் 2 $^1/_2$ வராகன், கோழிமுட்டை வெள்ளைக்கருவைத் தள்ளி சிவப்பு கருத் தயிலம் 2 $^1/_2$ வராகன் எல்லாம் ஒன்றாகப் போட்டு அரைக்க மையாகும். அதை வழித்துச் சிமிழில் வைத்துக் கொண்டு சுக்கில் அரிசியிடை வைத்துக் கொடுக்கவும்.

மூன்று நாட்கள் ஆறு வேளை கொடுக்கவும். வலுவறிந்து பத்தியம் சொல்லவும். பனை வெல்லத்தில் வைத்துக் கொடுக்கவும்.

381. சீனப்பதங்கம்

பறங்கிப்பட்டை 6 பலம்	இரசம் 2 வராகன்
சீனாக்காரம் 2 வராகன்	சாதிலிங்கம் 2 வராகன்
சூடம் 2 வராகன்	கிராம்பு 2 வராகன்
சாம்பிராணி 2 வராகன்	நீரடி முத்து 2 பலம்
ஓமம் 2 பலம்	கார்போகரிசி 2 பலம்

ஒனற்பக சேர்த்து சூரணம் செய்து கொடுக்கவும்.

382. வில்வாதி லேகியம்

இஞ்சி சாறு $^2/_4$ படி	வல்லாரைச் சாறு $^2/_4$ படி
கைய்யாந்தகரைச் சாறு $^2/_4$ படி	பழச்சாறு $^2/_4$ படி
ஆலமுட்டு இடித்துக் கிழாயம் $^2/_4$ படி	சுக்கு 1 பலம்
பணங்கல்கண்டு 1 பலம்	சீரகம் 1 பலம்

இவை இடித்து வஸ்திர காயம் செய்து படி ஊற்றின எண்ணெய் காலரை படி இவையெல்லாம் லேகியம் செய்து சுண்டக்காய் பிரமாணம் சாப்பிடக் கொடுக்கவும்.

பத்தியம் – இச்சாபத்தியம்.

383. இளப்பு, எலிகடி இவைகளுக்கும் காசத்துக்கும்

வெள்ளெருக்கன் பூ நுனி தண்டு, தவசி முருங்கை இலை இரண்டும் அரைத்துக் கயிறு போலுருட்டிக் காயவைத்துப் புகையிலை இலையிலே வைத்து சுருட்டிப் புகைக் குடிக்கவும். அதன்படி நான்கு வேளை கொடுக்கவும். குத்தாளைப் பச்சை நெல்லு கஞ்சி காய்ச்சி உப்பில்லாமல் கொடுக்கவும்.

384. கருவங்க பஸ்பம்

கருவங்கத்தில் வெள்ளத் துத்தியிலை அரைத்துக் கவுசம் கொடுத்து 25 விராட்டியில் வைக்க பஸ்பமாகும். நண்டு ஓடும் அரைத்து கவுசம் கொடுத்து அதன் மேலே வெள்ளை துத்தி அரைத்துக் கவுசம் கொடுத்து 50 விறாட்டியில் போடவும். நண்டு ஓடும் கவசம் வைத்து கொடுக்கவும்.

வயிறு உப்பிசம் கண்டு வலம் சலம் கட்டிக் கொண்டால் பசலிக்கீரை எலுமிச்சங்காய் அளவு அரைத்து ஊற்றின எண்ணெயில் கலந்து கொடுத்தால் பேதியாகும். அதிகமாகப் போனால் சுண்டக்காய் வறுத்துக் கிழாயமிட்டுக் கொடுக்க நிற்கும். இரசம் சாதம் கொடுக்கவும்.

385. இருமலுக்குச் சூரணம்

சுக்கு 1 வராகன்	ஏலம் 2 வராகன்
கிராம்பு 2 வராகன்	மிளகு 4 வராகன்
அதிமதுரம் 5 வராகன்	சீனி 15 வராகன்

இவை சூரணம் செய்து 10 நாட்கள் மூன்று விரல்கடி பிரமாணமிட்டு சாப்பிடக் கொடுக்கவும்.

முத்தித் தூதுவேளைச் சாறு காலரை படி, முசுமுசுக்கை சாறு காலரை படி, சீயக்காய் அரப்பிட்டு தேய்த்து ஒரு வெந்நீராய் விடவும்.

386. அண்டவாதம் விரைவாதத்துக்கு வேது

திராயிலை ஒரு கொத்து, வேப்பம் கொழுந்து, கல்லுப்பு

சட்டியை நெருப்பு பறக்கக் காயவைத்து குப்பர கவிழ்த்து (தலைகீழாக) அதன்பேரில் திராயிலையை வைத்து அதன்பேரில் உப்பு வைத்து அதன்மேல் வேப்பங்கொழுந்து வைத்து அதன்மேல் உப்பு வைத்து வேது பிடிக்கவும்.

387. வாய்வுக்கு வீரமெழுகு

வீரம் 1 வராகன் இதனுடன் மிளகு தூள் செய்து பரப்பி நடுவே வீரத்தை வைத்துப் பொட்டணங்கட்டி ஒரு இளநீர் தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து எடுத்து 4 விராகனெடை ஓமமும் சீரகத்தையும் போட்டு அரைக்கும் போது தேன் விட்டு ஒரு சாமம் அரைத்து எடுத்துக் கொம்பு சிமிளில் வைத்துக் கொண்டு அதை மிளகுப் பிரமாணம் பனைவெல்லத்தில் வைத்துக் கொடுக்கவும். பத்தியம் – இச்சாபத்தியம்.

388. மஞ்சளுக்கு நாக வெட்டை

பெருங்கண் நாகம் ஒரு பலம் வாங்கி சதாப்பு இலை சிறு தேங்காயளவு அரைத்து நாகத்துக்குக் கவுசம் செய்து முளப்புடம் போட்டு எடுத்துக் கொண்டு பொன்னூமத்தன் இலையை அரைத்து முன் பிரமாணம் கவுசம் செய்து 2 சீலைமண் செய்து எடுக்க ரசிதகம் போலிருக்கும். இதை வெள்ளியில் பன்னிரண்டரைக்கு கொடுத்து உருக்க வாட்சி 8 காணும்.

389. கருவங்க வெட்டை

கருவங்கம் ஒரு பலம் வாங்கி வெள்ளைக் குண்டு மணியிலையும், கறிமுள்ளியிலையும் சமமாக சாறெடுத்து கொண்டு வங்கத்தை 11 முறை உருக்கிச் சாய்த்தெடுத்து மேற்படி பச்சிலை அரைத்துத் தேங்காய்ப் பிரமாணம் கவுசம் கொடுத்து முளப்புடம் போட்டெடுக்க வெட்டையாகும்.

390. இலிங்கக்கட்டு

இலிங்கம் ஒரு பலம் வாங்கிக் காட்டமணக்குப் பாலால் 4 சாமம் சுருக்குக் கொடுக்க லிங்கம் கட்டும்.

தோண்டி வைத்துக் கொண்டு கொடி முந்திரிப்பழம் கொட்டை நீக்கி விட்டு மைபோல இடித்து இந்துப்பும் போட்டு இடித்து பின்பு முன் துவளையும் போட்டு மையாக இடிக்க லேகியமாகும். எடுத்துக் கொண்டு காலை மாலையில் சுண்டக்காய் பிரமாணம் கொடுக்கவும்.

பத்தியம் – இச்சாபத்தியம்.

கிழங்கு சேர்க்கலாம். பிள்ளைகள் அண்டி மூலக்கடுப்புக்கும் கொடுக்கலாம். தள்ளுபடி புளி, உப்பு

இதற்கு லேகியம் சுக்கு ஒரு துண்டு, வெந்தயம் ஒரு பலம், சீரகம் 1 பலம் இது மூன்றையும் இளம் வறுப்பாக வறுத்து சூரணம் செய்து சீனி சர்க்கரை 2 பலம், நெய் விட்டுக் கலந்து வேகியம் வைத்துக் கொண்டு 11 நாட்கள் சாப்பிடவும்.

391. தாளக பஸ்பம்

புளியம் பரணி சாம்பல் 2 படி சட்டியில் ஒரு பிடி சாம்பல் போட்டு சுத்திச் செய்து தாளகம் ஒரு பலம் மேலே வைத்து அதன் மேல் சாம்பலைக் கொட்டி அமுக்கி மூன்று சாமம் எரித்தெடுக்கப் பஷ்மமாகும். சகல வியாதிக்கும் கொடுக்கலாம்.

392. கருஞ்செம்பை தயிலம்

கருஞ்செம்பைச் சாறு 1 படி, பசும்பால் 1 படி, நல்லெண்ணெய் 1 படி ஒன்றாக அடுப்பிலேத்தி எரித்து வடிக்கட்டி நான்கு நாட்கள் முழுகி வந்தால் மேகசூடு, அந்திசுரம் அஸ்தி வெட்டை, கண்ணெரிவு, காந்தல் தீரும். திரேகம் (உடல்) சுகமாகும்.

393. தூதுவேளை லேகியம்

முருங்கப்பூ –	தூது வேளைப்பூ வகைக்கு $^1/_4$ பலம்
தண்ணீர்மிட்டான் கிழங்கு 2	நன்னாரி வேர் 2 பலம்
நிலப்பனைக் கிழங்கு 1 பலம்	நெருஞ்சி முள் 1 பலம்

அவைகளை சூரணம் செய்து பசும்பால் ஒரு படியில் போட்டு குழம்பாகக் காய்ச்சி லேகியம் போல செய்து 10 பலம் சீனி போட்டு கிளறி பசுவின் நெய் அரைபடி, தேன் உழக்கு விட்டுக் கிண்டியெடுத்து புன்னைக் காயளவு கொடுக்கவும்.

தீரும் நோய்

பிரமியம், மேகநோய், எலும்புருக்கி, பிரமேகம் தீரும். காலில் பிலமுண்டாகும். இந்திரியம் கட்டும். பத்தியமில்லை.

394. இருமலுக்கு லேகியம்

ஆடாதொடை சமூலம் சூரணம் செய்து 10 பலம் மிளகு

கொத்தமல்லி	திப்பிலி	சுக்கு
அதிமதுரம்	தாளிசபத்திரி	இந்துப்பு
இம்புறா வலயம்	கோஷ்ட்டம்	சீரகம்
கருஞ்சீரகம்	கடுக்காய்ப் பூ	அதிவிடையம்
கிராம்பு	தேக்கு	

இவையாவும் ஓரிடையாகச் சேர்த்து இடித்துச் சூரணம் செய்து நெய்யில் அல்லது தேனில் வெருகடிப் பிரமாணம் அந்திசந்தி இருநேரம் கோடுக்க 6 வேளை, 3 நாட்கள் இருமல் குணமாகும்.

பத்தியம் – இச்சாபத்தியம். புளி, புகையிலை, கருவாடு, மீன் தள்ளுபடி செய்யவும். வெள்ளாட்டுக்கறி, கத்திரி, முருங்கைப் பிஞ்சு, பசுவின் பால், தயிர், நெய் சேர்த்துக் கொள்ளவும்.

395. வீர செந்தூரம்

வீரம் 2 விராகன், கெடா பன்றி இறைச்சித் தூள் போட்டு மூன்று சொட்டு பிரம ராக்காச்சி பால்விட்டு வாய்பாடு கட்டி

நன்றாகக் காய்ந்தவுடனே சுண்ணாம்பை சீலையில் தடவி மேற்படி மருந்துக்கு 3 சீலைமண் செய்து நன்றாக காய்ந்தவுடன் பிரம ராக்காச்சி இலையை அரைத்து கவுசம் செய்து ஒரு சீலைமண் செய்து 5 விரளியில் புடம் போடச் செந்தூரமாகும். அந்த செந்தூரத்தில் பணவிடை கொடுக்க சகல ரோகமும் ஓடிப்போகும்.

396. வீர செந்தூர வட்டை

வீரம் 2 விராகன், கோழிமுட்டை ஒன்று வாங்கி காசி போல் உடைத்து வெள்ளைக் கருவை நீக்கிக் கீழே ஊற்றி விட்டு அதில் வீரத்தைப் போட்டு அது கொள்ளுமளவிற்கு விட்டு வெய்யிலில் வைக்கவும்.

397. வீர பஸ்பம்

வீரம் 4 விராகன் கொண்டு வந்து ஒரு கோணிப்பையில் போட்டு பிரம ராக்காச்சிப் பால் மிதக்க விட்டு வெயிலில் வைக்கவும். பிரட்டி பிரட்டி கொடுக்கவும். இந்தப்படி மூன்று நாள் ஆறவிட்டு நான்காம் நாள் அப்படியே பிரட்டி எடுத்து மேற்படி பச்சிலையை விளாங்காய்ப் பிரமாணம் அரைத்து கவுசம் செய்து 3 சீலைமண் செய்து 5 விரளியில் வைக்கப் பஸ்பமாகும். பின் எடுத்து அரிசியிடை சகலரோகத்துக்கும் கொடுக்கலாம்.

398. அந்திமாலை வெள்ளெழுத்து நேத்திர மறைவுக்கு எண்ணெய் முழுக்கு

வேம்புக்காய் சாறு 4 படி
பசும்பால் 1 படி
நல்லெண்ணெய் $^1/_2$ படி
அரத்தை 2 வராகன்
வசம்பு 2 வராகன்

இவையெல்லாம் ஒன்று சேர்த்து எரித்து மெழுகு பதத்தில் வடித்து ஒருநாள் விட்டு ஒருநாள் முழுகவும். மேகநீர் அந்திமாலை வெள்ளெழுத்து தீரும். பத்தியம் – இச்சாப் பத்தியம்.

399. ஓடு விப்புருதி கட்டிக்கு மருந்து

சத்திச்சாரணைக் கிழங்கு, ஒரு கொட்டைப் பாக்களவு வெந்நீர் விட்டரைத்து வெந்நீரில் கலந்து உள்ளுக்குக் கொடுத்து

7 நாட்கள் பத்தியம் கடிசி இருக்கவும். ஒன்பதாம் நாள் தலைக்குத் தண்ணீர் விடவும்.

400. மடல் துத்தம் பஸ்பம்

மடல் துத்தம் 3 பலம், பொற்கையான் சாறு விட்டரைத்து 10 விராட்டியில் 10 புடம் பஸ்பமாகும்.

ஒரு சல்லியே மூலப்புளியில் 3 நாட்கள் ஊற வைத்தெடுத்து குகையில் வைத்து உருக்கி மடல் துத்தபஸ்பம் ஒரு குண்டு மணியிடை போட்டு உருக்கி சாய்க்க வயசி ஐந்தாகும்.

401. வெள்வங்க நீர் வாங்க

வெள்வங்கம் பலம் 2 வாங்கி இலுப்பை நெய்யில் உருக்கி சாய்த்து தகடு தட்டிப் பொடி செய்து சட்டியை அடுப்பில் வைத்துக் குதிரைக்குளம்பு வெள்ளைப்புப் பச்சிலையை அரைத்துப் போட்டு அதில் வங்கப் பொடியைப் போட்டு ஆப்பையால் நெருப்புப் பறக்கக் கடைந்து கொட்டி இந்தப்படி 10 முறை செய்ய வங்கநீர் வெள்ளியாகும். கைகண்டது.

அந்தி சந்தி இரண்டு வேளை 6 நாள் சாப்பிடவும். பழையது எருமை மோர் விட்டு சாப்பிடவும். மோச்சைத் தட்டைப் பயிறு, செம்புலிக் கறி, பறங்கிக்காய், பூசனிக்காய், பாகற்காய் தள்ளவும், தலைக்குத் தண்ணீர் போடுகிறது, முத்தின ஆமணக்கு எண்ணெய் தேய்தது அரப்பிட்டு முழுகவும். உப்பு புளி எல்லாம் சேர்க்கவும்.

தீரும் நோய்

பக்கவாய்வு, பாரிச வாய்வு, சூலை திமிரு வாய்வு, கடுப்புகட்டி, கிரந்தி புண்ணு, சொரி மேகம் எல்லாம் போகும். கருமேகம், வெண் மேகம் எல்லாம் தீரும். அரைத்து ஆரியவுடன் எருமை நெய் விட்டுப் பிரட்டிக் கொள்ளவும்.

குமட்டிக்காய், மிளகு கொடுத்து இரத்தம் கண்டால் நிறுத்த கசாயம்

ஆவாரம்பட்டையும் கடுக்காயும் கசாயம் போட்டுக் கொடுக்கவும். பசும்பால் கொடுக்கவும்.

402. நாலாம் முறை காய்ச்சலுக்கு மருந்து

மிளகு 5, வெள்ளுள்ளி 5 பலம், நண்டு ஒன்று மேல் தோல் போக்கி உத்தாமணி இலையெடுத்து அம்மியில் மைய அரைத்து உருட்டிக் கொடுக்கவும். இந்தப் பிரகாரம் 5 நாட்கள் 2 வேளை கொடுக்கவும்.

பத்தியம் – கடிசி. ஏழாம் நாள் தலைக்குத் தண்ணீர் விடவும்.

403. சயித்திய சன்னி தேமலுக்கு மருந்து

வெள்ளிண்டு, மாவலிங்கப்பட்டை, சங்கம் வேர்ப்பட்டை, குட்டி விளாம் இலைச் சற்று வாட்டிக் கொண்டு எல்லாம் சரியிடையாக எடுத்துக் கொண்டு சுக்கு, சித்தரத்தை ஒவ்வொரு தாரெடுத்து பஞ்சு போல் தட்டி எல்லாம் ஒன்றாக போட்டு இடித்து வெந்நீர் போட்டு சற்று நேரம் கலந்து பிறகு துணி போட்டு வடிக்கட்டிக் கொண்டு வீரம், பூரம், இலிங்கம் இரசசெந்தூரம் இழைத்து உள்ளுக்குக் கொடுத்து விடவும்.

மேலுக்குத் துவளை மிளகாய் 21, முருங்கைப்பட்டை, வெள்ளுள்ளி தட்டிப் போட்டு வெப்பெண்ணெயில் சேர்த்துக் காய்ச்சி ஆறியவுடன் துவளையிடவும். பத்தியம் – கடிசி.

404. வீர செந்தூரம்

இலிங்கம் 2 வராகன், இரச செந்தூரம் 1 வராகன், வீரம் 1/2 வராகன் இவை மூன்றையும் மருதோன்றி இலையரைத்துக் கவுசம் கொடுத்து சீலைமண் 2 செய்து மூலிகை கருக புடம் போட்டு எடுத்து வைத்துக் கொண்டு அரிசியிடை செந்தூரம், சுக்கு, நெய், தேனில் வைத்து கொடுக்கவும். சுரம் 64, சன்னி 13, வாய்வு 80 – வும் தீரும்.

பத்தியம் – இச்சாபத்தியம். அனுபானம் பனைவெல்லம்.

405. சகலவாய்வு, சூலை, கிரந்தி, புண்ணுக்கு வல்லாதி

செங்கொட்டை 50, மூக்கு நறுக்கி எருமை சாணிப் பாலில் இரவுபகல் 30 நாழிகையும் ஊற வைத்து மறுநாள் கழுவி காயவைத்தெடுத்து இடித்து இரசம் 2 வராகன், பூரம் 2 வராகன் பனைவெல்லம்

இவையெல்லாம் ஒன்றாக விட்டு இடித்து பின்பு கல்வத்தில் போட்டு இடித்து மை போல் அரைத்து வேளை ஒன்றுக்கு சுண்டக்காய் வீதம் கொடுத்து வரவும். கை கண்டது. 2 வேளை அந்திசந்தி 5, 7, 9 நாட்கள் கொடுக்கவும்.

406. தலைவலி, புடறி இசிவு

தழுதாளை	எருக்கிலை	நொச்சியிலை
வேப்பிலை	மலைவேம்பு இலை	கருவேப்பிலை
சிவனார் வேம்பிலை		

இவையனைத்தும் வேப்பெண்ணெய் விட்டு வதக்கி ஒத்திட்டுக் கொடுக்கவும். தீரும்.

407. லிங்க மெழுகு

இலிங்கம் 2 வராகன், சூடம் 1 வராகன், பொரித்த வெங்காரம் இவை மூன்றையும் முலைப்பாலில் விட்டு ஒரு சாமம் அரைக்கவும். தேன் விட்டு ஒரு சாமம் அரைத்துச் சிமிழில் வைத்து சன்னி விசபேதிக்குப் பணவிடை கொடுக்கத் தீரும்.

408. சன்னிக்குத் துவளை

முருங்கைப்பட்டைச் சாறு வாங்கி பழைய கடுகு ஒரு பலம் வாங்கி அரைத்துக் கை கால் நகமெல்லாம் துவளையிட்டு தேய்த்து தடவி ஒரு வருடத்துச் சாவக்கோழி நெஞ்சைப் பிளந்து கடுகு அரைத்து தடவித் தலையில் வைத்துக் கட்டவும். புறா குஞ்சு பிடித்து நெஞ்சைப் பிளந்து தலையில் வைத்துக் கட்டவும். தீரும்.

409. நீரடைப்பு

சிறுபீளை வேர்ப்பட்டை
பனைவேர்ப் பட்டை
தேத்தாம் வேர்ப்பட்டை
நெருஞ்சி வேர்ப்பட்டை
பொன்னாங்கன்னி வேர்ப்பட்டை

இதையெல்லாம் இளநீர் விட்டு அரைத்து இளநீர் விட்டு அரைத்து இளநீரில் கலக்கிக் கொடுக்க நீர் இறங்கும்.

சீரகத்தை நுணுக்கி அண்டம் வெள்ளக் கருவு விட்டு குழப்பி வயிற்றில் தேய்த்து முள்ளெலும்பு வரையும் தடவி பூசி கொள்ளவும். நீரெறங்கும்.

410. வலக்கட்டு நீர்க்கட்டுக்கு மருந்து

சித்தாமணக்கு எண்ணெய் அரைக்கால் பலம், காணிச் சாறு அரைக்கால் பலம் இரண்டும் கலந்து ஒரு படியில் ஊற்றிச் சட்டியில் தண்ணீர் ஊற்றி அடுப்பில் வைத்து கொதிக்க விட்டு எடுத்துக் கொடுக்கவும். வலமும் நீரும் இறங்கும்.

கற்ப பெண்களுக்கும் கொடுக்கலாம். நீரடைப்பு மலஅடப்பு நீங்கும்.

411. முலைகுத்துக்கு மருந்து

அவுச்சாறு 1 படி
வசம்பு 1 பலம்
பசுவின் நெய் 1 படி
வெள்ளைப்பூண்டு 1 பலம்
திருகுகள்ளிப்பால் $^1/_4$ படி

எல்லாம் எரித்து உள்ளுக்குப் போட்டு மேலேயும் தடவவும். இப்படி மூன்று நாட்கள் போடவும்.

பத்தியம் – கடிசி.

தீரும் நோய்

விப்புருதி, சூலைக்கட்டு, சூலைக்குத்து, வீக்கம், அரையாப்பு, பவுத்திர வீக்கம், கட்டு வீக்கம், பிளவை சகலமும் தீரும். கைகண்டது.

412. வாந்தி

சீரகத்தை பசுவின் நெய் விட்டு அரைத்துத் துணியில் தடவி திரி சுருக்கிட்டுக் கொழுத்திப் புகைபிடிக்க நிற்கும். ஒரு படி அரிசி பொரித்து சுக்கு தட்டி போட்டு முத்தக்காசு 10 நறுக்கிப் போட்டு நீலி வேர் விளாங்காய் மொத்தம் அரைத்துப் போட்டு கசாயம் வைத்துக் கொடுக்கவும்.

413. பொருமல் வலி

வேம்பம் அரிசி கால் படி கருச்சி சாம்பலாக்கி அதில் மிளகு 2 வராகன், சீரகம் 2 வராகன் கூடப் போட்டுக் கருக்கிக் கசாயமிட்டுக் கொடுக்கவும்.

வேறு

வேலிப்பருத்தி வேர் நெருப்பிலே சுட்டு விட்டு கருக்கிப் பிழிந்து கொடுக்கத் தீரும்.

கோழிக்காரத்தைச் சட்டியில் விட்டுக் கருக்கிக் கொட்டி விட்டு செருநாம துத்தியிலையை மூன்று அறுப்பு அறுத்துப் போட்டு கருக்கச் சிவக்க வறுத்து ஓமம் 1 வராகன், வெள்ளுள்ளி, வசம்பு தட்டிப் போட்டு எரித்து மூன்று நாட்கள் கொடுக்கவும். தீரும். கைகண்டது.

414. ஓடுவிப் புழுதி பவுத்திரம் முளை மூலம்

இரஸ்தாளிப் பழம் கொண்டு வந்து அதைப் பிளந்து பிறாம்பால் விட்டு மூடி உள்ளுக்குக் கொடுக்கவும். இப்படி மூன்றுநாட்கள் கொடுத்து புண்ணுக்கு மேலேயும் போடவும்.

பத்தியம் – கருங்குருவை அரிசி பொங்கி வெள்ளாட்டுப் பால் போட்டுக் கொடுக்கவும். உப்பு, புளித் தள்ளவும்.

பத்தியம் – கடிசி.

415. மூலம்

கருணைக்கிழங்கும், பொன் முசுட்டை வேரும், பசுவின் நெய்யில் பணியாரம் சுட்டுக் கொடுக்கத் தீரும்.

416. குன்மம் உஷ்ணம்

கடுக்காய்த் தோலும், காணிச்சாறும் விட்டரைத்து வில்லைத் தட்டிக் காயவைத்து 15 எருவில் புடம் போட்டெடுத்து மறுபடியும் வெள்ளக்கருவும், தோலும் தள்ளி அரைத்து வில்லை தட்டி காயவைத்து எரு விறாட்டியில் வைத்துப் புடம் போட்டு எடுத்தால் கழும் பத்துப் போச்சு பணவிடை தேனில் கொடுக்கக் குன்மம், குஷ்ட்டம் தீரும். கை கண்டது.

417. இரத்த பிரமி, சீ பிரமி, இரத்த வெட்டை

விளக்கெண்ணெய், ஈருள்ளிச் சாறு, தேசிப்பழச் சாறு, தேங்காய்ப் பால், கற்றாழை சாறும் சுத்திச் செய்து மணத்தக்காளிச் சாறு களச்சியிலைச் சாறு வகைக்கு $^{1}/_{2}$ படி எல்லாம் ஒன்றாகச் சேர்த்து கடுகு ரோகிணி ஒரு பலம் வறுத்துப் போட்டு எரித்துக் கடுகு உள்பட வைத்துக் கொண்டு மூன்றுவேளைக்கு மூன்று நாட்கள் சாப்பிடத் தீரும். பத்தியம் – இச்சாபத்தியம்.

நெருஞ்சிப்பூ ஈரவெங்காயமும் இடித்துக் கொடுக்கத் தீரும்.

நெருஞ்சிப்பூ, முருங்கைப்பூ சேர்த்துக் கற்றாழை வகை கிரணியளவு 9 படி அரைத்துப் பசுவின் வெண்ணெயில் மத்திச்சு மூன்று நாட்கள் சாப்பிடவும் தீரும்.

மாம்பட்டை, ஒதியம் பட்டையும் இடித்துச் சாறு பிழிந்து பசும்பால் கால்படி விட்டுக் கொடுக்கத் தீரும்.

சிவனார் வேம்பு வேர் 2 விராகன், கடுக்காய் 15 வராகன், 4 தேங்காய்ப் பாலும் கூட்டி அரைத்துக் கொடுக்கத் தீரும்.

418. கா௱ பிளாஸ்த்திரி

வெள்ளைக் குங்கிலியம், கோவைச் சாற்றில் ஊற வைத்து துருசி 15 வராகன் சுண்ணாம்பில் ஊற வைத்து கொதிக்க வைக்கவும். துத்தம் 2 வராகன், பசும்பாலில் கொதிக்க வைக்கவும். மிர்தார் சிங்கி 1 வராகன், சவ்வீரம் $1/_2$ வராகன் இவை இரண்டும் முலைப்பாலில் ஊற வைக்கவும். இரசம் $1/_2$ வராகன் கோவைச் சாற்றில் கொதிக்க வைத்தெடுத்து அவையெல்லாம் பசுவின் வெண்ணெயில் போட்டு அரைத்தெடுத்து கொண்டுத் துணியில் தடவி அனல் காட்டிப் போடச் சலத்தைத் தின்னும்.

419. ஆரபிளாத்திரி, புண்ணுக்கு மருந்து

மண்டைவோடு தூள் 1 பலம், கருங்குங்கிலியம் 7 அரை வராகன், பசும்பாலில் ஊறப் போடவும். துருசி $1^1/_2$ வராகன், பசும்பாலும் நல்லெண்ணெயும் சேர்த்து அரைத்துத் துணியில் தடவிப் போட சகல வியாதியும் புண்ணும் தீரும்.

420. அரையாப்புப் புண் புகைச்சலுக்கு

ஞாயிற்றுக்கிழமை சூரிய உதயத்துக்கு முன்னே

நத்தைச் சூரி வேர் 1 பிடி தை வேளைவேர் 1 பிடி
உள்ளி 1 பிடி

எல்லாம் இடித்து நல்லெண்ணெய் மாகாணியில் போட்டு சூரிய புடம் 3 நாட்கள் வைத்து வேளை ஒன்றுக்குக் கரண்டி வீதம் அந்திசந்தி மூன்றுநாட்கள் கொடுக்கவும். சகல அரையாப்புப் புரைகளும் தீரும். கைகண்டது. பத்தியம் – கடிசி.

421. கொடுப்பைத் தயிலம்

காணிச்சாறு 1 படி, கோஷ்ட்டம் 1 பலம், கடைசரக்கைப் பசும்பாலில் சுத்தம் செய்து மேற்படி பால் விட்டு அரைத்து நல்லெண்ணெய் 1 படி சேர்த்து எரித்து மெழுகு பதத்தில் வடித்துத் தேய்த்து முழுகத் தீரும்.

பித்தக் கிறுகிறுப்பு, மண்டையிடிப்பு, தாகசுரம், உஷ்ண ரோகம், மேலெரிவு, கை கால் காந்தல், சிரசில் சூடு, மார்பு வலி, எரிகுன்மம், கண்ணுக்குக் காந்தி கொடுக்கவும். பழையது தள்ளவும்.

422. செவிட்டுக் காதுக்குத் தயிலம்

கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள், மிளகு, அதிமதுரம் இவையெல்லாம் கருஞ்சட்டி சாறு விட்டு அரைத்து நல்லெண்ணெயில் குழப்பி எரித்து வடித்துக் காதிலே ஊத்தித் தலையில் தேய்த்து முழுகத் தீரும். ஒருநாள் விட்டு ஒருநாள் முழுகவும். கை கண்ட முறை.

423. அந்தர வாய்வுக்கு மருந்து

மாவலிங்க இலை 2 பலம்	வில்வ இலை 2 பலம்
மிளகாய்	கடுக்காய்
வெள்ளவெங்காயம் உரிச்சி 2 வராகன்	களஞ்சி பஸ்பம் 1 பலம்

இவையெல்லாம் கூட்டி அரைத்து மூன்று வேளைக்குக் கொடுக்கவும். எரிச்சல் கண்டால் பசுவின் நெய் சோறு கூட்டவும். ஐந்தாம் நாள் தலைக்குத் தண்ணீர் விடவும். சத்தியநாத உடையார் கை கண்டது.

424. காண்டா அவிழ்தம்

சுக்கு	அரத்தை	திப்பிலி
தெசாவரம்	வால்மிளகு	கிராம்பு
இஞ்சி	வாய்விளங்கம்	கொத்தமல்லி
ஓமம்		

இவையெல்லாம் இளம் வறுப்பாக வறுத்து சூரணம் செய்து தேன் விட்டு மத்திச்சி நாவில் தடவ தோசம் தீரும். அரோசியம் வாத சுரம் சீதளசுரம் தீரும்.

திப்பிலி, மிளகு, சீரகம், வெள்ளவெங்காயம், வெந்நீர் விட்டரைத்துக் குழப்பிக் கொடுக்கத் தீரும்.

425. கண் மாத்திரை

சங்கு சுக்கு மிளகு,
திப்பிலி அரிதாரம் அதிமதுரம்
புங்கன்பருப்பு பீதரோகிணி வெள்ளைத்துத்தம்
மனோசிலை

இவை வகைக்கு 1 வராகன் நந்தியாவட்டம் பூச்சாறு விட்டரைத்து மாத்திரைக் கட்டவும்.

426. சன்னிச்சுரம்

சிறுகாஞ்சொறி வேர் வட்டத்துத்தி வேர்
நன்னாரி வேர் ஆடாதொடை
செருவழுதாளை வேர் கண்டங்கத்திரி
நெல்லிமுள்ளி சுக்கு
கடுக்காய் மிளகு
தான்றிக்காய்

பொன்னிறமாக வறுத்துக் கொண்டு சூரணம் செய்து தேன் விட்டுக் கொடுக்க கசாயமிட்டுக் கொடுக்கத் தோசம் தீரும்.

427. தாளகக் கட்டு

தாளகம் கட்டியா ஒரு பலம் வாங்கி விஷ்ணு கிரந்தி கனியளவு சாற்றில் தாளகத்தை வைத்து மூன்று சீலைமண் செய்து ஐந்து விராட்டியில் புடம் போட கட்டிப் போகும்.

428. தாம்புர பஸ்பம்

கறியுப்பும் காட்டு விராட்டிச் சாம்பலும் கூட்டிப் பிச்சி ஓட்டின் கீழே பாதி பரப்பி அதன்மேல் கோழிமுட்டை வெள்ளைக் கருவும் தோலும் கூட்டி அரைத்து சல்லிக் காசில் தடவி வைத்து அதன் மேல் முன் மருந்தைக் கொட்டி அமுக்கி கெஜபுடம் போட பஸ்பமாகும்.

429. கெவுரி பதங்கம் சகலரோகத்துக்கும்

இலிங்கம் 2 பலம், சித்திரமூலவேர் ஒரு பலம், பஞ்சாய் நறுக்கி சட்டியில் வைத்துப் பரப்பி அதன்மேல் இலிங்கத்தைப் பொடித்துப் போட்டு மேல் சட்டி மூடி சீலைமண் செய்து மூன்று

சாமம் எரித்து இறக்கி ஆறவைத்து வாலையைச் சுரண்டியெடுத்து ஒரு பலம் வாலை ரசம், வீரம், பூரம், கெந்தகம், கெவுரி, வகைக்கு 1 பலம் சித்திரமூலம் வேர் அரைத்து குகைச் செய்து அந்த குகைக்குள் முன் சரக்கெல்லாம் போட்டு சட்டியில் அரைப்படி உப்பு போட்டு அதன் மேல் குகையை வைத்து குகைவாயை நீக்கி அப்பிரேகத் தகடு போட்டு மூடி மேல் சட்டி மூடி சீலைமண் செய்து அடுப்பிலேத்தி காடாக்கினி 2 சாமம், கமலாக்கினி 2 சாமம், தீபாக்கினி 1 சாமம் எரித்தெடுத்துப் பதங்கத்தை எடுத்துச் சீசாவில் வைத்துக் கொண்டு வலுவறிந்து கொடுக்கவும் வியாதியறிந்து அனுப்பானத்துடன் கொள்ளவும்.

430. உஷ்ணத்தினால் மலம் சிக்கலினால் வயிறுவலிக்கு மருந்து

சூரத்தாவரை 2 பலம்	கடுக்காய்த்தோல் 1/2 பலம்
வால்மிளகு 1/4 பலம்	இந்துப்பு 1/2 பலம்
கொடி முந்திரி 2 பலம்	கடுக்காய்த்தோல்
வால்மிளகு	சூரத்தாவரை

இவை மூன்றையும் கல்லுரலில் போட்டு இடித்து 2 வேளை 3, 5, 6, 7 நாள் கொடுக்கவும். மலச்சிக்கல் உதிரச்சிக்கல், வயிற்று வலி தீரும்.

பத்தியம் – இரசம் சாதம், மோர் சாதம் சாப்பிடவும்.

431. தாளக பஸ்பம்

சுத்தி செய்த தாளகம் வாங்கி தாளகம் 2 பலம், மடல் துத்தம் 2 பலம் வாங்கி பொற்கையான் சாறு விட்டரைத்து தாளகத்துக்குக் கவசம் கொடுத்து சீலைமண் செய்து 10 விராட்டியில் புடம் போட பஸ்பமாகும்.

432. குமட்டி சூரணம்

அரைவெட்டு குமட்டிக் காய் கொண்டு வந்து சக்கரம் சக்கரமாக அறுத்து விதை நீக்கி காயவைத்து இடித்து தூள் 1 பலம், சாதிக்காய், சாதிபத்திரி, ஏலம், கிராம்பு வகைக்கு பலம் சீனாக் கல்கண்டு பலம்

இவையெல்லாம் சூரணம் செய்து தேத்தாங்கொட்டை பிரமாணம் நீராகாரத் தண்ணீரில் போட்டுக் கலக்கிக் கொடுக்கவும்.

433. பிள்ளைக்கு கழிச்சலுக்கு

வசம்பு, ஓமம், சுக்கு, மிளகு, பூண்டு, முருங்கை இலை, உப்பு இவையெல்லாம் ஓர் அளவாய் கைத்திட்டமாக எடுத்துப் பொட்டலங்கட்டி அனலில் வாட்டி கோரோசனைப் பிழிந்து கோரோசனை மாத்திரை இழைத்துக் கொடுக்கவும்.

434. அண்டவாதம், விரைவாதம், நரம்பு, தடிப்புக்கு வீக்கம் வலிக்கு

கலிற்சிப்பருப்பு 1 படி	சோம்பு – $^3/_4$ வராகன்
கசகசா $^3/_4$ வராகன்	நோசி $^1/_4$ வராகன்
பூண்டு $^3/_8$ பலம் திப்பிலி – 1	மிளகு 1, காயம், சுக்கு – 1 பலம்

இவையெல்லாம் 4 கோழி முட்டை வெள்ளைக் கரு விட்டு அரைத்து வெய்யில் காயவைத்து அரைப்படி நல்லெண்ணெயில் கலந்து உள்ளுக்கும் கொடுத்துத் துவளையும் போடவும்.

435. வயித்துப்போக்கு, அசீரண வாய்வு

சுக்கு – 1 பலம்,	சோம்பு – 1 பலம்
கசகசா – 1 பலம்	காயம் – 5 பலம்

இவையெல்லாம் சூரணம் செய்து பசுவின் நெய் கூறு.

இந்த நெய்யில் சூரணத்தைப் போட்டு ஒரு சேரை கோவை சாறும் விட்டு சீனிசர்க்கரை 1 பலம் போட்டுப் பிசைந்து சூரியபுடம் 7 வைத்து அந்தி சந்தி புன்னைக் காய் வீதம் சாப்பிடவும். இச்சாபத்தியம்.

436. சூதகவாய்வு

சூடம் 1 பலம், பால், சாம்பிராணி 1 பலம், லிங்கம் 1 வராகன், நமக்காரம் 1 பலம், சவுக்காரம் 1 வராகன் இந்த 5 சரக்கையும் நெய் விட்டு அரைத்து சுண்டக்காய் பிரமாணம் கொடுக்கவும். புளிப்பை

தள்ளவும். மூன்று அல்லது ஐந்து நாட்களுக்கு இருவேளையும் சாப்பிடவும்.கை கண்டது.

437. சவ்சீவி எண்ணெய்

இஞ்சி சாறு அரைப்படி, நல்லெண்ணெய் அரைப்படி, பசும்பால் அரைப்படி மூன்றும் சேர்த்து எரித்து மெழுகு பதத்தில் வடித்து ஒருநாள் விட்டு ஒருநாள் முழுகவும்.

தீரும் நோய்

சூலைவாய்வு, கபாலநோய், மண்டைக்குத்து, சன்னி, கிறுகிறுப்பு, மயக்கம் போகும்.

ஆடாதொடை	கோஷ்ட்டம்	திப்பிலி
முடக்கொத்தான்	வசம்பு	நெல்லிமுள்ளி
நாகப்பூ	வல்லாரை	மிளகு

சுக்கு வகைக்கு $^1/_4$ பலம் சேர்த்து இடித்து வெருகடி தூள் பசுவின் நெய்யில் குழைத்துக் கொடுக்கவும்.

பத்தியம் – கள்ளு, கஞ்சா, புகையிலை தள்ளவும்.

இதுவுமது

கொன்னை மரத்துவேர்	அருகம்புல் வேர்
அரைக்கீரை வேர்	நாணல்கிழங்கு
மிளகரணை 2	பளிங்கு சாம்பிராணி $^1/_4$ பலம்

அவையெல்லாம் இடித்து நல்லெண்ணெய் அரைப்படி எண்ணெயில் அரைப் பதத்தில் எட்டிப்ழம் ஒன்று எரித்து இறுத்து வாரம் 2 முழுக்கு முழுகவும். சிரசுநோய், புருவ நோய், கழுத்து நோய் எல்லாம் தீரும்.

தீரும் நோய்

அய்த்தி சூடு, வறச்சிசூடு, வறச்சி, இளப்பு, இருமல், புகைச்சல், தொண்டை கம்மல், உள்சூடு, வறச்சி, பித்தகன்ம மேகம் இவையெல்லாம் தீரும்.

438. கௌரி பதங்கம் – சகலரோகத்துக்கும்

இலிங்கம் 2 பலம், சித்திர மூலவேர் 1 பலம் பஞ்சாய் நறுக்கி சட்டியில் வைத்துப்பரப்பி, அதன் மேல் இலிங்கத்தைப் பொடித்துப் போட்டு மேல் சட்டி மூடி சீலைமண் செய்து, 3 சாமம் எரித்து இறக்கி, ஆற வைத்து வாய் வில்லையைச் சுரண்டி எடுத்து ஒரு பலம் வாலை ரசம், வீரம், பூரம், கெந்தகம், கெவுரி வகைக்கு ஒரு பலம், சித்திர மூலம் வேர் அரைத்து குகைப் பண்ணி, அந்தக் குகைக்குள் முன் சரக்கெல்லாம் போட்டு, சட்டியில் அரைப்படி உப்பு போட்டு அதன்மேல் குகையை வைத்து குகை வாயை நீக்கி, அப்பிரேகத்தகடு போட்டு மூடி மேல் சட்டி மூடி சீலைமண் செய்து அடுப்பேத்தி காடாக்கினி 2 சாமம், தீபாக்கினி 1 சாமம் எரித்து எடுத்து பதங்கத்தை எடுத்து சீசாவில் வைத்து . . . த்து போட்டு மெழுகு பதமாய் வடித்து ஒரு கரண்டி வீதம் கொடுக்கவும். இச்சா பத்தியம்.

439. மேகம் – 21, குஷ்டம் – 18 – க்கும்

சேங்கொட்டை 5 சேர், பரங்கிப்பட்டை 5 சேர், கெந்தகம் ஒரு பலம் இவை மூன்றையும் கல்வத்தில் போட்டுக் குழித் தயிலம் இறக்கி முன் விளாம்பட்டைதயிலத்தில் சேர்த்து கொதிக்க வைத்து கேவுரு கழியில் 2 குண்டு மணியிடை போட்டுக் கொடுக்கவும். பத்தியம் – இச்சாபத்தியம்

440. வெள்வங்கம் நீர் வாங்க

வில்வங்கம் 2 வராகனெடை வாங்கி இலுப்பை நெய்யில் உருக்கிச் சாய்த்து தகடு தட்டிப் பொடி செய்து சட்டியை அடுப்பில் வைத்து குதிரைக் குளம்பு வெள்ளைப்பு, பச்சிலையை அரைத்துப் போட்டு அதில் லவங்கப்பட்டையைப் போட்டு ஆப்பையால் நெருப்பு பறக்க கடைந்து கொட்டி 10 தடவை செய்ய லவங்க நீர் வாங்கி வெள்ளியாகும். கை கண்டது.

441. மடல் துத்த பஸ்பம்

மடல் துத்தம் பலம் 2, பொற்கையான் சாறுவிட்டு அரைத்து பத்து விராட்டியால் பத்துபுடம் போட பஸ்பமாகும்.

ஒரு சல்லியே மூலப்புளியில் 3 நாள் ஊற வைத்து எடுத்து குகையில் வைத்து உருக்கிட மடல் துத்தபஸ்பமாகும். ஒரு குண்டு மணியளவு போட்டு உருக்கிச் சாய்க்க வயறு சீராகும்.

442. காச்சக்கட்டி கெண்டை

சுக்கு 5 விராகன்
கண்டங்திப்பிலி 5 விராகன்
பணம் வெல்லம் 5 விராகன்
இந்துப்பு 5 விராகன்
வளையலுப்பு 5 வராகன்
கல்லுப்பு 5 பலம்
பொட்டிலுப்பு 5 பலம்
பாறையுப்பு 5 பலம்
கும்மட்டிக் காய்ச்சாறு 2

சட்டியிலிட்டு அந்தப் பையும் தூள் செய்து சாதத்தில் போட்டு மேற்படி இரண்டு சரக்கையும் தூள் செய்து போட்டு வெல்லத்தையும் போட்டு அடுப்பிலேற்றி லேகியமாய் செய்து கொண்டு சுண்டக்காய் அளவு சாப்பிடவும். வலிக் கண்டால் மருந்து நிறுத்தவும். இரத்தம் கண்டால் அவரைப் பட்டம் கசாயம் வைத்துக் குடிக்கவும். இச்சா பத்தியம்.

443. சித்த பிரமி சன்னிக்கு மருந்து

முருங்கைவேர் 5 பலம்
சித்திர மூலம் 2 பலம்
யோகரவேர் 2 பலம்
சுண்ணாம்பு 2 பலம்
சதகுப்பை 2 பலம்
ஓமம் 1 பலம்
கருஞ்சீரகம் 1 பலம்
மஞ்சள் பலம்
முசுரு முட்டை 2 பலம்
கேவுரு மாவு 2 பலம்
உத்தாமணி
எருக்கம்பூ
சிட்டாமணக்கு
நொச்சி

சோத்துக் கற்றாழை வகைக்கு 5 சாறுபடி எடுத்து சரக்கெல்லாம் அரைத்துக் கொதிக்க வைத்துப் பத்துப்போடத் தீரும்.

ஓமம்
கருஞ்சீரகம்
சுக்கு
கஸ்தூரி மஞ்சள்
முருங்கைப்பட்டை
கடுக்காய்
உத்தாமணி
வேளை
நொச்சி
ஆமணக்கு
எருக்கம்பூ

இவைச் சாறுக்கு அரைப்படி,

கற்றாழைச்சாறு 5 படி	இராகிமாவு
கரிமுள்ளிச் சாறு ஒரு பலம்	கண்டங்கத்திரி

இலைச்சாறு ஒரு பலம், எல்லாவற்றையும் கலந்து 3 பத்துப்போடவும். உள்ளுக்குச் சுரம்,

மாவுலிங்கம்	முருங்கை, வேளை	சங்கு நொச்சி வேர்
சித்திரமூலம்	யோகரகண்டு திப்பிலி	அரிசிதிப்பிலி
சித்திரத்தை		

இவையெல்லாம் சேர்த்து இரசம் செய்து பூரம், லிங்கம், வாதராட்சதன், இழைத்துக் கொடுக்கவும்.

444. மறுபடி சூடு ஆற முறிவு

வெற்றிலை 7	சங்கெலை 10
கரிமுள்ளியிலை 10	கண்டங்கத்திரி இலை 10
செம்முள்ளி இலை 20	

இதனைச் சட்டியில் போட்டு வதக்கி 5 படி தண்ணீரில் பூரம், கோரோசினை இழைத்து இரண்டு வேளை கொடுக்கவும். தீரும். கைகண்டது. இதற்கு மேலும் பொடி போட, கருஞ்சீரகம், கண்டதிப்பிலி, அரிசிதிப்பிலி, சித்திரத்தை, கிராம்பு வகைக்கு ஒரு வராக வறுத்து பொடிச் செய்து போட்டுக் கொடுக்கவும்.

445. உஷ்ணத்தினால் மலம் சிக்கினால் வயிறு வலிக்கு

சூரத்தாவரை 2 பலம்	கடுக்காய் தோல் 5 பலம்
வால்மிளகு கால் பலம்	இந்துப்பு 5 பலம்
கொடிமுந்திரி 2 பலம்	கடுக்காய்தோல்
வால்மிளகு	சூரத்தாவரை

இதை மூன்றையும் கல் உரலில் போட்டு இடித்து லேகியம் செய்துக் கொடுக்கவும். மலச்சிக்கல் தீரும்.

446. பிறயிசுவுக்கு, பிரலாசன்னிக்குப் போட்டு கை கண்டது

முருங்கைப்பட்டையிலை 5, சித்திரமூலம் வேர் 2 பலம், கரிய சுண்ணாம்பு 2 பலம், சாம்புராணி 1 பலம், ஓமம் 1 பலம், சதக்குதப்பை கொடுக்கவும். மலச்சிக்கல் தீரும்.

447. பிறயிசுவுக்கு, பிரலாசன்னிக்குப் போட்டு கை கண்டது

முருங்கைப்பட்டையிலை 5	சித்திரமூலம் வேர் 2 பலம் கரிய
சுண்ணாம்பு 2 பலம்	சாம்புராணி 1 பலம்
ஓமம் 1 பலம்	சதக்குதப்பை 1 பலம்
கருஞ்சீரகம் 1 பலம்	முசுறு கொட்டை 2 பலம்
பூண்டு 1 பலம்	கேவுருமாவு 2 பலம்
உத்தாமணிச் சாறு கால்படி	எருக்கம் பூ இலை சாறு $1/4$ படி
காட்டாமணக்குச் சாறு $1/4$ படி	நொச்சிச் சாறு $1/4$ படி
சதிர்க்கள்ளிச் சாறு $1/4$ படி	திருகு கள்ளிச்சாறு $1/4$ படி
தழுதாளைச் சாறு $1/4$ படி	சோத்துக்கற்றாழை $1/2$ படி

எல்லாவற்றையும் கொதிக்க வைத்து மூன்று முறை பத்துப்போடவும்.

448. உள்ளுக்குக் கொடுக்கும் விபரம்

மாவுலிங்கம்	நொச்சி	முருங்கை
வெள்ளருகு	சங்குவேர்	சித்திரமூலம்
யோகா வேர்	வேளை	எருக்கு
கண்டு திப்பிலி	அரிசி திப்பிலி	சித்திரத்தை
பூண்டு	காயம்	கருஞ்சீரகம்
பரங்கிப்பட்டை	பிறப்பங்கிழங்கு	கடைச்சரக்கு – 2 பலம்

பச்சிலைச் சாறு – 5 பலம்

இவையெல்லாம் அரைத்துக் குழப்பி சுரசம் பண்ணி அதில் வீரமெழுகு, பணவிடை, பூரம், லிங்கம், வாதராக்ஷதன் இழைத்து ஏழு பொழுது கொடுக்கவும். சத்திச் சாரணைக் கிழங்கு கூட்டவும். கை கண்டது.

பத்தியம் கெட்டி.

449. மாரியம்மன் பேரில் பத்தும் பதி

கங்கையணி சடைமுடியாள் வாழ்க
கயிலாச மேற்கிரியும் வாழ்க வாழ்க
ஐங்கரனும் ஆறுமுகனும் வாழ்க வாழ்க
ஆழிதனில் துயில்கின்ற ஆயன் வாழ்க
செங்கமல மாதுமையாய் பாதம் போற்றி
தெரித்தேன் எந்நாளும் வாழ்க வாழ்க

தங்கமதாய் வந்தமம்மா நாளும் தன்பாதம்
அடியேன் தாசாதி தாசனம்மா சரணம் தானே
அருவனிந்த வேணியர் தன்னிடமாய் வாழும்
ஆனந்த அகண்ட வெளியாகி ஆகி
தாரணியில் யாவருக்கும் தாயாய் வந்து
ஞானவெளி சுழிமுனையாய் நடுவே நின்றாய்

பூரணமாய்ப் பால்பழங்கள் புஷ்பதூபம்
புரந்தறியே உந்தன் பாதம் பணிவோர் தம்மை
தாரணியில் எந்நாளும் காவாயம்மா
அடியேன் தாசாதி தாசனம்மா சரணம் தானே
கொக்கெறகு சூடியொரு மானாய்
கூத்தாடத் துணிந்தவளே கொண்டைக்காரி
அக்குவடம் அணிந்த வெள்ளை மேனியாளே
ஆறுமுகம் தனப்பயின்ற அம்மா அம்மா
மிக்கவசம் தனையுண்ட வேதாநத்தி
வீரயமாய் எதிர்த்தவற்கு எதிராய் நின்றாய்
தர்க்கனுட தலையறுத்த சண்டைகக்காரி
அடியேன் தாசாதி தாசனம்மா சரணம் தானே

கொண்டதொரு கோலமெல்லாம் உனது கோலம்
கூறுகின்ற அறுசமயம் உனது கோலம்
விண்டு ஆய்ந்து கயிலாயமுனது கோலம்
வேதாந்தமானதும் உனது கோலம்
தண்டுறையுமலர்ப் புயத்தாள் உனது பாதம்
அடியேன் தாசாதி தாசனம்மா சரணந்தானே

ஊனான காயமிதைப் படைத்தாயம்மா
ஒகோகோ உத்தமயே எந்தனுக்கு உந்தன் பாதம்
ஆனாலும் நீ உதவி செயவாயம்மா
அம்பிகைய அபிராமி ஆயில் கண்டவல்லி
பூநாகம் தரித்த சிவநிடத்தில் வாழும்
புந்தரியே உன்பாதம் பணிவோர் தம்மை
தானாக நீயிருந்து காருமம்மா
அடியேன் தாசாதி தாசனம்மா சரணந்தானே

ஓதுகின்ற சாஸ்திரங்களுண்மை வேதம்
உத்தமியாளில்லா விட்டால் உலகமேது
நீதியே சருகையொடு கிரனகயேது
நிலையோகம் ஞானமொடு மவுனமேது
பூதலத்தில் இருக்கின்ற கிரிகையேது
புரந்தரியாளில்லாட்டால் புவனமேது
சாதிபுரம்பில்லாத சரூபரூபி அடியேன்
தாசாதி தாசனம்மா சரணந்தானே

450. மருந்து சாப்பிட வேண்டிய நாட்கள்
மேல்நோக்கிய நாள்

திருவோணம் ஆதிரை பூசமும் ரோகிணி
வேணிய உத்திரம் மூன்றொடு சதையமும
ஆணிய அவுட்டம் ஒன்பதும்
வேணும் நாள்களும் மேல்நோக்கிய நாள்களே

கீழ்நோக்கிய நாள்

பரணி கார்த்திகை பாம்புடன் விசாகமும்
முரணி முப்பூரம் மூலம் மகத்துடன்
தரணியாகிய ஒன்பது நாள்களும்
கீழ்நோக்கிய நாள்களே

முகிழ்ந்தது

– – –



சரசுவதி மகால் நூலக அச்சகம்